# குப்பை மேடு!

ராசீ



**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# குப்பைமேடு

ஆசிரியர்


ரா. சீனிவாசன்

எம்.ஏ; எம்.லிட்; பிஎச்.டி.

அணியகம்

சென்னை-30.

# முதற்பதிப்பு-1993



டாக்டர் ரா. சீனிவாசன்

| | |
|---|---|
| தலைப்பு: | குப்பைமேடு |
| ஆசிரியர்: | ரா. சீனிவாசன் |
| தாள்: | 11-6- K.G. |
| அச்சு: | 10 புள்ளி |
| பக்கம்: | 244 |

வெளியீடு:

அணியகம்
5, செல்லம்மாள் தெரு,
செனாய் நகர்
சென்னை—30.
தொலைபேசி—6 1 1 2 3 0

**விலை ரூபாய்: 25-00**

**ANIYAKAM PRINTERS Madras-600 030.**

# கணியூர் மதூநெஞ்சனின் ஒரு மதிப்பீடு

நாவல் என்ற சொல் புதுமை என்ற பொருள் கொடுக்கும். இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சியும் எழுச்சியும் பெற்ற நாவல் என்ற இந்த இலக்கிய வடிவம் ஒரு நூற்றாண்டு காலத்திற்குள்ளேயே பின்னடைவை நோக்கி நகரத்தொடங்கி விட்டது.

ஆனாலும் புதுமை காணவேண்டிய புதினம் முதுமை எய்திவிடாமல் இருக்க ஆங்காங்கே ஒரு சில எழுத்தாளர்கள் முயன்று கொண்டுதான் இருக்கின்றனர்.

வடிவத்திலும் உள்ளடக்கத்திலும் கதைப் பின்னலிலும் நாவல் ஆக்கத்திலும் ஒரு பக்கம் மெருகேற்றிக் கொண்டே இருக்க-இன்னொரு புறத்தில் தூசுபடிந்து போன கதை மாந்தர், சுற்றிச் சுற்றிச் செக்கிழுக்கும் காதல் விவகாரம், மடிந்து போய்விட்ட கூட்டுக்குடும்ப வரலாறு இப்படியாகச் சிலர் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

இன்னொரு அலையாக மர்மக் கொலைகள், ரத்தக் கறைகள் ......துப்பாக்கிக் குரல்கள்.

இதற்குப் பக்கபலமாகக் குடும்பக் காவியங்கள், புளு பிலிம்களான கதைகள், சிவப்பு விளக்குகளின் ஒளிப் பாய்ச்சல்கள்...

இத்தகைய நாவல்கள் இளைஞர்களின் மனத்தையும் நிஜத்தையும் கரைத்துக்கொண்டிருக்கின்றன. பொய்யான கனவுகளில் நேரத்தையும் குடித்துக்கொண்டிருக்கின்றன.

இந்த நேரத்தில் இரவுகளின் ஓரத்தில் தூரப் புள்ளியாய் வெளிச்சமிடும் விடி வெள்ளியைப்போல் **ரா.சீ.**யின் நாவல்கள் ஒளிவிடுகின்றன.

அவருடைய பல்வேறு நாவல்கள் வாழ்க்கையின் சமூகக் கோளாறுகளைக் குத்திக் கிழித்ததைப்போல- இங்கே:

'குப்பைமேடும்' 'சீற்றமும்' 'அதிர்ச்சியும்' வாழ்க்கை நடப்பியல்களை முன்னுக்குப் பின்னான வாழ்க்கை முரண் பாடுகளை அரசியல் குற்றங்களை போலி வாழ்க்கைப் பூசல்களை மானிடத்தின் முன்போட்டு உடைக்கின்றன.

மூன்று குறு நாவல்களின் தொகுப்பாக அமைந்துள்ள இந்நூலின் முதல் கதை- 'குப்பை மேடு'

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதைப்போல ஒரு மிகச் சிறந்த இலக்கியப் படைப்பாளியின் கையில் குப்பைமேடும்-கோபுரமாகிறது.

குப்பை மேட்டைக் கருப் பொருளாகக் கொண்டு அங்கேகாகிதம்கூட்டும் ஒரு 'பொறுக்கியை' நாயகி ஆக்கி- எல்லாத் தொழிலும் மேன்மைஆனதே என விளக்குகிறார்.

குப்பைமேட்டை கோபுரம் காதலிக்கிறது. சமன்பாடு களே உடன்பாடுகள் என ரா.சீ. அங்கே போதிக்கிறார்.

பொதுவாக ரா.சீ.யினுடைய எல்லா நாவல்களைப் பார்க்குமிடத்தும்-அவருடைய நாவல்களில் கதைச் சம்ப வங்கள்-நிகழ்ச்சிகள் சொற்பமாகவே அமைந்துள்ளன.

ஆனாலும் கதைப் போக்கினைக் கூடவே நின்று அலசும் ஒரு 'கதாபாத்திரம்' உடன் வந்துகொண்டே இருக்கிறது. 'அது'

சமகால நிகழ்வுகளை- மனோ நிலைகளை- வாழ்க்கை எதார்த்தங்களை- முரண்பாடுகளை நடப்பியல்களை- போலிகளை அடையாளம் காட்டுகிறது. அதோடு தீர்வும் காண்கிறது.

ராசீயினுடைய இந்நாவலில் அவரது இலக்கிய நடையும், தெள்ளுதமிழ் ஞானமும், தானே துள்ளிவரும் எதுகையும் மோனையும், அபாரமான கற்பனா ஒப்பீடு களும் ரசிக்கத்தக்கவனவையாக அமைந்துள்ளன.

ஒரே காம்பவுண்டில் குடியிருப்பவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ''இங்குக் குடி இருப்பவர்கள் கதம்பப் பூக்கள்; நிறம் வேறுபட்டவர்கள்; மாநிலம் மாறுபட்ட வர்கள்'' என்கிறார்.

பல்வேறு பூக்களின் கலவை கதம்பம், அதைப்போலப் பல்வேறு மக்கள் வாழ்கின்றனர் எனக் காணும் உவமை சுவையானதாக உள்ளது.

குப்பை மேட்டைப் பற்றிக் குறிப்பிடும்போது அது ஒரு 'சமூகப் பணி; பொதுச் சொத்து' என்கிறார்.

'நாலுபேர் படித்தால் போதும்; புதிய செய்திகள் சொல்ல விரும்புகிறேன். உணர்வுகளை மட்டும் வைத்து விளையாடவில்லை'' என்ற கதா பாத்திரம் பேசும்தன்மை இந்நாவல் ஆசிரியருக்கே பொருந்துவதாக அமைந் துள்ளது.

''மனித நேயத்தைப் பற்றி எழுதவேண்டிய கவிஞர் களும் திசைமாறிச் சில சமயம் மதங்களுக்கு விளக்கம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கோபவரிகளும்—

''இன்று நமது நாட்டுத் தேவை மத நம்பிக்கை அல்ல. தன்னம்பிக்கை; கோயில்களைப் புதுப்பிக்க அல்ல. தொழில்களை உண்டாக்க; பழைய ஞானத்தைப் பற்றி ஆராய்வது அல்ல புதிய விஞ்ஞானத்தை அறிய, இளை ஞர்களைத் தூண்டுவது. வாழ்க்கையை நேசிக்கக் கற்றுத் தரவேண்டும்......'' என்ற தொடர்ந்து வாழ்க்கைப் போக் குக்கு வழிகாட்டுகிறது ரா,சீ.யின் இந்த வரிகள்.

'அவருக்கு இரண்டு பெண்கள்; மூன்று பையன்கள் அவற்றின் விரிவுகள்; பிரிவுகள்எல்லாம் இருக்கிறார்கள்''- என்று பெரிய குடும்பத்தைப் பற்றி விளக்கமும்,

''பெண் அவளுக்கு நாமம் ஒன்றுதான்; வடிவங்கள் வேறு; அறிவில் கலைமகள்; அழகில் திருமகள்; எதிர்ப்பில் மலைமகள்; மொத்தத்தில் அறியமுடியாத பரம்பொருள்'' என்றும்-

''கருத்துக்கள் இல்லாத எழுத்து அர்த்தமற்றவை. வெறும் உணர்வுச் சித்திரங்கள் படிக்கும்போது நெஞ்சைத் தொடும்; பிறகு அவர்களைக் கைவிடும். சிறந்த லட்சியங்களை உருவாக்க வேண்டும். மனிதனின் உரிமைகளுக்கு வழிகோலவேண்டும்... இது இலக்கியத்தின் பணி.'' என்ற தனது இலக்கிய நோக்கையும்-

''மனிதனை நேசிக்கக்கற்றுக் கொள்; தாழ்ந்தவர்களைத் தூக்கிவிடு; நோயுற்றவர்க்கு ஆறுதல் அளி; அன்பு என்பதை அழகுடன் பரப்பு; இது அவர்கள் கற்றுத்தரும் படிப்பினைகள்'' என்றும்—

''இன்றைய வாழ்வைப் படம் பிடிப்பது துடிப்புள்ள எழுத்து. நோய்நாடி அதன் காரணம் நாடி மருந்தும் சொல்வதுதான் எழுத்து'' என்றும்—தீர்வு கூறுகின்றார்.

'சீற்றம்' என்ற தனது மற்றொரு குறு நாவலில் பெற்றோரை மதிக்காத புகுந்த வீட்டில் இருந்து வெளியேறி வரும் பானு என்ற சுதா பாத்திரத்தை அறிமுகம் செய்கிறார்; பெண்மையை உயர்வு செய்கிறார்.

''தூசுபட்ட சட்டையைத் துடைத்துக் கொள்வதைப் போல் அறிமுகம் இருந்தது'' என்றஅழகான உவமையைத் தருகிறார்.

''நல்ல பண்புகள் வளரப் பணம் அடிப்படை. தாராளயாக இருக்க வேண்டுமானால் பணமும் வேண்டும். எந்த ஏழை மற்றவர்களுக்கு உதவுகிறான்? உதவ நினைக்கலாம், ஆனால் அவன் உதவ முடியாது'' —என்று மதர்த்துப்போன உண்மைகளைக் கூறுவதும்.

''கடைக்காரர்களிடம் புத்தகங்களைப் போட்டுவிட்டு அசோகவனத்துச் சீதையை மீட்க முடியாமல் அவஸ்தைப் படுகிறார்கள்'' என்று கூறுவதும், கடன் கொடுத்துவிட்டு சோகமாகிப்போகும் நிலைமைக் காட்டுவதும் நூல் முழுக்க ஆங்காங்கே காணக் கிடக்கின்றன.

''அவர் கண்ணதாசன் — கண்ணனின்தாசன் நான் வாழ்க்கை நேசன்'' என்று வாழ்க்கை மீது தனக்குள்ள பற்றுதலை வெளிப்படுத்தியும், Sales girl—இவர்களுக்கு ''விளம்பர யாத்திரிகை'' என்ற புதுச் சொல்லாக்கம் செய்தும்,

''செருப்புத் தைத்தவன் மகன் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவன் ஆகிறான் என்றும், பிணம் எரித்தவன் மகன் பணம் படைத்தவனாக பவனி வருகிறான் என்றும், குலத் தொழிலை விட்டு நலத்தொழிலை நாடுவது தேவை'' என்றும் சாற்றுகிறார்.

**மதம்:**

''நாடு மதச்சார்பு அற்ற நாடாக இயங்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இது தவறு, மதச்சார்பு காட்டாத நாடாக இயங்க வேண்டும். என்பதே சரியான கொள்கை'' என்றும் திருத்தம் கூறுகிறார்.

''எந்த மதத்தையும் யார் வேண்டுமானாலும் மேற்கொள்ளலாம், என்றாலும் அவை தனித்தனி கலாச்சாரங்களையும், பழக்க வழக்கங்களையும் உண்டாக்கி இருக்கின்றன. ஒரு பள்ளியில் சேர்கிறார்; அந்தப் பள்ளிக்கு

ஏற்ற உடை உடுத்துகிறார்கள். ஆனால் எங்கும் கல்வி ஒன்றுதான். அதே போலத்தான் புறத்தோற்றத்தில் வேறுபட்டு இருக்கலாம்; ஆனால் உள்ளீடு அனைத்தும் ஒன்றுதான்'' என்கிறார்.

இப்படி சமத்துவநோக்கும் தேசியப் பார்வையும் ராசீ என்ற இந்த எழுத்தாளனை ஒரு சிறந்த தேசிய எழுத்தாளனாய் அடையாளம் செய்கிறது.

**நகைச்சுவை**

''மகன் பிறந்திருக்கிறான் நீங்கள் பிறர்க்கு அடிமையாகத் தேவை இல்லை'' என்றார்.

''அவன் ஒருத்திக்கு அடிமையாவான்'' என்றேன்; சிரிப்புத் தோன்றியது'' — என்ற இடத்தில் மெலிதான நகைச் சுவை இழையோடுகிறது.

''வள்ளுவர் முதல் வைரமுத்து வரை'' இக்காதலைப் போற்றி இருக்கிறார்கள் என்று தன் மாணவரை நினைவு கூர்வதும்.

அதிர்ச்சி என்ற நாவலில் ''பெண்ணை மாப்பிள்ளை வீட்டில் சேர்க்கக் கொடுக்கிறது வரதட்சணை. இங்கே கல்வி நிலையத்தில் சேர்க்கிறதுக்குத் தருவது டொனேசன். பெயரில் தான் வித்தியாசம்'' என்றும்.

''நமது நாட்டின் இத்தகைய அவல நிலையை 'Donation is our Nation'' என்றும் சாடுகிறார்.

இப்படி மனிதாபிமானமும் தேசியப் பார்வையும் கொண்ட இந்த நூல் சரிந்து கொண்டிருக்கும் இந்த சமுதாய அமைப்பை சரியாகக் கட்டுவதற்குச் சிறந்த நூலாகும் என்பது திண்ணம்.

அன்புடன்

**மதுரெஞ்சன்**

# குப்பைமேடு

-1-

அண்ணா நகர்க் குறுக்குத் தெரு; அடையாளம் சொல்லித்தான் தீரவேண்டும் என்பது இல்லை. சொன்னால் மட்டும் உங்களால் வரமுடியுமா? நீங்கள் ஏன் அங்கு வரப் போகிறீர்கள்? அய்யப்பன் கோயில் தெரியுமா? அய்யா சரணம்! அய்யப்பா சரணம்!

இந்த அண்ணா நகர்க் குறுக்குத் தெரு இருக்கிறதே அது சினிமாப் புகழ் பெற்ற இடம்; அதனால் இந்தத் தெருவில் வீடு கிடைப்பது அவ்வளவு சுலபம் இல்லை; ''இங்கேதான் 'ராதா' தங்கியது என்பான் ஒரு புரோக்கர்'. அவள் அக்கா 'அம்பிகா' இங்கே தான் புடவையைக் காயப் போட்டது. என்று ஒரு தோட்டத்தைக் காட்டுவான்.

சில வீடுகள் பிசாசு புகுந்த வீடு என்று கதை கட்டி விடுவார்கள். இதுவும் புரோக்கர்கள் செய்யும் தந்திரம் யாரும் அங்குக் குடி வர மாட்டார்கள். பாதிவிலைக்கு விற்றுவிட்டுப் போய் விடுவார்கள் அந்தப் பிசாசுகளை ஓட்டத் தெரியாமல்.

சினிமாக்காரர் புகுந்த வீடு அதனால் அவற்றிற்குக் கிராக்கி ஏற்பட்டு விடுகிறது. இந்தப் படப்பிடிப்பு எங்கே

நடந்தது என்று கேட்டு விடாதீர்கள்; அது இங்கே எடுக்கப்படவே இல்லை; பெயர் மட்டும் அண்ணாநகர்க் குறுக்குத்தெரு; அதை வைத்து புரோக்கர் கட்டி விடும் கதைகள் இவை.

இங்குக் குடி இருப்பவர்கள் கதம்பப்பூக்கள்; நிறம் வேறுபட்டவர்கள்; மாநிலம் மாறுபட்டவர்கள்; அவர்கள் வெளி மாநிலத்தவரோடு பேசிக் கொள்வார்களே தவிர உள்நாட்டு மனிதரோடு ஒட்டமாட்டார்கள். ஹெலி காப்டரில் தான் வெளியே பறப்பார்கள் அதனால் இங்கே வந்து விசாரிக்க வேண்டாம்.

எனக்கு எழுத்து ஒரு தொழில் ஆகி விட்டது. இதை நம்பி வாழ முடியுமா! எழுத்தும் என்னை நம்பி வாழ் கிறது; அதனால் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

'படத்துக்குக் கதை எழுதுகிறாயா?' அது அவர் களுக்குத் தேவை இல்லை. அது இல்லாமல் தான் படம் எடுக்கிறார்கள். அவர்களுக்கு என் கதை பயன்படாது.

''எழுதி என்ன செய்யப்போகிறாய்?'' அச்சிட்டு என் வீட்டை நூலகம் ஆக்கி வைப்பேன்; புரியவில்லையா? அடுக்கி வைப்பேன். விற்பனையாகாவிட்டால் என் வீடு குப்பைமேடு ஆகிவிடும்.

இது ஒரு சூதாட்டம்; தெரிந்து விளையாடுகிறேன் யாராவது கேட்டால் ''எழுதுகிறேன்'' என்பேன்; யாரும் தொல்லை கொடுப்பது இல்லை. சாக விடுங்கள் என்று ஒரு நோயாளியைப் பார்த்துச் சொல்வது போல என்னை ''எழுத விடுங்கள்'' என்று சொல்லி நீங்கி விடுவார்கள் எனக்கு வேண்டியவர்கள்.

நான் எழுதிக் கொண்டே இருப்பேன்; எழுதா விட்டால் வேறு என்ன செய்வது? பேசிக் கொண்டே இருக்க ஆசை. யாரும் என்னைக் கேட்கமாட்டார்கள். என் பேச்சு அவர்களுக்குப் பிடிப்பது இல்லை. அதனால் எழுதிக் கொண்டே இருக்கிறேன். இது ஒரு தற்கொலை முயற்சி என்று தெரிகிறது; என்ன செய்வது பிரச்சனை களுக்கு முடிவு சில சமயம் தற்கொலையாகவும் அமை கிறது. சாமானியர்களைப் பற்றி எழுதுவது என் பழக்கம் அவ்வளவுதான் கூற முடியும்.

நீ எழுதுகிறாயே உனக்கு யார் சோறு போடுகி வார்கள்? என் மனைவி படித்தவள், பட்டம் வாங்கியவள். அவள் சம்பாதித்து என்னை உட்கார வைத்து எழுத வைத்துச் சோறு போடுகிறாள். என்னை எங்கும் போக வேண்டாம் வீட்டைப் பார்த்துக்கொள் என்று கட்டளை இடுகிறாள். தெருவையும் பார்த்துக் கொண்டிருப்பேன். அதனால் வந்த வினைதான் இந்தக் கதை

-2-

"தெருவிலே எதைப் பார்த்தாய்" என்று கேட்பீர்கள்; எவ்வளவோ பார்க்கிறேன், அத்தனையும் சொல்லத் தேவை இல்லை. தினமும் காலையில் சரியாக 9-40 இருக்கும்; ஒரு பெண் சுத்தமாக உடுத்திக் கொண்டு கையில் ஒரு பையை மாட்டிக் கொண்டு இந்த வழி போகிறாள். அவள் அழகி; அதனால் என்னைக் கவர்கிறாள்; மறுக்க வில்லை. அவளைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். அவளை மறையும்வரையும் கவனிப்பேன். அவளோடு பேச முடியுமா என்று ஆசைப்படுவேன். அவள் ஏன் வேலைக்குப் போகிறாள். குடும்ப நிலை என்ன? எப் பொழுது கலியாணம் செய்து கொள்ளப்போகிறாள்?

மாப்பிள்ளை யார்? இன்னும் வரவில்லை என்றால் அவன் எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறாள்? இப்படி எல்லாம் கேட்டுத் துளைக்க வேண்டும் என்ற ஆசை. இந்த ஆசை ஏன் வருகிறது என்று கேட்பீர்கள். அதுதான் எழுத்து; எழுத்தாளன் அவன் 'துரு துரு' என்று எதையாவது பார்க்கிறான், அதைப்பற்றித் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறான்.

அவளைப் பற்றி எழுத வேண்டும் என்று ஆசைதான்! என்ன செய்வது? அவள் ஏதாவது நிகழ்ச்சிகளுக்குக் காரணம் ஆவாளா? கிடக்கட்டும். அவளைப் பார்க்க முடிந்தது; நினைத்து நினைத்துப் பார்ப்பேன்; அவ்வளவு தான்.

என் கண்ணுக்குத் தெரிந்தது எதிர் வீட்டுக் 'குப்பைத் தொட்டி'. பெண்ணைப் பார்த்த கண்தான் இதையும் பார்க்கிறது. அது ஒரு புதுமையா? இதில் என்ன இருக் கிறது? அதில் ஒன்றும் இல்லைதான். அதைக் கதாபாத்திர மாக்கிய பெருமை அந்த வீட்டுக்குரியவரைத்தான் சாரும். அவர்தான் என் எழுத்தில் அறிமுகமாகும் இரண்டாவது மனிதப் பாத்திரம். இந்தச் சராசரி மனிதரை வைத்து என்ன எழுதமுடியும்? அவரைப் பார்க்கும்போது எனக்குச் சாத்தான்தான் நினைவுக்கு வருகிறது. சாத்தான் என் றால் கெட்டவர் என்று விவிலிய நூல் சொல்வதாகக் கேட்டிருக்கிறேன். அதுக்கும் இவர் லாயக்கு இல்லை. கெட்டவராக இருந்தால் கதைக்குக் கரு கிடைக்கும். கெட்டவர்களைக் கொண்டுதானே எல்லாரும் கதை எழுதுகிறார்கள். அந்த வகையில் பயன்படத்தக்க தீமை, பிறரை ஏமாற்றும் வல்லமை எதுவும் இல்லை. நல்லதும் இல்லை; கெட்டதும் இல்லை. இவர்களால் யாருக்கும் பயனில்லை. தான் உண்டு தன் வீடு உண்டு, தன் ஜீவிதம்

உண்டு. அவர்களைப் பாதுகாக்க ஒரு மகன் உண்டு. கடந்த கால நினைவுகளை நினைத்துப் பார்த்துகொள்ள நரைத்த மயிர் முடி உடைய மனைவி உண்டு. எந்தவித மான மாற்றமும் காண முடியாத வரையறை செய்யப் பட்ட வாழ்க்கை.

திடீர் என்று இவர் பிரதமர் ஆகி விடுகிறார். என்ன சுருசுருப்பு! நாட்டையே ஒரு கலக்கு கலக்கி விடுகிறார். திடீர் கற்பனை. என் கற்பனை அவரைச் சுமக்க முடியா மல் அவரைத் தொபீல் என்று கீழே போட்டுவிடுகிறது. இவர் எப்படிப் பிரதமர் ஆகமுடியும்; குப்பைத் தொட்டி; பழமையின் குவியல்கள்; அவ்வளவுதான்.

அவர் யாரோடாவது சண்டை போடுவாரா? சண்டை போட்டால் என்ன வார்த்தை பேசுவார். கைச் சண்டை அல்ல; யாரிடமாவது சில்லரைச் சண்டைகள் போடுவாரா என்று ஆவலாய்ப் பார்ப்பேன். ஏமாற்றம் தான். காய்கறிக் கடைக்காரன் கூடத் தகராறு செய்யாமல் போகிறான். எனக்கு ஒரே எரிச்சல். என் அதிர்ஷ்டம் விஷயம் கிடைத்தது. கார்ப்பரேஷன் குப்பைத் தொட்டிக் காரன் ஒரு சிமெண்ட் குப்பைத் தொட்டியை அவர் வீட்டு வாசற்படி பக்கத்தில் போட்டான். அது ஒரு புதிய வரவு. என் வீட்டுக் குப்பையை அதில் என் வீட்டு வேலைக்காரி கொண்டு போய்க் கொட்டினாள். பக்கத்து வீட்டாரும் அதைப் பயன் படுத்தினார்கள். அது ஒரு சமூகப் பணிச் சொத்து. வாழ்க நீ எம்மான் என்று அதனை வாழ்த்தி னேன்.

அவரால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் ஒரு கிறிஸ்துவர். அது அவருக்கு ஒதுங்கி வாழும்

சமுதாயச் சலுகையைத் தந்தது. யாரிடமும் கலகலப்பாகப் பழக மாட்டார்.

அவர் குப்பை லாரிக்காரரைப் பார்த்துக் கூப்பிட்டார்.

''என் வீடுதான் உங்களுக்குக் கிடைத்ததா'' என்று கோபமாகக் கேட்டார்.

''உங்கள் மதில்சுவர் அகலமாக இருக்கிறது. நிறைய இடம் இருக்கிறது. மற்றும் உங்கள் வீட்டுக் குப்பையை எளிதில் நீங்கள் போட்டுக் கொள்ளலாம். உங்களுக்குச் செய்து கொடுத்த சலுகை. இனி நீங்கள் நாலு வீடு கடக்கத் தேவையில்லை. மதிலுக்கு உள்ளிருந்தே கொட்டலாம்'' என்று விளக்கம் தந்தான்.

''மரியாதையாக அதை வேறு எங்காவது போட்டுத் தொலையுங்கள். இதை முதலில் அப்புறப்படுத்துங்கள்'' என்று கத்தினார்.

அவரிடம் ஒரு கடப்பாறை இருந்தால் அதை ஒரு 'அக்பர் மசூதி' ஆக்கி இருப்பார். கையில் ரூபாய் நோட்டு 'பத்து' வைத்து இருந்தார். அதை நீட்டி ''இதைப் பெற்றுக்கொள் இதை மாற்றி விடு'' என்றார். அதை அவர் ஈட்டி என்று நினைத்தார். அது பாதிதூரம் கூடப் பாயவில்லை.

''அதற்கு வேறு ஆளைப் பாரும். குப்பை எடுக்கும் தொழிலாளிதான் என்றாலும் இந்தச் சப்பைக்கட்டு என்னிடம் பலிக்காது. அதை இந்தக் குப்பைத் தொட்டியில் போடுங்க'' என்று கர்ஜித்தான்.

அந்தக் 'குப்பைமேடு' என்னை இழுத்தது. கண்ணியம் அங்கு ஓன்னியமாக ஒலிப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். அது எனக்குக் கதைக்குத் தலைப்பைத் தந்தது.

''மேலிடத்துக்கு எழுதிப் போடுங்கள், அவர்கள் எடுத்துப் போடச் சொன்னால் நகர்த்தித் தரக் காத்துக் கிடக்கிறோம்'' என்று கூறிவிட்டு அங்குக் குவிந்து கிடந்த குப்பையைக் கூடையில் வாரி எடுத்து வண்டியில் கொட்டிச் சென்றான்.

-3-

காலம் மாறிவருகிறது. பெண்கள் போலீசு உடை தரித்திருக்கிறார்கள். தடி எடுத்துத் தாக்கும் தண்டனை வேலைக்கு அவர்களை ஆளாக்குகிறார்கள். பெண்கள் கையில் ஆண்கள் அடிவாங்கும் புதுயுகம் பிறந்துவிட்டது. பழிவாங்கும் படலத்தைக் கண்டு பழகிய நமக்கு இன்று காணும் காட்சி அதி அற்புதமாக இருந்தது. தெருவில் தினம் பார்த்துக் கொண்டிருப்பேனே அந்தத் 'திரு' கையில் துடைப்பம் ஏந்தித் தெரு பெருக்கினாள். படம் எடுக்கிறார்கள் என்று நினைத்தேன். சுகாதாரப் பெண் மந்திரி பத்திரிகைக்குப் படம் தருகிறார் என்று நினைத்தேன். பிலிப்ஸ் மன்னர் டாக்சி டிரைவராகப் பணி செய்ய முடிவு செய்ததாகச் செய்தி வருகிறது. இது பிரிட்டனில் இருந்து வந்த புதிய செய்தி. படித்தவள் ஒருத்தி குப்பை பெருக்கினாள். அதனால் அவள் கதாபாத்திரம் ஆகிறாள். ஏன் இவள் இந்தத் தொழிலுக்கு வந்தாள்? இவள் செய்கை அசட்டுத்தனமாகத் தான் பட்டது. ஏதோ கிறுக்கு என்று தான் நினைத்தேன். இவளை 'அசடு' என்று ஏன் கூறக் கூடாது? அந்தவீட்டு 'முசுடு'வுக்கு இந்த 'அசடு' கண்ணில் படுகிறாள்.

''நீ புதிதாக உத்தியோகத்துக்கு வந்திருக்கிறாயா''?

''ஆமாம்''

''இதற்குமுன்''

''வரவேற்பாளர் பதவியில் இருந்தேன்''

''ஏன் அந்த வேலையை விட்டு விட்டாய்?''

''அங்கு அவர்கள் என் சேவைக்குச் சம்பளம் தர வில்லை. என் சேலைக்குத்தான் தந்தார்கள். உழைப்புக்குச் சம்பளம் வாங்க, இத் தொழிலுக்கு வந்தேன்'' என்றாள்.

''அழகை வைத்து வியாபாரம் செய்தது பழைய தொழில்; அங்கே எனக்குப் பாதுகாப்பு இல்லை; தெரு வுக்கு வந்துவிட்டேன்'' என்றாள்.

''காண்போர் கண்படுமே'' என்கிறார்.

''எனினும் வாழ்வில் புண்படாது''

''மண்படும்; உனக்கேன் இந்தப் பண்கெடும் தொழில்''.

''தொழிலில் உயர்வு தாழ்வு கிடையாது; அனைத் தையும் மதிக்க வேண்டும்; இதுதான் என் பண்பாடு'' என்றாள்.

''இனி உன் பாடு.

எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?''

''குப்பையை அள்ளவேண்டுமா?''

''இந்தத் தொட்டியை அகற்ற வேண்டும்''.

''நீங்களும் ஒரு கை பிடிக்க முடியுமா?''

''உங்கள் ஆட்களிடம் சொல்லிச் செய்ய வேண்டுகிறேன்''

''சிலுவையைச் சுமக்கும் ஏசுநாதர் ஆவது அரிது; அவர் ஒருவர்தான் இருக்கமுடியும் என்பதைக் காட்டிவிட்டீர்'' என்றாள்.

''ஏன்மா நீ இங்கே இப்படி வேலை செய்வது சரியாகப் படவில்லை''.

''ஏன்?''

''உன் மதிப்பு இழக்கிறாய்; நாளை மணமாக வேண்டியவள்''.

''அதனால்தான் பழைய வேலையைவிட்டு வந்துவிட்டேன். அந்த வேலையில் நீடித்தால் பலபேர் சிரிக்க வாழ்ந்தாள் என்று என்னை மணக்க வரமாட்டார்கள்'' என்றாள்.

அவருக்குப் புரியவில்லை.

'பிறரைச் சிரிக்க வைப்பதுதான் அங்கு என் தொழில்' என்றாள்; ''நான் வரவேற்பாளர்'' என்றாள்.

''இந்தக் கேவலமான தொழில் செய்தால் யாருமே உன்னைச் சீண்டமாட்டார்கள்'' என்றார்.

''வேண்டப்பட்டவர் பலர் இருப்பார்கள். கவலைப் படாதீர்கள், உங்களுக்குப் பையன் இருக்கிறானா சொல்லுங்கள் அவனையே மணந்து காட்டுகிறேன்'' என்று வேடிக்கையாகச் சொன்னாள்.

அந்த நேரத்தில் அந்த வீட்டுச் 'சுந்தரன்' ஸ்கூட்டரைத் தள்ளிக் கொண்டு வந்து வெளியே நின்றான்.

யார் அப்பா இந்தப் பெண்?

அவளோடு பேசிக் கொண்டிருக்கிறீர்கள்; ''நம் சொந்தக்காரரா?'' என்று கிண்டலாகக் கேட்டான்.

''என் வருங்கால மருமகள் உனக்காகப் பேசுகிறேன்'' என்று அவரும் கிண்டலாகப் பதில் சொன்னார்.

அவன் அது உண்மைதானா என்று சந்தேகப் பட்டான்.

அவளுக்கு எல்லாத் தகுதியும் இருக்கிறது என்று முடிவு செய்தான்.

அவன் அகன்ற பிறகு பெரியவரிடம் அவள் பேச்சுக் கொடுத்தாள்.

''உங்கள் பையனா''

''பையன்தான்'' என்றார்.

''நான் சந்தேகப்படவில்லை'' என்றாள்.

''கொஞ்சம் வெட்கப்படுவாள்''

''நான் பார்த்துக்கறேன் கவலைப்படாதீர்கள்'' என்றாள்.

''என்ன சொல்கிறாய்''

''உங்கபையனை எனக்குப்பிடித்து இருக்கிறது''

''கூட்டலோடு நிற்க மாட்டே போல் இருக்கே''

''வீட்டையும் பெருக்குவேன்; மருமகள் ஆவதற்கு வேண்டிய தகுதிகள் எல்லாம் எனக்கு இருக்கிறது இனப் பெருக்கலுக்கும் துணையாக நிற்பேன்'' என்றாள்.

''சனியன் நீ எங்குவந்து சேர்ந்தாய்'' என்று கோபித்துக் கொண்டு, தன் சிறைக்குள் சென்று அடங்கிக் கொண்டார்.

அவர் வீட்டைச் சிறையாகத்தான் என்னால் பார்க்க முடிகிறது. எப்பொழுதும் அவர் அந்த வீட்டிலேயே அடைபட்டிக்கிடப்பார்; வெளியே சென்று அதிகம் பார்ப்பது இல்லை. ஞாயிறு மட்டும் சூரியன் தோன்றுவான். அவரும், அவர் மனைவியும், மகனும் சர்ச்சுக்குப் போவதைப் பார்த்திருக்கிறேன். 'சூட்' போட்டுக் கொண்டு காய்கறி வாங்கி வருவதைப் பார்த்திருக்கிறேன். அது அவர் உத்தியோகத்தில் இருந்தபோது தைத்தது; போட்டுச் கொள்ள வாய்ப்பு இல்லை. காய்கறிக் கடைக்குத் தானே போட்டுக் கொண்டு போகமுடியும்.

அவள் அவனை மணந்துகாட்டுவதாக உறுதி கூறினாள்.

இது மங்கம்மா சபதமாகப் பட்டது.

குப்பைத் தொட்டியை அகற்றுவதைவிட அவளை அந்தத் தெருவுக்குள் வருவதைத் தடுக்கப் பெரிதும் முயன்றார். அவளை மாற்றி வேறு எங்காவது போடும்படி அவர் செய்த முயற்சி வெற்றி பெற்றது. ஆனால் அவர் பையனை அவளைச் சுற்றிவரச் செய்யாமல் அவரால் முடியவில்லை. அது அவனுக்கு சவுகரியமாகியது, அப்பாவின் பார்வை அவனை விட்டு அகன்றது.

அவர்கள் காதலர்கள் ஆகிவிட்டார்கள் என்று தெரிந்தது. எனக்குச் செய்திகள் அவ்வப்பொழுது செவியில் பட்டுக் கொண்டிருந்தன.

அதற்குத் துணை செய்தது அங்கு அடிக்கடி தோளில் கோணிப்பையைச் சுமந்து கொண்டு வந்த குப்புசாமி தான்.

இந்தப்பெண் 'அசடு' அதனால் அவள் என் எழுத்தைக் கவர்ந்தாள். பெரியவர் ஒரு 'முசுடு' அதனால் அவரைப் பற்றி எழுதினேன். அவர் மகன் ஒரு 'குருடு' காதலுக்குக் கண் இல்லை என்பதால் அவளைச் சுற்றிக் கொண்டிருந்தான். அதனால் அவனைப் பற்றி எழுதவேண்டி இருந்தது. இந்தக் குப்புசாமி யார்? கோணிப்பையைத் தூக்கிக் கொண்டு அந்தக் குப்பை மேட்டைச் சுற்றுகிறான்.

என் சமூகப் பார்வை அவனையும் கவனிக்கச் செய்தது இவன் ஒரு 'சரடு'. யாரைப்பற்றியாவது ஏதாவது அளப்பான். 'எச்சில் இரவுகள்' என்னும் படம் பார்த்திருக்கிறேன். அதற்கப்புறம் இந்த மாதிரி பாத்திரங்களில் என் கவனம் சென்றது. அதற்கு அவர்க்கு அவார்டு கிடைத்தது இதற்கு ரிவார்டு கிடைக்கும்.

-4-

குப்புசாமி அடிக்கடி வந்து என்னிடம் பேச்சுக் கொடுப்பான்.

''ஏன் சார்! இப்பொழுது எல்லாம் எழுதுவது இல்லையா'' என்று கேட்டான்.

''ஏன் என் கதைகள் உனக்குப் பிடிக்குமா'' என்று கேட்டேன்.

''நீங்கள் கிழித்துப்போடுவீர்களே அந்தத் தாள்களைப் பொறுக்குவது என் பிழைப்பு. இப்பொழுது ஏன் அதிகம் கிழிப்பது இல்லை'' என்று கேட்டான்.

''பத்திரிகைகளுக்கு அனுப்புவது இல்லை; அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் திருப்பி விடுவார்கள். அதனால் வேறு வழியில்லாமல் கிழித்துப் போடுவேன்''.

''ஏன் இப்பொழுது பத்திரிகைகளுக்கு அனுப்புவது இல்லை''?

''பத்திரிகை ஜன ரஞ்சகமானது.

என் விஷயங்களை அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

பத்திரிகைகள் சதா வாசகர்களைப் பற்றிக் கவலைப் படுவார்கள்.''

''உங்கள் கதைகளை யார் படிப்பார்கள்?''

''நாலுபேர் படித்தால் போதும்; புதிய செய்திகள் சொல்ல விரும்புகிறேன். உணர்வுகளை மட்டும் வைத்து விளையாடவில்லை''.

உண்மைகளை உணர்த்த விரும்புகிறேன்.

''மர்ம நாவல்கள் எழுதுங்க'' என்றான்.

''எதுக்கு''

''அதற்குத்தான் வரவேற்பு'' என்றான்.

''ஒவ்வொரு எழுத்தும் மர்ம நாவல்தான். எப்படி முடியும் என்று யாரும் கூறமுடியாது. அதுவரை எதுவும் மர்ம நாவல்தான்''.

''யாரை வைத்து எழுதுவீர்கள்'' என்றான்.

''உன்னை வைத்துத்தான்'' என்றேன்.

அவன் சிரித்தான்.

-5-

''உங்களுக்குக் கதை வேண்டுமா எதிர் வீட்டுப் பையனும் அந்த ரிசப்ஷனிஸ்டு பெண்ணும் காதலிக்கிறார்கள். அதை வைத்து எழுதுங்கள் கதை'' என்றான்.

''அவள் ஒரு படித்த பெண். அவன் ஒரு கிறிஸ்தவ இளைஞன். வங்கியில் நிரந்தரமான வேலை. அவனுக்கு நிச்சயம் சில லட்சங்கள் வரும். இங்கே அவள் லட்சியங்களைப் பற்றிப் பேசுவாள். அந்தக் குப்பை கூட்டும்

தொழிலைவிடப் போவதில்லை என்று கேள்விப்பட்டேன். அவன் பெற்றோர்கள் சம்மதிக்க மாட்டார்கள். அவனும் தயங்குவான்; தொழிலுக்கு மதிப்புத்தர வேண்டும் என்பது அவள் கொள்கை; அவன் அவள் அழகை மட்டும்தான் ஆராதிக்கிறான்; அவனது மயக்கம் நீடிக்குமா? நாளைக்குப் பணக்காரப் பெண் ஒருத்தி கிடைத்தால் அவன் மனம் மாறமாட்டானா?'' இதெல்லாம் அவன் எழுப்பிவிட்ட புதிர்கள்

அவனுடைய அப்பா பிடிவாதக்காரர். விட்டுக் கொடுக்க மாட்டார்! ஞானஸ்நானம் செய்து கொள்ளாத எந்தப் பெண்ணையும் அவர் தொடமாட்டார். இதைக் கவனித்து எழுதுங்கள்; கதை விறுவிறுப்பாகப் போகும்'' என்று கூறினான்.

''சார்! இந்த வீட்டு ஐயா இந்தக் குப்பைத் தொட்டியை எங்கேயாவது தூரப்போட வேண்டும் என்று கூறுகிறாராமே? அப்புறம் என் பிழைப்பு'' என்றான்.

''எங்கு இருந்தாலும் வீட்டுப்குப்பை தெருவுக்கு வந்து தானே தீரும்''

''உங்களை நம்பித்தான் இங்கே வருகிறேன். அது கூட நீங்கள் அதிகம் கிழித்துப் போடுவது இல்லை என்று சொல்கிறீர்கள். என் பிழைப்புக் கெடக் கூடாது'' என்றான்.

''வேறு எங்கே உனக்கு அதிகக் குப்பைக்காகிதம் கிடைக்கிறது''

''நடிகை 'ராணி' வீட்டுக்குப் போவேன். அந்தக் குப்பைத் தொட்டியில் ரசிகர்கள் கடிதங்கள் நிறையக் கிடைக்கும்'' என்றான்.

என் நண்பர் வக்கீல் என்னைத் தேடி வந்தார்.

''வீட்டில்தான் இருக்கிறீரா'' என்றார்.

''என் மனைவி கட்டளை; பெரும்பாலும் வீட்டில்தான் இருப்பேன். சாயங்காலம் தான் வெளியே போவேன்'' என்றேன்.

''இந்தக் காலத்துச் சினிமாப்படங்கள் ஒரே கொள்ளை-கொலை; வன்முறை தலைவிரித்து ஆடுகிறது'' என்று அலட்டிக் கொண்டார்.

''நீங்களும் அதை நம்பித்தானே பிழைக்கிறீர்கள்' என்றேன்.

''எதை?''

''கொலை, கொள்ளை. குற்றம், இது தானே உங்கள் தொழில்'' என்றேன்.

''கொன்னுட்டிங்க சார்'' என்றார்.

''உங்கள் பாராட்டுக் கூடக் கொலையாகவே இருக்கிறதே என்றேன். 'கொன்னுட்டிங்க' என்ற சொல்தவிர உங்களுக்கு வேறு எதுவும் அகப்படவில்லையே'' என்றேன்.

அவர் சிரித்தார்.

''எங்கே இந்தப் பக்கம்'' என்றேன்.

"இந்த மனுஷன் அவசரப்பட்டுக் குப்பைத் தொட்டியை இடித்துத் தள்ளிவிட்டார். கார்ப்பரேஷன் இவர் மீது வழக்குப்போட்டு இருக்கிறார்கள். இவருக்காக நான் வாதாடுகிறேன்" என்றார்.

"கரசேவை செய்திருக்கிறார்" என்றேன்.

வக்கீல் இங்கு இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு எதிர் வீட்டுப் பெரியவர் என் வீட்டிற்கு வந்தார்.

"மன்னிக்கவும்" என்ற முன்னுரையோடு வீட்டுக்குள் நுழைந்தார்.

இதுவரை அவர் என்னிடம் பேசியது இல்லை. அவரை மன்னித்து விட்டேன்.

இது ஆரம்பம்.

அவர் ஒரு 'ரம்பம்' என்பதைப் போகப் போக உணர்ந்தேன்.

"நான் கிறிஸ்துவன்; எனக்கு எதுவும் சுத்தமாக இருக்க வேண்டும். என் வீட்டு முன்பு மற்றவர்கள் வந்து குப்பையைக் கொட்டுகிறார்கள். குப்பைத் தொட்டி இருந்தால்தானே அங்கே வந்து அவர்கள் கொட்டுவார் கள். அதனால் அதை இடித்துவிட்டேன். இது ஒரு தவறா? நான் என்ன கோயிலையா இடித்து விட்டேன். குப்பைத் தொட்டிதானே" என்றார்.

"அதே இடத்தில் மறுபடியும் கட்டித்தர வேண்டும் என்கிறார்கள். வேறு வழி இல்லை; இது தெரிந்திருந்தால்

அதை இடித்து இருக்க மாட்டேன்; ஆவேசப்பட்டு விட்டேன்'' என்றார்.

-6-

''நீ எங்கே தங்குகிறாய்?'' என்று கேட்டான்.

கோணிப்பை குப்புசாமியைப் பார்த்து ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்றான்.

இந்த அழகிய தொடர் அவனுக்கு எப்படித் தெரிந்தது. வியந்தேன்.

''இது எங்குக் கற்றாய்?'' என்றேன்.

''தமிழ் மாநாடு நடத்தினார்கள். அங்கு எழுதி இருந்தார்கள்'' என்றான்.

''உனக்கு என்று ஒரு வீடு கிடையாதா''

''திரை அரங்குதான் நான் உறங்கும் இடம். இரவு சினிமாப் பார்ப்பேன். காலையில் அங்குக் கிழித்து எறியப் படும் டிக்கட்டுகள் பொறுக்குவேன்'' என்றான்.

''குடிப்பழக்கம் உண்டா?''

''இல்லை'' என்றான்.

''வேறு கெட்ட பழக்கம்?''

''காதல் பழக்கம் உண்டு'' என்று துணிந்து கூறினான்.

அந்தச் சொல் அவனிடம் கொச்சைப்படுகிறது என்பதை உணர முடிந்தது.

அதை நான் கண்டிக்கவில்லை.

"எங்கே என்னை ஒதுக்கிவிடுவீரோ என்று பார்த்தேன்".

"ஒதுக்குவதற்கு என்ன இருக்கிறது. வயசு; ஒரு தினுசா இருப்பது சகஜம்தானே" என்றேன்.

"இப்போது நாங்கள் எங்களைக் காத்துக் கொள் கிறோம்" என்றான்.

"விளங்கவில்லை"

"இப்பொழுது எய்ட்ஸ் என்று நோய் பரவுகிறது என்று கூறுகிறார்களே! அதற்குத் தற்காப்புச் செய்து கொள்கிறோம்" என்றான்.

"எப்படி?"

"உறைகள்" என்றான்.

விளம்பரத்தின் விளைவு பயன்தந்து வருகிறது என்று அறிய முடிந்தது.

திடீர் என்று அவன் ஒரு கேள்வி கேட்டுவிட்டான்.

சமுசாரத்தை ஊருக்கு அனுப்பி விட்டீர்களா பார்ப்பதே இல்லையே" என்று கேட்டுவிட்டான்.

அவள் என்னிடம் சண்டைபோட்டுக் கொண்டு போயிருக்கிறாள் என்பதை அவனிடம் சொல்ல முடியுமா? அவனுக்கும் எனக்கும் இங்கேதான் வித்தியாசம். அவன்

தன்னை மறைத்துக் கொள்ள முயற்சிக்கவில்லை. நான் என்னை மறைத்துக் கொள்கிறேன்.

''எனக்குக் குடிப்பழக்கம்; அது அவளுக்குப் பிடிக்க வில்லை. இதை விட்டால்தான் இங்கு வருவதாகச் சொல்லிப் போய் இருக்கிறாள்'' என்று துணிந்து அவன் நம்பும்படி ஒரு பொய்யைச் சொல்லி வைத்தேன். அதை ஏற்க அவன் மறுக்கவில்லை, எழுத்தாளன் சொல்வதை வாசகன் நம்பிவிடுகிறான்.

அதைப்பற்றி அவன் மேலும் தொடராது விட்டான். உண்மையில் எனக்கும், அவளுக்கும் கருத்து வேறுபாடு நான் எழுதும் எழுத்தில் ஏற்பட்டது.

ஆபாசமாக எழுதும் எழுத்தை அவளால் மன்னிக்க முடிகிறது. மக்களை மடமையில் ஆழ்த்தும் அறியாமையை உண்டாக்கும் மதப்பிரச்சார எழுத்துக்களை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மனித நேயத்தைப் பற்றி எழுத வேண்டிய கவிஞர் களும் சில சமயம் திசை மாறி மதங்களுக்கு விளக்கம் எழுதிக் கொண்டிருப்பது அவள் பிற்போக்கு என்று கருதுகிறாள்.

இன்று நமது நாட்டுக்குத் தேவை மத நம்பிக்கைகள் அல்ல. தன்னம்பிக்கை; கோயில்களைப் புதுப்பிக்க அல்ல. தொழில்களை உண்டாக்க; பழைய ஞானத்தைப்பற்றி ஆராய்வது அல்ல. புதிய விஞ்ஞானத்தை அறிய இளைஞர் களைத் தூண்டுவது. வாழ்க்கையை நேசிக்கக் கற்றுத்தர வேண்டும். நன்கொடைகளை யாசிக்க அல்ல. பொதுப் பணி என்றால் அது மருத்துவமனை, அனாதை இல்லம்,

முதியோர் பாதுகாப்பு, நன்கொடை கேட்காத பள்ளிச் சாலைகள், சத்துணவுக் கூடங்கள், எதிர்பாராத இழப்பு களுக்கு ஈடு செய்ய உதவித் தொகை தருதல், நலிந்த குடும்பங்களை நிமிரவைத்தல், வட்டிக்குக் கடன் வாங்கித் திருப்பித்தர இயலாத வறியவர்க்கு வாழ்வு அளித்தல். இத்தகைய அறச் சாலைகளை நிறுவுதல் இப்படி மாற வேண்டும் என்று வற்புறுத்துகிறாள். அறிவொளி இயக் கங்கள் நாட்டிதல் பெருகிவருவது பாராட்டத் தக்கது என் கிறாள்.

பெண்கள் விடுதலை இயக்கம் வளர்கிறது. அவர்கள் தம்மை விடுவித்துக் கொண்டால் மட்டும்போதாது "நாட்டை இப்பழமையிலிருந்து மீட்க வேண்டும் என்று அவள் துடிக்க, அவள் சார்பு என்னையும் மாற்றத் தொடங்கிவிட்டது. ஒரு ஆடவனின் வெற்றிக்கு ஒரு பெண் துணை நிற்பாள், என்று கூறுவார்கள்; என்னைப் பொறுத்தவரை அவள் என்னை நெறிப்படுத்தக் காரண மாக நிற்கிறாள். என்னை என் பழைய போக்கிலிருந்து மாற்ற அவள் வாதங்கள் துணை நிற்கின்றன.

எழுத்தில் மதப்பிரச்சாரம் கூடாது என்கிறாள் அவள். ''பழைய இலக்கியங்களில் அவை கலந்து விட்டன. அவை நீக்க முடியாது'' என்பது என்வாதம்.

ஆபாச எழுத்துக்கள் எப்படி இளைஞர்களைக் கெடுக்கிறதோ அதே போல மதவியல் மாந்தர் தம் மடமையைக் கூட்டுகிறது என்பது அவள் வாதம்.

தெய்வ நம்பிக்கை வேண்டும் என்று வற்புறுத்தும் எழுத்துக்கள் மனிதனின் தன்னம்பிக்கையைக் கெடுக்கின் றன. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்று பேசிக்

கொண்டு மனிதனின் ஆற்றலையும தன்னம்பிக்கைகளை யும் மதப்பிரசாரங்கள் குலைக்கின்றன என்பது அவள் வாதம். இந்த வாதங்களில் அவள் பிடிவாதம் காட்டி னாள்; என் போக்கில் என்னைவிடு என்று வற்புறுத்தினேன் அவள் தன் போக்கில் தாய் வீடு சேர்ந்தாள்.

-7-

மறுபடியும் சாத்தான் வேதத்தை ஓத ஆரம் பித்தது.

''குப்பைத் தொட்டியை என் வீட்டு முன்னால் ஏன் போட வேண்டும்?'' என்று தொடங்கினார்.

''உங்கள் குப்பையைக் கொட்ட'' என்றேன்.

''எதிர் வீடு, பக்கத்து வீடு மற்ற எல்லாரும் இங்கே போடுகிறார்களே, அதனால் என் வீடு குப்பை மேடு ஆகிறதே'' என்றார்.

''ஏதாவது ஒரு வீடு அதற்குத்தேவை; உங்கள் வீடு அதற்குப்பிடித்து இருக்கிறது'' என்றேன்.

''குப்பைத் தொட்டி வீட்டுக்கு முன்னால் இருந்தால் லட்சுமி எப்படி வருவாள்'' என்று கேட்டார்.

''இந்த வீடு சுத்தமாக இருக்கும் என்று நம்பி வருவாள்; கதவைத் திறந்து வையுங்கள்'' என்றேன்.

''திறக்காமலேயே மூடி வைத்திருந்தாலும் கொள்ளை யர்கள் வருவார்கள்'' என்றார்,

''இதற்கும் தெருக்குப்பைத் தொட்டிக்கும் தொடர்பு இல்லையே'' என்றேன்.

''இந்தத் தாள் பொறுக்க வருகிற ஆள் இவர்களை நம்ப முடியாது. அவர்கள் பகலில் நோட்டம் பார்ப்பார்கள்; இரவில் தோட்டம் வழியாகத் திருடுபவர்க்கு வழி காட்டுவார்கள்'' என்றார்.

எனக்கே அவரைக்கேட்க வேண்டும் என்று இருந்தேன். அதைக் கேட்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

''ஏன் சார்; உங்க பையனுக்கு ஏன் கலியாணம் செய்ய வில்லை'' என்றேன்.

''சாதகம் பொருந்தவில்லை'' என்றார். அவருடைய. சுரம் சற்று இறங்கிய. ''கிறித்தவர் நீர், நீங்கள் கூட சாதகம் பார்க்கிறீர்களா'' என்றேன்.

''இந்த நாட்டில் கலாச்சாரங்கள் கலக்காமல் இல்லை' இராகு காலம் எமகண்டம் இதெல்லாம் கூட நான் பார்ப்பது உண்டு, ஒரு மதத்தின் தாக்கம் மற்றவருக்கு ஏற்படுவதைத் தடுக்கமுடியாது. எனக்குக் கம்பராமாயணத்தில் ஈடுபாடு உண்டு. இந்தக் காவிய நாயகன் இராமனை உயர்ந்த மனிதனாக மதிக்கிறேன். கண்ணனின் கதையைப் படிப்பது உண்டு.

இராமன் ஏகபத்தினி விரதன்; அதனால் அவனைப் பிடித்து இருக்கிறது என்றார். அவரைக் கண்டு பரிதாபப் பட்டேன்.

''கலாச்சாரத் தாக்குதலை யாரும் தவிர்க்க முடியாது' என்று கூறினார்.

''இதை நன்கு புரிந்து கொண்டால் சமயத்தில் கோட்பாடுகள் பேதங்கள் வளராது'' என்று தெரிவித்தேன்.

''நாங்கள் காதல் மணத்தை ஆதரிக்கிறோம். இதற்கு மேல்நாட்டுக் கலாச்சாரம் காரணம்' என்றார்.

''மிகவும் முற்போக்காக இருக்கிறீர்கள்'' என்றேன்.

''இருந்தாலும் பாதிரியாரைக் கலந்தே முடிவு செய்வோம்'' என்றார்.

''ஏன் உங்க மகன் காதல் கீதல்''

''இதுமாதிரி இதுவரை இல்லை.

யாராவது ஒரு பெண்ணைப்பார்த்தால் அவன் கழுத்து சுளுக்கிக் கொள்ளும்'' என்றார்.

முதலில் புரியவில்லை; பிறகு புரிந்து கொண்டேன்.

அவன் தலை குனிந்து கொள்வான் என்பதை இந்தக் கனிந்த மொழியால் கூறினார் என்பதை அறிந்தேன்.

''அவன் தலை நிமிர்ந்து விட்டது'' என்று சொல்லத் துடித்தேன்.

''உமக்கு எப்படித் தெரியும்'' என்று கேட்டால் என்ன செய்வது; திகைத்தேன்.

''என் பையன் அப்படித்தான் என்ன செய்வது?'' என்றார்; அதைக் கேட்டு நகைத்தேன்.

''புடலங்காய் காய்த்தால் அது முடங்காமல் தொங்கித் தானே தீரவேண்டும். கத்தரிக்காய் காய்த்தால் கடைக்கு வந்துதானே ஆக வேண்டும்; நாம் ஏன் அவசரப்பட வேண்டும்'' என்று விட்டு வைத்தேன்.

''மணமேடை என்ற பகுதியில் விளம்பரம் செய்ய லாமே'' என்றேன்.

''சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிற விஷயங்கள் சுவரொட்டிகளுக்குக் கொண்டுவரத் தேவையில்லை'' என்றார்.

''உங்களுக்கு நல்லது தானே! தேர்ந்தெடுக்க இது ஒரு வாய்ப்பு'' என்றேன்.

''எந்தப்பெண் அழகு இல்லை என்று தைரியமாகச் சொல்லுவார்கள்! விளம்பரத்தில் வரும் மணப்பெண்கள் அனைவரும் பூரண அழகிகள்தான்'' என்றார்.

''வீட்டு மனைக்கு அளவு தருவதுபோல் உயரம் எடை தருகிறார்கள், நிறம் கருப்பு என்று எந்தப் பெண்ணையும் சொல்வதில்லை; 'சுமார்' என்று கூறுவார்கள்; கிட்டே போனால் எட்டி உதைக்கும்; முன்பின் தெரியாத இடங் களில் மாட்டிக் கொள்வோம்; பழகித் தொடர்பு கொள் வதுதான் நல்லது'' என்றார்.

''உங்க பையனுக்கு என்ன சார் குறைச்சல்? வங்கித் தொழில்; பட்டப்படிப்பு; பாட்டனார் சொத்து, திட்ட மிட்ட குடும்பம்; குடிக்கு ஒரே மகன்; நல்ல உயரம், சிரிக்க மாட்டான் அதுதான் அவனிடம் உள்ள மன்னிக்க முடி யாத குறை' என்றேன்.

''அப்படி அவனைப் பழக்கிவிட்டோம். பொதுவாக நாங்கள் சிரிப்பது இல்லை, அது எங்கள் வீட்டுப்பழக்கம். சிரித்தால் கெட்டு விடுவான் என்று இப்படி வளர்த்து விட்டோம்'' என்று விளக்கம் தந்தார்.

''சில வீட்டுக் குழந்தைகள் 'உம்' என்று முகத்தை வைத்துக் கொள்ளும்; அதற்குக் காரணம் பெற்றோர்கள்; சிரித்துப்; பேசுவதும் ஒரு வகை விளையாட்டு; இதைப் பல பேர் தெரிந்து கொள்வதில்லை. ஏதாவது பேசிச் சிறுவர்களைச் சிரிக்க வைக்கவேண்டும். அதுதான் வீட்டில் கலகலப்பு உண்டாக்கும்'' என்றேன்.

''நீங்கள் சொல்வது உண்மைதான்''.

''பெரியவர்களைக் கிண்டல் செய்யமுடியாது; சின்னப் பிள்ளைகளைப் பார்த்துதான் சிரிக்க வைக்க முடியும், அதில் நாமும் மகிழ்ச்சி அடையலாம்'' என்றேன்.

''அதுக்கு என் மனைவி தான் காரணம் அவள் அதிகம் சிரிக்கமாட்டாள்'' என்றார்.

''ஏன்''

''அவள் பல் கொஞ்சம் எடுப்பு; அதை வெளிக்காட்டக் கடுப்பு'' என்றார்.

''அவர்கள் உங்களை விட கொஞ்சம் வயது அதிகமோ?''

''எப்படிச் சொல்கிறீர்கள்''

''தலை நரைத்து விட்டதே''

''கருமை இளமைதரும்; அவள் தன் தன்மையை மாற்றிக்கொள்ள மறுக்கிறாள்''

''இளமை அழகு தருமே''

''அவள் சலித்து விட்டாள் வேறு ஏதாவது இருந்தால் பேசுங்கள்; என்பாள்''

நிலைமை எனக்குப் புரிந்தது. அவர்கள் புனிதவதியார் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

''தெய்வ பக்தி அதிகம்'' என்றார்.

அவர்கள் மகிழ்ச்சி குறைவுக்குக் காரணம் விளங்கியது.

-8-

அவரைப் பார்க்கும்போது நான் முன்பு குடியிருந்த வீட்டுக்கு எதிரில் இருந்த இவர் நகல் ஒருவர் கவனத்துக்கு வந்தார், ஒழுங்காக வேலை செய்தவர், ஒழுங்காக ஓய்வூதியம் பெற்றவர், எதிர்பார்க்கவில்லை, அவர் மனைவி அவரிடமிருந்து பென்ஷன் வாங்கிக் கொள்வார் என்று.

''மாரடைப்பு'' என்றார், வைத்தியர் வருமுன் கதவடைப்பு நேர்ந்துவிட்டது. காலன் அவளுக்கு எமனாக வந்து சேர்ந்தான்; அகால மரணம் என்றார்,

அவருக்கு இரண்டு பெண்கள்; மூன்று பையன்கள் அவற்றின் விரிவுகள்; பிரிவுகள் எல்லாம் இருக்கிறார்கள், இருந்தும் அவர் துயரத்தை ஆற்ற ஆறுதல் கூற இயலவில்லை.

''யார் இருந்தும் எனக்கு ஆதரவு இல்லை, இனி நான் நடைப்பிணம்'' என்றார். ''பிணமும் நடக்கும்'' என்பது அவர் சொல்லத் தெரிந்து கொண்டேன்.

''என்ன சார்! உங்களுக்கு என்ன குறை?'' என்றேன்,

''இந்தக் காலத்துக்குத் தான் என் சுந்தரி எனக்குத் தேவை'' என்றார். அந்த அம்மையார் பெயர் சுந்தரி என்பதை அவர் கூறினார்.

''என் மனைவி இறந்தமைக்குக் கவலைப்படவில்லை'' என்றார், வியப்பைத்தந்தது; விளக்கம் தந்தார்.

''மனைவி என்பது ஒரு அத்தியாயம்; துணைவி என்பதும் அதோடு அடங்கலாம் ''தோழமை'' என்ற ஒரு சொல் இப்போதுதான் உதயமாகிறது. ''உடம்பு'' என்பது மறைந்துவிடுகிறது. எங்கள் நினைவுகள் உணர்வுகள் சார்புகள் ஒருவருக்கு ஒருவர் துணை நிற்கும் காலம் இது! அவளுக்கு நான் துணை; எனக்கு அவள் துணை. இந்தத் தோழமை இழந்து ஏழமை பெற்றுள்ளேன்'' என்றார்.

''சோறு போட ஆள் இருக்கிறார்கள்; சோர்வு அகற்ற அவளைத் தவிர வேறு யாரும் ஈடு செய்ய முடியாது'' என்றார் .

இருவேறு உலகத்து இயற்கை. இவர் ஒரு வகை, அவர் ஒரு வகை என்பது ஒப்பிட்டுக் காணமுடிந்தது.

-9-

இந்த எதிர் வீட்டுக்காரர் தொடர்ந்து என்னை நாடி வந்து கொண்டிருந்தார்.

திண்ணை காலியாக இருந்தால் அந்த வீட்டுக்காரர் பண்ணையார் ஆகிவிடுகிறார். நாலுபேர் மதித்துப்பேச வருகிறார்கள். அதற்காகவாவது வீட்டுக்கு ஒரு முற்றம் தேவை என்று பட்டது.

எழுதுகிறவனை யாரும் தொழிலாளியாக மதிப்பது இல்லை. அவனுக்கு வேலை வெட்டி எதுவும் இல்லை, எழுதிக்கொண்டிருக்கிறான் என்று நினைத்து விடுகிறார்கள்.

''நேரம் பொன்னானது'' என்று எழுதி வைத்தால் என்ன?

என் வீடு பொன்விளையும் களத்தூரா என்ன? அதற்குப் பேச்சு தடையாவதற்கு? பேச்சுதானே என் மூலதனம், மற்றவர்கள் பேசினால்தான் அவர்களை அறிய முடிகிறது. பாத்திரங்கள் மனத்தில் பதிகின்றன. அதற்கு இந்த வீண்பேச்சு தேவைப்படுகிறது, அது என் தொழிலுக்கு முதற்பொருளும் ஆகும், அதனால் அவரை விலக்குவது இல்லை; ஒதுங்குவதும் இல்லை; யாரையும் கண்டு ஒதுங்கும் பழக்கம் என்னிடம்இயல்பாக இருந்ததுஇல்லை; சோம்பலும் சுகமும் இணைபிரியாத சகோதரர்கள் இதுவும் ஒருவகை சோம்பல்தான், சுகம் கிடைக்கிறது.

-10-

யாரும் நோக்கம் இல்லாமல் சந்திப்பது இல்லை, பேசுவதும் இல்லை. போகும்போது வந்த காரியம் இது என்று தெளிவுபடுத்துவார்கள். உண்டியில் இருந்த காசு கலகல வெனக் கொட்டியதுபோல இருந்தது அவர் பேச்சு.

''ஏன் சார் குப்பைத் தொட்டியை உங்கள் வீட்டு முன்னால் போட்டுக் கொள்ளலாமே'' என்றார்.

பிள்ளையார் கோவில் ஆண்டி என்று என்னை நினைத்துவிட்டார்.

''என்ன சார் யோசிக்கிறீர்கள்.'' என்றார்.

யோசிக்கவிடமாட்டார் என்று தெரிந்தது.

''உங்கள் வீட்டு முன்னால் வைத்தால் உங்களுக்கு எப்படி இருக்கும்; அதை நினைத்துப் பார்க்கவே சொன்னேன். இதைத் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டாம்'' என்றார்.

''எனக்கு மிகவும் சவுகரியமாக இருக்கும்'' என்றேன்.

அது அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''மற்றவர்கள் உங்கள் வீட்டில் வந்து கொட்டுவார்களே'' என்றார்.

''வீட்டில் கொட்ட மாட்டார்கள், தொட்டியில்தான் கொட்டுவார்கள்'' என்றேன்.

''அதை எப்படித்தாங்கிக் கொள்ளமுடியும்' என்றார்.

''சிலுவையில் ஏசு அறையப்பட்டார்; அதை நீங்கள் தினமும் சொல்லிப் பாராட்டுகிறீர்கள், அந்தப் பாராட்டுதல் எனக்குக் கிடைக்கும்'' என்றேன்.

''வீட்டுக்கு ஒரு தொட்டிவைத்தால் நாட்டுக்கு நல்லது; இந்தப் போராட்டம் வராது'' என்றார்,

''நிதி நிலை அதற்கு இடம் தராது, தொழிலாளிக்கு வேலையும் கூடும்'' என்றேன்.

''பலருக்கு வேலை கிடைக்கும்; பாருக்கு நல்லது' என்றார்.

''ஒரே வேலையைப் பலர்செய்தால் அதனால் இழப்புதான் ஏற்படும்'' என்றேன்.

''நீங்கள் பொருளாதாரம் படித்திருக்கிறீர்களா'' என்றார்.

''ஆதாரக் கல்வி, இதை அறியப் போதும்'' என்றேன்.

''ஒரு சௌகரியம் இருக்கிறது'' என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

''என்ன சொல்ல முடியுமா?'' என்றார்.

"நான் எழுதும் எழுத்து அதைக் கிழித்துப்போட அருகில் இருந்தால் உதவும்'' என்றேன்.

''நீங்கள் நிறைய எழுதவேண்டும்'' என்று சிரித்துக் கொண்டே வாழ்த்தினார்.

''இருந்தாலும் என் மனைவிடம் ஒரு வார்த்தைகேட்க வேண்டும்'' என்று என் மனைவி பக்தியை அவரிடம் அறிவித்தேன்.

''இதற்கெல்லாமா அவர்களைக் கேட்பது'' என்றார்.

''சின்ன விஷயங்களைக் கேட்டால் பெரிய விஷயத்தைக் கேட்கத் தேவை இருக்காது'' என்றேன்.

''ஏன் அவர்கள் மிகவும் அடக்கமானவராக இருக்கிறார்களே நீங்கள் சொல்வது எதிர்க்க மாட்டார்களே'' என்றார்.

**''பெண் அவளுக்கு நாமம் ஒன்றுதான்; வடிவங்கள் வேறு; அறிவில் கலைமகள்; அழகில் திருமகள்; எதிர்ப்பில் மலைமகள்; மொத்தத்தில் அறிய முடியாத பரம்பொருள்'' என்றேன்.**

என் உவமைகளையும் தத்துவத்தையும் கேட்டு எனக்கு எழுதத் தெரியும் என்பதை ஒப்புக் கொண்டார்.

''வந்தபிறகு சொல்லிக்கொள்ளலாமே'' என்றார்.

''வருமுன் தெரிவிப்பவன்தான் அறிவாளி'' என்றேன்.

''அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

''சுகவாசத்திற்குப் போய் இருக்கிறாள்'' என்றேன்.

''சகவாச தோஷம்'' என்றார்.

''எது?'' என்றேன்.

''நீங்கள் பழகும் தமிழ்;

அது எதுகை மோனைப்பட பேச வைக்கிறது''

''அது தமிழ்வாசம்'' என்றேன்.

''நீங்கள் வாசன்'' என்றார்.

''உங்கள் நேசன்'' என்று சிரித்துப்பேசி அனுப்பி வைத்தேன்.

அவர் ஒரு காச நோயாளி என்பதை அவர் இருமலில் இருந்து தெரிந்து கொண்டேன். இடை இடையே வாக்கி யங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

என் மனைவியிடம் மதிப்பு வைத்திருந்தேன், அவளைக் கேட்டுச் செய்வது வழக்கம் ஆகிவிட்டது. அதனால் அவளை மதிக்கிறேன் என்ற மனநிலை ஏற்படு கிறது. இந்த உரையாடல்கள் சில சமயம் அவசியம் ஆகின்றன. மனைவி என்றால் ஏதாவது பேசித் தொலைக்க வேண்டுமே அதற்கு இந்தச் சின்ன விஷயங்கள் தேவைப்பட்டன.

அவர் கிறித்தவர், விவிலிய வாசகம் அவர் சொற்களில் இடம் பெற்றன.

''முடியாது'' என்று சொல்லி அவரை முறியடிக்க விரும்பவில்லை. அதனால் எதையும் சாதிப்பது இல்லை, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி வந்த நான் மற்றவர் கள் சொல்வது கேட்டுச்; சிந்தித்து முடிவு எடுக்கப் பழகி விட்டேன்; வாதங்கள் வெற்றி தருவதில்லை, பிடிவாதம் பிழைபட்ட ஒன்றாகும், அதனால்தான் அவரிடம் இவ் வாறு கூறித் தற்காலிகமாக அடக்கி வைத்தேன், இத் தகைய பண்பாடு என் மனைவியின் எதிர்ப்பில் வளர்த்துக் கொண்டேன்.

-11-

அச்சகம் என்பது வெறும் இயந்திரங்கள் தொழிலகம் மட்டும் அல்ல, சக தொழிலாளர் ஒரு சிலரிடம் பேசும்

வாய்ப்பு அது அளிக்கிறது. அவர்கள் அங்கே உட்கார்ந்து அவர்கள் ஏற்கனவே செய்து வைத்த பிழைகளையும் அச்சுக் கோப்பவரின் கை நடுக்கத்தையும் திருத்திக் கொண்டு இருப்பார்கள்.

இயந்திரம் ஓடிக் கொண்டே இருக்கும்போது கூட சிறுபிழை ஏற்பட்டு விடும்; நூல் அச்சடித்த பின்னர் அதைப்பார்த்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கக் கூடாது என்று அச்சகர் அடிக்கடி கூறுவார். அதற்கு முன்னால் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அதற்குப் பிறகு ஐயோ இப்படி வந்துவிட்டதே என்று கவலைப் படக்கூடாது என்பார். பிழைதிருத்தம் போட்டு நாமும் நம் பிழைகளைச் சுட்டுவது பெருந்தன்மையாக இருக்க லாம். ஆனால் நூலின் அழகுத் தன்மை கெட்டுவிடும். சோறு ஆக்குவதற்கு அரிசியில் கல் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். சோறு சமைத்தபின் சமைத்தவர்கள் கை வைக்கக்கூடாது, படிக்கிறவர்கள் அவர்கள் கல்லை எடுத்துப்போட்டுச் சாப்பிடுவார்கள், அது அவர்களுக்கு விட்டுவிடுவது தான் நல்லது என்று அனுபவ அறிவு தருவார்.

எதிர்பாராத சந்திப்பு ஒரு சக எழுத்தாளரோடு அங்கு எனக்கு ஏற்பட்டது. அதுவே எங்கள் காதலுக்குக் கால் கோள் ஆகியது.

என் தற்கால வீட்டுக்காரி இதற்குமுன் கவிதை நூல் அங்கு அச்சிட்டுக் கொண்டிருந்தாள், இதற்குமுன் டி.வி. யில் கவியரங்கில் பார்த்திருக்கிறேன். அழுது வடிந்த முகமாக இருக்கும்; நேரில் பார்த்த பிறகு என் அபிப்பிரா யத்தை அவள் மாற்றிக் கொள்ளச் செய்தாள்.

''தங்கள் படைப்பு?''

''கவிதை'' என்றாள். ''இது உங்கள் இதயத்துடிப்பு'' என்றேன்.''பெண்களுக்கு இது விழிப்பு'' என்றாள்.

அவள்மீது இச்சை தோன்றியது, அதற்குக் காரணம் என் பச்சை இளமைதான்.

அவளைப் பற்றிச் கேள்விப்பட்டிருந்தேன்.

''மணமானவள்; தான் அதில் குணம் காணாததால் விடுதலை பெற்றவள்'' எனறு கேள்விப்பட்டிருந்தேன்.

எழில் மிக்க இவளை எப்படி முன்னவன் விழைவு நீங்கி விலகினான் என்பது புலப்படவில்லை.

''நிச்சயம் அவன் அவளை விலக்க முன் வந்திருக்க மாட்டான். இவளேதான் கூண்டைவிட்டுப் பறந்து வெளியேறி இருக்க வேண்டும்'' என்று முடிவு செய்து கொண்டேன்.

அந்தப் பொருளை அறிய எந்தச் சொல்லைப் பயன் படுத்துவது? எழுத்தில் தொடங்கினேன். திருக்குறளைப் போல; 'நீங்கள் ஏன் கவிதை எழுதுகிறீர்' என்று கேட் டேன், ''தட்டி எழுப்பத்தான்'' என்றாள்.

எழுச்சி மிக்க சொற்களாக அவை எனக்குப்பட்டன.

'சந்திப்பிழைகள் நிறைய செய்வேன்' என்றாள். 'அது அனைவருக்கும் பொது' என்றேன்.

'சந்திப்புகளில் ஏற்படுகிறது' என்று விளக்கினாள்.

''நீங்கள் எப்படிப் பிழை இல்லாமல் எழுதுகிறீர்?'' என்று கேட்டாள்.

''பழக்கம்தான்; எழுதி எழுதிப் பழக்கம்; கொஞ்சம் மொழிப் புலமையும் தேவைப்படுகிறது'' என்றேன்.

''இந்த ஒற்றுப்பிழைகளை மட்டும் திருத்திக் கொடுங்கள்'' என்று என்னிடம் தன் கரம் நீட்டினாள். அதை ஒரு வரமாகக் கொண்டேன். அது சுரமாக மாறியது. தரமான காதலாக வளர்ந்தது.

அந்த அச்சகத்துக்குப் பிழை திருத்த அடிக்கடி சென்றேன். இல்லாத பிழை கூட தேடிப்பிடிக்கச் சென்றேன். அவள் அச்சிடும் காலங்களில் என் நூல்களும் அங்கு அச்சு ஏறின. அதனால் நெருக்கடியும் ஏற்பட்டது; அடிக்கடி சந்தித்தோம்.

''உம் கணவரை ஏன் நிராகரித்தீர்'' என்றேன்.

''எதுகை மோனை சரி இல்லை என்றால் கவிதையில் நயம் இருப்பது இல்லை'' என்றாள்.

''புதுக்கவிதைக்கு அது தேவை இல்லையே''

''அதற்கு இயைபு தேவை ஆகிறது. ஓசை அழகு துல்லியமாக இருக்கும்'' என்றாள்.

''நான் கேட்ட வினாவுக்கு விடை?''

''இயைபு இன்மை'' என்றாள்

''அது எது? என்றேன்.

''வாழும் இருவருக்குத்தேவைமன இயைபு'' என்றாள்.

''அவர் தொழில் முதலாளியின் காலில் பிறந்த நாளில் சென்று விழுகிறார். என்னையும் விழச் சொல்கிறார், இங்கேதான் மாறுபட்டோம்'' என்றாள்.

'இது இந்த நாட்டில் ஏற்பட்ட தவறான பழக்கம், கோயிலில் தெய்வத்தை வணங்குகிறார்கள். அந்தப் பழக்கம் இங்கும் வந்துவிட்டது, மதிப்பது வேறு; தலை குனிவது வேறு; அதுவும் கால் தொட்டு வெட்கமில்லாமல் விழுகிறார்கள். அது என்னால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. தன்மானம் இல்லாத வாழ்க்கை எனக்கு அவ மானமாகப்பட்டது'' என்றாள்.

அவள் ஒரு நெருப்பு என்பதை அறிந்தேன். அவள்பால் என் விருப்பு தொடர்ந்தது. அவள் சட்டியில் சோறு சமைத்து வைத்தாள்; அதை வயிறார உண்டேன்; வாதங்கள் வைத்துக்கொண்டால் அது பேதங்களை வளர்க்கும். அதனால் நான் மிதவாதியாக மாறினேன். அபரிமிதமான நன்மைகள் கிடைத்தன.

செம்மீனைப் பற்றிய அழகிய கருத்து ஒன்று உரைத் தாள். அது இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு அடிகோலிய முதல் இந்திய நாவல் என்றாள். மீனவர் குலத்துப் பெண் அவள் இந்துப் பெண், அவள் காதலித்தவன் ஒரு முஸ்லீம். மாப்பிள்ளை இனத்தைச்சேர்ந்தவன். இருவருக்கும் காதல் ஏற்படுத்தி மணவாழ்வில் புகுத்தி மத ஒற்றுமையை ஏற் படுத்த முயன்ற முதல் நாவல் என்றாள். இந்தக் கருத்து

எனக்கு இதுவரை ஏற்பட்டது இல்லை அவள் நுட்ப அறிவை நான் மதிக்க வேண்டி இருந்தது. அவள் ஒட்பம் மிக்கவள் என்பதை அறிய முடிந்தது.

கருத்துகள் இல்லாத எழுத்து அர்த்தமற்றவை என்பாள், வெறும் உணர்வுச் சித்திரங்கள் படிக்கும்போது நெஞ்சைத் தொடும்; பிறகு அவர்களைக் கைவிடும். சிறந்த லட்சியங்களை உருவாக்க வேண்டும் என்பாள். மனிதனின் உரிமைகளுக்கு வழிகோல வேண்டும்; அவற்றைச் சுட்டிக் காட்டினால் போதும் சமுதாயம் விழிப்புப் பெறும் என்று கூறினாள். இது இலக்கியத்தின் பணி என்று அடிக்கடி கூறுவாள். இது என் படைப்புக்கு மணியோசையாக இருந்தது.

எழுத்து வர்க்கப் போராட்டத்தைத் தூண்டினால் அதுமுற்போக்கு எழுத்து ஆகும். இனப்போராட்டம், சாதிப் போராட்டங்கள் இவற்றைத் தூண்டுவது பிற்போக்கு எனத் தெளிவு படுத்தினாள். எதுவும் உணர்த்தாதது புறம்போக்கு இலக்கியம் என்றாள். இலக்கியத்திற்கு அப்பாற்பட்டது என்பது அவள் கருத்து.

அவள் என்னை விட்டுப் பிரிந்து சென்றது 'ஒரு சின்ன விஷயம்தான்; வழக்கம்போல் என் பெண் பாத்திரத்தை மிகைப்படுத்தி வருணித்து விட்டேன். இது தேவையற்றது என்பது அவள் வாதம். அழகைச் சுட்டிக் காட்டலாம். ஆனால் அது அளவுக்கு மீறினால் ஆபாசமாகி விடுகிறது என்கிறாள். இது பெரிதாக மாறி அவள் வெளி நடப்புக்குக் காரணம் ஆயிற்று, எனக்கும் இடைவெளி தேவைப் பட்டது. பிரிவு சூட்டைத் தணிவிக்கிறது. எங்கள் வாதங்

கள் கருத்து வேறுபாடுகளால் ஏற்படும் வேகத்தை ஆற்றத் தேவைப்பட்டது,

அடிக்கடி வெளி நடப்புச் செய்வது இயல்பாகி விட்டது.

இந்தச் சட்ட மன்றத் தொற்றுநோய் அவளையும் பற்றிக் கொண்டது. வேறு ஒரு காரணமும் இருந்தது; கதையில் கருப்போல் அது அடங்கி இருந்தது; அதை அவள் வெளியே கூறவில்லை

-12-

மறுபடியும் எதிர்வீட்டுக்காரர் வந்து என் மேலான மவுனத்தைக் கலைக்கிறார். திடீர் என்று ஒரு விஞ்ஞானக் கண்டுபிடிப்பு கண்டவர்போல் என்னோடு பேச்சுக் கொடுத்தார்.

''நீங்கள் அந்தக் குப்பைப் பொறுக்கியோடு பேசுவது சரி என்று படவில்லை'' என்று ஆரம்பித்தார்.

''காரணம்?''

''நமக்கு என்று ஒரு சமூக நிலை இருக்கிறது. அவன் ஊர் சுற்றி; குப்பைப் பொறுக்கி; ஒதுக்கப்பட்டவன்; அநாதை; அவனைச் சரி சமானமாக வைத்துக் கொண்டு நீங்கள் பேசுவது எனக்குக் கொஞ்சம்கூடப்பிடிக்க வில்லை;'' என்றார்.

''அவன் ஒரு உதிரிப்பூ; கருகிய மொட்டு! காற்றில் அடித்துச் செல்லப்படும் சருகு; அது சுயசரிதம் தாங்கி இருக்கும்'' என்றேன்.

''அதை உதறித் தள்ளுவது தானே''

''கதறி அழும் அழுகைகளுக்கு நாம் செவி கொடுக்காமல் இருக்க முடியாது' என்றேன். மேலும் சில விளக்கங்கள் தந்தேன்.

''இந்தப் பிள்ளைகள் அக்குடும்பத்து உபரிப் பொருள்கள்; அதனால் தூக்கி எறியப்பட்டவர்கள், உபரி என்பதாலேயே உதவாதவர்கள் என்று பொருள் அல்ல. விளைச்சல் அதிகமானால் கோதுமையைக் கடலில் கொட்டி விடுகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அந்த கோதுமை கடலில் கொட்டப்படுவதாலேயே அது குப்பை என்று உதறித் தள்ள முடியாது. சரியாகப் பயன்படுத்தினால் அது உணவுப் பண்டம். மானுடம் சரியாகப்பயன் படுத்தப்படவில்லை. அதனால் இவர்கள் குப்பை மேட்டைச்சுற்றி வருகிறார்கள்'' என்றேன்.

அவரால் என் விளக்கத்தை ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

''அவன் ஒரு பி. ஏ. பட்டதாரி'' என்றேன்.

''நம்ப முடியவில்லையே'' என்றார். ''அதுதான் கதை'' என்றேன். இவன் செய்தது ஒரு தவறு; மொழிப் பற்று; 'தமிழ் மீடியம்' படித்தான். உபகாரச் சம்பளம் கிடைத்தது; வெளியே வந்த பிறகுதான் தெரிந்தது தான் செய்தது அபகாரம் என்று. புது அளவுகோல்கள் அவனை நிராகரித்து விட்டன. தொழில் பெறத் தேர்வாளர்களிடம் விலைபேசப் பொருள் இல்லை. சாதிகள் நீதிகள் பேசின.

இந்தத் தேசத்தில் எதிலும் உறுதிப்பாடு இல்லை. அதன் பாதிப்புதான் இவன் அவலநிலை.

பிச்சை எடுக்கவில்லை; அதற்கு அவன் கைகால் முடமாகவில்லை. திருடவில்லை; அதற்குக் கூட்டுத் தேவைப் பட்டது. அது அவனுக்குக் கிடைக்கவில்லை.

பாரதநாடு பரந்த நாடுதான்; ஆனால் தடுப்புகள் அதிகம். மொழி தெரியாமல் மற்றொரு மாநிலத்தில் அடி வைக்க முடியாது. இனவெறி மற்றவர்களைக் குடியேற விடுவதில்லை. தமிழர்கள் கூலிகள் பம்பாயில் விரட்டி அடிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு இந்தி தெரியும் என்றாலும், அவர்கள் வறுமை அவர்களைக் காட்டிக் கொடுத்து விட்டது தமிழர்கள் அவர்கள் என்பதை. இது தான் இவன் பின்னணி' என்றேன்.

அவர் அவனைப் பற்றிக் கேட்பதற்கு முன் இங்கு வருவதை அவனே நிறுத்திக்கொண்டான்.

''அவன் இங்கு வருவது இல்லையா?'' என்று கேட்டார்.

''படித்தவன் எப்படியும் பிழைத்துக் கொள்வான்'' என்று பொதுப்படை நியாயத்தை எடுத்து உரைத்தேன்.

அவனுடைய இளைய அணியினர் கோணியைச் சுமந்து கொண்டு நடுத்தெருவைவிட்டு ஓரமாக நடந்து வந்து கொண்டிருந்தனர்.

''அவன் ஏன் வருவது இல்லை? எங்காவது வேலை கிடைத்து விட்டதா?'' என்று வினா எழுப்பினேன் அந்த அணியினரிடம்.

''யார் சார் தயாளனா?'' என்றார்கள்.

அவன் பெயர் தயாளன் என்பது அவர்கள் சொல்லித் தான் தெரிந்தது. குப்பன் குப்புசாமி, இப்படிச் சொல்லித் தான் எனக்குப் பழக்கம்.

''அவன் ரொம்பவும் இரக்க குணம் உடையவன் சார்! அவன் ஒரு மகளிர் பாதுகாப்பு விடுதி நடத்துகிறான்'' என்றார்கள்.

அவன் புது வியாபாரம் தொடங்கிவிட்டான் என்று தவறாக நினைத்தேன். மேலும் விசாரித்தேன்.

பம்பாயில் இருந்து மீட்டுக் கொண்டு வந்தார்களே அவர்களைப் பற்றி யாராவது கவலைப் பட்டார்களா? அவர்களுக்கு வாழ்வு தர யாராவது செயல்பட்டார்களா? அந்த அபலைகளில் ஒருத்திக்கு அவன் வாழ்வு தந்திருக் கிறான். அவர்கள் தக்க தொழில் நடத்த நிதி திரட்டித் தொழில்சாலை வைத்து அவர்களுக்கு வழி வகுத்துக் கொடுத்திருக்கிறான் என்பது தெரிந்தது.

குப்பையில் பழகியதால் ஒதுக்கப்பட்ட மானுடத்தை இனம் கண்டு அவர்கள் வாழ்க்கையை மாற்றினான் என் பதைக் கண்டு கொள்ள முடிந்தது.

இந்தக் குப்பை மேட்டைச் சுற்றி என் சிந்தனை சுழன் றது. இந்த இளைஞர்களுக்கு ஏன் ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தரக்கூடாது.

மக்களுக்கு ஒரு சமூக உணர்வு ஏற்பட்டுக் குப்பை போடும்போதே தாள்களை வேறுபடுத்தித் தனி ஒரு தொட்டியில் போடக் கூடாதா?

இங்கே இவர்கள் சுற்றுவதால் அவற்றைப் பற்றுவதால் நோய்களுக்கு ஆளாவார்கள் என்ற எண்ணம் என்னை வாட்டியது. குப்பைக்கு ஒரு தொட்டி தாளுக்கு ஒரு தொட்டி என்று வைத்தால் இதில் இழிவு மறையுமே என்று எனக்குப்பட்டது. இதை அவரிடமும் கூறினேன்.

''சார் இது தெரியுமா?'' என்று கேட்டார்.

ஏதோ [புதிதாகச் சொல்லப் போகிறார் என்று அவரைப் பார்த்தேன்.

''கிழிந்த தாள் தெருவில் போட்டால் ஐந்து டாலர் அபராதமாம் சிங்கப்பூரில்'' என்றார்.

இது எனக்குத் தெரிந்த செய்திதான்.

''இங்கு இந்தத் தண்டனை தேவை இல்லை. போட்ட வுடன் பொறுக்க ஆள் இருக்கிறார்கள்'' என்றேன். அவர் நகைத்தார். அதற்கப்புறம் அவனைப் பற்றி நாங்கள் அதிகம் விமரிசிப்பது இல்லை.

-13-

அவருக்கே ஒரு ஆர்வம் ஏற்பட்டது. அந்தப் பின்னணி இளைஞர்களில் ஒருவனை விசாரித்தார்.

''உங்கள் பெற்றோர்கள் உங்களைக் கண்டிப்பது இல்லையா?'' என்று கேட்டார்.

''பெற்றோர் என்றால் என்ன?'' என்று கேட்டனர்.

''அப்பா அம்மா''

''அப்பாவுக்கு அம்மாவை உதைப்பதற்கும், சண்டை பிடிப்பதற்கும், சாராயம் குடிக்கக் காசு தேடுவதற்குமே நேரம் சரியாகப் போய்விடுகிறது.

அம்மா எங்களைக் கண்டிக்கிறாள்.

''துப்புக் கெட்டவனாக இருக்கிறாயே, திருடக் கூடாதா, சாராயம் விற்கப் போகக் கூடாதா, குப்பைத் தாள் தான் பொறுக்க வேண்டுமா என்று கேட்பாள்'', என்றான்.

பின் ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தாய்?''

''திருடச் சென்ற போது செம்மை உதை கிடைத்தது?'' என்றான்.

புற நானூற்றில் ஒரு பாட்டு வருகிறது.

''முதல் நாட் போரில்

தன் அண்ணனைப் போர்க்களம்

அனுப்பினாள்; அடுத்த நாள்

கணவன் சென்றான்; அதற்கு

அடுத்த நாள் மகனை அனுப்பினாள்'' என்று கூறுகிறது.

இந்தச் சாராய விற்பனை வழக்குகளில் தானும் சிறை செல்கிறாள் மறக்குடிப் பெண் என்பது அறிய முடிந்தது.

கன்னம் அழகிய கிண்ணம். ஒரு குழந்தையோடு பேசினேன். என்னவென்றா கேட்கிறீர்கள்.

"நீ நல்லவனா கெட்டவனா?" என்றேன்.

"நல்ல பையன்" என்றான்.

"கெட்ட பையனாக இரு" என்றேன்.

"மம்மி தான் என்னை நல்ல பையனாக இருக்கணும் என்று சொல்றா" என்றான்.

"மம்மி பேச்சைக் கேட்காதே; நான் சொல்றதைக் கேளு" என்றேன்.

"சரி இனிமேல் கெட்ட பையன் நான்" என்றான்.

தாய் கற்றுத்தரும் ஆரம்பப் பாடம் நல்லது தவிர வேறு ஏதும் இல்லை. காலம் மாறுகிறது. தாய் சொல்லை அவனால் காக்க முடியவில்லை.

ஏன் இந்தத் தாய் துணிந்து அவனைக் கெட்டவனாகச் சொன்னாள். பசி வந்தால் பத்தும் பறந்து விடுகிறது. தத்துவங்களே தலைகீழ் ஆகின்றன.

என் சிந்தனை அந்தக் கந்தனை அனைய தாள் தெரி இளைஞரைச் சுற்றிச் சுழன்றது. அவர்களுக்கு வந்தனை செய்து வழி அனுப்பிவிட்டு வீட்டுக்குள் நுழைந்தேன்.

-14-

சற்று நேரத்திற்கு எல்லாம் அறுவை நிபுணர் அடுத்து வந்து கதவின் மணியை அழுத்தி அதனைத் திறக்க வைத்தார். அவர் வருகையை எப்படித்தடுக்க முடியும்.

புதிய வினா அது அவர் வாழ்வு பற்றியது. ''மனிதன். எத்தனை ஆண்டுகள் உயிர் வாழ முடியும்?'' என்று கேட்டார்.

''இலக்கியச் சான்றா, வாழ்க்கைச் சான்றா?'' என்று கேட்டேன்.

''நடைமுறை; அதற்கு விடை தருக'' என்றார்.

''ஆண்டுகள் ஆயிரம் வாழமுடியும். அதற்கு நம்மைத் தகுதி படைத்துக் கொள்ள வேண்டும்'' என்றேன்.

''என்ன சார் அளக்கிறீர்'' என்று விளக்கம் கேட்டார்.

''ஏசுநாதர் இன்னும் வாழ்கிறார். வள்ளுவர் வாழ்ந்து கொண்டே இருக்கிறார். பாரதி ஆயிரம் ஆண்டு வாழ்வார்'' என்று கூறினேன்.

அதைக் கூறவில்லை. ''என்னைப் போன்ற சாமானியர்கள்'' என்றார்.

''எவ்வளவு காலம் வாழ வேண்டும் என்று நினைக்கிறோமோ அவ்வளவு காலம் வாழலாம்'' என்றேன்.

''அதெப்படி முடியும்?''

''வாழ்வில் லட்சியங்கள் இருக்கும்வரை வாழ முடியும் அவற்றை விட்டு விட்டால் சோர்வு ஏற்பட்டு விடுகிறது. மனத் தளர்ச்சி ஏற்படுகிறது. நம்மையே நாம் வெறுக்கத் தொடங்கிவிடுகிறோம். அப்பொழுதுதான் சாவு நம்மை அணுகுகிறது'' என்று கூறினேன்.

''எனக்கே வர வர ஏன் வாழ்கிறோம் என்று தோன்ற ஆரம்பித்துவிட்டது. நிலத்துக்குச் சுமை போல் தோன்றுகின்றது. உண்பதும், உறங்குவதும் அல்லாமல் வேறு ஒன்றும் அறியாத ஒரு சூனிய நிலைதான் தெரிகிறது'' என்று கூறினார்.

மூத்தவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். பூங்காக்களில் மாலை நேரங்களில் வந்து கூடுகிறார்கள். கடந்த கால வாழ்க்கையை அசைபோட்டுக் கொண்டு அந் நினைவுகளைப் பிறரோடு பகிர்ந்து கொள்கிறார்கள். நிகழ்கால அரசியலை விமர்சித்து ''இப்படிச் செய்யக் கூடாது. அப்படிச் செய்யக் கூடாது'' என்று வழி காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு சிலர் ஆத்மீகத்தைப் பற்றி விவாதிக்கிறார்கள், திருமூலரிடம் சரண் அடைகிறார்கள். தத்துவக் கருத்துக்களை விவாதிக்கிறார்கள். சித்தர்கள் யோக நிலை பற்றி எழுதியுள்ளதை அனுபவரீதியாக எடுத்துச் சொல்லுகிறார்கள். குண்டலினியை எழுப்ப தியானம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அதுமேல் எழுந்து உயர்ந்து நிற்கும். அது தான் ஞான நிலை என்று பேசுவார்கள். மற்றும் சிலர் எப்படியோ வாழ்ந்து முடித்தோம். தப்பித்தோம்; பிழைத்தோம் என்று பெருமூச்சு விட்டுப் பிறவாமை வேண்டும் என்று பிரலாபிக்கிறார்கள்.

இவர்கள் எல்லாம் என் நினைவுக்கு வந்தனர். அங்கு வந்து அவர்கள் ஆர்வமாக வருவதும், கூடுவதும் மகிழ்ச்சி தரும் காட்சியாகக் கண்டிருக்கிறேன். பணி செய்த கைகள் அங்கு அணி செய்து கொண்டு செயலற்றுக் கிடந்தன. கைகள் துருதுருப்பு அடங்கிவிட்டன. இரவு பகல் என்று பாராமல் கோப்புகளில் மூழ்கி அவற்றை எப்படித் தள்ளு

வது என்று சிந்தித்துச் சிந்தித்துச் செயல்பட்டுத் தம் அறிவைப் பயன்படுத்திய வாழ்க்கை வியட்நாம் சுந்தரத்தைப் போல வெறுமை உற்றுக் கிடப்பதைப் பார்க்க முடிந்தது.

அதைவிட அவலமான செயல் டி.வி. யின் முன்னால் உட்காருவது; அதையே பார்த்துக் கேட்டு வெற்றோசை யில் காலம் கழிப்பது. இவையெல்லாம் நினைவுக்கு வந்தன. அவருக்கு யான் கண்ட ஒரு தமிழாசிரியரின் வாழ்க்கையை எடுத்துக் கூறினேன்.

''இதே தெருவில்தான் போகிறார் வருகிறார். நீங்கள் அவரைக் கவனித்து இருக்க மாட்டீர். நான் அவரோடு பேசி இருக்கிறேன். பின்னால் அவர் கையைப் பிடித்துக் கொண்டு பக்கத்தில் உள்ள பள்ளிக்கு அவர் பெயரன் அவரைத் தொடர்வான்; அவர் கால்கள் சுருசுருப்பாக இயங்கும்; முகத்தில் மலர்ச்சி; அவன் ஏதோ கேட்பான்; இவர் ஏதோ சொல்லிக் கொண்டு செல்வார்.

அவரைச் சில நாள் காணவே இல்லை. என்ன ஆயிற் றோ என்று வருத்தப்பட்டேன். மறுபடியும் அவர் அந்தப் பையனோடு நடந்து வந்தார்.

''என்ன சார் ரொம்ப நாள் காணோமே. உடம்பு?''

''என் மருமகளை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல வேண்டியது ஆயிற்று. அவன் ஆபீசுக்குப் போய்விடு கிறான். எல்லாவற்றையும் நானே கவனிக்க வேண்டிய தாக இருந்தது. இப்பொழுது தான் வர முடிந்தது''.

''அடுத்தது?''

''பையன்தான் பிறப்பான் என்று எதிர் பார்த்தேன். அது பெண்ணாகி விட்டது. பரவாயில்லை. இந்தக் காலத்திலே அதெல்லாம் பார்க்க முடியாது. இவனும் தான் கஷ்டப்படப் போகிறான்; அவளும் தான் கஷ்டப் படப் போகிறாள். யார் பிறந்தால் என்ன? எல்லாம் ஒன்று தான்'' என்று கூறுகிறார்.

மறுபடியும் அதே தெய்பு. "அவர் ஒரு தொடர்கதை'' என்று தான் எண்ணத் தோன்றுகிறது. முதியவர்களுக்குச் சிறந்த பொழுதுபோக்கு, பணி, வாழ்க்கை எல்லாம் பேரன் பேர்த்தி தான்'' என்று கூறினேன்,

''அந்தக் கொடுப்பனை எனக்கு இல்லை. இந்தப் பையன் எதற்கும் வழி வர மாட்டேன் என்கிறான். என்ன செய்வது?'' என்றார்.

''கொடுப்பனை விற்பனை இதெல்லாம்
தெரியாது; நான் சொல்லப்போவது அழகான
கற்பனை; அதனை நீர் ஏற்றுத்தான்
ஆக வேண்டும்''

''ஏற்றுக் கொள்வதாக இருந்தால் சரிதான்; இல்லை என்றால்
மாற்றுதான் கூறமுடியும்''

''காற்றில் வந்த கவிதை இது;
'நேற்றுவரை' என்று தொடர்ந்து வருகிறது''

''எதைச் சொல்கிறீர்?''

''நேற்றுவரை அவர்கள் உறவு'

தொடர்ந்து இருக்கிறது; இன்றுவரை

தொடரும்; நாளை வரை யாதோ அறியேன்'' என்றேன்.

''என்ன சார் கண்ணதாசனாக மாறிவிட்டீர்''

''அவர் கண்ணனின் தாசன் நான் வாழ்க்கை நேசன்;

உன் மகன் அந்தத் துப்புரவுத் தொழிலாளியைக் காதலிக்கிறான்'' என்று தொடர்ந்தேன்.

''உறவைப் பற்றிப்பேசாமல் துப்புரவு துலக்குகிறீரே''

''குப்பன் சொன்னது; அது தப்பாக இருக்காது.

''அவனுக்கு எப்படித் தெரியும்?''

''அவர்கள் தான் எங்குப் பார்த்தாலும் திரிந்து கொண்டு இருக்கிறார்களே. கடற்கரை, பூங்காக்கள் எங்கும் அவர்களைப் பார்க்க முடிகிறது. நீக்கமற நிறைந்த அவர்கள் போக்கு அவன் கண்ணில் படாமல் எப்படிப் போய்விடும்?''

''ஏன் இப்படித் திரிகிறார்கள்?''

''கதவு தட்டக் தயங்குகிறார்கள்; தட்டினால் திறக்கப் படுமா என்று காத்திருக்கின்றனர்.''

''யார் அந்தப் பெண்?''

''உங்கள் மருமகள் என்று அறிமுகப்படுத்தினீரே அந்தத் திருமகள்தான்.''

''அடப்பாவி! அவள் தானா கிடைத்தாள்?''

''அவளுக்கு உன் மகன் தான் கிடைத்தாள்.''

''அக்கிரமம்''

''எது?''

'அவள் குப்பை பெருக்குகிறாள்''

''வீடு பெருக்க உதவுவாள்''

''அவளை எப்படி சார் விரும்பினான்?''

''அவன் பார்த்துப் பழகிய முதல் பெண் அவள்.''

''அவனைக் கட்டுப்பாடாக வளர்த்தது தவறாகப் போய்விட்டது''.

''அவன் தேர்வு நியாயந்தானே?''

''என்ன சார் நியாயம் கண்டு விட்டீர்கள்; நேற்று வரை அவள் தெருப் பொறுக்கி; இன்று என் மகனை மயக்கிய சிறுக்கி; நீங்கள் அவளுக்கு ஒலி பெருக்கி'' என்றார்.

''ராஜேந்திர் ஸ்டைலில் பேசுகிறீரே?''

''எதை வச்சி சொல்லுகிறீர்?''

''பொறுக்கி; சிறுக்கி, பெருக்கி என்று அடுக்கு மொழியில் மிடுக்காகப் பேசுகிறீரே''

''சரி விளையாட்டு உங்களை விட்டுப்போகவில்லை சோகத்திலே சொற்கள் அப்படி விழுவது இயற்கை''.

''அவன் மேஜர் சார்''

''என் வீட்டுப்படி ஏற முடியாது''

''சிறிய படிகள் தானே; அப்படிச் சொல்லக் கூடாது; அவள் ரொம்பவும் அழகாக இருப்பாள்''

''அழகு இருந்தால் போதுமா? அந்தஸ்து இருக்க வேண் டாமா? குப்பை வேலை செய்கிறவளுக்கு எப்படி சார் அந்தஸ்து வரும்''.

''இவள் அந்தத் தொழிலை ஏற்றுக் கொண்டதால் அந்தத் தொழிலுக்கு அவள் அந்தஸ்து கூட்டி இருக் கிறாள்.

''வசதி இருக்க வேண்டாமா?''

''அதை உதறித் தள்ளிவிட்டுச் சேவை செய்ய வந்திருக் கிறாள்''

''இவள் என்ன கஸ்தூரிபாய் காந்தியா?''

''உன் மகன் காந்தியாகி விடுவான், அப்பொழுது இவள் கஸ்தூரியாவாள்?''

''படிப்பு?''

''சமூக சேவகி என்ற பட்டம் பெற்று இருக்கிறாள். கொடைக்கானலில் அன்னை தெரிசா மகளிர் பல்கலைக் கழகத்தில் படித்து இருக்கிறாள்''.

"அவர்கள் போராட்டம் நடத்துகிறார்களாமே"

"சென்னையில் இருந்து மறுபடியும் அங்குப் போகக் கூடாது என்று"

"ஏன் அது நல்ல ஊர்தானே?"

"ஒவ்வொரு ஊருக்கும் ஒரு பின்னணி இருக்கிறது. ஊட்டியில் இராமர் கோயில் கட்ட முடியுமா?"

"அது அயோத்தியில் தான் கட்டணும் என்று சொல்கிறீர்களா?"

"நான் சொல்லலே! பெரும்பாலோர் அதைத்தான் சொல்லுகிறார்கள். அயோத்தியில் காமன் கோட்டம் வைக்க முடியாது. ஊட்டியில் காதலர் ஒதுங்கி உறவாடும் இடம்; அங்கே இராமர் கோயில் கட்ட முடியாது. அதே போலத்தான் கொடைக்கானல்; அங்குக் குளிர் அதிகம். இளமை தாங்காது. சேவை செய்யும் படிப்பு அது; அதற்கு மக்கள் நெருக்கடி உள்ள சென்னைதான் தகுதி". என்று அவர்கள் வாதிடுகிறார்கள்."

"இதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்".

"இல்லே, அவள் அங்கே படித்து இருக்கிறாள் என்று சொல்ல வந்தேன்".

"அதுக்கு ஒரு ஆபீசர் உத்தியோகம் பார்க்கறது தானே; மாதர் நல அதிகாரியாக வரலாமே?"

"அதுக்கு இவள் தேவை இல்லை. உண்மையான சேவை செய்து காட்ட வேண்டும் என்று அவள் விரும்பி

இந்தத் தொழிலை ஏற்றுக் கொண்டாள். தாழ்த்தப்பட்டவர்கள் என்று சிலரைச் சுட்டிக் காட்டி அவர்களில் ஒரு சிலர் உயர்த்ப்படுகிறர்கள். அவர்கள் உயரலாம்; இனம் உயர்ந்து விடாது அந்தத் தொழிலை உயர்த்த வேண்டும்.

அது தான் சமூதாயத்தில் செய்து காட்ட வேண்டிய முரல் புரட்சி" என்று நினைக்கிறாள்.

"யார் அவளுக்குச் சொன்னது"

"அன்னை தெரிசா"

"இது என்ன சார் இருக்குது புதுசா. இதுவரை காந்தி, நேரு என்று பேசிக் கொண்டிருந்தவர்கள், இப்பொழுது ஒரு மேல் நாட்டு சேவகியர் பெயரைச் சொல்லுகிறார்கள்."

"அவர்கள் சேவை இன்று மிகவும் தேவை. சாதி வெறியும் மத வெறியும் தலை தூக்கி ஒருவரை ஒருவர் அடித்து இரத்தம் பெருக்கும் இந்நாளில் அவர்கள் அறிவுரை தேவைப்படுகிறது. இது தான் மருந்து; 'மனிதனை நேசிக்கக் கற்றுகொள்; தாழ்ந்தவர்களைத் தூக்கிவிடு. நோயுற்றவர்க்கு ஆறுதல் அளி; அன்பு என்பதை அழகுடன் பரப்பு.' இது அவர்கள் கற்றுத்தரும் படிப்பினைகள். நொந்து விட்ட இந்தப் "பாரதத்துக்கு இச்சேவை தேவை என்று விளக்குகிறார்."

"அறுபதைக் கடக்கட்டும் இது அருமையான சேவை. இருபதில் இது என்ன தேவை. நான் ஒப்புக் கொள்ள முடியாது அந்தப் பாவையை". என்று தீர்மானம்போட்டார்,

"அவள் என்னதான் சொல்கிறாள்?"

"படித்த பெண், ஒவ்வொருத்தரும் ஏதாவது தொழில் செய்ய வேண்டும். தானும் பொருள் ஈட்டித் தன் பெருமையை நிலை நாட்ட வேண்டும் என்கிறாள். பட்டங்களைப் படித்துவிட்டுக் கட்டிலின் கட்டுக்குள் அடங்கி இருப்பது கூடாது என்கிறாள். அவளும் ஓர் உழைப்பாளி என்பதை நிறுவ வேண்டும்; ஆணுக்கு நிகராக அலுவல்களைச் செய்து அறிவு வளர்க்க வேண்டும்" என்கிறாள்.

"இன்று எத்தனை எம்.எல்.ஏக்கள் பெண்கள்? எம்.பிக்கள் எத்தனை பேர் பெண்கள்? ஒரு சிலர் அமைச்சர் ஆகி விடலாம்; அதனால் பெண்மை உயர்கிறது வரவேற்கத்தக்க வளர்ச்சிகள்; முன்னேற்றங்கள்; அவற்றோடு பொதுச் சேவை செய்யும் மன்றங்களில் தமக்கு உரிய இடங்களைச் சரி சமமாகப் பெண் இடம் பெற வேண்டும் என்று வற்புறுத்துகிறாள்.

ஒரு குழந்தை பெற்றதும் அவள் வீட்டில் இருக்கலாம். அக்குழந்தையைக் கவனிக்க அவள் தேவைப்படலாம். அதுவரை தொழில் செய்வதில் அவள் உறுதியாக இருக்கிறாள்" என்றேன்.

"கலியாணமானதும் வெளியே அனுப்புவது உசிதமாகப் படவில்லை. அப்படிப்போனாலும் கவுரமான தொழிலாக இருக்க வேண்டும்."

வயிற்றுப் பிழைப்புக்கு வழி இல்லாதவர்கள் செய்யும் இந்தத் தொழிலை இவள் செய்வது எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். அந்த இடத்திற்கு ஆயிரம்பேர் காத்துக்

கிடக்கிறார்கள். இவள்தான் தேவை என்றால் அவள் போக்கை ஏற்றுக்கொள்ள முடியும். இது வீண்பிடிவாதம்.

படித்தவள், இந்தவிட அவள் அறிவு பயன்படத்தக்க இடங்கள் பல உள்ளன. ஆசிரியையாகப் போகலாம்; ஆபீசுகளில் வரவேற்பு அதிகாரியாகப் பணி செய்யலாம். இல்லை அவனோடு சேர்ந்து பாங்கியில் தொழில் செய்ய லாம். இது என்னால் சம்மதிக்க முடியாது. நாளைக்குப் பத்திரிக்கைகாரன் வருவான் எங்கள் வீட்டை முற்றுகை இடுவான்; ஏற்கனவே குப்பைத் தொட்டியை உடைத்த தற்கு ஏராளமான பேட்டிகள்; அதைப்பற்றி வாதங்கள்; இதற்கு நிச்சயம் வந்து குவிந்து விடுவார்கள். ஏன் அவர் கள் பத்திரிக்கைகளுக்குப் புது விஷயமாகத் தேவை என்ப தற்காக. விளம்பரம் தேவைதான்; இந்த வகையில் அல்ல.

பட்டப்படிப்பு சில திட்டங்களை வகுத்துத்தந்திருக் லாம்; மட்டற்ற மகிழ்ச்சிதான்; ஆனால் அவள் மணமேடை ஏறக்கூடாது. மணமேடை ஏறியதும் அவன் பின்னால் தான் அவள் சுற்றி வரவேண்டும்; இந்தச் சுழற்சியில் இருந்து தப்ப முடியாது'' என்றார்.

''உங்களுக்கு என்று சில பிடிவாதங்கள், தவறான சிந் தனைகள், காலம் காலமாகப் பின்பற்றி வரலாம். அவற் றிற்குப் புதிய சமுதாயம் மதிப்புத் தரவேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்''.

''ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்ளும் சூழ்நிலைகள் உருவாகக் கூடாது. அப்படி உருவானால் ஒதுங்கி விடுவது நல்லது அவளோடு வாழ்வதும் வாழாததும் என் மகனின் பொறுப்பு; அவன் முடிவு செய்ய வேண்டியது; அவன்

என்னிடம் எங்களோடு அவளை மருமகளாக நாங்கள் ஏற்றுக் கொண்டு வாழ வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது.

''அதனால் நீங்கள் உங்கள் மகனை இழக்கிறீர்கள். அவனிடம் அவளை ஒப்புவிக்கிறீர்கள்''

''அது அவன் முடிவு செய்ய வேண்டியது. எப்படியும் அவர்கள் பின்னால் வேறுபாடுகளை விளைவித்து வெளியேறத்தான் போகிறார்கள். இப்பொழுதே வேறுபாடுகளைக் காட்டி உள்ளே அடியெடுத்து வைக்காமல் தள்ளி வைப்பதுதான் தக்கது'' என்றார்.

அவர் கூறியதிலும் நியாயம் இருப்பதாகப்பட்டது. சிந்திக்க வேண்டியது தான்.

அவர் விடை பெறுகிறார்.

''நான் சொன்னது நினைவு இருக்கிறதா?'' என்று மறுபடியும் கேட்டார்.

''எது?''

''குப்பைத் தொட்டி''

அது அவரை விடாது என்று தெரிந்தது.

-15-

அவர் வீட்டுக்குள் இடி இடித்தது; மின்னல் வீசியது. இருவரும் மாறி மாறிப் பேசியது என் வீட்டுவரை எட்

டியது. அம்மையார் குரல் ஆதிக்கம் செலுத்தியது. அது ஒன்றும் புதுமையாகப் படவில்லை.

அங்கே போய் இவர் விஷயத்தைக் கொட்டி இருக்கிறார். அவர்கள் குழம்பி இருக்கிறார்கள். கதை சூடு பிடிக்கிறது என்பதை உணர்ந்தேன்.

அவர் குப்பைத் தொட்டியைத் தொடர் கதையாக்குவது வியப்பாக இருந்தது. என்றாலும் அதற்கு மதிப்புத் தந்து தான் ஆக வேண்டும். அதற்காகச் கனகாவிற்குக் கடிதம் வரைய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. கனகா என் மனைவி.

அன்புள்ள கனகா,

இது எனக்காக எழுதவில்லை. எதிர் வீட்டுக்காரருக்காக எழுதுகிறேன். இங்கே ஒரு சின்ன விஷயம். அவர் மனதை உறுத்திக் கொண்டே இருக்கிறது. அவரிடம் அவசரத்துக்குக் கடன் ஒன்றும் வாங்கவில்லை. அவரும் அப்படிக் கொடுத்து உதவவில்லை. அவருக்குப் பொழுது போகாவிட்டால் இங்கு வந்து உட்கார்ந்து விடுவார். அவர் இரண்டு விஷயங்களைப் பற்றிப் பேசுவார்; ஒன்று அவர் பையனைப் பற்றி; மற்றொன்று நம் தெருவில் புழுதி கொட்டிவைக்கும் தொகுதித் தொட்டில். அது சில சமயம் பெற்ற குழந்தைகளைப் போட்டு வைக்கவும் உதவியுள்ளது. அது பற்றி உனக்கும் தெரியும். அதே தொட்டி தான் அது அங்கு இருக்கக் கூடாது என்கிறார் எதிர் வீட்டுக்காரர். காலம் காலமாக இந்தப்பாரத மண்ணில் இந்தத் தெருவில் குடியிருக்கும் பெரும்பான்மையோர் அது அங்கு தான் இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். வழக்கு

உச்சநீதிமன்றம் வரை போய் இருக்கிறது. ஆனால் சர்ச்சை இன்னும் முடிவாகவில்லை. அது அகில தெருப் பிரச்சனை ஆகாமல் இருக்க அந்த வீட்டுக்காரர் இடித்த குப்பைத் தொட்டியைத் தம் சொந்தச் செலவில் கட்டிக் கொடுத்துவிட்டார். ஆனால் அது அங்கு இருக்கக் கூடாது என்பதில் பிடிவாதம் பிடிக்கிறார்.

பழகிய தோஷம் அதனால்; அந்தச் சுமையை நம்மீது ஏற்றவிரும்புகிறார். அது அங்கு இருப்பதால் அவருக்குத் தூக்கம் வருவது இல்லையாம். அது உருண்டு வந்து அவர் மீது புரள்வது போல் கனவு வருகிறதாம். குப்பைத் தொட்டி புரண்டு வந்து மார்புமீது புரண்டால் கோடிப் பொன் வரும் என்று கனா நூல் உரைக்கிறது என்றும் எடுத்துச் சொன்னேன். கோடிப்பணம் வராவிட்டாலும் இந்தக் குப்பைத் தொட்டிக் கனவு வராமல் இருந்தால் போதும் என்று கதறுகிறார்.

அதுசரி டி.வியில் ஒரு கதை தொடர்ந்து வருகிறது. அதைப் பார்க்கிறாயா? அவள் காதலன் அவளைக் கைவிடு கிறான்; மற்றொருவனுக்கு அவள் தந்தை வற்புறுத்திச் செய்து வைக்கிறார். அந்தக் குழந்தை எட்டாவது மாதத் திலேயே பிறந்து விடுகிறது. அந்தக் குழந்தை பெரியவ ளாகி வருகிறாள். அவள் தன் சாடையைப் பெற்றிருக்க வில்லை. அதனால் அவன் அவள் மீது சந்தேகப்படுகிறான். விவாக ரத்துவரை போகிறது. பிரியவும் செய்கிறார்கள். பிறகு தெரிகிறது அவள் எந்தத் தவறும் செய்யவில்லை என்று. இந்தக் கதையைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? இதைத் தொடர்ந்து பார்க்கிறாயா இல்லையா. பார்க்கா விட்டால் அதைப்பற்றி எழுதி உன் தாளைக் கெடுக்க வேண்டாம்; கிறுக்கி என்னை அறுக்க வேண்டாம்.

எதிர் வீட்டுக்காரர் மற்றொரு பிரச்சனையில் அகப் பட்டுக் கொண்டு இருக்கிறார் அவர் மகன் ஒரு புரட்சிக் காரியைக் காதலிக்கிறான்; அவள் உன்னைப் போல் கவிதை எழுதிக்கொண்டு தன்னைப் புரட்சிக்காரி என்று விளம் பரப்படுத்திக் கொள்ளவில்லை. செயலில் காட்டுகிறாள். குப்பை கூட்டும் தொழிலாளர் தேர்வுக்குச் சென்று அதில் தேர்ந்தெடுக்கப்பட்டு அத்தொழில் செய்கிறாள்.

அவள் வயிற்றுப் பிழைப்புக்காக அல்ல, வைராக்கியத் திற்காக; தொழிலுக்குப் பெருமை சேர்க்க, அவள் தெரசாவின் உரையைக் கேட்டு இருக்கிறாள். அவர்கள் கல்லூரியில் அம்மூதாட்டியர் வந்து பட்ட மளிப்பு விழாவில் உரையாற்றி இருக்கிறார். அதில் அவர்கள் சொன்னார்களாம். 'நீங்கள் சமூக சேவகம் என்று தொழிற்படிப்பைப் படித்தால் மட்டும் போதாது. அதைச் செயல்படுத்திக் காட்டுங்கள். துணிந்து குப்பை கொட்டும் தொழிலை ஏற்று அத் தொழிலுக்கு மதிப்புத் தாருங்கள், விபச்சாரத்தால் இழுக்கப்பட்டு வழுக்கி விழு பவரை ஆதரித்து அவர்களுக்கு விமோசனம் தேடுங்கள். அவர்கள் பலர் நோய்வாய்ப்பட்டு வெளியில் சொல்ல முடியாமல் வேதனைப்பட்டுக் கொண்டு வரும் நிலையில் இருப்பார்கள் அவர்களுக்குத்தக்க மருத்துவ உதவிசெய்து அவர்களை வாழ வையுங்கள். பிறர் செய்யும் பாவங் களைத் தாம் சுமந்து இவர்கள் சுமைதாங்கிகளாக வாழ் கிறார்கள். இந்த அபலைகள் இருட்டில் புகழப்படுப வர்கள்.' வெளிச்சத்தில் இகழப்படுபவர்கள். இதைப் போன்ற உதிரிகளை நீங்கள் வாழ வைக்கவேண்டும்' என்று பேசி இருக்கிறார்கள். அது அந்தப் பெண்ணின் நெஞ்சில் ஆழப்பதிந்து விட்டது.

வெளியே விளம்பரத்துக்காகப் போட்டோக்காரர்களை வைத்துக்கொண்டு துப்புரவு செய்வதாகப் படம் எடுத்துப் போட்டு விளம்பரம் தேடிக் கொள்ளும் மேலினத்தைச் சார்ந்தவள் அல்ல அவள்' விளம்பரம் இல்லாமல் விரும்பி இத்தொழிலை ஏற்றுக் கொண்டாள். அதற்கு சமூக அங்கீகாரம் கிடைக்குமா? அதன் முதற்படி அவள் விரும்பிக் காதலித்த இளைஞனிடம் சோதனைக்குத் தன்னைக் உட்படுத்திக் கொள்கிறாள் அதுவும் எதிர் பாராத சந்திப்புத்தான், அந்தஎதிர் வீட்டுப்பெரியவர் அவளிடம் பேசிச் சில கட்டளைகள் இட அவள் மறுக்க அதைக் கண்டு இடையில் வந்த அப்பெரியவரின் மகன் அவள் மேனி அழகில் தன்னைப் பறிகொடுத்து அதற்குக் காதல் என்று பெயர் சூட்ட நாடகம் தொடர்கிறது.

அவர்களும் நம்மைப்போலத்தான்; ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளாமல் காதலித்து விட்டனர். அந்தப் பெண் எப்படிப்பட்டவள், அடக்கம் ஒடுக்கம் உடையவளா,இடுக்கண் வந்தால் நடுக்கம் காட்டாதவளா என்றெல்லாம் அவன் எண்ணிப்பார்க்கவில்லை, உன்னைப் போலவே முரட்டுப் பிடிவாதம் அவளிடம் இருக்கிறது, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அவளிடம் சிறிதும் இல்லை இது ஒரு புதுவகைப் புரட்சியாக இருக்கிறது.

அவருக்குத் தன் மருமகள் ஒரு துப்புரவுத் தொழிலாளி என்று சொல்வதற்கு ஒப்புக்கொள்ள மறுக்கிறார். மானம் என்ற அதிகாரத்தில் பத்துக் குறளையும் ஒப்புவிக்கிறார். குடும்ப மானம் என்ன ஆவது என்று ஒப்பாரி வைக்கிறார். நிதானமாக எதையும் சிந்திக்க வேண்டும் என்கிறார்.

ஒரு தொழிலாளிப் பெண் உடல் உழைப்புக்காரி தன் மருமகள் ஆவதை அவர் ஏற்க மறுக்கிறார். அவன்

என்னைப்போல் வேறு வழியில்லாமல் அவளை விடாமல் தொடர்ந்து உறுதியாக இருக்கிறான்; அவன் தந்தை மனம் மாறுவார் என்று எதிர்பார்க்கிறான். தன்தாய் பாசத்தால் விட்டுக் கொடுப்பாள் என்று எதிர்பார்க்கிறான். வீட்டில் இடியும் மின்னலும் இணைந்து மழை பெய்கிறது; அந்த அம்மையார் அவ்வப்பொழுது ஓலமிடுகிறார்; இந்தமாதிரி சில்லறை விஷயங்கள் என்னை இழுத்துப்பிடிக்கின்றன. நானும் எழுதும் எழுத்தில் உன்னுடைய தாக்கத்தால் ஒரு மாற்றத்தைக் காண்கிறேன்.

வாழும் காலத்துத் துடிப்புகளைப் படிப்புக்கு உரியதாக ஆக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவாய். மேதைகளின் பின்னால் பேதைகள் இருந்து இயக்குவதாகப் பேசுவது கேட்டு இருக்கிறேன். பேய்கள் நின்று ஆட்டிப் படைப்பதும் உண்டு. அதை உன்னிடம் சில சமயம் பார்த்துக்கொண்டு வருகிறேன்.

உனக்குப் பிடிக்காவிட்டால் சீறி விழுகிறாய்; அப்பொழுது என் கவிதை செத்துவிடுகிறது: பட்டினத்து அடிகளாக மாறி விடுகிறேன். என் செயலால் ஆவது யாதும் இல்லை என்று செயலிழந்து விடுகிறேன்.

நீ ஏன் அவசரப்பட்டு வெளியேறினாய் என்பது விளங்கவில்லை;கதையின் கரு ஒன்று உன்னிடம் இருப்பது போலவும் அதற்குச் சதை தேடித் தருவதற்காக ஒதுங்குவது போலவும் காணப்பட்டது. ஏதாவது உண்டாகி இருக்கிறாயா! குண்டாகி இருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன்;எழுதுவது, அதுசரி இல்லை என்றால் நான் அதை அடித்துப் கிழித்துப்போடுவேன். நீ அப்படிச்செய்ய மாட்டாய். அது எனக்குத் தெரியும்.

தாய்மை நம்மைச் சேய்மைப்படுத்திவிட்டது என்று நினைக்கிறேன். காற்றோட்டமும் நீரோட்டமும் உடைய காவிரிக் கரை உன் சுக வாசஸ் தலத்துக்கு உறுதுணை செய்யும் என்று கருதுகிறேன்; என்றாலும் அண்ணா நகர் அண்ணா நகர் தான். அது கதைப் பிரசித்தி பெறும் இடம் ஆகிக்கொண்டு இருக்கிறது. சொந்த விஷயத்தை விட்டு வந்த விஷயத்துக்கு வருவோம்.

இன்று வன்முறை எழுத்துக்கள் பரவிவிட்டன. கொலை துப்புத்துலக்குதல் கடத்தல் இவற்றை வைத்துக் கதை எழுதி எழுதித் துப்பாக்கிக் கலாச்சாரத் திற்குக் கொண்டுவந்து விட்டனர். எழுதுகிறவன் நம்பி னான். இப்படி எழுதினால்தான் வாசகர்கள் படிக்கிறார் கள் என்று. அது மூட நம்பிக்கை என்பதை உணர்கிறேன். இவன் எழுதும் எழுத்து வாசகர்களை உருவாக்கிவிட்டது. அவர்கள் இவனை உருவாக்கிக் கொண்டு வருகிறவர்கள். அதே தாக்கம் தான் படங்களும்; இதைக் கண்டு மருளத் தேவை இல்லை. அந்த வாசகர்களையும் திருப்ப முடியும். திருத்த முடியும். ஆனால் நாம் சொல்லும் விஷயங்களைப் பொறுத்து இருக்கிறது.

இன்றைய வாழ்வைப் படம் பிடிப்பது துடிப்புள்ள எழுத்து. நோய் நாடி அதன் காரணம் நாடி மருந்தும் சொல்வது தான் எழுத்து. காலத்துக்கேற்ற கருவிகள் உற்பத்தி ஆகின்றன; அதேபோன்றுதான் இன்றைய வாழும் மனிதன் உயரும் இடங்களைச் சுட்டிக் காட்டி அவனுக்குப் பாதை வகுப்பது சாத்தியமானால் அது வெற்றி தான். முழுப்பாதை அமைக்க முடியாமல் போக லாம். தனிப்பாதையாவது அமைக்கத் துணிவு வேண்டும். என்னைத் தொடர்ந்து சிலர் நடப்பார்கள். அது ஒற்றை யடிப் பாதையாகவாவது உருவெடுக்கும். அந்தப் பணியில்

தான் இறங்கி இருக்கிறேன். அதே ஆர்வம்தான் எதிர் வீட்டு மனிதர், குப்பை தொட்டி விவகாரம்; அழகியின் முற்போக்குச் செயல், குப்பனின் தீவிரம் இவற்றைப் பார்த்துக் கொண்டு வெட்டிப்பொழுது போக்குகிறேன் என்று நினைக்க வேண்டாம். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். இந்தக் குப்பை மேட்டைக் கொண்டே என் எழுத்தை அமைக்க முடியும். அமைத்து வருகிறேன்'' என்று எழுதினேன். என் பேனாவைக் கீழே வைக்காமல் எழுதி அவளுக்கு அனுப்பி வைத்தேன். என் நா பேச வில்லை; பேனா அவளோடு பேசியது.

## 16

அதற்கு அவள் பதில் எழுத வேண்டும் என்று எதிர் பார்க்கவில்லை. சென்னையில் குப்பைத்தொட்டி எங்கே வைப்பது என்பது பற்றி எழுந்த பிரச்சனை குறித்து அவர்கள் ஊரில் விமரிசித்தார்களாம். அயோத்தியில் இராமர் கோயில் எங்கே கட்டுவது என்ற பிரச்சனைபோல் இந்தத் தெருப் பிரச்சனை சந்தி சிரித்ததாம். அதைப் படித்துப் படித்து அவர்கள் சிரித்தார்கள் என்று எழுது கிறாள்.

''இதைப்போய் என்னைக் கேட்டு எழுதுவதாகச் சொல்லி இருக்கிறீர்கள்;அடக்கமான பிள்ளை என்று காட் டிக் கொள்ள விரும்புகிறீர்கள் என்று நினைக்கிறேன்.மனை வியைக் கேட்டு நடப்பது கேட்காமல் செய்வது என்ற சில விஷயங்களை ஒதுக்கி வைக்கலாம்.

என்னைக் கேட்டு எழுதுவதாக அவருக்குத் தெரிவித் தால் உங்களை எப்படி மதிப்பார். அது எங்காவது

இருக்கட்டும் அதைப்பற்றி நான் சொல்வதற்கு இல்லை. இது உள்ளூர்ப் பிரச்சனை; அங்கிருப்பவர்கள் கூடிப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சனை என்று எழுதியிருந்தாள். பிரதமரின் பேச்சைப்போல இது எதிர்ஒலித்தது.

"அதைவிட அதிர்ச்சி தரும் அழகான செய்தி உங்களுக்கு அறிவிக்க விரும்புகிறேன். அதனை ஒரு பிரச்சனையாக உருவாக்கத் தேவை இல்லை குழந்தைக்குத் தாயாவது பெண்ணின் பிறப்பு உரிமை. அதற்குத் தந்தை யார் என்று மண்டையைப் பிய்த்துக் கொண்டு மடையர்கள் ஆகத் தேவை இல்லை. தந்தை என்பவன் யார்? தாய் கருவை ஏந்தி உருக் கொடுத்துப் பிறப்பு என்ற அந்தஸ்தைக் கொடுக்கிறாள். தந்தை அந்தக் குழந்தையின் வளர்ப்புக்குத் துணையாகிறான். அப்பொழுது தான் அவன் தந்தை என்ற உரிமையும், பெருமையும் அடைகிறான். இனிமேல்தான் பிறக்கும் குழந்தைக்குத் தந்தை தேவைப்படுகிறது. அது நீங்களாகத்தான் இருக்க வேண்டும் வேறு வழி இல்லை. அதில் உங்களுக்கு எந்தச் சுமையும் இராது; உங்கள் அன்பை உலகத்தில் எந்தக் குழந்தையிடமும் செலுத்தலாம். அதில் அருவெறுப்புக் காட்ட மாட்டீர்கள். காட்டத் தேவையில்லை. அது யாருக்குச் சொந்தம் என்ற வினாவுக்கு விடை தேவை இல்லை; அது இந்த உலகத்தின் உடைமை; மண்ணில் தோன்றும் மலர். பண்ணில் நாதம்; அதற்கு யார் வேண்டுமானாலும் உடைமை எழும் கொண்டாடலாம்; என்றாலும் வளர்ப்பு எளிமை கருதி அதற்கு ஓர் எல்லை தேவைப்படுகிறது. அது ஆரம்பத்தில் என் மடி; பிறகு உங்கள் தோள்கள்; எப்படி?" மேலும் படிக்கிறேன்.

''இந்தச் சின்னக் குழந்தை உங்கள் தோள்களுக்குச் சுமையாக இருக்காது என்று நினைக்கிறேன். பிறக்கும் போது எடை குறைவுதான், இனிமேல் தான் அது எழிலும், எடையும் கூட வேண்டும். அடுத்தது ஆணா? பெண்ணா என்ற ஆர்வம் எழுவது இயற்கைதான்.

உங்களுக்குப் பையன் பிடிக்குமா? பெண் பிடிக்குமா என்பது பிரச்சனை அல்ல; நமக்கு எது பிடிக்கும் என்று ஆராய்ச்சி செய்து கொண்டு பின் வடிவு அமைப்பது இல்லை. எதுவானாலும் சமமாகப் பார்க்கும் பார்வை உங்களுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். இதில் விருப்பு வெறுப்புக்கு இடம் தரத் தேவை இல்லை. கதையில் சிறிது மர்மம் வைத்து எழுதுவது உங்களுக்குக் கை வந்த கலை ஆகும். அதில் சுவை இருக்கிறது அதே அனுபவத்தை இதில் உங்களுக்கு உண்டாக்க விரும்புகிறேன். அது அவ்வளவு முக்கியமான விஷயமாகப்பட வில்லை. அதனால் அதை இந்தக் கடிதத்தில் எழுதாமல் விடுகிறேன்.

முன் கூட்டி எழுதினால் அதைப்பற்றி உங்கள் நண்பர்கள் உங்களை வாழ்த்த ஒரு வாய்ப்பு ஏற்படும். எப்படிப் பாடப் பிறந்தாலும் எதுவாக இருந்தாலும் யாரும் இரங்கற்பா போவது இல்லை. ஆணாக இருந்தால் அதிர்ஷ்டக்காரன் என்பார்கள்; பெண்ணாக இருந்தால் அதிருஷ்டம் வரும் என்பார்கள்.

''நீ தந்தையாகி விட்டாய்'' என்று வாழ்த்திவிடுவார்கள். அவர்கள் எந்தக் கருத்தில் சொல்வார்கள் என்பது எனக்குக் கவலை இல்லை. என்னைப் பொறுத்தவரை நீங்கள் தான் அதன் தந்தை என்ற பெருமையோடு சொல்

கிறேன். இங்கு இருப்பவர்க்கும் அப்படித்தான் சொல்லிப் பெருமைப்பட்டு வருகிறேன்.

யார் இதற்குத் தந்தை என்று கேட்டுக் கொண்டிருக்க, இது புதை பொருள் ஆராய்ச்சி அல்ல. இது உறவு முறை இயல். பிறந்ததும் தாய் சுட்டிக்காட்டும் முதல் மனிதர் தான் தந்தை.

''இதோ பார்ரா இவர்தான் உன் அப்பா'' என்று தாய் சொல்கிறாள்.

''இவர் என் கணவர் என்று அதற்கு அறிமுகம் செய்வேன் என்று எதிர்பார்ப்பீர்கள். அது செய்ய மாட்டேன்''

இதில் எந்தப் புதுமையும் இல்லை. நினைத்துக் கவலைப்படத் தேவை இல்லை; இதற்காகப் பொய்களைப் பேசிக் கொண்டிருக்கத் தேவை இல்லை.

நான் முன் ஒருவரை மணந்தது உண்மைதான்; அவரோடு வாழ்ந்ததும் உண்மை; அதனால் விளைந்ததும் இது என்பது உண்மை. இதில் வெட்கப்படத் தேவை இல்லை

கொஞ்சம் பொறுத்து இருக்கலாம். விவாகரத்து ஆகியதும் உம்மோடு உறவு கொண்டதும் நான் தாயாகி இருக்கலாம்; கவலைப்படவேண்டாம்; அடுத்த குழந்தைக்கு நீர்தான் ஆதாரமாக இருப்பீர். அதிலே ஒரு உடைமை இன்பம் காணலாம்.

இது என் ஆரம்ப அனுபவம். எல்.கே.ஜி, படிப்பு யூ.கே.ஜி இன்னும் எவ்வளவோ படிப்புகள் இருக்கின்றது நீண்ட வாழ் நாள் இருக்கிறது. நாம் சேர்ந்து வாழப்

போகிறோம். அப்பொழுது நாம் எத்தனை குழந்தைகளை வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம்; வாய்ப்பு இருக்கிறது.

வீண் வாதம், வரட்டு கவுரவம் விதைத்தவரைத் தூண்டி விடலாம். என் மன நிம்மதியைக் கெடுக்க நினைக்கலாம்.

இந்தக் குழந்தை தனக்குத்தான் பிறந்தது; அதனால் தன்னிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்று வழக்குத் தொடுக்கலாம். தந்தை என்று விண்ணப்பங்கள் நிரப்பும் இடங்களில் அவருக்குத்தான் அந்த உரிமை இருக்கிறது என்று பிடிவாதம் பிடிக்கலாம், அப்பொழுது நீங்கள் அதைப் பற்றி மனம் குலையக் கூடாது. நிதானம் தவறக் கூடாது.

வழக்குகளுக்கு அஞ்சி அல்லது செல்வாக்குகளுக்குப் பயந்து விட்டுக்கொடுக்க என்னை வற்புறுத்தக் கூடாது. விவாகரத்து என்று வரும்போது அந்தக் குழந்தையைப் பற்றிய பதிவுகளும், உறவுகளும் முற்றும் அறுந்து விட்டன என்பதுதான் பொருள். அதனால் அவர் எந்த உரிமையும் கொண்டாட முடியாது. சட்டம் அவர் பக்கம் சாயாது. சாய்ந்தாலும் நீங்கள் சாயாமல் இருந்தால் போதும். அதைத் துணிந்து விரும்பி ஏற்றுக்கொள்பவன் தான் அறிவாளி; வாழ்க்கையின் அனுபவம் அச்சடித்த ஏடாக ஒரே மாதிரி தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. மாறுபட்ட அனுபவங்கள் ஏற்படலாம். இயற்கைக்கு மாறுபட்டது அல்ல.

எந்த ஜீவனும் தாய் யார் என்றுதான் கவலைப்படுகிறது, தாயைச் சுற்றித்தான் அதன் ஆரம்ப வாழ்க்கை தொடங்குகிறது. 'தந்தை' என்று ஒருவனைத் தேடுவதே இல்லை. உங்களுக்கு அந்தப் பொறுப்புக் காத்துக்கிடக்கிறது.

குழந்தையின் வளர்ப்புக்கு இருவர் உழைப்பும் தேவை. இருவர் அன்பும் தேவை; சொந்தம் அவருக்கு இருந்திருக்கலாம், குத்தகைக்காரருக்கு விளைவு உடைமை என்பது சட்டம். அதனால் நீங்கள் இதற்குத் தந்தை என்று துணிந்து ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

பின்னால் ஒரு சிக்கல் வரக் காத்து இருக்கிறது. என் மாஜி கணவர் இன்று அரசியல் படியில் மிக உயரத்தில் ஏறிவிட்டார். பணத்தில் மிதக்கிறார். தவறுகளின் படிக்கட்டுகள் அவர் ஏறுவதற்குப் பயன்பட்டு வருகின்றன.

யாருக்குப் பிறந்தது என்று சட்டம் ஆராயும். பிறக்கும் போது யார் எனக்குக் கணவர் என்பதுதான் அளவுகோல் ஆகும்; எனவே நீதி மன்றம் அதிகாரத்துக்கும், அரசியலுக்கும், ஆதிக்கத்துக்கும் பணியாது'' என்று எழுதி இருந்தாள்.

மற்றும் தொடர்ந்து எழுதி இருந்தாள்.

''எனக்கும் உங்களுக்கும் ஏற்கனவே தொடர்பு இருந்தது. காதல் செய்தே கரம் பிடித்தோம் என்றுசொல்லிவிடலாம்; இந்தக் கற்பனை உங்களுக்கு ஏற்படலாம்; கதை எழுதுவதால் இப்படி வாதிடலாம் என்று நீங்கள் நினைக்கலாம்.

பொய்த்து உயிர் வாழ்வதை விட முன் அவர் சொன்னபடி அவர் தலைவர் காலில் விழுந்து நான் கசப்பு இல்லாமல் ஒட்டி வாழ்ந்திருக்கலாம்; இன்று அவர் கோடிக் கணக்கில் பொருள் ஈட்டி இருக்கிறார் என்று கேள்விப்படுகிறேன், அதை நான் இன்றும் மதிக்கவில்லை; எனக்குக் கொள்கைதான் பெரியது.

திருவேறு தெள்ளியர் ஆதல் வேறு என்பதைத் தெரிந்து வாழ்கிறேன்; தெள்ளியர் என்பது நாம் கொள்ளும் கொள்கையில் பிறப்பதாகும். இன்று நடக்கும் போராட்டங்கள் எல்லாம் பணமா? மனிதத்தனமா? என்பதுதான். மனிதராக வாழவேண்டும் என்பதுதான் என் லட்சியம்.

நீங்கள் மிகவும் மாறி இருக்கிறீர்கள் என்பது கண்டு பெருமைப்படுகிறேன். தனி மனிதன் தலை நிமிர்ந்து வாழ்வதால் அவனுக்கு மட்டும் பெருமை. எழுத்தில் நிமிர்வு இருந்தால் அந்த எழுத்துக்குப் பெருமை; அது அவரைப் போன்று எண்ணுகிறவர்களின் எண்ணமாக இருப்பதால் அத்தனை பேரும் நிமிர்ந்து நிற்கிறார்கள் என்பதுதான் பொருள்.

ஆபாசப்படங்கள் என்பது பெண்களின் அங்கங்களை அம்பலப்படுத்துவது மட்டும் அல்ல; காணிக்கை என்ற பெயரால் நாம் அடிமைப்பட்டு, சலுகைகளை எதிர்பார்த்து ஒரு சில அதிபர்களின் படங்களைப் புத்தகங்களில் போடுவதும் ஆபாசம் ஆகும் என்று கருதுகிறேன். அவர்களுக்கு அது விருப்பாக இருக்கலாம்; மற்றவர்கள் அதை ஏற்பார்கள் என்று எதிர்பார்ப்பது மடமை. எழுத்து சுத்தமாக இருக்கவேண்டும் என்றால் இந்தப் பெருமைகளைச் சுவரில் ஒட்டக்கூடாது.

அதில் அவர்கள் மட்டும் தாழவில்லை. வாசகர்களையும் தாழ்த்த நினைக்கிறார்கள். அது அருவெறுப்பு உண்டாக்குகிறது என்று எண்ணிப்பார்ப்பது இல்லை.

தனிப்பட்ட வாழ்வில் நீங்கள் தவறு செய்தால் பொறுத்துக் கொள்வேன்; எழுத்தில் அடிமைத்தனம் காட்டினால் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. ஆண்மை

என்பது உங்கள் உடல் வலிமை என்று மற்றவர்கள் மதிக்கலாம். என்னைப் பொறுத்தவரை உங்கள் எண்ணத்தில், எழுத்தில் இந்த ஆண்மையை எதிர்பார்க்கிறேன். அதற்கு ஆளுமை என்று சொன்னாலும் ஒப்புக் கொள்கிறேன். அதைத்தான் மனிதம் என்கிறேன்.

நான் நிறைய எழுதிவிட்டேன். நேரில் பேச முடியவில்லை; இன்னும் நிறைய எழுதுவேன்; சிறுக எழுதினால் அது நறுந்தேன். கடிந்து எழுதினால் அது கடுந்தேள். அதனால் இதோடு விடுத்தேன்'' என்று முடித்தாள்.

என் பொறுமைக்கு ஓர் எல்லை உண்டு என்பதை அறிந்தவள் போல் அவள் எழுதியதை முடித்துக் கொண்டாள். இந்தக் கடிதம் என்னை ஆட்டிப்படைத்து விட்டது. கடும் செய்தியை அவள் அறிவித்தாள்; ஆனால் அவள் நேர்மை கண்டு முதிர்ச்சி பெறுகிறேன். அவள் உண்மைதானே எழுதுகிறாள். இன்று இத்தகைய சோதனைகள் ஏற்படுவது இயற்கைதான். மனைவி என்பவள் ஒருவனுக்கு உடைமை என்பதால் வரும் சிக்கல்கள்தான் இது. அவள் எனக்குத் துணைவி; அவள் ஏற்கனவே மணமானவள்; விவாகரத்து செய்து கொண்டவள் என்று தெரிந்துதான் மணந்தேன். அதற்கப்புறமும் இப்படி ஏற்படும் விளைவுகளைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும், அதிர்ச்சிக்கு என்ன இருக்கிறது.

அழகான குழந்தையோடு வருகிறாள். அவள் வாழ்க்கையில் ஒரு மாற்றம். அன்பின் வளர்ச்சி; எங்கள் இருவருக்கும்தான் உலகம் என்று அமைத்துக் கொண்ட மண

வாழ்க்கை விரிவு அடைகிறது. அன்பு செய்வதற்கு அழகிய குழந்தை தவழ்கிறது. இதை மனம் மகிழும் செய்தியாகவே கொண்டேன். புதிய வரவை வரவேற்று நின்றேன். காலம் புதிய புதிய சூழ்நிலைகளை உருவாக்கக் காத்துக் கிடக்கின்றன. ஞாலம் அதை வரவேற்றுப் புன்முறுவலுடன் ஏற்கும்; ஏற்றுதான் தீரும்'' இந்த நினைவுகளோடு என் எழுத்துக்கு உட்காருகிறேன்.

எழுத்து தொடர்கிறது. அவள் தெரசாவின் அருமை மாணவி; ஒரு சோதனை நடத்துகிறாள். அந்தப் பெரியவருக்கு ஒரு அறைகூவல் விடுத்து இருந்தாள்; அதன் அடிப்படையில் அவ்விளைஞனின் காதலுக்குச் செவி சாய்த்தாள். சிரிக்காத அவனைச் சிரிக்க வைத்தாள்; நகைக்காத அவனை மகிழவைத்தாள்; அவன் குரலில் களிப்புத் துள்ளியது; முகத்தில் மலர்ச்சி தழுவியது;

அவளை நினைத்து அவன் மகிழ்ந்தான். அழகு அவனை அள்ளியது; இளமை அவனை இழுத்துச் சென்றது. அணைத்து இணைந்து இன்புறத் துடித்தான். சோலைகள் அவர்களை வரவேற்று நிழலைத்தந்தன. கடல் அலைகள் அவர்களை வளைத்து நனைத்து இணைத்தன. நேரம் போகிறது; போய்க் கொண்டே இருந்தது. இருட்டு அவர்களுக்கு மறைவைத் தந்தது; என்றாலும் அவள் தன்னைக் கொடுக்காமல் தள்ளியே நின்றாள். அவள் தன் நிறையைக் காத்துக் கொண்டாள்.

அவனைத் தவறு செய்யவிட்டு, அதன் காரணமாகத் தாலி கட்டச் சொல்லி அவனுக்கு வேலிபோட விரும்பவில்லை. அவனுக்கு எந்த நேரமும் விடுதலை தர விரும்பினாள். மணந்தால்தான் தன்னைத் தொட முடியும் என்

பதில் உறுதி காட்டினாள். அவள் ஒரு இலட்சியப் பெண்ணாக இயங்கியது அவனுக்கு எரிச்சல் ஊட்டியது.

"என் மீது உனக்கு நம்பிக்கை இல்லையா" என்று கேட்டான்.

"என் மீதே எனக்கு நம்பிக்கை இல்லை; என்னை இழந்துவிடுவேன்" என்றாள்.

"இழப்பதற்குத்தானே நாம் உழன்று கொண்டிருக்கிறோம்" என்றான்.

"இணைவதற்கு, இடையறாத இன்பவாழ்வு பெறுவதற்கு. அதற்குக் கண்ணியமான அடிப்படைகள் உறுதியாக இருக்க வேண்டும்" என்றாள்.

ஒப்பந்தம் இடுவதற்கு முன் என் நிர்பந்தம் அதைக் கவனித்துப்பார்" என்றாள்.

"நான் மணமானபின் தொழில் செய்வதற்குத் தடை கூடாது. இதே தொழிலில் நீடித்து இருப்பேன். மறுப்புக் கூடாது" என்றாள்.

அவனுக்கே அதில் உறுதி தர முடியவில்லை.

எப்படியாவது அவளை மயக்கி வாழ்க்கைக்கு இழுத்து விட்டால் சரியாகப் போகும் என்று கனவு கண்டான்.

போகப் போக அவள் வழிக்கு வருவாள் என்ற நம்பிக்கை இருந்தது.

-17-

அவள் எழுதிய கடிதத்தில் இவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு இருந்தாள். "நீங்கள் எழுதும் கதைகளைவிட எதிர்வீட்டுச் சம்பவம்தான் கவர்ச்சிகரமாக உள்ளது. அவர்கள் திருமணத்துக்குள் சென்னை வந்து விடுவேன். அண்ணாநகர்க் குறுக்குத் தெருவிற்கே ஒரு தனி மகிமை இருக்கிறது. அங்கே இப்பொழுது வழிபறிக் கொள்ளைகள், செயின் திருட்டுகள் நிறைய நடக்கின்றன என்று செய்தித்தாளில் படிக்கிறேன். சென்னையில் எந்தக் கொலை, கொள்ளையும் நடந்தாலும் அது அண்ணாநகர் என்று வருவது பழகிவிட்டது.

அந்தப் பெண் இதில் பிடிவாதம் பிடிப்பது ஆச்சர்யமாக இருக்கிறது. இதுவரை 'காதல்' தான் உயிர். அதற்காகப் பெண் எதையும் துறப்பாள் என்று தான் காட்டி இருக்கிறார்கள். இவள் சமுதாயப் பிரச்சனை ஒன்றில் பிடிவாதம் காட்டுகிறாள் என்றால் ஏதோ இந்தத் தேசம் புதிய சிந்தனையில் காலடி எடுத்து வைக்கிறது என்பதற்கு அறிகுறியாகிறது என நினைக்கிறேன். பெண்கள் என்றால் அவர்கள் தங்கள் உரிமைகளுக்குத்தான் போராடுபவர்கள் என்று கருதப்பட்டார்கள். அவள் தொழிலுக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற ஒரு கொள்கைக்காகப் போராடுகிறாள் என்றால் அவள் பாராட்டத் தக்கவள் தான்.

அவர்கள் திருமண அழைப்பு வந்தால் தவறாமல் எனக்குத் தெரிவியுங்கள். காவிரிக் கரையை விட்டு அமைந்தகரைக்கு வருகிறேன். எனக்கு 'டவர் பார்க் வந்து சுற்ற வேண்டும் என்ற ஆவல் பிடித்து இழுக்'கின்றது.

நாம் இருவரும் அங்கு ஓரங்களில் உட்கார்ந்து நேரம் போவது தெரியாமல் சாரமான விஷயங்களைப் பேசிய நாட்கள் என்னை இழுக்கின்றன. அங்கே இருவரும் இனிய உரைகள் பேசினோம்.

புதிய வரவு அதை விளையாடவிட்டு நாம் கவனித்துக் கொள்ளப் போகிறோம். காட்சிகளில் என்ன மாற்றம். நாம் நமக்காகப் பேசினோம். நமக்காகச் சிரித்தோம்; நமக்காக வாழ்ந்தோம். இனி மூன்றாவது ஓர் உயிருக்காக வாழ்கிறோம்; வாழப்போகிறோம் என்று நினைக்கும் போது மகிழ்ச்சி மிகுகிறது.

சின்னஞ்சிறு கைகள் கொட்டி அசைந்து நம்மை எடுத்துக்கொள்ள ஏங்கும்; அக்கரங்களைப் பிடித்து ஆட வைத்து அழகு பார்க்கும் மழலை இன்பத்தில் மயங்கும் நாளை எதிர்பார்க்கிறேன். கன்னம் குழியச் சிரிக்கும் அந்தச் சின்னச் சுழிகள் அந்த இன்பத்தை நீங்களும் பங்கிட்டுக் கொள்வீர்கள்.

எதிர்வீட்டுக்கு ஒரு புதுவாழ்வு மலரப் போகிறது என்பதைக் கேட்டு எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறேன்" என்று அவர்களைப் பற்றி எழுதி இருந்தாள்.

அந்த மணவிழாவை நானும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்; அதைவிட என் அருமை நண்பன் பெருமைக்கு உரியவன் தயாளனின் வருகையை எதிர்நோக்கி இருந்தேன்.

அவன் விவகாரம் வியாரமா? சமூகப் பணியா? அதை வைத்துப் புதிய பிழைப்பு நடத்துகிறானா? எப்படி

இவனுக்கு இந்தப் புதிய கற்பனை தோன்றியது. ஒப்பனை மிக்க மகளிரைக் கொண்டு ஒரு புதிய சொப்பனத்தைக் கண்டிருக்கிறான். என் கதையின் தொடர்ச்சிக்கு அவன் சந்திப்பு அவசியம் ஆகியது.

எதிர்பாராதபடி அவன் வந்து சேர்ந்தான்.

"என்னப்பா தயாளன் எங்கள் மீது தயவு வைக்க மறந்து விட்டாயா" என்றேன்.

"நான் உங்களைப் பொறுத்தவரை பழைய கருப்பன் தான். விருப்பத்தோடு என்னைக் குப்பன் என்றே அழைக்கலாம்" என்றான்.

"உனக்கும் சிவப்பு விளக்குக்கும் எப்படித் தொடர்பு ஏற்பட்டது" என்று கேட்டேன்.

"தொலைக் காட்சியில் அவர்கள் முகத்தை மூடி வைத்து அவர்களைப் பேச வைத்தார்கள். அவர்களுக்குப் புனர் வாழ்வு தர வேண்டுமென்று கனமானவர்கள் பேசினார்கள். அதற்குப் பிறகு அவர்களுக்குச் சுமையாகி விட்டார்கள். ஒரு சிலர் சொந்த ஊர் கண்டு பந்த பாசங்களைத் தேடினார்கள். ஒரு சிலர் 'கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே' என்று பழைய வாழ்க்கையைத் தேடிக் கொண்டார்கள்.

காதல் பழக்கம் உண்டு என்று உம்மிடம் ஓதி இருக்கிறேன். அதனால் ஏற்பட்ட மோதலில் கிடைத்தவள் ஒருத்தி; அவளுக்கு 'அந்திய நாட்டு நோய்' என்று அவள் ஒதுக்கப்பட்டாள். குப்பையில் தாளைப் பொறுக்கும்

பழக்கம்; இப்பொழுது அவளைத்தேர்ந்து எடுத்திருக்கிறேன். அவள் குப்பை அல்ல; கொஞ்சம் மூக்குச் சப்பை அவ்வளவு தான்.

காதல் செய்யத் தக்க கன்னி இளமான் அல்ல அவள்; குமரிப்பெண் என்று கூறமாட்டேன்; கட்டுப்பாடு என்பது என்னைத் தட்டுப்படுத்தியது இல்லை. அவள் வாழத் தலைப்பட்டவள்; எனக்கும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட்டது.

அவள் தன்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. தன் சிநேகிதிகள் சிலர் அபலைகளாக அல்லல் படுவதை எடுத்துக் கூறினாள். கடையில் சென்று 'டீ' குடிக்கும் பழக்கத்தை வெறுத்தாள்; அடுப்புப் பற்ற வைத்தாள்; அந்தப் புகை அவளுக்குப் புது வாழ்வு தந்தது.'' என்று தன் சுயசரிததைச் சுவை குன்றாமல் கூறி முடித்தான்.

இதுவரை அவன் கூறியதில் எனக்கு எதுவும் புதுமையாகப் படவில்லை. பதுமைபோல் இருந்து மவுனமாகக் கேட்டுக் கொண்டிருந்தேன். கதை அம்சம் எதுவும் அதில் காணப்படவில்லை.

''இந்த இல்லம் திறப்பதற்கு உனக்கு நிதி எப்படிக் கிடைத்தது?'' என்று கேட்டேன்.

''விளம்பர யாத்திரிகையர்களை நீர் பார்த்திருப்பீர். ஊதுவத்தி முதல் ஊறுகாய் வரை எடுத்துவந்து அறிமுகம் செய்வார்கள்.

வருகிறவர்கள் கேடிகளுக்கு அஞ்சி 'லேடிகள்' இருக்கின்றார்களா என்று கேட்டுக் கொண்டே வருவார்கள்.

அந்த வீட்டு மங்கல மாட்சியர்கள் ''அவர்கள் வீட்டு ஆடவர்கள் அவர்களை நாடாமல் இருக்க விரைவில் பேசி அல்லது ஏசி அனுப்பி விடுவதைப் பார்த்திருக்கிறேன்.

இந்த அபலைகளையே விளம்பரப் பொருள்கள் ஆக்கி வீடுகளில் அழைப்பு மணி அடிக்கச் செய்தேன்.

வந்தவர்கள் விசாரித்தார்கள்.

''பிழைப்பு வேண்டும்'' என்றார்கள்.

'பிழை செய்யாதிருக்க நிதி உதவினார்கள்'.

சிவப்பு விளக்கு என்று கேட்டவுடன் சிந்திக்காமல் உடனே நிதி தந்து அனுப்பி விட்டார்கள்; அச்சம் அவர்களது ஆசாரமாக விளங்கியது; அது எங்களுக்குப் பயன் பட்டது. ஆரம்பம் 'அறம் செய விரும்பு' என்னும் ஆத்தி சூடியில் தொடங்கினோம; பின்னர் 'ஏற்பது இகழ்ச்சி என்பதால் தொழில் நிறுவனங்கள் நிறுவினோம்; உழைப்பால் உயர்ந்தோம்.

எங்கள் இல்லத்தில் யாரும் மறுபடியும் பழைய வாழ்வுக்குத் திரும்புவதில்லை. அவர்கள் சேவை செய்யத் தாய்மை உறவு வளர்க்க ஆதரவு குறைந்த குழந்தைகளைச் சேர்த்துக் கல்வி வசதிதருகிறோம்.

மாமியார் கொடுமை; கட்டிய கணவரின் கடுமை. இதனால் தற்கொலைக்குத் தள்ளப்படுபவர்கள் பலர் இங்கு பாதுகாப்புப் பெறுகின்றனர். அதே போல மருமகளில் அட்டகாசம் தாங்காமல் சரண் அடைந்த மாமியார்க்கும் இடம் தந்தோம்.

வரதட்சணைக் கொடுமைகள் ஏற்பட்டால் தாராள மாக இங்கே வரலாம் என்று இடம் அளித்திருக்கிறோம். முடிந்தால் கேட்ட வரதட்சணை தந்தும் வாழ்க்கையை அமைத்துத் தந்திருக்கிறோம். தண்டிப்பதை விட அவர் களுக்குப் பொருள் உதவி செய்வதும் அவசியம் என்பது உணர்ந்து செயல்படுகிறோம்.

முதியவர்கள் தொண்டு செய்யும் மனத்தவர்கள் இங்கு வந்து இடம் பெறுகிறார்கள். எங்கள் இல்லம் 'ஆறுதல் இல்லம்' என்ற பெயர் பெற்றுள்ளது என்று தயாளன் தன் வாழ்க்கையில் நடந்த சில மாற்றங்களை என்னிடம் சொல் லிக் கொண்டிருந்தான்.

18-

எதிர்வீட்டுக் கதை இழுபறியாக இருந்தது. பெரியவர் விட்டுக் கொடுப்பதாக இல்லை. அந்தப் பெண்ணும் தன் கொள்கையில் பின் வாங்குகிற மாதிரி இல்லை; உறுதி யாக நின்றாள்.

அவர்களின் பஞ்சாயத்துக்கு என் வீடுதான் கிடைத் தது. அதைப் பொறுமையாகச் செவி சாய்த்துக் கேட்டேன்.

பெரியவர் தன் கட்சியை எடுத்துக் கூறினார்.

''சாதியைப்பற்றி நான் கவலைப்படவில்லை. அவர் கள் தங்கள் தொழிலை மட்டும் விட்டு வர வேண்டும்'' என்று வற்புறுத்தினார்.

''நானும் அப்படித்தான் நினைக்கிறேன். வங்கியில் நிரந்தரத் தொழில்; நீட்டித்த ஊதியம். இவர்கள் சம்பா திக்க வேண்டும் என்பது இல்லை. என் பெற்றோர்கள்

விருப்பத்துக்கு விட்டுக் கொடுக்க வேண்டும்; இதைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்". என்றான் கதாநாயகன்.

"எனக்குத் தொழில் செய்ய உரிமை வேண்டும். நான் தெருப் பெருக்கும் தொழில் செய்யக்கூடாது என்று வற்புறுத்துகிறார்கள். அது என் உணர்வைத் தொடுவதாக இருக்கிறது. நான் எந்தத் தொழிலையும் சமமாக மதிக்கிறேன். அமைச்சரும் ஒன்றுதான். மூட்டை தூக்கும் நமச்சிவாயமும் ஒன்றுதான். இந்தத் தேசத்தில் வேறுபாடுகள் எவ்வளவு தூரம் வளர்க்க வேண்டுமோ அவ்வளவு தூரம் வளர்த்துவிட்டார்கள். தொழிலால் சாதிப் பாகுபாடு ஏற்பட்டுவிட்டது. கடுமையான உழைப்புக்கு இலக்கானவரைத் தாழ்த்தப்பட்டவர்கள் ஆக்கிவிட்டனர். உழைக்காத சோம்பேறிகளைக் கோயில் குருக்கள் ஆக்கிவிட்டனர்.

இவற்றை உடைத்து இந்தச் சமுதாயம் முன்னேறி வருகிறது.

செருப்புத் தைத்தவன் மகன் அறுவைச்சிகிச்சை செய்யும் மருத்துவன் ஆகிறான்; பிணம் எரித்தவன் மகன் பணம் படைத்தவனாகப் பவனி வருகிறான். இதை வரவேற்கிறார்கள். குலத்தொழிலை விட்டு நலத்தொழில் நாடுவது தேவை என்று ஒப்புக் கொள்கிறார்கள்.

ஏன்? தொழில்களுள் பேதம் பாராட்டப்படுவதால் இதில் கவுரவங்கள் ஒட்டப்படுகின்றன. செய்யும் தொழிலால் உயர்வு தாழ்வு கற்பிப்பது தவறு. எல்லாத் தொழிலும் சமம்தான். ஏற்கனவே ஏழை பணக்காரன் என்று பேதம் உள்ளது. பணக்காரன் உட்கார்ந்து இருந்தால்

அவன் கீழ் பணி செய்பவன் நிற்க வேண்டும். அவனைச் சமமாக வைத்துப் பேசும் நாகரிகம் இன்னும் வளர வில்லை.

நான் இதில் வருவாய் குறைவு என்பதை உணர் கிறேன். எனக்கு இதைவிடத் தக்க வேலை கிடைக்கும் என்ற வாதத்தையும் ஒப்புக் கொள்கிறேன்; என்றாலும் எல்லாத் தொழிலும் மதிக்கப்படவேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்த இந்தத் தொழிலை விரும்பி ஏற் கிறேன். என் மதிப்புக்கு உரிய மாமனாரிடம் ஓர் உறுதி எடுத்து இருக்கிறேன். அவர் மகனை இந்தத் தொழிலில் மணந்து காட்டுகிறேன் என்று கூறி இருக்கிறேன். அது மட்டும் அல்ல என் இதழ்களில் சரியாகச் சாயம் பூசவில்லை என்று கண்டித்தவர் என் பழைய முதலாளி, அதற்காகவே பழைய பணியைத் தவிர்த்தேன். உழைத்துப் பிழைக்க முடியும் என்று காட்ட வெளியேறினேன்'' என்று தன் முடிவின் வேகத்தையும் விளக்கினாள். அவள் ஏன் பழைய பயணத்தை முடித்துக் கொண்டாள் என்பதன் காரண மும் விளங்கியது.

-19-

எதிர்பாராத விதமாக என் துணைவியாகும் மற் றொரு துணையோடு ஆட்டோவில் வந்து இறங்கினாள். மீட்டருக்கு மேல் அதிகம் கேட்க அவள் பிடிவாதமாக மறுக்க அந்தக் குரல் கேட்டு வெளியே வந்தேன். எனக்குப் புதுமுகம் பார்க்க எழுந்த ஆவல் பஞ்சாயத்தைவிட்டு எழச் செய்தது.

அவன் என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருந்தது.

''ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்கிறான். நான் ஏமாற்றப்பட்டேன் என்பதாலேயா? நீ என்னை உதறித் தள்ள முடியாது என்பதாலேயா?''

பின் அவளே உள்ளே சென்று மற்றவர்களுக்கும் அந்தப் புது வரவை அறிமுகம் செய்து வைத்தாள்.

படைப்பு என்றால் இதுதான் என்று பாராட்டினார்கள். எழுதுவது படைப்பு என்று சொல்கிறாய்; அதில் எத்தனை உடைப்புகள், இலக்கணப் பிழைகள், கருத்துப் பிழைகள்; வாக்கியப் பிழைகள்; அது வரும்போது அச்சுப் பிழைகள். அதைப் படைப்பு என்று சொல்வது வெறும் கண் துடைப்பு'' என்று விமரிசனம் செய்தனர்.

குழந்தையை உள்ளே வைத்துவிட்டு வீட்டை ஒரு நோட்டம் பார்த்துவிட்டு என் சமையல்காரன் செய்து வைத்த சாப்பாட்டில் ஒரு கூட்டல் வேண்டும் என்று சொல்லிவிட்டு அவளும் வந்து உட்கார்ந்தாள்.

''அழைப்பிதழ் அச்சாகி விட்டதா'' என்று வந்தவுடன் கேட்டாள்.

''அதை எழுதுவதற்குத்தான் இங்கே கூடியுள்ளோம்'' என்று பையன் பதில் சொன்னான்.

-20-

முன்னால் எல்லாம் அவன் அதிகம் பேசமாட்டான். அவன் முத்திக்கொள்வது எங்களுக்கு ஒரு மாறுதலாகப் பட்டது. மகன் பிறந்த செய்தி பறைசாற்றினோம்.

''உங்களுக்குப் பெண் விருப்பு இல்லையா?'' என்று கதாநாயகன் கேட்டான். அவனுக்கு ஒரு விரிவுரை நிகழ்த்த வேண்டியது ஆயிற்று.

''விருப்பு வெறுப்புக்கு இங்கு இடம் எது? எப்படி அமைகிறதோ அதை அப்படியே எடுத்துக் கொள்வதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது. உலகத்துப் படைப்புக்கு ஆண் பெண் இரண்டும் தேவைப்படுகின்றது.

ஆண்களுக்கு உரிய உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கு உண்டு. அவள் விரும்பினால் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. அதனால் எனக்கு எதுவானாலும் ஒன்றுதான்'' என்று விளக்கம் தந்தேன்.

''நீங்கள் அதிருஷ்டக்காரர் என்று பாராட்டினார்'' பெரியவர்.

''எப்படி?''

''மகன் பிறந்திருக்கிறான்; நீங்கள் பிறர்க்கு அடிமையாகத் தேவை இல்லை'' என்றார்.

''அவன் ஒருத்திக்கு அடிமையாவான்'' என்றேன். சிரிப்புத் தோன்றியது.

-21-

அதற்குள் தபால் நிலையத்திலிருந்து அஞ்சல் பதிவு உறை ஒன்று என் மனைவியின் கையெழுத்தை எதிர்பார்த்தது. அவள் இங்கு வருவதற்கும், அந்த அஞ்சல்

வருவதற்கும் சரியாக இருந்தது. அதை அவள் பிரித்துப் பார்க்கவில்லை; அவசியம் இல்லை என்று எடுத்து வைத்தாள். பேச வந்திருக்கும்போது அவர்களை அனுப்பிய பிறகு படிப்பது தக்கது என்று தள்ளி வைத்தாள் எனத் தெரிந்தது. நானும் அதைப்பற்றிய ஆர்வம் காட்ட வில்லை; அவள் சொன்னால் தவிரக் கேட்பதில்லை என்று விட்டு விட்டேன்.

தயாளனின் துணைவியும் அவனோடு அன்று என் இல்லத்திற்கு வந்தாள். அவள் சுறுசுறுப்பும், பரபரப்பும் என்னைக் கவர்ந்தன. அவள் கைகள் சும்மா இருக்க வில்லை. அங்கு அங்குச் சிதறிக் கிடந்த சின்னப் பொருள் களை அடுக்கி வைத்தாள். பெண் வாசம் படாத வீடு என்பதற்கு அடையாளமாக வைக்க வேண்டிய இடத்தில் பொருள்கள் இல்லாமல் வனவாசம் செய்தது.

அதை அவள் அழகாக எடுத்து வைத்தாள். சமையற் காரன் இத்தனை பேர்களுக்கும் சமைக்க வேண்டிய கட்டம் வந்து விட்டது. நேரே பழகியவள் போல் அடுக் களைக்குச் சென்று அவனுக்கு உதவியாளராகப் பணிபுரிந் தாள்.

குழந்தை தன் படுக்கையை ஈரப்படுத்தி விட்டது. உடனே அதனை அகற்றிப் புதிய மாற்றுப் புடவை கிழிச் சல் கொண்டு வந்து போட்டாள்; பெற்றவள் என் மனை வியா? அவளா? என்ற பேதம் தெரியாதபடி அந்தக் குழந்தையை எடுத்து வாரி அணைத்து முத்தமிட்டாள்.

''அழகாக இருக்கிறது'' என்று பாராட்டினாள்.

அந்தக் குழந்தை தவழும் அந்த இடம் புதிய ஜீவன் பெற்றது. இதுவரை சலனமற்று இருந்த என் எழுத்து அறை எழிலும் எழுச்சியும் விழிப்பும் பெற்று விளங்கியது. ''மங்கலம் என்ப மனை மாட்சி மற்றதன் நன்கலம் நன் மக்கட் பேறு'' என்ற குறளின் விளக்க உரை எனக்குக் கிடைத்தது.

-22-

கொண்டு வந்த பஞ்சாயத்து இன்னும் தீராமல் இருந்தது.

''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று எதிர்வீட்டுக்காரர் என் கருத்தை எதிர்பார்த்தார். அதாவது நான் சொல்லி அந் நங்கையின் போக்கினைத் திருப்ப முடியும் என்று நினைத்தார்.

''இதில் என் அபிப்பிராயம் என்ன இருக்கிறது. உங்கள் மனமாற்றத்தைப் பொறுத்து இருக்கிறது. துணிந்து இவர்கள் கொள்கைக்கு இடம் தந்தால் எல்லாம் சரியாகப் போய்விடும்'' என்றேன்.

''நாங்கள் கிறித்தவர்கள்; எங்கள் பாதிரிமார்கள் இதற்குச் சம்மதம் அளிக்க மாட்டார்கள். அவர்களைக் கேட்டேன். அவர்கள் ஒரு புதிய நிபந்தனை ஏற்படுத்துகிறார்கள். அவர்கள் எந்தத் தொழில் செய்தாலும் அவர்களுக்குத் தடை இல்லை. கிறித்துவராக மாற முடியுமா? என்ற புதிய பிரச்சினை எழுப்புகிறார்கள்.

ஒரே வீட்டில் இந்துவும், கிறித்தவரும் எப்படி வாழ முடியும். எங்கள் பழக்கவழக்கங்கள் வேறுபட்டவை; அவர்கள் பழக்க வழக்கம் வேறுபட்டவை; நாங்கள் இந்

துக்களாக மாற வேண்டும். அல்லது அவர்கள் கிறித்துவர் களாக மாற வேண்டும். கிறித்தவர்கள் இந்துக்களாக மாறுவது வழக்கத்தில் இல்லை. இந்துக்கள் தான் கிறித்த துவர்களாக மாறமுடியும்; அது எளிது. ஞானஸ்நானம் செய்துகொள்ள இசையவேண்டும். இதற்கு ஒப்புக்கொண் டால் எனக்குத் தடை இல்லை'' என்று தம் முடிவினை அறிவித்தார்.

கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல் இருந்தது. தொழிலுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற பிரச் சனையை விட்டு விட்டு மதத்திற்கு மதிப்புத் தர வேண்டும் என்ற ஒரு புதிய பிரச்சனை கிளம்பியது வியப்பாக இருந்தது.

என் மனைவி குறுக்கிட்டாள்; அவள் ஏதோ புதுமை கூறுவாள் என்று எதிர் பார்த்தேன், அவள் எதிர் வீட்டுக் காரர் கூறியதை ஏற்று அதன்படி நடப்பதுதான் தக்கது என்று கூறுவாள் என்று எதிர்பார்த்தேன்; காதலிக்கிற வர்கள் இந்தத் தியாகத்துக்கு இடம் தந்துதான் ஆக வேண்டும் என்று நானும் நம்பினேன். அனைவரும் அவள் சொற்களில் ஆர்வம் காட்டினோம்.

''மதம் என்பது உயிரோடு ஒன்றிவிட்ட உணர்வு. அது மானுடம் அனைத்துக்கும் சொந்தமானது. வழிபாட்டு முறைகளே வேறுபடுகின்றன. அனைத்தும் மனித நேயத்தை வளர்க்கின்றன.

எந்த ஒரு மதமும் இந்த நாட்டுக்குத்தான் சொந்தம் என்று கூறமுடியாது. உலகத்தில் எங்கே வாழ்ந்தாலும் அவரவர் எந்த மதத்தை வேண்டுமானாலும் மேற்கொள் ளலாம். சில இடங்களில் குறிப்பிட்ட மதத்தினர் பெரும்

பான்மையாக இருக்கலாம். அதை வைத்து அது அவர் களுக்கே உரியது என்று கூற முடியாது. மதம் எல்லை கடந்தது.

எந்த மதத்தையும் யார் வேண்டுமானாலும் மேற் கொள்ளலாம்; என்றாலும் அவை தனித்தனி கலாச்சாரங் களையும், பழக்க வழக்கங்களையும் உண்டாக்கி இருக் கின்றன. ஒரு பள்ளியில் சேர்கிறவர் அந்தப் பள்ளிக்கு ஏற்ற உடைகள் உடுத்துகிறார்கள். ஆனால் கற்கும் கல்வி ஒன்றுதான். அதே போலத்தான் புறத்தோற்றத்தில் வேறு பட்டு இயங்கலாம்; அக உள்ளீடு அனைத்தும் ஒன்றுதான்.

பகைவனை மதித்து அருட் செய்யும் பண்பையும், சகோதரத்துவத்தையும், மனித நேயத்தையும் அனைத்துச் சமயங்களும் வளர்க்கின்றன.

காதல் தனிமனிதனின் உணர்வு. அது இருவரைப் பிணிக்கிறது. அதனால் அவர்கள் தம் சமயத்தைவிட்டுவிட வேண்டும் என்பது இல்லை. தனி மனிதனின் போக்குகளை உடனே மாற்றிக் கொள்ள வேண்டும் என்று எதிர் பார்ப்பது தவறு. சமயம் மட்டும் அல்ல. அரசியல் வாழ்க் கைகளும் அப்படித்தான். தந்தை ஒரு கட்சி என்றால் மகன் ஒரு கட்சியாக இருக்கலாம். அது அவர்கள் தனி உரிமை அதை விட்டுக் கொடுக்க வேண்டும் என்பது இல்லை.

சாதிகள் காதல் மணத்தில் சாகின்றன; ஆனால் அவர்கள் சாதிகளை விடுவது இல்லை. அதை மறந்து ஒன்றுபடுகிறார்கள். அதே போலத்தான் மதங்களை

விட்டுக்கொடுக்க வேண்டும் என்பது இல்லை. அதை மறந்து பழக வேண்டும்.

தத்தம் மன இயல்புகளை மாற்றிக் கொண்டால் அந்தத் தனி மனிதனின் அழகே கெட்டுவிடும். இது அடிமைத் தனமும் ஆகிவிடுகிறது. எனவே இவளுக்காக அவனோ, அவனுக்காக இவளோ மாற வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவை இல்லை.

தன் மகன் இந்துவாக மாறுவதைப் பெரியவர் விரும்ப மாட்டார். அதே மனநிலையைத்தான் மற்றவர்களிடமும் காட்டவேண்டும்; மதம் வேறுபாட்டால் குடும்பம் அமைதி கெடாது. ஒருவரை ஒருவர் மதித்து நடந்தால் எல்லாம் சரியாக இயங்கும்.

அதே போலத்தான் நாட்டிலும் மதச்சார்பு மதிக்கப் பட வேண்டும். சிலர் தவறாகக் கூறுகிறார்கள் இந்த நாடு மதச்சார்பு அற்ற நாடாக இயங்க வேண்டும் என்று கூறுகிறார்கள். இது தவறு; மதச்சார்பு காட்டாத நாடாக இயங்க வேண்டும் என்பதே சரியான கொள்கை.

நிறுவனங்களில் மதச்சார்பு காட்டுதல் தனிச் சலுகைகள் பெறுதல் இவற்றை எல்லாம் நீக்க வேண்டும்.

மத போதனைகளும் தவிர்ப்பது தான் நல்லது. மதச் சார்பு காட்டாத நிறுவனங்களாக மாற வேண்டும். பிற சமயங்களை வெறுக்காத இயக்கங்கள் வளரவேண்டும்.

அந்த வகையில் இந்த மணக்கலப்பு ஒரு வழி காட்டியாக அமையும். மதத்தால் வேறுபட்டாலும் ஒரே குடும்பத்தில் ஒற்றுமையாக ஒருவரையொருவர் மதித்து வாழ

முடியும்என்பதற்கு இவர்கள் வாழ்க்கை எடுத்துக்காட்டாக அமையும். இது நாட்டுக்கும் வழி காட்டுவதாக அமையும்.

இந்த மண்ணை நேசிப்பது என்றால் இதில் எழுந்த இந்து சமயத்தை மதித்துத்தான் ஆக வேண்டும். நீங்கள் கிறித்தவர் என்பதால் வேறு பட்டவர்கள் என்று நினைப்பதும் தவறு; இந்தப் பெண் உங்களோடு ஒட்ட முடியாது என்பதும் தவறு. பிறப்பால் நீங்கள் கிறிஸ்த்தவராக இருக்கலாம் என்றாலும் இந்த மண்ணின் கலாச்சாரத்தை நம்பிக்கைகளை மதித்துத்தான் ஆக வேண்டும்.

''அசைக்க முடியாத நம்பிக்கைகள் இவை; காதல் காரணமாக; அவள் விரும்பும் கணவன் காரணமாகத் தன் கலாச்சாரத்தை நம்பிக்கைகளை விட்டுக்கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமாகப்படவில்லை. பெண் அடிமைப்பட்ட காலம் மாறிவிட்டது. உரிமைக்குரல் எழுப்பும் காலம் இது. அவரவர் கொள்கைகள் நம்பிக்கைகள் மற்றவர்களை மாற்றக் கூடாது. மாற்ற நினைப்பது மடமையும் ஆகும்'' என்று முடித்தாள்.

என் வீடு ஒரு கருத்தரங்காக மாறும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உள்ளே அனைவரும் உண்டு பசியாறச் சமையல் நடந்து கொண்டிருந்தது. என்னைப் பொறுத்தவரை என் மனைவி குழந்தையோடு வந்த புது நாள் தயாளன் தன் துணையை அழைத்து வந்த நன்னாள்; எதிர்வீட்டு இளந் தம்பதிகள் இணையும் பொன்னாள்; அதனால் விருந்து ஒன்று தருவது தக்கது என்றே பட்டது. மும்முரமாக அடுப்பு எரிந்து தன் கடமையைச் செய்து கொண்டிருந்தது. நல்ல காலம் காஸ் கைகொடுத்து இருக்கிறது என்று தெரிந்து கொண்டேன். சில சமயம் அது கழுத்து அறுத்து விடுகிறது. சரியான சமயத்தில் அது ஒத்துழைப்புத் தருவது இல்லை இப்பொழுது எல்லாம் ஒழுங்காக இயங்கிக் கொண்டு வருகிறது. பெரியவரின் துணைவியாரையும் சாப்பிட அழைத்தேன். அவர்கள் அதிகம் பேசவில்லை.

அந்த அஞ்சல் பிரிக்கப்படாமல் இருந்தது.

என் ஆர்வத்தை வெளிக்காட்டாமல் அடக்கி இருந்தேன். அது அவள் மாஜி கணவரிடமிருந்து வந்தது.

இவர்கள் போக வேண்டும் என்று எதிர்பார்த்தேன்.

-23-

அவருடைய பையன் வாய்திறந்தான். எனக்கு விடை கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன். முடிவு செய்ய வேண்டுவது அவன் தான் என்று பட்டது.

அவன் துணிந்து கதாநாயகிக்கு உரிமை தந்து விட்டான். யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்தால் தான் எந்தப் பிரச்சனையும் தீரும் என்பதை அறிந்து அவன் செயல்பட்டான்.

"நான் வீண் கவுரவங்களுக்கு மதிப்புத் தர வில்லை; காதல் கண்ணியமானதுதான்; வள்ளுவர் முதல் வைரமுத்து வரை இக்காதலைப் போற்றி இருக்கிறார்கள். காதல் உயிர்த் தத்துவம். இது மற்றையவற்றைப் போல் ஒரு பிரச்சனை அல்ல; வாழ்க்கை; மணக்கிறேன் என்று இணங்கிவிட்டுப் பின்வாங்க விருப்ப வில்லை.

தொழில் அவரவர் விருப்பத்தை ஒட்டியது என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

இது இன்றைக்குத் தேவையான புரட்சிதான். இந்த நாட்டில் தொழிலை மதிக்கக் கற்றுக் கொள்ளாதது பெரிய குறைதான்.

அவர்களை இழக்க வேண்டுமே என்பதற்காக நான் விட்டுக் கொடுக்கவில்லை; அவர்கள் கொள்கையை மதிக்கிறேன்.

அவர்கள் என்னை ஒரு வங்கியில் அதிகாரி என்று பார்த்ததே இல்லை. அங்குப் பணி செய்யும் தொழிலாளி என்றுதான் கருதுகிறார்கள்.

மூதாட்டி ஒருத்திதான் தெரிசாவாக ஆக முடியும் என்று நினைப்பது தவறு. இளமையில் அத்தகைய தொண்டுள்ளம் மதிக்கத்தக்கதுதான்; எனக்கு எந்த மறுப்பும் இல்லை. என் தந்தையையும், தாயையும் நான் வற்புறுத்தத் தயாராக இல்லை.

இந்தப் பரந்த உலகில் எங்களுக்கு என ஒரு கூரை இருக்கத்தான் செய்யும். கிடைக்கத்தான் செய்யும். மற்றும் மணமான பிறகு பெற்றோர்கள் அரவணைப்பில் இருப்பது அநாகரிகமானது என்று படுகிறது. அவர்கள் விரும்பினாலும் ஒரே கூரையில் இருந்து கொண்டு அவர்களுக்கு இடையூறு உண்டாக்க விரும்பவில்லை.

நாட்கள் சில ஆகலாம். திங்கள் சில போகலாம். எப்படியும் மருமகளும், மாமியாரும் ஒத்துப் போக முடியாது. இன்றே ஒதுங்கிவிடுவது நல்லது.

அவர்கள் எங்களுக்கு 'ஆசி' கூறினால் போதும். வாழ்த்தட்டும் வெறுக்காமல் எங்களை வாழ விடட்டும் அது போதும். அவர்களுக்குப் பணி செய்ய வாய்ப்புகள் உள்ளன.

தயாளன் மறுமலர்ச்சி இல்லம் அழைக்கிறது. அவர் உண்மையான கிறித்துவர் என்று சொல்லிக் கொள்கிறார். அவர் ஓய்வு ஊதியம் பெற்றுக்கொண்டு இந்தக் கிறித்துவ மதிற் சுவருக்குள் அடைபட்டுக் கொண்டிருக்கத் தேவை இல்லை. நாங்கள் குழந்தை பெற்றுத்தரும் வரை காத்திருக்கத் தேவை இல்லை. இவர்களுக்காக நாங்கள் குழந்தை பெற வேண்டும் என்று வற்புறுத்தத் தேவை இல்லை.

முதியோர் சிலர் அந்த இல்லத்தில் பணி செய்வதாகக் கூறுகிறார்கள். இவர்களுக்கு அங்கு நிறையப் பணிகள் காத்துக்கொண்டிருக்கின்றன.

முதியோர் இல்லம் என்றால் முதியோருக்குப் பாது காப்புத் தரும் இல்லம் மட்டும் அல்ல; முதியோர் பணி செய்ய வாய்ப்புத்தரும் இல்லமாகவும் இருக்க வேண்டும்.

முதியோர்கள் என்றால் அநாதைகள் என்ற கருத்தோ, பிள்ளைகளின் பராமரிப்பை எதிர்பார்ப்பவர்கள் என்ற கருத்தோ மிகவும் பிற்போக்கானது. மனிதன் இறுதி மூச்சு இருக்கும்வரை யாருக்காவது பயன்பட வேண்டும்; பணி செய்ய வேண்டும். அதில் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் இதுதான் அவர்கள் செய்யத் தக்கது'' என்று கூறி முடித்தான்.

கற்றவன் அதனால் அவன் தெளிவாகச் சிந்திக்கும் இயல்பு அவனிடம் இருந்தது அவன் எங்கள் அனைவரை யும்விட மிகவும் உயர்ந்து விட்டான் என்பதை அறிய முடிந்தது.

மணம் முடிவு செய்யப்பட்டது.

''நீ உன் உறுதியை நிறைவேற்றி விட்டாய்'' என்று பெரியவர் பாராட்டினார். மங்கையர் திலகம் வெற்றி காட்டினாள்.

''எனக்கு இந்தத் தத்துவ இலக்கணங்கள் எதுவும் புரியாது. என் மகன் யாரை விரும்புகிறாளோ அவள்தான் என் மருமகள்'' என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தார் அவர் துணைவியார்.

# சீற்றம்

*-1-*

*பானு. அவள் முழுப்பெயர் உதயபானு. அவள் இதயம் அறிந்து அவளுக்கு மிக்க இடத்தில் வாழ்க்கையைத் தேடித் தந்தார்கள். எப்பொழுதும் இவள் அல்லவா அதிருஷ் டக்காரி என்று பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தனர். சாத்தியம் இல்லாத பாத்தியம் ஏற்பட்டுவிட்டால் இப் படிப் பேசுவது பழக்கமாகிவிட்டது.*

*அவளைப் பற்றி இப்பொழுது என்ன சொல்கிறார்கள்? 'வாழா வெட்டி' என்ற பட்டம் கட்டி அவள் வாழ்க்கை யை எட்டி எட்டிப் பார்க்கிறார்கள். அவள் அஞ்சு மாதம் குழந்தையை அழகாகக் கையில் வைத்துக்கொண்டு கொஞ்சிக் கொண்டிருந்தாள். தாய்மை அவள் வாழ்க்கை*

யைத் தூய்மை உடையதாக வைத்துக் கொண்டிருந்தது. கட்டிய கணவனைப்பற்றி எட்டிக்காயான நினைவுகள் அவளிடம் நிலைத்து நின்றன.

அவள் தந்தை ஆறுமுகம் என் அடுத்த வீட்டுக் குடிவாசி; நான் அந்தத் தெருவில் ஆதிவாசி; என்னிடம் பலபேர் வருவது எனது ராசி; அதனால் என்னை 'ராசி' என்றும் கூறி வந்தனர்.

அச்சுத் தொழிலை நம்பித்தான் அவர் அரிச்சுவடி தொடங்கியது. ஒரு சிலர் தம் சொந்த வாழ்க்கை அனுபவங்களை வைத்து நாவல்கள் எழுதிவிட்டுப் பின் புதுமை படைக்க முடியாத பதுமைகள் ஆகிவிடுவது உண்டு. அவர்கள் பத்திரிகை ஆசிரியர்களாக மாறிவிடுகின்றனர். பிறர் எழுத்தை அச்சிட்டு ஆசிரியர் பட்டத்தைத் தக்க வைத்துக் கொள்கிறார்கள்.

அதே போலத்தான் இவரும். பிறர் எழுதிய நூல்களை அச்சிட்டு வெளியீட்டாளர் என்று தொழில் ஆரம்பித்தவர். அந்த ஆசிரியர்கள் தம் எழுத்தின் ஊதியம் தன்னை விட்டுப் போகக் கூடாது என்று அவர்களே அச்சிடத் தொடங்கி விட்டனர். அதனால் நூல் வெளியீட்டுத் தொழிலை அடக்கிக் கொண்டார்; அச்சுத் தொழிலோடு அவர் இச்சைகளை அடக்கிக் கொள்ள வேண்டியது ஆயிற்று.

அச்சு இயந்திரம் அசைவு குன்றிவிட்ட நாட்களில் மர்ம நாவல்களை வெளியிடுவது என்று தொடங்கினார். காம சூத்திரத்தின் அகராதியைக் கரைத்துக் குடித்த கதையாசிரியர் சிலர் இவருக்குக் காசுக்கு எழுதிக் கொடுத்

தனர். 'பானு' இந்த நாவல்களைப் படிப்பதைப் பார்த்தார்; தன் மகளின் கற்புக்கு அவை ஊறு விளைவிக்கும் என்பதை உணர்ந்தார். அவள் ஒத்த வயது உடைய ரத்தினங்கள் பலர் சிதைந்து பொலிவிழக்க வாய்ப்பு உள்ளதை அறிந்து அம்முயற்சியைக் கைவிட்டார். போலீசு வந்து அடிக்கடி விசாரித்து மாமூல் வசூல் செய்யத் தொடங்கினர். போலீசு தன்னால் ஊழல் செய்வது கூடாது என்று அம்முயற்சியைக் கைவிட்டார். அதனால் வருவாய் வருவதும் வேலை நிறுத்தம் செய்துவிட்டது.

அவரிடம் ஒரு கெட்ட பழக்கம். நாலுவரி எழுதி விட்டு அது தான் சாதனை என்று நம்புகின்ற கற்றுக் குட்டிகள் அவரிடம் வரும்போது. ஆகா ஓகோ என்று பாராட்டுவார். நீங்கள் நிச்சயமாக எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளார் என்று உயர்த்திவிடுவார், அவர்கள் நம்பிக் கருப்புமையைக் கொண்டு வெள்ளை ஏடுகளைக் கெடுத்துவிடுவர்.

இந்த இளம் கொழுந்துகள் எழுதி அச்சிட்டு உள்ளதை இழந்து பின் எந்த எழுத்தும் தன்னிடத்தில் இல்லை என்பதை உணர்ந்து கொள்வார்கள். இதைப்போன்ற தூண்டுதல்களால் இன்று வாசகர்களைவிட எழுத்தாளர்கள் மிகுந்து விட்டார்கள் என்று கூறலாம்.

முன் பணம் வாங்காமல் நூல் அச்சிட்டுத் தந்து விடுவார். அது அவரிடம் இருந்த கவர்ச்சிகரமான பண்பு. ஆனால் நம்பிக்கை கை கொடுப்பது இல்லை. அவர்கள் கைவிரித்து விடுகிறார்கள். அதனால் ஏகப்பட்ட பொருளிழப்பு. இவர் எங்கே முன்னுக்கு வருவது.

அவர் தன் கையில் பதிவு அஞ்சல் பிரித்து வைத்துக் கொண்டு என்னை நோக்கிச் சிரித்துக் கொண்டே வந்தார்.

''என்ன சார் விசேஷம்''

''ரிஜிஸ்தர் நோட்டீஸ்'' என்றார்.

''வக்கீல்கள் கொடுப்பார்கள்; வாங்கின கடனைத் திருப்பிக் கொடுங்கள் என்று கேட்டு இருப்பார்கள்'' என்றேன்.

''என் மகளுக்கு வந்த அறிவிப்பு; அநாகரிகமான நோட்டீசு''

''என்ன சார் இது புதுமையாக இருக்கிறது''

''கணவர் மனைவியை அழைக்கிறார். அதற்கு வக்கீல் என்ன வக்காலத்து வேண்டி இருக்கிறது. குடும்ப விவகாரங்களில் இவர்கள் தலையிடுவது அநாகரிகம்' என்று விளக்கம் தந்தார்.

''வருகிறாயா? அல்லது சட்டப்படி நடவடிக்கை எடுக்கட்டுமா? என்று மிரட்டுகிறார்.

கலகலப்புக் ''கெட்டு விட்டது''

''அவள் இங்கு வந்து ஐந்து மாசம் தானே ஆயிற்று; அவசரம் எதற்கு?''

''காரணம் தெரியவில்லை; காரியங்கள் மட்டும் நடக்கின்றன'' என்கின்றார்.

''அவர்கள் வீட்டில் என்ன நடந்ததோ! கொடுமை தாங்க முடியாமல் இருந்திருக்கும்''.

''அப்படி நடந்ததாக எதுவும் சொல்லவில்லை''

அந்த நோட்டீசைப் பிரித்துப் பார்த்தேன். ''தாம்பத்திய உறவு தேவை; அதற்கு உடனே வந்து சேரவேண்டும்; இல்லாவிட்டால் கோர்ட்டு மூலம் வற்புறுத்த முடியும். அதற்காகும் செலவுகளையும் கட்டித்தீரவேண்டும்'' என்று நோட்டீசு தந்திருந்தார்கள்.

''ஏன் போக மறுக்கிறாள்?''

''முடியாது என்கிறாள்; இங்கேயே இருந்து வேலைக்குப்போகப் போவதாக உறுதியோடு இருக்கிறாள்.''

''குழந்தை''

''பாரம் இல்லை'' என்கிறாள்.

''மாமியார் வீட்டில் அவளைச் சாமியாட வைக்கிறார்களா?

''ஆரம்பத்தில் இருந்தது; இப்பொழுது இல்லை''

''பின் மறுப்பதற்குக் காரணம்?''

''அவள் கூற மறுக்கிறாள்.''

''என்னதான் காரணம்''

''அவர்கள் பணக்காரர்கள். நாம் அது ஒன்று அதிகம் படைக்காதவர்கள்'' என்கிறாள்.

''இதுகூடவா ஒரு காரணம்? அங்கே எல்லா வசதிகளும் இருக்கும்; எந்தக் குறையும் இருக்காது; சந்தோஷமாக இருக்கலாமே!''

''சந்தோஷத்துக்குக் குறைவில்லை; குளிர் சாதன அறைதான். கால் தரையில் படாது. தேவர்களாக இருக்கலாம். கார்கள்கூட ஏ.சி. தான்; நாடகங்கள் ஓ. சி. தான் அவர் மாமியார் அடிக்கடி செல்வது காசிதான்; பூப்போல வைத்திருக்கிறார்கள். புருஷன் அவளைத் தெய்வமாக மதித்து வழிபடுகிறான். இவள் இல்லாமல் ஒரு இரவுகூட அவனால் இருக்க முடியாது. 'பானு' 'பானு' என்று வீட்டில் எதிர் ஒலி இசைத்துக் கொண்டே இருக்கும்.

மாமனார் வட்டிக்குப் பணம்கொடுத்து வகையாகப் பல லட்சங்களைச் சேர்ந்தவர். ஒரே மகன்''.

"அவனுக்கு உத்தியோகம் இல்லையா?"

"அந்த யோகம் அவனுக்கு இல்லை; பெண்கள் எல்லாம் உத்தியோகத்துக்குப் போகத் தொடங்கிய பிறகு அதற்கு மதிப்பு இல்லை என்கிறான், உத்தியோகம் பெண்களில் லட்சணம் ஆகிவிட்டது. இனி, தான் போவது இல்லை என்று தத்துவம் பேசுகிறான்''

''படித்திருக்கிறானா?''

பி. காம் படித்தான், தேறவில்லை. அதற்குப் பிறகு பட்டம் வாங்காமலே 'ரொம்பவும் காம்' ஆகிவிட்டான்

''இலக்கிய ரசனை?''

''அந்த வாசனையே பிடிக்காது''

''கோயில் சினிமா''

''ஓய்வாக இருக்கும்போது அழைத்துப்போவான்''

''திருக்குறள்?''

''அதை அடிக்கடி ஒப்புவிப்பான்''

''பண்பாடு மிக்கவன் என்று தெரிகிறது''

''எனினும் அவள் மனம் புண்படும்படி எப்படி நடந்து கொண்டான் அது தென்படவில்லை'' என்றார்.

''குட்டி போட்ட பூனை மாதிரி பானுவைச் சுற்றிச் சுற்றி வருவான்''.

''பின் ஏன் இவளுக்குப் பிடிக்கவில்லை.

'அப்பாவைக் கேட்காமல் அவர் ஒரு காசுகூட செலவு செய்ய முடியாது என்பது''.

என்னதான் இருந்தாலும் சுய சம்பாதனை இல்லாத மனிதன் சுயமரியாதையோடு வாழ முடியாது என்பது அவள் சுய சிந்தனையாக இருக்கிறது.

அதற்குப் பிறகு இரண்டு வீட்டாருக்கும் யுத்தம் நடந்து கொண்டு இருந்தது. வக்கீல்களைக் கொண்டு நோட்டீசுகளைப் பறக்க விட்டார்கள். உறவு இழுபறி என்று இழுத்துக்கொண்டு இருந்தது. வக்கீல்களும் கைவிட்டு விட்டார்கள். எந்த நேரத்திலும் உறவு அறுந்து போகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

-2-

ஒட்ட வைக்க முடியுமா? என்று என்னைத் தட்டி எழுப்பினார். பேசிப்பார்த்தால் என்ன? நேசம் வளர வாய்ப்பு இருக்கும் என்ற நம்பிக்கைஎனக்குள் ஏற்பட்டது. எதிர்பாராத விதமாக தி.நகர் இராமனுசகூடம் தெருவுக்கு விசயம் செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. அங்கே விசுவ இந்து பரிக்ஷத்து இருக்கிறது என்று கேள்வி; அது தடை செய்யப்பட்டு "சீல்" வைத்துவிட்டார்கள் என்று சொல் கிறார்கள்.

ரங்கநாதன் தெருவுக்குப் போக வேண்டி இருந்தது. அங்கு என் உறவினர் மருமகள் தூக்குப்போட்டுக்கொண்டு துயரச் சூழலை உருவாக்கி விட்டாள். அந்தப் பையன் எனக்கு வேண்டியவன்; நான் பார்த்துப் பேசி முடிவு செய்த இடம்தான். போலீசு வந்தார்கள். அந்த வீட்டில் அவள் உயிர்த் துணையாக இருந்த அவள் கணவனைக் காவல் துணையோடு கைது செய்து அவளைப் பிரித்து வைத்தார்கள். அவளுக்காக அவன் கண்ணீர் விடுவதைத் தடுத்து வைத்தனர்.

அவன் துடித்தான்; அவளைப் பற்றிய உரைகளைப் படித்தான், தன் அன்பு வாழ்க்கையைத் துன்பக் கண்ணீர் கொண்டு எழுதிக் காட்டினான். தான் குற்றவாளி அல்ல என்று சொல்லிப் பார்த்தான்; சட்டத்தின் செவியில் அவன் விட்ட அழுகை ஒலி புக மறுத்துவிட்டது.

'வரதட்சணைக் கொடுமை' என்ற சட்டத்தின் கீழ் அவனைக் கைது செய்து கொண்டார்களாம். விஷயம் வேறு; அவன் வாய்விட்டுக்கூற மறுத்தான். செத்தவ

ளுக்குக் களங்கம் உண்டாக்கக் கூடாது என்பதால் உண்மையை மறைத்தான். அவனைவிடச் சுருசுருப்பாக இருந்த அவன் நண்பன் ஒருவன் செய்த துரோகம்தான் அவன் வாழ்வைப் பறித்துக் கொண்டது. அவர்கள் கள்ள உறவு கணவனுக்குத் தெரிந்துவிட்டது என்பதால் தான் விசாரணைக்கு ஆளாக விரும்பாமல் அவனைத் தனிமையில் ஆழ்த்திவிட்டு அவள் ஒரு முடிவை எடுத்துக்கொண்டாள். அது பின்னால் தெரிந்தது.

அவன் அப்படிப்பட்டவன் அல்ல;வரதட்சணை வாங்குவதில்லை என்று உறுதி எடுத்துக்கொண்டு மணக்களத்தில் அவன் கால் வைத்தவன். அவன் தன்மானம் மிக்கவன். பிறர் உழைப்பை நம்பி வாழ நினைக்காதவன்; கெட்ட செயலைச் செய்துவிட்டு மொட்டை பெட்டிஷன் போட்ட அவன் நண்பர் செய்த மட்டமான திட்டம் இது என்பது பின்னர்த் தெரிந்தது.

இறந்தவளுக்கும் அவளை அடைந்தவனுக்கும் படுக்கை அறை உறவு அவ்வப்பொழுது இருந்து வந்தது என்பது விசாரித்ததில் தெரிந்து கொண்டேன். விட்டு இருந்தால் அவளையும் வெட்டிவிட்டு இவன் செத்தவருள் ஒருவனாக வைக்கப்பட்டு இருப்பான். போலீசு இந்த வகையில் அவனைத் தடுத்து நிறுத்தியது. வேகம் குறைந்தது.சோகம் மறைந்தது. கவிழ்ந்துபோன பாலை மறுபடியும் குவளையில் எடுக்க இயலாது. கொட்டியது கொட்டியதுதான்.

எல்லாம் யோசித்துப் பார்க்கையில் தான் சிறைப்பட்டதே மேல் என்ற முடிவுக்கு வந்தான். சேலை கட்டிய மாது அவள் என்பது நினைவுக்கு வந்தது. வரதட்சணைக் கொடுமைத் தடுப்புச் சட்டம் எவ்வளவு கொடுமையானது

என்பதை அந்த நிகழ்ச்சி எனக்கு விளக்கியது. இந்த நாட்டில் ஒவ்வொரு சீர்திருத்தச் சட்டமும் சீர்கேடுகளை உண்டாக்குவதிலிருந்து தப்புவது இல்லை என்பதை அறிகிறேன்.

கலியாணம் ஆகி ஏழு வருஷங்களுக்கு முன்னால் எதிர் பாராது தற்கொலை நிகழ்ந்துவிட்டால் அதற்குக்காரணம் கணவன்தான் என்று கூற வழி வகுத்துவிட்டது. போலீசு கைது செய்து விசாரணை நடத்த அந்தச் சட்டம் அதி காரம் தருகிறது. அது காரணம் அல்ல என்று பிள்ளை வீட்டார் நிரூபிக்க வேண்டிய பொறுப்புக்கு ஆளாகியிருக் கிறார்கள். செத்தவனுக்கு அழுவதா காக்கிச் சட்டைக்கு ஈடு கொடுப்பதா என் செய்வது?

மாப்பிள்ளை அவளை எப்படிக் காட்டிக் கொடுக்க முடியும். வெளியே சொன்னால் விளம்பரக் கேடு; வேறு வழி இல்லை. வயிற்று வலி துன்பம் தாள மாட்டாமல் மாள முற்பட்டாள் என்று கூறி அதற்கு வேண்டிய டாக்டர் எழுத்துச் சான்று தயாரித்துத் தந்தான்.

நல்ல காலம் அவளுக்கு வயிற்றுவலி இருந்தது. அதற் காக டாக்டரிடம் மருந்து சாப்பிட்டதற்கு ஆதாரமும் கிடைத்தது அதற்காகச் செலவு செய்த காசு இப்பொழுது இவனைக் காப்பாற்றிவிட்டது. வயிற்றுவலியை வாழ்த்தி வாழ்க நீ எம்மான்! இந்த வையத்து வாழ்வில் விடுதலை பெற உதவும் வலியே நீ வாழ்க என்றான்.

என் நண்பனை மீட்க முடிந்தது. அந்த அதிர்ச்சியி லிருந்து விடுபட்டு வீடு திரும்பியபோது இராமானுச கூடம் என்று போடப்பட்டிருந்த தெருப் பெயர்ப் பலகை

கண்ணில் பட்டது. மேதை இராமானுசம் கணக்குப் புலி: அவர் பெயரைத் தாங்கி இருந்தது. அதைவிட வைணவப் பெரியார் இராமானுசரின் பெயரால் அந்தத்தெரு வழங் கப்பட்டது என்பது மிகவும் பொருத்தமாகப்பட்டது. அந்தத் தெருவில் ஒரு பஜனை மடம்இருந்தது;அதற்கு இரா மானுச கூடம் என்று பெயர் வழங்கியது. எனவே இவர் மேதை அல்ல என்பது புரிந்தது.

அங்கு தான் உதயபானுவின் மாமனார் வீடு இருக் கிறது என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அவர்களைப் பார்த்துப் பேசலாம் என்று சிறிய ஆவல் என்னைக் கூவி அழைத்தது. ''வீடா அது?'' காவல் மிக்க சிறை போல இருந்தது. வெளியே கூர்க்கா கத்தியை மறைத்துவைத்து நந்தி போல் நின்றான்.

''உள்ளே என்னப்பா'' என்றேன்.

''பட்டாக்கத்தி'' என்றான்.

''எதுக்கு?''

''யாராவது வந்தால் வெட்டித் தள்ள'' என்றான்.

''உதயபானுவின் உறவினர்; ஊரிலிருந்து உதயமாகி இருக்கிறார் என்று உரைக்க இயலுமா?'' என்று எனக்கே உரிய மோனைத் தமிழில் மொழிந்து வைத்தேன்.

''அச்சா'' என்று சொல்லி அந்த 'பச்சா' உள்ளே சென்றான்.

''நீங்கள் உள்ளே போகலாம்'' என்றான். அவன் கையில் ஒரு அந்நிய நாட்டு நாய் இருந்தது.

''நாய் எதற்கு?''

''உம்மைக் கடிக்காது''

அது குழைந்து கொண்டே வந்தது.

''மோப்பம் பிடிக்க'' என்றான்.

''மோப்பக் குழையும் விருந்து'' என்ற குறள் நினைவுக்கு வந்தது.

''நாய் கடிக்காதா?''

''பாலபாடம் படித்ததில்லையா''

''நாய் குரைக்கும்'' என்றான்.

''அதற்காகவா நாய் வளர்க்கிறார்கள்''

''அதுபோதும்; அதன்குரல்கேட்டே ஓடிவிடுவார்கள்''

''பின் ஏன் அதை இழுத்து வந்தாய்?''

''அது எசமானுக்குச் செய்யும் துரோகம். சோறு போடுவது அவர்கள்; சுற்றி வருவது என்னோடு; அதன் சுபாவம் இது; நன்றி கெட்ட நாய்'' என்றான்.

''நாய் பயம் என்னைவிட்டு நீங்கியது. அந்த வீட்டுக்கு உரியவர் தேவைக்குமேல் அதிகாரம் செய்பவர் அல்ல என்பதை அறிந்து கொண்டேன்.

"இங்கே ஏன் வந்து மாட்டிக்கொண்டேன் என்று அந்த கூர்க்கா நினைப்பவன் போல் காணப்பட்டான்.

"உள்ளே போகலாமா?" என்றேன்.

"அதிகம் பேசக் கூடாது" என்றான்.

"பேசத்தானே போகிறேன்" என்றேன் .

"அவர்களைப் பேச விடு; நீ எதுவும் பேசாதே; அது தான் நல்லது" என்றான்.

அவன் அறிவாளி; அனுபவசாலி எனவும் பட்டது; திறமைசாலி எனவும் தெரிந்தது.

அவன் சொல்லாமல் இருந்தால் கொட்டிக் குமுறி இருப்பேன். அதனால் எந்தப் பயனும் விளைந்திருக்க முடியாது. அறிவிக்க நான் செல்லக்கூடாது; அறிந்துவரப் போவதுதான் அறிவுடைமை என்பதை அவன் அறிவித் தான்.

அவனுக்கு நான் 'டிப்ஸ்' எதுவும் தரவில்லை என்றா லும் அவன் எனக்குத் தந்த 'டிப்ஸ்' அது. அவனுக்குப்பானு மேல் இருந்த மரியாதை அவன் எனக்கு உதவி செய்தற் குக்காரணம்.

-3-

உள்ளே போனால் அவர்கள் வரவேற்பார்களா என்ற பயம் இருந்தது; நான் என்ன வி.ஐ.பியா அவர்கள் வர வேற்புக்குக் காத்து இருக்க. என் நண்பர் அச்சகர்

ஆறுமுகம் அவருக்கு ஏதாவது நன்மை செய்ய இயலுமா? பானு இவ்வளவு பெரிய வீட்டிலா வாழ்க்கைப்பட்டாள்; கொடுத்து வைத்தவள். அதிர்ஷ்டம் என்பது எப்படி இருக்கும் என்று அளவிட அந்த வீட்டுத் தோற்றம் வாய்ப்பு அளித்தது. இந்த வீட்டில் அவள் ஒருத்திக்குத் தானா இடம் கிடையாது. காற்றோட்டம் மிக்க பங்களா, காலாட்டிக் கொண்டு சாப்பிடலாம்; மேலோட்டமாகப் பார்த்தால் வாழ்க்கை இங்கு தேரோட்டமாகத்தான் தென்பட்டது. இதன் கீழ் உள்ள நீரோட்டம் யாது? அதைக் கண்டு தெரியவே நான் இங்கு வந்திருக்கிறேன்.

''போ உள்ளே'' என்று என் துணிவு தள்ளியது.

முரட்டுத்தமான மனிதர் அவர் என்றால் குருட்டுத் தனமான பதில் ஏதாவது சொல்லித் திரும்பிவிடலாம் என்று துணிந்தேன்.

பிடிக்காதவர் போனில் பேசினால் 'ராங் நெம்பர்' என்று சொல்லி வைத்து விடுவேன். அவர்களும் நம்பி விடுவார்கள். அதே போல 'முகவரி தவறு' என்று சொல் லித் திரும்பிவிட முடியும் என்ற துணிவு எனக்கு இருந்தது.

இருப்புக் கொள்ளாமல் இருட்டில் சொத்துக் காவலர் அந்தப் பெரியவர் அறுபதைத் தாண்ட இன்னும் சிலமாதங் களை அவர் எதிர்பார்த்தவராகக் காணப்பட்டார் 'சிவப்பழம்' என்று அவர் கட்டியிருந்த கொட்டை (கழுத்தில்) காட்டியது. தொலைக்காட்சியில் வரும் வயலின் வித்துவான் ஒருவர் நெற்றியில் பட்டையும் பழைய காலணா அளவுக்குச் சிவந்த பொட்டுமாக அடிக் கடி வந்து கோமாளித்தனமாகச் சிரித்துக் காட்சி அளிப் பார். அதே போன்ற முகத் தோற்றம்; அமைதிகாட்

டாத பேச்சு; எரிச்சல் ஊட்டும் தமிழ், 'வைரக்கடுக்கன்' காதுக்கு ஒளி தந்தது. 'காயமே இது பொய்யடா காசு தான் மெய்யடா' என்ற தத்துவம் அவர் காட்சியில் தெரியவந்தது.

பணத்தைத்தவிர வேறு எதுவும் பேசியறியாத பாட்டு; பக்தி என்பது குங்குமம், விபூதி என்ற அளவோடு நிறுத்திக் கொண்டவர்; அதற்கு மேல் சாத்திரம் பற்றிய சரித்திரம் எதும் அறியாதவர்; நான் ஏதோ பட விநியோகத்தர் என்று நினைத்து அவர் பல்லிளித்தார். என்று தெரிந்தது. வட்டிக்குக் கடன் வாங்க அவர் வாசலில் காத்து நிற்பவர்களில் ஒருவன் என்று என்னைக் கவனித்துக் கொண்டார்.

''எப்படி மார்க்கட்டு'' என்று ஆரம்பித்தார்.

''மூர் மார்க்கட்டு, அதை இடித்துத் தள்ளி விட்டார்கள். இடம் பெறுவதற்கு யார் யாரோ முயற்சி செய்கிறார்கள்'' என்றேன்.

''அது அல்ல'' என்றார்.

''பங்கு மார்க்கட்டா. அதுதான் தில்லு முல்லாகப் போய்விட்டதே'' என்று ஏதோ தெரிந்தவன்போல் உளறிக் கொட்டினேன்.

''பட மார்க்கட்டு'' என்று திருத்தினார். ஓ! இது திரை உலகச் சிந்தனை என்பதை அறிந்தேன்.

எப்பொழுதோ 'வெள்ளிமணி' என்று வரும் வார இதழைப் புரட்டுவேன்; அதில் நட்சத்திரங்களின் படம்

பார்த்திருக்கிறேன். அவர்களைப் பற்றி விமரிசனம் கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கிறேன்.

''இப்பொழுது மார்க்கட் குஷ்புவுக்குத்தான்'' என்று தைரியமாகப் பேசினேன். ''அவள் ஒருத்தியைப் போட்டால் எல்லாம் சரிக்கட்டி விடுவாள்'' என்றேன். அவருக்கு குஷி கிளம்பியது.

''நீங்கள் படம் எடுக்கப் போகிறீர்களா? டிஸ்ட்ரிபியூஷன் வாங்கப் போகிறீரா?'' என்று கேட்டார். அவரைப் புரிந்து கொண்டேன். அவரைவிட்டுவிட விரும்பவில்லை.

''கூட்டுச் சேர்த்துக்கொண்டிருக்கிறேன். அது முடிந்ததும் முடிவு செய்து விடுவேன்'' என்றேன்.

''நல்லது, இது எல்லாம் தனியாக எதுவும் செய்ய முடியாது; கூட்டு அவசியம்'' என்றார்.

''பொருள் முடக்கம் ஏதாவது?'' என்றார்; அது அவர் கையுள் அடக்கம் என்பது தெரிந்து கொண்டேன்.

''எல்லாம் உங்கள் தயவு இருந்தால் நடக்கும்'' என்றேன்.

''நம்மால் என்ன ஆகும்; எல்லாம் அவன் செயல்'' என்றார். ஆண்டவனை இழுத்துப் போட்டார்.

''நம்ம பக்கத்து வீடு உங்கள் சம்பந்தி ஆறுமுகம் வீடு'' என்றேன்.

அவர் முகம் சுண்டைக்காய் ஆகிவிட்டது. தவறான கடிதம் என்று என்னைக் கசந்து பார்த்தார்; அதற்குப் பிறகு அவர் பேச்சு வெண்டைக்காய் ஆகியது.

''அவர் அனுப்பவில்லை'' என்றேன்.

அவர் முகம் பரங்கிக் காயாகச் சிறிது ஒளி ஏற்பட்டது.

''இந்தப்பக்கம் வந்தேன். இராமானுச கூடம் என்று பேர் பார்த்தேன்; நம்ம நண்பர் ஆறுமுகத்தின் சம்பந்தி வீடு இங்கு இருக்கிறது என்று அவர் சொல்லி இருந்தார், இவ்வளவு தூரம் வந்து விட்டு வீடு திரும்பினால் அவர் நம்ம சம்பந்தி வீட்டுக்குப் போனீரா என்று கேட்பார். கேட்டால் என்ன சொல்வது அதனால்தான் வந்தேன்'' என்றேன்.

அவருக்குக் கூர்க்கா மீது கோபம்; அதுக்குத்தான் வடநாட்டுக்காரனை வைத்திருக்கக் கூடாது என்று முடிவுக்கு வந்தார்

'அவர் பேச்சை எடுக்காதீர்' என்று சட்டப்பேரவைத் தலைவரின் ஆணை போல அவர் தடைவிதித்தார்.

எனக்குக் கோபம் வந்தது. ''மடத்தனமாக இருக்கிறதே'' என்று கேட்டுவிடலாம் போல இருந்தது.

அசம்பாவிதமாக ஏதும் நடக்கக் கூடாதே என்பதால் அடக்கம் மேற்கொண்டேன்.

''இது உங்களுக்கு மிருகத்தனமாகப் படவில்லையா?'' என்று கேட்டேன்.

அவர் கொஞ்சம் வியாபாரம் பேச வந்தவர் போல் நேரிடையான பேச்சுக்கு வந்தார்.

''ஒரு பெண்ணை வற்புறுத்தி வரவழைக்க அதற்குக் கோர்ட்டின் துணையை நாடுவது சட்டத்தின் பேரில் ஆக்கிரமிப்பு'' என்றேன்.

''கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல முடியுமா'' என்று கேட்டார்.

''தாம்பத்திய உறவு வேண்டும் என்று நோட்டீசு தந்தீர்களே அதைத்தான் கூறுகிறேன்'' என்றேன்.

''நானா கேட்டேன்'' என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.கேட்டது அவர் மகன் என்பதைப் புரிய வைத்தார்.

''குதிரையை நீர் தண்ணீர் இருக்கும் இடத்துக்கு இழுத்துச் செல்லாம்; ஆனால் அதைக் குடிக்க வைக்க முடியாது'' என்றேன்.

''அங்கே நிறுத்தி வைத்தால் தாகம் எடுத்தால்தானே குடிக்காமல் வேறு என்ன செய்ய முடியும்'' என்றார்.

''அதுவே விரும்பினால் நீர் நிலைக்குச் செல்வது தான் நல்லது. வற்புறுத்தக் கூடாது' என்று வாதாடினேன்.

''எதிரே ஒரு இந்தி பேசுகிற வசந்தி என்ற பெண்'' என்று சொல்லியிருக்கலாம்; என் நாவுக்குக் கொஞ்சம் திறுக்கு;'மங்கை' என்று சொன்னால்தான் அதுக்குப் பிடிக்

றது. அவள் தர்வணி போட்டு மறைத்திருந்தாள். வரும் போதே ஒரு திருவிழா வீடு தேடி வருவதுபோல இருந்தது. அவள் மயிர்முடி சிவந்திருந்தது. கருப்பு நிறம் சிவந்து காணப்பட்டது. கையில் நிறத் துகள் வைத்திருந்தாள். முன் பின் பாராமல் அவள் என் சட்டையைச் சிவப்பாக்கினாள்.

''என்ன?'' என்று கேட்டேன்.

''ஹோலி'' என்றாள்.

''இங்கு வந்தது ஒரு ஜோலி'' என்றேன்.

''இது ஒரு கேலி'' என்றாள்.

''வாட் இஸ் யுவர் ஏஜ்? என்றேன்.

''வயது பதினாறு'' என்றாள்.

சின்னக் குழந்தையாக இருந்தால் நேம் கேட்கலாம்.

''ஏதாவது கேட்பது ஒரு சடங்கு என்று வயதைக் கேட்டு வைத்தேன்; 'மயிலு' நினைவுச்கு வந்தாள்.

''கூந்தல் கருப்பு; அது இப்பொழுது சிவப்பு'' என்று என் வாய் முணுமுணுத்தது.

''இந்தப் பெண் என் மருமகள் இருக்கும் போது அடிக்கடி வருவாள்; இருவரும் 'தோஸ்துகள்' என்றார் பெரியவர்.

அந்தப் பெண்ணின் இந்தியின் தாக்கம் அவர் சொல் ஆக்கத்தில் இருந்தது.

''சார் நீங்க காசுமீருக்குப் போய் இருக்கிறீர்களா?'' என்றேன்.

''காசிக்குப் போய் இருக்கிறேன். விசுவநாதர் தரிசனம் பார்த்திருக்கிறேன்''.

''காஷ்மீருக்கு ஒரு முறை போக வேண்டும். ரோஜாப் பூ கெட்டது'' என்றேன்.

''அது கெட்டுப் போனால் நமக்கு என்ன! சரோஜாவை வைத்து நிறையப் படம் எடுத்திருக்கிறோமே'' என்றார்.

''இல்லை; அங்கே இந்தச் சின்னப் பெண்களின் கன்னம் சிவப்புப் பற்றிச் சொன்னேன். அந்தக் குழந்தைகள் ரோஜாப்பூ போல் சிவந்து காணப்பட்டனர். ஒன்று இரண்டு பறித்துச் சென்று நம் பிள்ளைகளுக்கு ஏன் கட்டிக் கொள்ளக் கூடாது என்று நினைத்தது உண்டு'' என்றேன்.

''அவர்கள் சம்மதிப்பார்களா?''

''இல்லை; இப்படிச் சின்ன ஆசைகள் உண்டாகின்றன'' என்றேன்.

இதை ஏன் கவிஞர் சேர்க்கவில்லை என்று எனக்கே தோன்றியது.

பேச்சை மாற்றியது எங்கள் சூட்டைத் தணித்தது.

''தின்ன ஏதாவது வேண்டுமா?'' என்று கேட்டார்.

''எது குடுத்தாலும் சாப்பிடுவேன்'' என்றேன். ,கொடுத்தாலும்' என்ற என் தமிழ் அவரிடம் பேசும்

போது மாறி விட்டது. எனக்கு ஒரு கெட்ட பழக்கம். கேட்டால் மறுக்காமல் கொண்டுவரச் சொல்லிவிடுவேன்.

''குலோப்ஜான்'' என்று ஒரு கிண்ணத்தில் இரண்டு இனிப்பு மிதவைகளைக் கொண்டு வந்து வைத்தார்கள்.

''இந்த மிதவை யாதோ'' என்றேன்.

என் சமையற்காரி ஒரு விதவை; அவள் செய்து தந்தது என்றார்''.

''என் தமிழ்ப் பற்று அவர் பதிலில் எதிர் ஒலித்தது என்று கண்டு கொண்டேன்.

''மணக்கிறது'' என்றேன்.

''யார் செய்தாலும் அது மணக்கத்தான் செய்யும்'' என்றார்.

''இதுக்கு யார் சார் வெள்ளைக்காரன் பெயர் வைத்தார்கள்'' என்று கேட்டேன்.

'குலாபி ஜாம்' என்பது குலோப் ஜான் ஆகிவிட்டது. என்று விளக்கம் தந்தார்.

''ஏன் சார், எப்படி சார் அவங்க வீட்டிலே பெண் எடுத்தீர்கள்'' என்று அவருக்குச் சாதகமாகக் கேட்டேன் அவர் கட்சியில் இருந்து பேச்சைத் தொடுத்தேன்.

''முட்டாள்தனம்; ஏமாந்துவிட்டேன்'' என்றார்.

''அவங்க ஒன்றும் கொடுத்திருக்க மாட்டாங்களே'' என்று தூபம் போட்டேன்.

''பிச்சைக்காரப் பையல், அவன் கிட்டே என்ன இருக்குது கொடுக்க'' என்றார்.

''அதுதான் பார்த்தேன் எதைப்பார்த்துச் செய்துகிட்டீர்கள்'' என்றேன்.

''அது ஒரு கதை'' என்றார்.

''அவன் அவன் கதை இல்லே''ன்னு கஷ்டப்படறான்; இவர் ஒரு கதையைப் பதிவு செய்து வைத்திருக்கிறார் என்பது கேட்டு வியப்பு அடைந்தேன்.

''சொல்ல முடியுமா?'' என்றேன்.

''நீங்கள் பட இயக்குநர் இல்லை; அதனால் தைரியமாகச் சொல்கிறேன். அவர்கள் உடனே அதைக் காசு ஆக்கி விடுவார்கள்'' என்றார்.

''நான் இந்தக் காதிலே வாங்கி அந்தக் காதிலே விட்டு விடுவேன் அது படிக்கிற காலத்திலே ஏற்பட்ட பழக்கம்'' என்றேன்.

''வெட்கக்கேடு'' என்றார். கதையின் ஆர்வத்தைத் தூண்டினார். ஒரு விளம்பரத்தை எடுத்துப் போட்டார். 'மூன்று வருஷத்துக்கு முற்பட்டது. படியுங்கள்' என்றார்.

''தாம்பரம் அடுத்து பல்லாவரத்துக்கு அருகில் காலி மனை; பத்து ஏக்கர் அதற்கு முன்பணம் போட்டு

பிளாட்டுப்போட ஏஜெண்டு தேவை'' என்று காட்டினார்.

''நல்ல விலை போகுமே'' என்றேன்.

''அதுதான் சார் ஏமாந்துவிட்டேன். இந்த விளம்பரம் தான் உங்க ஆறுமுகம் வீட்டுக்கு என்னை இழுத்துச் சென்றது. அங்கே 'கிளியோபட்ரா' இருந்ததை என் பையன் பார்த்துவிட்டான். அதுமுதல் அவனுக்குக் கலியாணம் பண்ணிக்க ஒரு புது ஆசை புறப்பட்டு விட்டது. அவன் அம்மாவைக் கிள்ளி விட்டான். அவள் துள்ளி எழுந்தாள்; அந்தப் புள்ளிமான் தான் வேண்டும் என்றான்''.

''பணம் இன்னைக்கு வரும், நாளைக்குப் போகும். அவனுக்கு விருப்பமான பெண் அவளைக் கட்டி வையுங்கள்'' என்று இரண்டு காலிலும் நின்றாள் பெற்றவள்.

அவனைத் தெரியாத்தனமாகக் கூட அழைத்துப்போய் இருந்தேன். அவன் நிலப்பட்டாவைப் பாருடா என்றால் அங்கே நீலப்பட்டாடையைப் பார்த்து அதுதான் வேண்டும் என்றான்.

''கேட்டுப்பார்'' என்று என்னை முடுக்கி விட்டான்.

''உங்க மகள்தானே'' என்றேன்.
''இப்பொழுது அபிப்பிராயம் இல்லை'' என்றார்.

''வயசு பெண் வச்சுகிட்டு இருக்கீங்க வாய்தா போட வேண்டாம்'' என்றேன்,

''இப்பொழுது முடியாது'' என்றார்.

''சல்லிக் காசு வேண்டாம். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றேன். மல்லிகைப்பூ மட்டும் அவர்கள் செலவில் வாங்கிக் கொடுத்தார்கள்.

''கட்டிய புடவையோடு வரச் சொன்னீர்களா?''

மாற்றுப் புடவையோடு தான் வந்தாள்; அவ்வளவு முட்டாள்கள் அல்ல நாங்கள்?''

''நீங்கள் ஏமாந்து விட்டீர்கள்?''

'இந்த பத்து ஏக்கரா அவர் வைத்து விளையாடினார். நான் அவருக்குச் சொந்தம் என்று நினைத்து விட்டேன்'.

''அது என் நிலம்; அவரை விற்கச்சொல்லி இருந்தேன்'' என்றேன்.

''அது தெரியாமல் அவசரப்பட்டு விட்டேன். மற்றொரு விளம்பரம் தந்திருந்தார்.

''லாட்டரியில் பத்து லட்சம் வந்தது என்று''

''விளம்பரம் அல்ல; நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்தார். அவர்கள் அவர் தந்த டிஃபனுக்குத் துரோகம் செய்யாமல் படம் எல்லாம் போட்டு ஜமாய்த்து விட்டார்கள்''.

''அது எனக்குத் தெரியாதே?''

''மற்றொரு வதந்தி. கடத்தல்காரர்கள் அவர் வீட்டில் வைரக்கற்களை விட்டுச் சென்று விட்டார்கள் என்று''

''மொத்தத்தில் ஒரு கோடீசுவரர் என்று நம்பி விட்டீர்கள்'' என்றேன்.

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக் கூடாது; அவர் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டு அவருக்கு எதிர்ப்பாக எப்படிப் பேசமுடியும்; மேலும் ஆறுமுகம் ''நீ அவரிடம் போய்ப் பேசி விட்டுவா'' என்று அனுப்பவில்லை, விட்டுக் கொடுத்துத்தான் பிடிக்கவேண்டும் என்று தொட்டும் தொடாமல் அந்த விசயங்களைப் பேசினேன்.

ஆறுமுகம் எந்த உறுதியையும் தந்து கம்பிகளை அறுக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன், இவராக அவரைப் பற்றி உயர்வு நவிற்சியாகக் கற்பனைகளை வளர்த்திருந்தார், என்பதைத் தெரிந்து கொண்டேன்.

நீர் என்ன செய்கிறீர்? என்று கேட்டு இருக்க வேண்டும் என்றேன்.

''அதற்குப் பையன் இடம் தந்தால்தானே. அவனை உடன் அழைத்துச் சென்றது தவறு ஆகி விட்டது. பிடிவாத குணம் உடையவன்; சின்ன வயசிலே இருந்து இந்தப் பிடிவாதம் அவனை விடவில்லை. கடைக்குப் போனால் கண்டதை உடனே வாங்கித்தரச் சொல்லுவான்; மடையன் என்ன செய்வது அவனை வைத்துக் கொண்டுகாலம் தள்ள வேண்டி இருக்குது. என்று பழியைப் பையன் மீது போட்டார்.

''இந்தக் காலத்துப் பிள்ளைகளே அப்படித்தான்.. சினிமாப்படம் பார்க்கிறார்கள்; பெண் அழகாக இருக்க வேண்டுமென்று அடம் பிடிக்கிறார்கள்'' என்றேன்,

''அழகான பெண்களை வைத்துப் படம் எடுப்பது தவறாகப் போய் விடுகிறது'' என்று கூறினேன்.

''பெண் எங்களுக்குப் பிடித்துவிட்டது. பணக்காரப் பெண்ணாக இருந்தால் நாங்கள்தான் அவர்களுக்குப் பணி செய்ய வேண்டும். மருமகளிடம் பேசுவதாக இருந்தால்கூட நேரம் குறித்துவிட்டுத்தான் பேச வேண்டும். தன் கணவன் கூட ஒவ்வொரு சந்திப்பிலும் அவள் அனுமதி கேட்டுத்தான் பழக வேண்டும். காலம் அப்படியாகி விட்டது. அவளுக்கு 'மூட்' வருகிறவரை சில அடி தூரம் எட்டித்தான் இருக்க வேண்டும். அந்தத் தொல்லைகள் எங்களுக்கு இல்லை. நிம்மதியான வாழ்க்கையைத்தான் தந்தாள்.

ஒன்றே ஒன்று அவனை அவள் தன் முந்தானையில் முடித்து வைத்திருப்பாள். அவனும் அவளைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு கீழே இறக்கவே மாட்டான். அவளைப் பற்றி ஒரு சொல் சொல்லக் கூடாது'' என்றார்.

''மாமியார் அவள் ஒரு சாமியாராகத்தான் இருந்தாள். மருமகள் கிழித்த கோட்டை அவள் தாண்ட மாட்டாள். அவள்தான் இந்த வீட்டு ராணி'' என்று மேலும் தொடர்ந்தார்.

''பின் ஏன் உங்களுக்குள் மன வருத்தம்?''

''பையன்தான் அவசரப்பட்டுவிட்டான். இதுக்குள்ளே என்னடா அவசரம் குழந்தை ஒரு வருஷம் ஆகட்டும் என்று சொன்னேன்; என்னால் அவளை விட்டுப்

பிரிந்து இருக்க முடியாது'' என்றான். ஒரே தொல்லை; எத்தனையோ கடிதங்கள் எழுதிப் பார்த்தோம்; பய னில்லை. வக்கீலைக் கேட்டோம்; சட்டப்படி அவள் வாழக் கடமைப்பட்டவள். அதற்குச் சட்டம் இருக்கிறது. என்று படித்துக் காட்டினார். சரி பயப்படுவார்களே என்று வழக்குப் பண்ணச் சொன்னேன். அது அவர்கள் பிடிவாதத்தை இறுக்கி விட்டது'' என்றார்.

அதற்கு மேல் அவரை வாட்ட விரும்பவில்லை. கேட்டு அறிய வேண்டியவற்றைத் தெரிந்து கொண்டேன். அவர் மகன் சண்முகம் அடுத்த விசாரணை.

அவனைக் கூண்டில் ஏற்றினேன். அதாவது விசார ணையில் நிறுத்தினேன்.

''உங்கள் பெயர்?''

''சண்முகம்''

''உங்கள் அப்பாவின் பெயர்?''

''சரவண பெருமாள்''

''உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?''

''ஒரு பெண் இருக்கிறாள்''

''அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?''

''ஐந்து மாதம் தான்; பிரசவத்துக்குச் சென்றவள் இன்னும் வரவில்லை''.

''இங்கே உங்கள் மனைவிக்கு ஏதாவது கொடுமை நிகழ்ந்ததா?''

''என் சுய உணர்வோடு எந்தத் தவறும் செய்ததாகத் தெரியவில்லை. என் தந்தையார் மட்டும் அவள் அப்பா வந்தால் முகம் கொடுத்துப் பேசமாட்டார்; அவர் ஹோட்டலில் தங்குவது போல இருந்துவிட்டுத் தன் மகளிடம் மட்டும் பேசிவிட்டுப் போவார். அவர்கள் ஊரில் இருந்து அஞ்சல் உறைகள் வந்தால் அவை படிக்கப்படாமல் பதுக்கி வைக்கப்படும். அந்தக் கடிதங்களை என் மனைவிக்குக் காட்டமாட்டார். அந்த வீட்டுத் துன்பக் கேணியில் தீட்டும் சோகச் சித்திரங்கள் என்று முடக்கி வைப்பார். ஏழ்மை அந்த எழுத்துக்களில் எழிலகம் காட்டும்; மருமகள் முகம் வாடக்கூடாதே என்பதற்காக அவர் மறைத்து வைத்தார். இந்த இரண்டுதான் அவளுக்கு அதிர்ச்சி தந்தவை.

மற்றொன்று என்னைப் போய் ஏதாவது ஒரு உத்தியோகம் செய்யச் சொல்கிறாள். அவளை விட்டு ஒரு நாளும் என்னால் தனித்து இருக்க முடியாது.

எங்கப்பா சொத்துக்கள் ஏராளமாகச் சேர்த்து வைச்சிருக்கார். அவருக்குப் பின்னாலே நான்தான் வாரிசு, கொஞ்ச நாள் பொறுமையாக இருக்கக்கூடாதா இந்தக் கிழவர் இன்னும் எத்தனை நாளைக்கு இரும்புப் பெட்டிச் சாவியைக் கையில் வைத்திருக்கப்போகிறார்? அறுபதைத் தாண்டியாச்சு, இனிமேல் அடுக்கடுக்கா நோய் வராமல் இருக்கப் போவது இல்லை. 'குலோப் ஜான்' நிறைய சாப்பிடுகிறார், நிச்சயம் சர்க்கரை வியாதி வரத்தான் போகுது; பணம் கொடுக்கல் வாங்கல் அதிகம்; டென்சன் நாளுக்கு நாள் அதிகமாகி வருது. பி. பி. வரத்தான் போவுது. இப்படி ஒன்று ஒன்றாக வந்தால் டாக்டர் வீட்டுக்கு நடந்தால் அவர்கள் சுரண்டி விடுவார்கள். மெடிகல் செக்கப்' அதுக்கு அனுப்பினால் எத்தனை

ஓட்டைகள்' என்று எடுத்துச் காட்டிவிடும். பல்லைக் கடித்துக் கொண்டு இருந்திருக்கலாம். அவளுக்குப் பொறுமை இல்லை, இதெல்லாம் நான் எப்படிச் சொல்ல முடியும். அவளுக்குப் புத்தி இருக்கணும்.

ஆரம்பத்திலே சொத்து கொண்டு வரலேன்னு வருத் தப்பட்டது உண்டு. அப்புறம் என்ன செய்யறது. அவங்க குடும்பமே தக்க வருவாய் இல்லாமல் ததிங்கிணதோம் தாளம் போடுது.

எங்கப்பாதான் தவறாக நடந்துகிட்டாரு, அடிக்கடி வைரத்தைப் பற்றிப் பேச்சுக் கொடுப்பாரு. 'உங்களுக்கு எதற்கு இவ்வளவு வைரம்?" என்று கேட்பார்.

வைரம் உடைய நெஞ்சு அவளிடம் இருந்தது, வைரம் என்ற கல்லைப் பற்றி அவள் அறிந்தது இல்லை. இங்கே வந்து பிறகு 'காது' என்பது அதற்காகத் தான் படைக்கப் பட்டது என்று எங்கள் வட்டாரத்தில் அவளால் தெரிந்து கொள்ள முடிந்தது.

அவள் காதில் வெள்ளைக்கல் வைத்த கம்மல்தான் போட்டிருந்தாள். "டேய் உனக்குத் தெரியாது, அது வைரக்கல் தான்" என்று அவர் சாதிப்பார். என்னைப் பொறுத்தவரை அது இல்லாமல் இருந்தாலே அவள் அழகாக இருக்கிறாள் "பொல்லாத பேச்சு எதற்கு" என்று பொருமுவேன்.

"வாழ மறுத்தால் விவாகரத்து செய்து கொள்ள லாமே" என்றேன். அவனால் அதைத் தாங்கி கொள்ள முடியவில்லை, "கட்டிய மனைவியை விட்டுக் கொடுக்கச்

சொல்கிறீரா? அதைவிடப் பைத்தியக்காரத்தனம் இருக்காது'' என்றான்.

''விவாகரத்து என்று பெண்களுக்கு உரிமை வந்து விட்டது; சட்டம் அனுமதிக்கும்போது அவர்கள் அதைப் பயன்படுத்தினால் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை'' என்றேன்.

''அதுதான் சார் வேதனையாக இருக்கிறது, அவள் வக்கீல் விட்ட நோட்டீசு இது தான்; பெண்ணை மதிக்காத உம்மோடு வாழ முடியாது'' என்று தந்திருக்கிறாள்.

''பெண்ணை மதிக்கவில்லை'' என்று எப்படிச் சொல்கிறீர்கள்.

''அதுதான் தெரியவில்லை''

''அவளைப் பூப்போல வைத்திருந்தோம், அவள் காயாக மாறி விட்டாள்; அவள் குழந்தை பெற்றுறம் மாறி விட்டாள், அந்தக் குடும்பத்தின் வறுமை அவளை உரிமைக்குரல் எழுப்பச் செய்து இருக்கிறது. ஏழ்மை எங்களை எதிர்க்கத் தூண்டி விட்டது.

இந்த அஞ்சல் வழிக் கல்வி வந்து பெண்களுக்கு கர்வத்தை வளர்த்து விட்டது; வீட்டில் இருந்தே படித்து நாட்டில் தலை எடுத்து வாழ முடியும் என்று திட்டம் தருகின்றது, பட்டங்கள் பெற்றால் மட்டற்ற வாய்ப்புகள் உள்ளன என்று கட்டற்றுப் பேசுகிறார்கள். அவர்கள் கொடுக்கும் ஆக்கம்தான் அவர்களைத் தனித்து வாழ முடியும் என்ற ஊக்கத்தைத் தந்துள்ளது. எம்.ஏ. படித்து விட்டாள்; இப்பொழுது பி,எட் படிக்கிறாள் என்று

கேள்வி. எப்படியும் ஆசிரியர் தொழில் செய்ய முடியும் என்ற நம்பிக்கை உண்டாகிவிட்டது. பெற்ற தாயும் பிறந்த வீடும் அவளுக்கு உற்ற கணவன் வீட்டைவிடப் பெரிதாக ஆகிவிட்டது என்றுதான் நினைக்கிறேன். பிள்ளைகளைப் போலவே பெண்களும் பிறந்த வீட்டை வாழ வைக்க வேண்டும் என்று நினைக்கத் தொடங்கி விட்டனர்.

ஆண்கள் தாம் தன் பெற்றோர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்பு ஏற்று இருக்கின்றனர். இன்று பெண்களும் அந்த நிலைக்கு வந்து விட்டனர், பாரத நாட்டுப் பண்பு மாறிக் கொண்டு வருகிறது.

கணவனின் சுகதுக்கங்களைப் பங்கிட்டுச் கொள்வது பெண்ணின் கடமை என்று அவர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டது. ஆண் பிள்ளைகள் பெற்றோரைப் பாதுகாக்கும் கடமையை மறந்து விடுகின்றனர், பெண்கள் துணிந்து சுமைதாங்கிகளாக மாறுகின்றனர். அதன் விளைவு இது'' என்று வாதித்தான்.

எனக்கு ஆறுமுகத்தைத் தெரியும்; அவர் பெண்ணின் உதவியை உழைப்பை நாடுபவர் அல்ல; உங்களுக்கு வாரித் தரவில்லை என்று குறைபடலாம், ஆனால் அவர் தான் மகளின் உழைப்பில் சார வேண்டும் என்று நினைப்பவர் அல்ல; நேற்றுவரை அவர் என்னிடம் முறையிட்டார்.

''தவறுதல்கள் நடந்துவிட்டன, என் மகள் அவன் வீட்டைப் போய் சேரவேண்டும் அதுதான் என் நோக்கம்'' என்று அடித்துப் பேசினார், அதே சமயம் அவரும் சட்டத்தின் மூலம் நீங்கள் மிரட்டியது தவறு என்று கூறுகிறார்.

அவளுக்கு என்று ஒரு ஆன்மா இருக்கிறது; அவள் யாருடைய உடைமையும் அல்ல; தாய் வீட்டுக்கும் அவளை அர்ப்பணிக்க முடியாது; புகுந்த வீட்டிலும் அவள் அடிமையாகக் கருத முடியாது, அவள் தன்மானத்தைத்தொட்டு இருக்கிறீர்கள், அது என்ன? அதுதான் விளங்கவில்லை, என்று விளக்கினேன்.

''குழந்தைதான் எங்களைப் பிரித்துவிட்டது! அவள் பிரசவத்துக்குப் போனாள்; அங்கே அவள் மனம் மாறி விட்டது, தாய்க்குத் தன் குழந்தை மீது பாசம் ஏற்படுவது இயற்கைதான். என்றாலும் அதுவே அவள் லட்சியம் என்று எப்படிச் சொல்ல முடியும் என்ற வினாவினை எழுப்பினான்.

''அந்தக் குழந்தைக்கு ஏதாவது கோளாறு ஏற்பட்டு இருக்கும், அதை உங்களிடம் மறைத்து இருக்கலாம்? என்று ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தினேன். எப்படியாவது அவர்களை ஒன்று சேர்க்க வேண்டும் என்பது என் உந்துதலாக இருந்தது.

மாப்பிள்ளை சராசரி மனிதர்; பொதுவாகப் பணம் வார்த்துவிட்ட வார்ப்படம் என்று தெரிந்தது, பணம் இருக்கிறது என்றாலும் அவனுக்கு என்ற தனித்தன்மை இல்லை; அப்பாவை எதிர்த்து அவளோடு தனித் குடித்தனம் செய்யும் துணிவு இல்லை. அவன் உழைப்பில் அவள் வாழ நினைக்கிறாள், அது சாத்தியப்படுமா? அந்த வீட்டில் யாருமே உழைப்பாளிகளைக் காணமுடியவில்லை; பணம் தான் உழைப்பாளி; அதுதான் அங்கே ஆதிக்கம் செய்கிறது. இச்சூழ்நிலையில் அவனையும் பணம் ஒரு பொம்மையாக ஆட்டுகிறது. அது அவளுக்குப்

பிடிக்கவில்லை, என்பதை அறிய முடிந்தது. கலப்பட மில்லாத அன்பு காட்டப் புதுமலர் அவளுக்குக் கிடைத் திருக்கிறது; அந்த மகிழ்ச்சியில் அவள் பழமையைத் தள்ளு கிறாள் என்பதை முடிவு செய்ய முடிந்தது.

அவர்கள் மாமியாரைப் பார்த்துவிட்டுப் போவது என்று தீர்மானித்தேன்.

அவர்கள் சமையல் கட்டில் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது. நான் இருந்த இரண்டு மணி நேரத்தில் ''ஹால்'' பக்கம் அவர்கள் தலை காட்ட வில்லை.

சமையல் கட்டு அவர்களுக்கு ஒதுக்கிடம் தந்தது. அவளுக்கு அதுதான் சரணாலயமாக இருந்தது; ஈடுபாடு கிடைத்தது.

''என் மருமகள் எப்படி இருக்கிறாள்?''

''உங்களை விசாரித்தார்கள்'' என்றேன்.

அந்தப் பொய் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட் டது. நாகரிகம் கற்றுத் தந்த பாடம் அது.

''ஆமாம்; அவள் என்னை மிகவும் மதிக்கிறாள்; அவள் இந்த வீட்டில் அடியெடுத்து வைத்தபிறகுதான் களையே ஏற்பட்டது'' என்றார்.

''ஏழை வீட்டுப் பெண்; அந்த வகையில் அடக்கமாக இருந்திருப்பாள்'' என்றேன். அது அவர்களைக் குத்திக் கிளறியது போல் இருந்தது.

''அந்த மன இயல்பு அவளுக்குத் தோன்றாமல் நடந்து கொண்டோம்'' என்றாள்.

''பட்டு மெத்தையில் புரளும்போது பட்டுப்போன பழமையைப் பற்றி அவள் நினைக்கத் தேவை இல்லை'' என்று கூட்டினாள்.

''உங்கள் அந்தஸ்துக்கு அவர்கள் எப்படிப் பொருந்தும்; உங்கள் தாராள மனப்பான்மை யாருக்குமே வராது. அவள் அழகாக இருக்கிறாள்; இருக்கலாம் எந்தப் பணமும் சொத்தும் எதிர்பாராமல் அவளை மருமகளாக ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் அது உங்கள் தனித் தன்மைதான்'' என்றேன்.

''என் மகன் அவளையே கட்டிக் கொள்வேன் என்று உறுதியாக இருந்தான். அவன் சந்தோஷம் தான் என் சந்தோஷம்''

''உங்கள் நகைகளை யாருக்குத் தரப் போகிறீர்கள்?''

''அவளுக்கு ஒரு பெண் பிறந்திருக்கிறது, அவளுக்குத் தான்''

''உங்கள் பாசத்தை அவர்கள் புரிந்து கொள்ள வில்லையே''

''கசக்கி விட்டார்கள்; என்ன செய்வது; அவர்களை வசதியற்றவர்கள் என்று மறைமுகமாகத் தாக்கி விட்டனர்; அது அவளைப் பாதித்து இருக்கிறது'' என்றான்.

பொதுவாகப் பெண்கள் தாம் பெண்களுக்குப் பகை என்று மிகைபடுத்திப் பேசுவார்கள்; அது தவறு என்பதை

இல்லம்மையார் எனக்கு அறிவித்தார்கள், ஒரு சிலர் அப்படி நடந்து கொள்ளலாம்; மொத்தத்தில் பெண்களை இவ்வாறு கூறிப்புண்படுத்தக் கூடாது என்பதை அறிந்தேன்; "மாமியார் கொடுமை" என்றுதான் கேள்விபட்டிருக்கிறேன்; தவிர மாமனாரின் கொடுமை என்று கேள்வி பட்டது இல்லை.

இவர்கள் முற்றிலும் மாறுவட்டவர்களாக இருக்கிறார்கள்; ஒருவருக்குப் பணம் சேர்வதும் சேராததும் அவரவர் சூழ்நிலையை ஒட்டியது; பணம் படைத்தவர் கூடுதலான வசதிகளோடு வாழலாம், கட்டுப்பாடுகள் விதித்துக் கொண்டு மற்றவர்களை ஒதுக்கலாம். ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றவர்கள் அவர்கள். ஆனால் ஓடிக் கொண்டே இருக்க முடியாது.

"வசதியோடு வாழ்கிறவர் எப்பொழுதும் மற்றவர்களைவிட்டு ஒதுங்கி வாழ நினைக்கிறார்கள். வசதிகளைக் காப்பாற்றிக் கொள்வதில் கருத்துச்செலுத்துவர். அதனால் என் மருமகளைச் சில சமயம் வெறுப்பது உண்டு. அவளுக்குச் சோற்றுக்குத் துணிக்கு எதற்கும் இங்குக் குறை இல்லை. அவள் ஏதோ வீண் பிடிவாதம் பிடிக்கிறாள். நான் இருதலைக் கொள்ளி எறும்புபோல் எந்தப்பக்கமும் சார முடியாமல் ஓரம் கட்ட வேண்டியுள்ளது. இது என் நிலைமை" என்று விளக்கினார்கள்.

-4-

நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே ஒரு புது மனிதர் வந்தார்.

யாரோ பட முதலாளி கடன் வாங்க வந்தார் என்று நினைத்தேன்.

கையில் கோர்ட்டு 'டயரி' சிகப்பு நிறத்தில் இருந்தது, மற்று டையரிகளில் இருந்து இது மாறுபட்டு இருந்தது. அவர் அரில் வாய்தா தேதி குறித்துக் கொண்டு வந்தார்.

''சாரி நீங்கள் வந்து கூப்பிட்டதாகச் சொன்னார்கள்''. என்று தொடங்கினார். ''நானே வந்திருப்பேனே'' என்றார் சரவணன்.

''சில கேள்விகள் கேட்க வேண்டி இருந்தது. அதனால் தான் வந்தேன்.

ஏதோ உயில் எழுதுவதற்கு வந்திருக்கிறார் என்று நினைத்தேன்.

சிவில் லாயர் என்று அறிமுகப்படுத்தினார்கள்.

அதனால் அவரைக் கண்டு பயப்படத் தேவை இல்லை என்று முடிவு செய்தேன்.

வயது ஐம்பது இருக்கும்; விசாரித்ததில் ஐம்பத்தெட்டு என்று கூறினார்.

ரொம்பவும் சுறுசுறுப்பாக இருந்தார், இந்த வயதில் இவர் எப்படிச் சுறுசுறுப்பாக இருக்கிறார் என்று வியப் பாக இருந்தது.

''இன்னும் அரை மணி நேரம் முன்னால் வந்திருப் பேன், வரமுடியவில்லை'' என்றார். ''சமசார்த்தோடு

தகராது'' என்று நினைத்தேன். இதுதான் வழக்கமான நிகழ்ச்சி.

''பையன் ஒரே தொந்தரவு, டி.வி.யில் அவனுக்கு பிடித்த காட்சி வரவில்லை அதனால் ஒரே கூச்சல்'' என்றார்;

''பையன் கொஞ்சம் வளர்ச்சி குன்றியவன்'' என்றார்.

தேவையில்லாத செய்தி; அதை அவர் சொல்ல வேண்டியது இல்லை.

தூசுபட்ட சட்டையைத் துடைத்துக் கொள்வது போல் அந்த அறிமுகம் இருந்தது. வினாவில் வர முடியவில்லை என்பதைத் தன் குடும்பப் பின்னணி கூறி விளக்கினார் என்று தெரிந்தது.

''இந்துச் சட்டப்படி உங்கள் மருமகளை வந்து வாழ வைக்க முடியும்'' என்று சட்டப் பின்னணியில் இருந்து பேசினார்.

''இங்கே வந்து அவள் முரண்பாடு கொண்டால்?''

''அது உங்கள் கையில் இருக்கிறது; நீங்கள் நல்ல விதமாக நடத்த வேண்டும்'' என்றார்.

''நான் சில கேள்விகள் கேட்கிறேன். பதில் எனக்குத் தேவை'' என்றார். உங்கள் பையனை அவர்களுக்குப் பிடிக்கவில்லையா?''

''அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை''.

''மாமியார் கொடுமை?''

''அவளை என் மகள் போல் நடத்தினேன்; என்னையும் அவள் தாய்போல் நேசித்தாள்''.

''வரதட்சணை வற்புறுத்தல்?''

''அவர்கள் ஏதாவது தருவதாகச் சொல்லிச் ஏமாற்றி விட்டார்களா?''

''அப்படியும் இல்லை''.

''பின் உங்கள் மீது வருத்தம்?''

''அவள் அப்பா வரும்போது அவருக்குத் தக்க மரியாதை தரவில்லை என்பது இருக்கலாம். அவளுக்கு வரும் கடிதங்களை அவளிடம் கொடுப்பதில்லை''.

''காரணம்?''

''அதிலே அவர்கள் வீட்டுக் கஷ்டம் எல்லாம் எழுதி இருப்பார்கள்''.

''அப்படி என்ன கஷ்டம்?''

''இரண்டு தங்கைகள் இருக்கிறார்கள். ஒரு தம்பி பள்ளிக் கூடச் சம்பளம் கட்ட முடியாமல் கஷ்டப்படுவதாக எழுதுவார்கள். சின்ன பையனை படிப்பு நிறுத்தி விடலாமா என்று கேட்டு எழுதுவார்கள்.''

''அவள் கடிதங்களை அவளிடம் தருவதுதானே முறை''.

''அதைப்படித்து விட்டு அவள் கண்ணீர் விட்டுக் கொண்டு இருப்பாள், அதைத் தவிர்ப்பதற்காக''.

''அதனால் அவள் மனம் புண்பட்டு இருக்கலாம் அல்லவா''.

''அதை அவள் தெரிவித்து இருக்கலாமே''.

''எதுவரை படித்து இருக்கிறாள்''.

''எம். ஏ. படித்து இருக்கிறாள்''.

''அவர்களுக்கு வசதி?''

''அஞ்சல் வழிக் கல்விதான்''.

''நல்ல உழைப்பாளியாக இருக்கலாம்''.

''சதா ஏதாவது செய்வாள். வீட்டை எந்நாளும் சுத்தமாக வைப்பாள். சன்னல் எல்லாம் அழகாகத் திரைச்சீலை தைத்துப் போடுவாள்; செடிகள் வளர்ப்பதில் ரொம்பவும் ஆசை. இங்கே வீட்டில் எல்லாரும் அடங்கிய பிறகுதான் ஒடுங்கப் போவாள், அவள் இல்லாதது வெறிச்சென்று இருக்கிறது''.

''உங்கள் பிள்ளை ஏதாவது கொடுமை நடத்துவது உண்டா?''

''அவளைக் கேட்டால்தான் தெரியும்''.

"நீ ஏதாவது அவளை வற்புறுத்துவது உண்டா?"

"உண்டு"

"அதனால் அவள் பாதிப்பு அடைந்திருக்கலாம் அல்லவா?"

"அந்த விஷயத்தில் நான் மிருகத்தனமாக நடந்தது உண்டு".

"அவள் அதை எதிர்த்தது உண்டா?"

"இதெல்லாம் சொந்த விஷயம் எப்படிச் சொல்ல முடியும்".

"இல்லை வழக்கு மன்றத்தில் கேட்பார்களே".

"மனைவியிடம் எப்படி நடந்து கொண்டாலும் தவறு இல்லையே".

"விருப்பம் இல்லாமல் இருக்கும்போது நிர்ப்பந்தப் படுத்துவதும் சட்டப்படி குற்றம்தான்."

"நம் நாட்டில் அப்படி இதுவரை எந்த வழக்கும் ஏற்பட்டதில்லை".

"கணவனையே 'ரேப்'பில் இழுத்து வைத்துச் சிறைக்குத் தள்ள முடியும்".

"இது ரொம்ப ஓவர்".

"மேல் நாட்டில் இப்படி எல்லாம் கூட விவாகரத்துக்கள் கோருதல் உண்டு."

நான் இடையில் குறுக்கே ஒன்றும் பேசவில்லை என்னை வைத்துப் பேசுவது அவர்களுக்குச் சிக்கலாக இருந்தது.

''விருப்பம் இல்லாதவளை வாழ வேண்டும் என்று வற்புறுத்துவது முரட்டுத்தனம் அல்லவா'' என்று மட்டும் கேட்டேன்.

''முரட்டுத்தனம் கூடப்பரவாயில்லை, ஆபாசமாகவும் இருக்கிறது, தாம்பத்திய உறவு தரவேண்டும் என்று வற்புறுத்துவது அநாகரிகமாகத்தான் இருக்கிறது'' என்பதை அவரே ஒப்புக் கொண்டார்.

''நேரில் நீங்கள் போய்க் கூப்பிட்டுப் பார்ப்பது தானே'' என்றேன்.

''அவள் வரத்தேவையில்லை என்று பிடிவாதமாக இருக்கிறாளே''.

''நான் அங்கு இருந்தவரை அவள் அப்பா உங்கள் நோட்டீசுதான் காட்டினார். இப்பொழுது விவாகரத்துக் கேட்பதாக நோட்டீசு வந்ததாக உங்க பிள்ளை சொல் கிறார்'' ஆச்சர்யமாக இருக்கிறது. அதிர்ச்சியாகவும் இருக்கிறது. பிடிக்கவில்லை என்றால் விவாகரத்துத் தானே வழி'' என்றேன்.

''அவன் ஒப்புக் கொள்ளவில்லை, அவள்மேல் அவன் உயிர் வச்சிருக்கிறான்''.

''மாற்றிக் கொள்ள வேண்டியது தானே'',

''சார் நீங்க கொஞ்சம் வாயை மூடிக் கொள்கிறீர்களா? என்று என்னிடம் கடுமையாக நடந்து கொண்டான்.

நானும் அவசரப்பட்டுவிட்டேன். அவர்கள் தம் மருமகள் மீது கொண்ட பாசம் அன்பு ஆழமானது; தம் குடும்பத்தில் ஒரு அங்கத்தினராகவே கருதி வந்தார்கள் என்பது தெரிந்தது. பேசுவதும் புத்தி சொல்லி அனுப்புவதும் என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

''விவாகரத்து செய்து விட்டால், அவளுக்கு ஜீவனாம்சம் தரவேண்டுமா?'' என்பது பெரியவர் கேள்வி.

அவளாகக் கேட்பதால் கொடுக்கத் தேவையில்லை. என்றார் வக்கீல்.

அப்படியானால் அதற்கு வழி செய்து விடுங்கள்; பேசாமல் நல்ல இடத்தில் பார்த்துக் கொள்ளலாம், என்றார் பெரியவர்.

''பானு மிதித்த இந்த வீட்டுக்கு எந்த மானும் மருமகளாக வர நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்'' என்றார் அந்தப் பெரியவரின் மனைவி.

எதுகை நயம் தோன்றப் பேசியது வியப்பைத் தந்தது.

எந்தச் கழுதையும் என்று சொல்லி இருந்தால் சரியாக இருந்திருக்கும்.

''சட்டம் அவர்கள் பக்கமாகத்தான். குழந்தையை நாம் பெற முடியாது''

''தாய் தான் வளர்க்கும் உரிமை பெறுகிறாள்'' என்றார் வழக்கு உரைஞர்.

''அவள் வராவிட்டாலும் குழந்தையை நாம் விட்டுக் கொடுக்க முடியாது'' என்று பிடிவாதம் காட்டினார் மாமியார்.

நாம் ஏன் இங்கு வந்து அகப்பட்டுக் கொண்டோம் என்று வேதனையாக இருந்தது.

''நான் வருகிறேன்'' என்றேன்

''உட்காருங்கள் உங்களை வைத்துப் பேசுவதுதான் நல்லது; நீங்கள் அங்குப் போய்ச் சொல்ல வேண்டும், சட்டம் இருக்கட்டும். நீங்கள் நியாயம் சொலலி எங்கள் வீட்டிக்கு விளக்கு ஏற்றி வைக்க வேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார் அந்த அம்மையார்.

எனக்கே பரிதாபமாக இருந்தது இவ்வளவு நல்ல குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டும் இவள் புத்தி ஏன் இப்படிப் போகிறது என்று வருத்தப்பட்டேன்.

''அப்பாவிடம் மரியாதையாக நடந்து கொள்ளாதது ஒரு தப்பா; குடும்ப மானம் அவளைத் தவறாக நினைக்கத் தூண்டி இருக்கிறது. அந்த அச்சகம் ஆறுமுகத்துக்கு புத்தி இருக்க வேண்டாமா, மகளுக்கு எடுத்துச் சொல்லி அனுப்புவது முதல் கடமை என்று பட்டது. போனதும் அதைப் பேசுவது என்று முடிவு செய்து கொண்டேன்.

இராமனுஜம் தெரு எனக்கு விடை தந்தது. என் நண்பர் ஆறுமுகம் புத்திசாலி; திறமைசாலி; தம் மகளை

நல்ல இடத்தில் தந்திருக்கிறார், பொய் சொல்லியும் நல்லது செய்யலாம் என்று கூறுவது கேட்டு இருக்கிறேன்; அவர் லட்சங்களைத் தருகிறேன் என்று சொல்லி வாய் தவறவில்லை, அவர் ஏதோ காரணம் சொல்லிச் செய்தி பரப்பி இருக்கிறார், இவர் நிலம் பேசவந்தவர் நிலைமாறி மணம் பேசி விட்டார், ஆறுமுகம் இதற்கு எப்படி பொறுப்பாக முடியும்.

''முடிந்தது; வீட்டுக்கு மருமகள் வந்து ஆகிவிட்டது'' வந்தபின் அவள் வயிற்று எரிச்சலை ஏன் கொட்டிக் கொள்ள வேண்டும், பெற்றவன் வந்தபோது கற்றவர்கள் இவர்கள் கண்ணியம் தவறி எப்படி நடக்கலாம். மகளை எடுத்த பிறகு அவள் சாயல் அங்குச் சேர்க்கக்கூடாது என்று நினைப்பது தவறுதான், 'குடும்ப மானம்' அவளை வேதனைப்படச் செய்திருக்க வேண்டும்; மதியாதார்வாசல் மிதிக்கவேண்டாம் என்ற பழமொழி அவள் நினைவுக்கு வந்திருக்கலாம், தன் அப்பாவை மதிக்காத வீட்டில் தான் செல்வது அங்கு மிதிப்பது இழிவு என்று கருதி இருக்க லாம், அதைவிட அவளுக்கு வந்த கடிதங்களை அவர்கள் எப்படிப் படிக்கலாம் அநாகரிகம், அது மட்டும் அல்ல உரிமை மீறிய செயலாகும், முகவரி பார்த்ததும் அதை அவள் முகத்தில் வீசி எறிந்து இருக்க வேண்டாமா, அவர் கள் வீட்டில் ஆயிரம் கஷ்டம் இருக்கலாம்; அதைச் சொல் லிக் கொள்ளக் கூடவா அவர்களுக்கு உரிமை இல்லை, அவர்கள் என்ன நன்கொடை கேட்டா அவளை நலியச் செய்தார்கள் வீடு என்றால் நல்லது இருக்கும் கெட்டது இருக்கும். நலம், நலம் என்று அடுக்கிக் கொண்டா இருக்க முடியும்.

நலம் நலம் என்று எழுதிவிட்டு அம்மாவுக்கு உடம்பு சீரியசாக இருக்கிறது பிழைப்பது கஷ்டம் என்று டாக்டர்

சொல்லி விட்டார். நீ வந்தால் உயிரோடு பார்க்கமுடியும் நேரம் கடந்து வந்தால் அவள் காலம் கடந்து விடுவாள் நலம் நலம் என்றா எழுத முடியும். உள்ளதை உள்ளபடி தானே எழுத முடியும். இல்லாததை எழுத இது என்ன சரித்திர நாவலா? யதார்த்தத்தை எழுதினால் படிக்க வேண்டியது தானே! அதற்குப் பதார்த்தம் பார்த்துக் கொண்டா இருப்பார்கள். பேச்சுச் சுதந்திரம், இங்கு மறுக்கப்பட்டு இருக்கிறது. அது அவர்கள் அறியாமல் செய்த தவறுகள், அவற்றை நாமும் பெரிது படுத்தத் தேவையில்லை. வசதி மிக்க வாழ்வு அவளுக்கு எங்கே கிடைக்க போகிறது? அறியாமையால் அவள் செய்யும் தவறு கணவன் கூப்பிட்டால் வர வேண்டியது தானே? அவள் அப்பாவின் எதிர்ப்பார்ப்பும் அதுவாகத்தானே இருக்க முடியும். அவள் புருஷன் வீட்டில் வாழ்கிறாள் என்றால் பெற்றவருக்குச் சந்தோஷம்; பெரிய பணக்கார வீட்டு மருமகள் என்று சொல்லும்போது அதைக் கேட்கும் போது நெஞ்சு குளிர வேண்டாமா? அங்கு என்ன கொட்டியா வைத்திருக்கிறது?

இந்த நினைவுகள் என் நினைவை நிரப்பிக்கொண் டிருந்தன.

ஏன் இராமானுஜம் தெருவுக்குப் போனோம்? தேவை இல்லாமல் அந்த வீட்டில் கால் எடுத்து வைத்தது தவறு தான் என்றாலும் மனசுகேட்கவில்லை; நம்மஊர்ப் பெண் வாழ்க்கைப்பட்ட இடம். அந்தப் பக்கம் போனீர்களே அங்கு ஏன் பார்த்துவிட்டு வரக்கூடாதா'' என்று ஆறுமுகம் கேட்டால் என்ன செய்வது.

அந்த நேரத்தில் தமிழ்ச் சரித்திர நாவல்கள் படித்துப் பொழுது நோக்கி இருக்கலாம். பிரச்சனைகளை மறந்து

தூங்கிக் கொண்டு இருக்காமல் வாழுங்காலத்து மனிதர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதால் என்ன பயன்? நான் என்ன கதை எழுதவா போனேன் என்றாலும் இந்தப் பெண்ணின் கதையில் ஒரு மர்மம் இருக்கத்தான் செய்கிறது. ஏன் இவள் விவாகரத்து கூறுகிறாள். அதை விலக்க வழி உண்டா? இதைப்பற்றி என் மனம் துடித்துக் கொண்டிருக்கிறது. இந்த இரண்டு குடும்பத்துக்கும் ஒற்றுமை உண்டாக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

கண்ணால் காண்பது பொய்; காதால் கேட்பது பொய்; தீர விசாரிப்பதே மெய்; என் நண்பன் மனைவி அவள் வரதட்சணைக் கொடுமையால் தீக்குளித்தாள் என்று செய்தி பரவியது; அவள் செத்ததோடு புருஷனையும் மாட்டி விட்டாள். தீர விசாரித்ததில் உண்மை விளங்கியது. இப்படி எத்தனையோ தீக்குளிப்புகள் நடந்து கொண்டிருக்கின்றன. காரணம் ''வரதட்சணை கொடுமை'' என்று சொல்லி அப்பாவிகள் இழுத்து வரப் படுகின்றனர். அலைக்கழிக்கப்படுகின்றனர்.

பணக்காரர்கள் என்றாலே கெட்டவர்கள் என்று நினைப்பது எவ்வளவு தவறு என்பது இராமானுஜம் தெருவுக்குப் போன பிறகுதான் தெரிந்தது. பக்தி, அன்பு, பாசம் விருந்தினர் உபசரிப்பு, பிறரை மதித்து நடப்பது எல்லாம் அந்தக் குடும்பத்தில் என்னால் காண முடிந்தது. நல்ல பணிவுகள் வளரப் பணம் அடிப்படை; தாராளமாக இருக்க வேண்டுமானால் பலவும் வேண்டும். எந்த ஏழை மற்றவர்களுக்கு உதவுகிறான் உதவ நினைக்கலாம். ஆனால் அவன் உதவமுடியாது.

ஒரு பணக்காரர் காரில் நான் ஏற வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது. என் சுயமதிப்பு அதை மறுக்கச் செய்தது. தேவையில்லாமல் பணக்காரர் மீது எனக்கு ஒரு வெறுப்பு. மறுத்து விட்டேன். அதற்குப் பிறகு நான் பஸ் நெருக்கடியில் பர்சைப் பறி கொடுத்துவிட்டேன். பேசாமல் அவர் அழைப்பை ஏற்று அதைப் பயன்படுத்தி இருக்கலாம். தேவையில்லாமல் பணக்காரனை வெறுப்பது இந்தத் தமிழ்ப் படங்களில் பார்த்து வந்துவிட்ட பழக்கம், அதுமட்டுமல்ல, நடைமுறையும் அப்படி ஆகிவிட்டது.

காய்கறி விற்பவர் கூட, வைரக் கம்மல் போட்டுக் கொண்டு பட்டுப் புடவை உடுத்திக் கொண்டு வியாபாரம் செய்ய வந்தால் விலை கூடச் சொல்கிறார். "உங்களுக்கு என்ன நீங்கள் கொடுக்கலாம்" என்று உதாசீனமாகத் தான் பேசுகிறார்கள். இன்று பணக்காரன் என்று சொல் லிக் கொள்வதற்குப் பயப்பட வேண்டி இருக்கிறது. அந்தப் பணக்கார வெறுப்பு இந்தப் பெண்ணுக்கும் வந்து விட் டது. ஏழைகளாகப் பிறந்து ஏழையாக வாழ்ந்து பழகி விட்ட ஒருத்தருக்குப் பணக்காரர்களைக் கண்டால் வெறுப்பு ஏற்படுவது இயற்கைதான்; பொறாமையும் ஏற் படுகிறது. சமுதாய வட்டம் இந்த அமைப்புகளுக்கு வழி வகுத்த பிறகு அவர்களை வெறுத்து என்ன பயன்? ஏழ்மை வீட்டில் பழகி அதிலே ஒரு சோர்வைக் கண்ட இந்தப் பேதைப் பெண் இந்தப் பணக்காரச் சூழலை வெறுக் கிறாளா? சற்றும் புலப்படவில்லை.

என்னமோ என்னைப் பொறுத்தவரை அவள் மாம னார் நல்லவராகத்தான் தென்படுகிறார். இப்பொழுது கோயில் முதலிய பொது நிறுவனத்துக்கும் நன்கொடை தருகிறார்களே அவர்கள் எல்லாம் ஏழைகளா? பணக்கா

ரர்தானே திருப்பதி உண்டியலில் பிறர் அறியாது பல லட்சங்கள் மொத்தமாகக் கொட்டிவிட்டு வருகிறார்கள்; வசதி படைத்தவர்கள் நன்மைகள் செய்ய முடியும்; அவர்களை விரோதிப்பதால் பயன் இல்லை என்று என்னையும் அறியாமல் அவர்கள் புகழ்ச்சியை நினைக்க வைத்தது.

நண்பர் ஆறுமுகம் வரும்போதுஎல்லாம் ஏதாவது ஒரு பிரச்சனையோடுதான் வருவார், இப்பொழுதைய பிரச்சனை "பானு" தான்; அவள் வாழா வெட்டியாக இருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை.

"நான் இவளைப் போகச் சொல்கிறேன்" மறுக்கிறாள்; கழுத்தை பிடித்தா அவளைத் தள்ள முடியும்? என்று கேட்பார்.

"என்னதான் சொல்கிறாள்"

"மதியாதார் வாசல் மிதிக்க வேண்டாம் என்பதைக் கேட்டதில்லையா? உங்களை மதிக்காதவர் வீட்டிற்கு நான் போகமாட்டேன்" என்கிறாள்.

'நீங்கள் அங்கும் போகாமல் இருந்து விடலாமே".

"பெண் என்று இருந்தால் போய்ப் பார்க்கத்தான் வேண்டும்; சென்னைக்குப் போய்விட்டு மகளைப் பார்க்காமல் வருவது எப்படி நியாயம்? பெண்ணை வாழத்தான் அனுப்பினேனே தவிரச் சிறைக்கா அனுப்பி இருக்கிறேன், சிறைக்குச் சென்றாலும் மாதம் ஒருமுறை பார்க்க அனுமதி உண்டு; பார்க்க முடியும். இது என்ன மலைக் கோட்டையா? அவர்கள் எப்படியும் பேசுவார்கள்! பெண்ணைக்

கொடுத்தான் வந்து ஒரு முறையாவது பார்த்தானா? கட்டிக் கொடுத்தால் போதும் தட்டிக் கழித்துவிட்டான்; இனி என்ன என்று இருக்கிறான் என்று சொல்ல மாட்டார்களா? அதுமட்டுமல்ல என் மனைவி மரகதம் என்னைச் சும்மா விடுவாளா? இவ்வளவு தூரம் போய் மகளைப் பார்க்காமல் வர உங்களுக்கு எப்படி மனசு வருது என்று கேட்க மாட்டாளா! அவள் பிடிவாதத்திற்கு நியாயம் இருக்கிறது'' என்று பரிந்து பேச ஆரம்பித்தார்.

''அதற்கு விவாகரத்துக் கோர வேண்டுமா? இந்தச் சின்னச் சின்ன குறைகளை அதற்குக் காரணம் காட்ட முடியுமா?''

''பெரிய காரணம் வேண்டுமா? மாப்பிள்ளை அந்த வீட்டு வேலைக்காரியுடன் குளியல் அறையில் களித்துக் கொண்டிருப்பது இவள் பார்க்க நேர்ந்தது, அது அவளுக்கு அதிர்ச்சி தந்திருக்கிறது'' என்றார். இது எனக்கு அதிர்ச்சியைத் தந்தது.

''இது எனக்குத் தெரியாதே''

''இது எல்லாம் எப்படி உங்களுக்கு தெரியும்'' அவர்கள் இதை எல்லாம் சொல்லிக் கொண்டா இருப்பார்கள்''.

''பையனைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே''.

''அதை நான் தவறு என்று கூறவில்லை. அது அவன் விருப்பம்; சூழ்நிலை அது; இருபத்து நான்கு மணி நேரமும் கணவனைக் கட்டிக்காக்க முடியுமா? அவளுக்கு இது வேதனை தந்திருக்கிறது; வெளியே காட்டிக் கொள்ளவில்லை''.

''அந்த வேலைக்காரியை வேலையை விட்டு நிறுத்துவது''.

''அதற்காக அவள் வாழ்க்கையை எப்படிப் பாழாக்க முடியும். அது அவள் கணவனுக்குத் தெரிந்தால் அங்கே அது விபரீதத்தை உண்டாக்கலாம். மூடிவைக்க வேண்டியதுதான்; வேலைக்காரர் செய்யும் தவறுகளுக்கு எல்லாம் அவர்களை வீட்டுக்கு அனுப்பினால் ஒருவர் கூட நம்மிடம் வேலை செய்ய மாட்டார்கள்!'' என்று கூறினார்.

அவர் அச்சகத் தொழில் அனுபவம் பேசுகிறது என்பதை அறிய முடிந்தது.

''நீங்கள் சொல்வது உண்மையானால் உங்கள் மகள் உடனே அங்குப் போக வேண்டியதுதான்; அவிழ்த்து விட்ட நாயாக அவன் செயல்பட வாய்ப்பு இருக்கிறது; தடுக்காமல் இருந்தால் அவன் குட்டிச்சுவராக ஆகிவிடுவான்'' என்றேன்.

''ஒருவர் உரிமையில் மற்றவர் தலையிடக்கூடாது என்பதில் அவளுக்கு ஆழ்ந்த பற்றும் பிடிப்பும் இருக்கின்றன. மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் செய்யக் கூடாது என்று அவள் சுட்டிக் காட்டியதே இல்லை. என்னைக் கூட இதுவரை என் மகள் ஏன்பா பொய் விளம்பரம் தந்து பிறரை நம்பச் செய்தீர்கள்; என்று ஒரு கேள்வி கேட்டது இல்லை''.

''கேட்டிருக்க வேண்டியது தானே?''

''அதனால் ஏற்படக்கூடிய விளைவு மனக் கசப்பு; என் சூழ்நிலை இதைச் செய்யத் தூண்டியது. ஏழை

என்றால் எவன் வந்து பெண் கேட்கிறான். இவளோடு முடிவதில்லை; அடுத்து இரண்டு பெற்று வைத்து இருக்கிறேன்''.

''உங்களுக்காக நான் ஒரு பொய் சொல்லிவிட்டு வந்தேன்''

''எதற்காக?''

''எனக்காகத்தான் நீங்கள் நிலப்பரப்பு விளம்பரம் தந்தீர்கள்'' என்றேன்.

''உங்கள் நல்லெண்ணத்தை 'மதிக்கிறேன்; ஆனால் என் தவறை மறைக்க நீங்கள் ஏன் பொய் சொல்ல வேண்டும்''

''சொல்லி வைத்தேன்; உண்மைதான் என்ன? ஏன் அந்த விளம்பரம் தந்தீர்? எனக்கே தெரியாதே'' என்று கேட்டேன்.

''பொய் சொல்லக் கூடாது பாப்பா என்று பாரதி கூடப் பாப்பாவைப் பார்த்துச் சொன்னாரே தவிர பொய் சொல்லக் கூடாது தாத்தா'' என்று நம்மைப் பார்த்துக் கூறவில்லை. இன்றைய யதார்த்த நிலை பொய் சொல்லாமல் வாழ முடியாது. அதை வைத்து மற்றவர்களை ஏமாற்றக் கூடாது. என் மகளின் மணத்துக்கு எனக்குச் சமுதாயத்தில் ஒரு அந்தஸ்து ஏற்படுத்திக் கொள்ள நான் பொய்சொல்லித்தான் தீர வேண்டும். பொய் கவிதைக்கு மட்டும் அல்ல, வாழ்க்கைக்கும் தேவைப்படுகிறது. அது தான் அழகு தருவது.

இன்று பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கிறார்கள். தெரிந்து 'சாதிச் சான்றுகள்' இணைக்கிறார்கள். தாசில்தாரிடம் கையெழுத்து வாங்கித் தருகிறார்கள். தான் பிறந்த சாதியை மறந்து புதுப்பொய் படைத்து வாழ நினைக்கிறார்கள். யாராவது இது தவறு என்று கூறுகிறார்களா? (நல்ல காரியம் செய்தீர்) என்றுதான் பாராட்டுகிறார்கள். சட்டம், சம்பிரதாயம், மதிப்புகள் இவையெல்லாம் நேர்மையாக இயங்காத நிலையில் தனி மனிதர்கள் பொய் சொல்வது தவறு அல்ல. அது தேவை'' என்று தெரிவிக்கத் தொடங்கினார்.

''நிலவிளம்பரம் இருக்கட்டும். லாட்டரியில் பணம் குவிந்து விட்டதாகத் தொடர்ந்து ஏன் மற்றொரு பொய் சொல்ல வேண்டும்?''

''அன்று ஏப்ரல் முதல் தேதி; அன்று ஆடிய விளையாட்டு. இது தெரிந்துதான் செய்தேன். ஏப்ரல் முதல் தேதி உலகம் எங்கும் ஒப்புக் கொள்ளப்பட்ட நாள், மற்றவர்களை முட்டாள்கள் ஆக்கலாம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. நண்பர்களைச் சிரிக்க வைக்க முட்டாள்கள் ஆக்கி நகைத்துக் காட்ட மேற்கொள்ளப்படும் விளையாட்டு இது.

இதை நான் சீரியசாகச் செய்து காட்டினேன். பத்திரிக்கைக்காரர்களை வைத்து விளையாடினேன்; அவர்கள் என்னைப் பற்றி விளம்பரப்படுத்த வேண்டும் என்று விரும்பினேன். தொழில் நலிந்துவிட்ட நிலையில் விளம்பரம் தேவைப்பட்டது. அவர்களிடம் என் தொழிலைப் பற்றிச் செய்திகளைச் சொல்ல முடிந்தது. அதனால் புதிய சில விளம்பரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள

முடிந்தது. திரவிசாரிக்க வந்த போது நான் தெளிவுபடுத்திவிட்டேன். நான் செய்தி தந்த தேதி ஏப்ரல் முதல் தேதி என்றேன் அவர்களும் அதை நகைச்சுவையாக எடுத்துக் கொண்டார்கள். நானும் சிரித்து விளையாடினேன்". அவர்கள் யாரும் என்மீது மான நஷ்ட வழக்கு எதுவும் போடவில்லை".

''இது பயங்கரமான விளையாட்டாக இருக்கிறதே"

''வாழ்க்கையில் ஏதாவது விளையாட்டும், நகைச்சுவையும் தேவைப்படுகின்றது. சின்ன வயதில் இருந்து இந்தப் பழக்கம் வந்து விட்டது. எதிலும் ஏதாவது சுவை கண்டு மகிழ்வது வழக்கம் ஆகிவிட்டது.

மற்றவர்களைச் சிரிக்க வைக்க, ஏமாற்றி வியப்பு ஊட்ட ஒரு நாளை மதிக்கிறோம், சின்ன வயதில் உருளைக்கிழங்கில் ஏ.எப். என்று எழுதிப் போவோர் வருவோர் மீது துணிந்து கறைப்படுத்தி இருக்கிறேன். அந்த விளையாட்டுகள் எல்லாம் மறைந்து விட்டன. இப்பொழுது யாரும் அதைப் போல் செய்வதில்லை.

பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் போகிப்பண்டிகை; நாங்கள் சிறு பறைகொட்டி மகிழ்வோம்; வீடுகளின் முன்னால் நெருப்பு எழும்பும்; அதில் குளிர்காய ஒருங்கு கூடுவோம்; டம் டம், என்று அடித்து மகிழ்வோம். உடைந்த கதவுகளைப் பிடுங்கி ஏரியில் இடுவோம்; துணிந்து தவறுகள் செய்வோம். மறுநாள் பொங்கல் நாள் கரும்புகள் சந்தைக்கு விற்க வரும்; அவற்றை மொத்தமாகக் கும்பலாகச் சென்று இழுத்துத் திருடுவோம்; அது

எல்லாம் திருட்டில் சேராது. சாதிப்பது ஒன்றும் இருக்காது. ஆனால் இது மாதிரி தவறுகள் செய்யும்போது அதில் ஒரு சந்தோஷம். திருடுவது தவறுதான். ஆனால் இதெல்லாம் திருட்டு ஆகாது என்று பழகிவிட்ட எனக்கு இந்த வேடிக்கை; இந்த விளையாட்டுப் புதிது அல்ல; என்னை விட்டுப் போகவில்லை.

-5-

''நான் என்ன செய்வது? என் வீடுதானா கிடைத்தது? 'சூட்கேசு' ஒன்று என் வீட்டின் முன் கிடந்தது. யாரோ போட்டு விட்டுச் சென்று விட்டனர். யாரோ நான் பெரிய அதிகாரி என்று தவறாக நினைத்து 'பாம்' வைத்து விட்டார்கள்; பயந்து அதை எடுக்கப் போனேன்.

''எடுக்காதீர் அதில் 'வெடி' இருக்கிறது; போலீசுக்குத் தெரிவியுங்கள்'' என்றார்கள்.

நான் போலீசுக்குத் தகவல் தெரிவித்தேன்.

அவர்கள் அதைத் தொடப்பயப்பட்டார்கள். அவர்கள் உள்ளே வெடி மருந்து இருக்கும் என்று முழுக்க முழுக்க நம்பி விட்டார்கள். உடனே அவர்கள் 'வெடி மருந்து விற்பன்னரை வரவழைத்து அதனைச் சோதனை போடச் செய்தார்கள்.

எங்களுக்குத் 'திக்கு' 'திக்கு' என்று அடித்துக் கொண்டது. எங்கே அது வெடிக்கிறதோ என்று பயந்தேன்; இருப்பது ஒரு வீடு; அது இடிந்து விழுந்தால் நாம் என்ன செய்வது? குடிசை வீடாக இருந்தால் அரசாங்கம் புது வீடு கட்ட நிதி தருவார்கள்.

''தயவு செய்து தூர எடுத்துச் சொல்லுங்கள்'' என்று கத்தினேன்.

''ஏன்யா இப்படி பயந்து சாகிறே உயிரா போய் விடும்'' என்று தத்துவம் பேசினார்கள்.

வெடித்தால் உயிர் போகாதாம்; அவர்கள் சொல்வது புது விஞ்ஞானமாக இருந்தது.

''நான் முடியவே முடியாது'' என்று மறுத்தேன். என் மனைவி மரகதமும் வெளியே வந்து நின்றாள்.

இந்தப் பெண்கள் அடுத்த நாள் பள்ளித் தேர்வு; பாடப் புத்தகங்களைக் கையோடு எடுத்துக் கொண்டு வந்து விட்டார்கள்; படிக்க வேண்டுமே என்ன செய்வது?

''இங்கே பிள்ளைகள் இருக்கிற இடம். பயப்படுவார்கள்; தயவு செய்து போய்விடுங்கள் என்று கத்தினேன். போலீஸ்காரர்களுக்கு என் மேல் கோபம்.

''போகட்டுமே ஒன்று இரண்டு குறைந்தது என்று நாட்டு நிலை வைத்துப் பேசினார்கள்.

கடைசியில் அது வெறும் பெட்டி.

யாரோ விளம்பரம் செய்ய வந்தவர்கள் பொருள்களை விற்று விட்டுக் காலி பெட்டியைப் போட்டுச் சென்று விட்டார்கள். இது போலீசு அவர்கள் டையரியில் எழுதி இருக்கலாம்.

அவர்களுக்குச் செய்தி தேவைப்பட்டது. "வெடி இருந்தது; வெடிப்பதற்கு முன் போலீசார் அகற்றி விட்டார்கள்" என்று செய்தி போட நினைத்தார்கள். அவர்கள் பணியில் பயன் காண விழைந்தார்கள்.

அதனால் 'பீதி' உண்டாகும்; எங்கள் வீடு பயங்கரவாதிகள் உள்ள இடம் என்று பரவி விடும். அதற்குப்பிறகு எங்களுக்குக் கெட்ட பேர் வரும். என்ன செய்வது. அதற்கு நான் ஒப்புக் கொள்ளவில்லை.

அதனால் ஒரு திருத்தம் சொன்னேன் கடத்தல்காரர்கள் வைரம் எடுத்துக் கொண்டு வெறும் பெட்டியைப் போட்டுவிட்டுச் சென்றார்கள் என்று போட்டுக் கொள்ளுங்கள்; இதுவும் பரபரப்புத் தரும் என்று திருத்தச் சொன்னேன்.

அவர்கள் என் வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்டார்கள். அவர்களுக்கு அது தேவைப்பட்டது. எலி வேட்டை ஆடச் சென்றோம் என்று எழுதாமல் புலி வேட்டை ஆடச் சென்றோம் என்று எழுதிக் கொள்வதில் அவர்கள் பெருமிதம் அடைந்தார்கள்; அதனால் அவர்களுக்குப் பாராட்டும் கிடைத்தது.

பிறகு வதந்தி பரவியது. அந்தப் பெட்டியில் வைரம் இருந்திருக்க வேண்டும். அதை நான் எடுத்துக்கொண்டு வெறும் பெட்டியைப் போட்டு இருக்கவேண்டும் என்று பேசத் தொடங்கிவிட்டனர். இதில் போலீஸ்காரர்களும் கூட்டு என்று பேசத் தொடங்கி விட்டார்கள். இதில் நான் தப்ப முடியவில்லை; வேண்டுமென்று நான் செய்த வினை

அல்ல; எவனோ மறந்து இங்கே போட்டுவிட்ட சிறு நிகழ்ச்சி; அது எனக்குத் தந்தது புகழ்ச்சி. அது இப்பொழுது என்னை என் சம்பந்தி எள்ளி நகையாட ஏற்பட்ட தாழ்ச்சி; நான் என்ன செய்வது' என்றுதாம் செய்த திருவிளையாட்டுகளுக்கு விளக்கங்கள் தந்தார்.

-5-

''இப்பொழுது பானு என்ன செய்கிறாள்?

''பி. எட் அதற்குப் படித்துக் கொண்டு இருக்கிறாள். அஞ்சல்வழிக் கல்வி செய்கிற அநியாயங்களில் இது ஒன்று. மூலை முடுக்குகளில் உள்ள பெண்களை எல்லாம் படிக்க வைத்து அவர்களுக்குப் பதவி ஆசையை ஊட்டி விடுகிறது. ஏதாவது தொழில் செய்யமுடியும் என்று நம்பிக்கையைத் தந்துவிடுகிறது. பெண்களை இன்று தலைநிமிர்ந்து பேசத் தனித்து வாழ இந்த அஞ்சல்வழிக் கல்வி நிறுவனங்கள் செயல்படத் தொடங்கிவிட்டன. 'அஞ்சலை' நீ அஞ்சாதே நாங்கள் துணை நிற்கிறோம். என்று சொல்வதுபோல் அது இயங்கத் தொடங்கிவிட்டது.

நான் சொல்லிப் பார்த்தேன். உனக்கேன்மா இந்தப் படிப்பு; குழந்தையை வளர்ப்பதற்கே நேரம் போதாது. புருஷன் வீட்டுக்குப் போகப்போறே.

அங்கே போய் நீ தொழிலுக்குப்படிக்கிறாய் என்றால் கேவலமாகப் பார்க்க மாட்டார்களா? ஏற்கனவே நீ எம். ஏ., படித்தது அவர்களுக்கு எரிச்சல்; அதாவது படித்தவர் என்று நீ கருதப்படுவாய் என்று அச்சம்; அது பரவாயில்லை; 'பட்டம்' இன்று பெண்களுக்கு மதிப்புத் தருகிறது. கலியாணப் பத்திரிக்கையில் அச்சிடுவதற்கு

இன்று அது அவசியமாகிறது. அதற்காகவே பல பெண்கள் இன்று படிக்கிறார்கள்; ''பட்டம் வாங்குகிறவரை என்னை விட்டு வையுங்கள்'' என்று சொல்கிற காலம் ஆகிவிட்டது. எம்.ஏ. படித்தது நியாயம்தான். வாத்தியார் படிப்பு எதற்கு என்று எடுத்துச் சொல்கிறேன். அவள் கேட்பதாக இல்லை. 'துணிந்து தம் காலில் நிற்கப் பெண்களுக்குக் கல்வி அவசியம். வேலைக்குப் போகிறேனா இல்லையோ. அது இரண்டாவது பட்சம். அதற்கு வேண்டிய தகுதி எனக்கு இருக்க வேண்டும். ஒரு வேளை நான் இந்த விவாகரத்து வழக்கில் தோல்வி ஏற்பட்டால் வேறு வழி இல்லாமல் இராமானுச கூடம் போய்விடுவேன்; வழக்கில் வெற்றி பெற்றுவிட்டால் நான் உங்களுக்குச் சுமையாகி விடுவேன். அதைவிட நான் அங்கேயே பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ போய் வாழ்வதே தக்கது. தாய் வீட்டில் ஒரு பெண் பாரமாக இருப்பதைவிடக் கணவன் வீட்டில் அவருக்குத் தாரமாகக் கிடக்கலாம் என்று கூறுகிறாள். அவர்களை அவள் வெறுக்கிறாள் என்றும் என்னால் கூறமுடியவில்லை. அந்த வாழ்க்கையில் அவளுக்குப் பிடிப்பு ஏற்படவில்லை; அவ்வளவுதான்'' என்றார்.

''குழந்தை பிறந்த பிறகு கூடவா பிடிப்பு இல்லை என்று கூற முடியும்?''

''அதனால் தாய்மை நிறைவேறி விட்டது. இனித் தொடர்ந்து குழந்தை தேவையில்லை என்கிறாள்; அதுவும் தான் விரும்பியபடி பெண் குழந்தை பிறந்ததில் அவளுக்குப் பெரும் மகிழ்ச்சி. அவளுக்கு நம்பிக்கை இருக்கிறது அந்தக் குழந்தையைத் தான் பெருமை தோன்ற வளர்க்க முடியும் என்று. அதிலே அவள் பூரணமான நிறைவு

பெற்றிருக்கிறாள். கடந்த கால வாழ்க்கைக்கு அவள விடைகள் சொல்லிக் கொண்டு இருக்க விரும்பவில்லை. புதிய தேர்வுக்கு அவள் படித்துக்கொண்டு இருக்கிறாள்.

"இருந்தாலும் அவன் வேலைக்காரியோடு விளையாடியது மறக்க முடியாது; மன்னிக்க முடியாது" என்று அவர்கள் சார்பில் பேசினேன் சம்பிரதாயத்துக்காக.

"நீங்கள் பத்தாம்பசலியாக இருக்கிறீர்கள்; அதைப் பெரிதுபடுத்துவதுதான் தவறு. இன்று தவறுவது என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட சம்பிரதாயம்; தவறுகளை நினைத்துக் கொண்டு சங்கீதம் பாடியது பழைய காலம். தவறு செய்யாதவர்களை மகான்கள் என்று மதித்தது அந்தக் காலம்; இது மனித இயல்பு; இதைக் கண்டும் காணாமல் போவது நாகரிகம் என்று வாழக் கற்றுக் கொள்வது இந்தக்காலம்: ஐந்து புலன்களை அடக்கி ஆள்வது வெற்றி என்று அதற்காக அழுது அழுது தொலைந்தவர்கள் ஞானிகள் எனப்பட்டனர்; புலன்கள் ஐந்தையும் அறிவு ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தி நல்வாழ்வுக்கு வழி கோலுவது இந்தக் காலம்;

புலன்கள் ஆற்றல் உள்ளவை; வேகம் கொண்டவை; சில சமயம் பாதை தவறி விடுதல் உண்டு. அதற்காக ஒருவரை நோவது அறியாமை; என் மகளும் அறிவுடையவள்; அவனைத் தன் உடைமையாக்கக்கருதியது இல்லை. ஏதோ ஒன்று இழந்து விட்டதாக ஒப்பாரி வைத்து நாடகம் நடத்தும் அறியாமை அவளிடம் இல்லை. அது அவன் சொந்த விவகாரம். அதுகூட அவள் இங்கு வந்து சொல்லவில்லை; நான் அங்குச் சென்றபோது கேள்விப் பட்ட செய்தி அது. அது அவனை வெறுப்பதற்குக்

காரணம் ஆகாது; அதை அவள் பொருட்படுத்தவில்லை. அவனை அவள் வெறுத்துப் பேசியதே இல்லை'' என்று பேசினார்.

எனக்கு இன்னும் சிக்கலாகிவிட்டது. நோய் தெரியாமல் அதற்கு மருந்து எப்படிக் காண முடியும் என்று வேதனை ஏற்பட்டது. காரணம் தெரியாமல் களத்தில் இறங்கியது வீண் என்று பட்டது.

என்னைப் பொறுத்த வரையில் அவர்களைச் சேர்த்து வைப்பது என்று தீர்மானித்து விட்டேன். குறைகள் இல்லாமல் இருக்காது; எந்த இடத்திலும் ஏதாவது குறை இருக்கத்தான் செய்யும். அதற்காக வாழ்வை இழப்பதா?

அப்படி அவர்கள் என்ன தவறு செய்துவிட்டார்கள்? பானுவைச் சந்தித்துக் கேட்டுவிட வேண்டும் என்று துடித்தேன். அதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கிடைக்கட்டும் என்று காத்திருந்தேன்.

அஞ்சல்வழிக்கல்வி தபால் ஒன்று தவறி என் வீட்டில் விழுந்து விட்டது.

''உதயபானு'' என்றால் யாருக்கும் தெரியாது.

'அஞ்சலை' என்றால் தான் அவளைத் தெரியும். அந்தப் பெயர் வைத்துத்தான் கூப்பிடுவார்கள்.

'அஞ்சலி' என்ற தமிழ்ப்படம் இப்பொழுது வந்தது. இது அவளுக்கு ஏற்கனவே அமைந்து விட்ட பெயர்.

'அஞ்சலை' என்ற பெயர் எனக்கு உச்சரிக்கப் பிடிக்க வில்லை; அது வீட்டுப் பெயர்; செல்லப்பெயர்; அது அந்த வீட்டில் நெருங்கியவர்கள்தான் கூப்பிட உரிமை உண்டு; நான் எப்படி அந்தப் பெயரில் கூப்பிட முடியும்?

மேலும் அஞ்சலி என்ற அந்தச் சோகப்படத்தைக் கண்டபிறகு, அஞ்சலை, அஞ்சலை என்று கூப்பிடுவது என்றால் சோகம் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்தக் குழந்தை செத்தது தெரியாமல் அஞ்சலை அஞ்சலை என்று கூப்பிடுவது நம் நெஞ்சைத் தொடுகிறது தேவை இல்லாமல் அவர்கள் வீட்டில் நுழைவதும் அநா கரிகமாகப் பட்டது.

ஆறுமுகம் எனக்கு வேண்டியவர்தான்; என்றாலும் மணமாகி ஒருவருக்கு வாழ்க்கைப்பட்ட இளம் பெண்ணி டம் வலிய எப்படி நான் போய்ப் பேச முடியும். அதனால் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு 'ஆறுமுகம்' என்று கூப்பிட்டுக் கொண்டு உள்ளே சென்றேன்.

பானு வீட்டில் இல்லை; அவள் குழந்தையை எடுத்துக் கொண்டு மருத்துவரைப் பார்க்கச் சென்றிருந்தாள். பானுவின் தாய் வந்து என்னைச் சந்தித்தார்கள்.

'வாங்க' என்று கூறி வரவேற்றார்கள்.

''பானுவிற்கு அஞ்சல்வழிக் கல்வி நிறுவனத்திலிருந்து, தவறுதலாக எங்கள் வீட்டு முகவரிக்கு இந்தத் தபால் வந்தது. கொடுத்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்றேன்.

''நல்லது; உங்களைப் பற்றி அடிக்கடி பானுவின் அப்பா சொல்லுவார்; பேசியது இல்லை; பேச வேண்டும் என்று நினைத்தது உண்டு'' என்று சொல்லி நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

''நீங்கள் பானுவின் மாமானார் வீட்டுக்குப் போனீர்களாமே? என்ன சொல்கிறார்கள்;''

''குழந்தையை விசாரித்தார்கள். அவர்களுக்குக் குழந்தையைக் காண வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது'' என்றேன்.

அவர்கள் பிரச்சனைக்கு வந்தார்கள். ''குழந்தைக்குத் தங்கச் சங்கிலி போடாமல் எப்படி அனுப்ப முடியும். கையில் காலில் ஏதாவது மாட்ட வேண்டும். குறைந்தது பத்தாயிரம் ஆகும். இதற்கு எங்கே போவது? இதெல்லாம்தான் பார்க்க வேண்டி இருக்கிறது'' என்று அவர்கள் இந்த விவகாரத்தில் தமக்கு உள்ள பங்கை விவரித்தார்கள்.

எனக்கு இதைப்பற்றி என்ன பேசுவது என்று தெரியவில்லை. ஒரு பெண் குழந்தை பிறந்தால் ஆரம்பத்திலேயே இதற்கு இத்தனை பிரச்சனைகள் உருவாகும் என்று நான் எண்ணிப் பார்த்தது இல்லை.

''அதற்கு என்னங்க எங்காவது கடன் உடன் வாங்கி அனுப்பி வைக்க வேண்டியது தானே''.

''அடுத்து மற்றொன்று உட்கார்ந்து இருக்கிறதே. அதுக்கு ஏதாவது செய்ய வேண்டாமா?''

"இவரை இந்த அச்சுத் தொழில் வேண்டாம் என்று தலை தலை அடித்துக் கொண்டேன். கேட்டாரா? இருந்த சொத்து எல்லாம் மெல்ல மெல்லத் தொலைத்து விட்டார்.

வியாபாரம் ஏதாவது செய்திருந்தால் எவ்வளவோ சம்பாதித்து இருக்கலாம்.

பழைய பேப்பர் கடை வச்சிருந்தால்கூடக் குப்பை காகிதம் வாங்கிக் குபேரன் ஆகி இருக்கலாம். கோணிப் பைக் கடை வைத்திருந்தால் ஏணி ஏறி மாடி கட்டி இருக் கலாம். சாணி தட்டி விற்றவர்கள் எல்லாம் காணி நிலம் வாங்காமலா இருக்காங்க.

சுடுகாட்டிலே இந்தச் சாணி தட்டிய வறட்டிக்கு என்ன கிராக்கி தெரியுமா? அய்யர் பையன் ஒருத்தன் வெட்டியான் வேலைக்கு விண்ணப்பம் போட்டுத் தனக்குக் கொடுக்கணும் என்று உச்ச நீதி மன்றத்தில் உச்சி வரை போய் இருக்கிறான். கேட்டால் அந்தத் தொழிலிலே மச்சி வீடு கட்ட முடியும் என்கிறான். இந்த அச்சுத் தொழிலிலே என்ன மிச்சத்தைக் கண்டோம்.

புத்தகம் வருது; அறிவு வளருது; அச்சடிக்கும் அச்ச கத்துக்கு என்ன கிடைக்கும்? பிழை இல்லாமல் உரிய நேரத்தில் அச்சிட்டுத் தந்தால் உரிமையாளர்க்குச் சில வரி களில் நன்றியுரை எழுதுகிறார்கள். காலத்தில் ஒரு நூல் அச்சிட்டுத் தந்தால் அதை மிகவும் பாராட்டுகிறார்கள். இதைத்தான் நாங்கள் கண்டோம்.

நூல் எழுதிய ஆசிரியருக்குப் பாராட்டும் பரிசும் கிடைக்கின்றன. கலைமாமணி என்று கூறி அவர்கள் தலையைக் கனக்க வைக்கிறார்கள். அவர்களுக்குக் கலை இருக்கிறதோ மாமணி வந்து சேருகிறது. செக்கு மாடு மாதிரி இந்த இருட்டறையில் ஓர் உலகத்தைப் படைத்துக் கொடுக்கிறார்களே இந்த மக்குகளை யார் கவனிக்கிறார்கள்?

கட்டிடத் தொழிலாளி இன்று எண்பது தொண்ணூறு எட்டிப் பிடிக்கிறான். இவர்கள் வாரத்துக்கு இருநூறு கூட வாங்க முடியவில்லை. வட்டிக்குக் கடன் வாங்கி வாடகை கட்டி வாழ்க்கை நடத்துகிறார்கள். அதிகம் கேட்கிறார்கள். அவர்களுக்கே தெரிகிறது போன் பில் கட்ட முடியாமல் அதன் குரல் வளை இறுக்கப்படுகிறது என்று.

புத்தகம் அச்சிடுபவர் தந்தால்தானே அவர்கள் கூலியை உயர்த்த முடியும்! அவர்களே கடைக்காரர்களிடம் புத்தகங்களைப் போட்டு விட்டு அசோகவனத்துச் சீதையை மீட்க முடியாமல் அவஸ்தைப்படுகிறார்கள்.

நூல் வெளி வந்தால் போதும் என்று அவர்கள் கடைகளில் போடுகிறார்கள். கடைக்காரன் காசு உடனே தருவதில்லை. முதல் இல்லாத வியாபாரம், அவர்கள் ஒவ்வொருவரும் வள்ளல் இராமனாக மாறி விடுகிறார்கள். ''இன்று போய்க் காசுக்கு நாளை வா'' என்று சொல்லி அனுப்புகிறார்கள்; இவ்வளவு இருந்தும் பிடிவாதமாக நூல் அச்சிடுகிறார்கள் சிலர்; அதுதான் வியப்பாக இருக்கிறது.

தான் கருப்பு மையில் எழுதிய காகிதங்களை அச்சு மையில் காண வேண்டும் என்னும் ஒரே ஆசைதான் காரணம்.

இந்த எழுத்தாளர்கள் பைத்தியக்காரர்கள். தாம் நினைப்பதை எழுதிக் கொட்டி விட வேண்டும் என்று நினைக்கிறார்கள். கவிதைப் பைத்தியங்கள் அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியது இல்லை. பூக்களின் பெயர்களை வைத்துப் பாக்களை எழுதுவார்கள். அதை அவர்கள் மட்டும்தான் ரசிக்க முடியும். பக்திப் பரவசத்தால் பக்கம் பக்கமாக எழுதித் தாம் ஒரு முக்கியஸ்தராகக் காட்டிக் கொள்கிறார்கள் சிலர். ஒரே குறளுக்கு முந்நூறு பக்கம் விரிவுரை எழுதிக் கொண்டு வந்து தருவார்கள் சிலர்.

இதை யார் படிக்கிறார்கள் என்று கேட்டுப் பார்த்தால் 'கடின உழைப்பு' என்று உழைப்பின் உயர்வு குறித்து உபதேசம் செய்வார்கள்.

செத்துவிட்ட மனைவியின் எழுத்துக்களைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு அழித்து விட்ட கருத்துக்களை அச்சிட்டு நினைவுச் சின்னம் எழுப்பும் ஷாஜஹான்களும் இருக்கிறார்கள். நூல்கள் நினைவுச் சின்னங்களாகின்றன.

ஒரு சிலர் காலம் கடந்த நூல்களை விமரிசித்துக் கொண்டு தம் காலத்தைக் கழிப்பார்கள். இவை எல்லாம் எங்கள் அச்சகத்தைக் காப்பாற்றி வருகின்றன.

இவர்களில் பலர் ஆர்வம் காரணமாக நூலை அச்சிடுவார்கள். அதற்கு உரிய அச்சுக் கூலி கொடுப்பதற்குள்

அவர்கள் வங்கிக் கணக்கு வறட்சி ஆகிவிடும்; அவற்றை எடுத்துக் கொண்டு போகாமலேயே எங்கள் வீட்டில் இடத்துக்கு நெருக்கடி உண்டாக்கி விடுவார்கள். ஒரு சிலர் பாதி தந்துவிட்டு மீதி தருவது, விழலுக்கு இறைக்கும் நீராகக் கருதி நிறுத்திவிடுவார்கள். ஒரு சிலர் அச்சடித்து முடித்தபின் தன் புத்தகம் விலை போகாது என்றும் நிச்சயத்து கொண்டு இந்தப் பக்கம்கூடத் திரும்ப மாட்டார்கள். இந்த அவலங்களை எல்லாம் இந்தத் தொழிலில் நாங்கள் கண்டிருக்கிறோம்' என்று தம் கணவரின் தொழிலை விமரிசிக்கத் தொடங்கினார்கள்.

பள்ளிக்கூடப் பாட நூல்கள் பரவலாக விற்கக் கூடிய நூல்கள் என்றாலும் அச்சகத்தில், அவர்கள் தருவது இல்லை. இப்பொழுது ஆஃப் செட் அச்சு முறை வந்துவிட்டது. அது அசுர வேகத்தில் நூல்களை அச்சிட்டுத் தருகிறது. அவர்கள் கூட ஏகப்பட்ட கடன் வாங்கி விட்டு 'டியூ' கட்டுவதே தன் 'வியூ' வாக மாறிவிடுகிறார்கள். அதைக் கட்டி முடிப்பதற்குள் அந்த இயந்திரங்கள் கால் விலைக்குக்கூட விற்க முடிவதில்லை. 'டிக்' லோன் வாங்கியதற்கு அது தரும் 'கிக்' குகளைத் தாங்காமல் விக்கிக் கொண்டு இருப்பதைப் பார்க்க முடிகிறது என்று பூதாகாரமாக வளர்ந்து வரும் புதிய அச்சு இயந்திரத் தொழிலைப் பற்றியும் அவர்கள் அறிந்தவரை அறிவித்தார்கள்.

''இந்தத் தேய்ந்துவிட்ட இயந்திரங்களை வாங்கக் காய்ந்தவன் யாராவது இருக்கிறானா பார்'' என்கிறார். 'எடைக்குப் போடுவதைத் தவிர இதற்கு வேறு விடை கிடையாது' என்கிறார்.

போட்ட பணம் அத்தனையும் போன இடம் தெரியாது. பஜாரி ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவளை விடவும் முடியாது வைத்துக் கொள்ளவும் முடியாது என்று சொல்லுவார்கள். அதைப் போன்ற நிலைமை தான் இன்று எங்கள் அச்சுப் பிழைப்பு என்று கோயில் மணி அடிப்பது போலக் கொட்டித் தீர்த்தார்கள்.

இந்தக் குடும்பப் பிரச்சனை தீர்த்து வைக்க முடியாதது என்று முடிவு செய்து கொண்டேன். பானுவையும் பார்க்கவில்லை. அவளைப் பார்த்தால் பேசி எதுவும் ஆகப்போவது இல்லை. அஞ்சல் தபாலை அஞ்சலையிடம் சேர்த்து விடும்படி சொல்லிவிட்டு, "இனி மிஞ்சுவது யாதும் இல்லை; எல்லாம் அவன் செயல்" என்று தத்துவம் பேசிவிட்டுத் தப்பித்துக் கொண்டு வந்து சேர்ந்தேன்.

அதற்குப் பிறகு பிரச்சனையாக இருந்த ஒன்று வழக்காக அர்ச்சனை செய்யப்பட்டது. வழக்கு என்று வந்து விட்ட பிறகு வாய்தாக்களின் பிடியில் அது அகப்பட்டுக் கொண்டது. அது கல்கியின் தொடர்கதை போல் அத்தியாயங்களை வகுத்துக் கொண்டது. இரண்டு பக்கமும் நியாயம் இருக்கிறது என்று தீர்ப்புக் கூற முடியாதவர் கருத்தைத் திணித்துக் கொண்டிருந்தனர்.

அவர்கள் எப்படியும் மருமகளைக் கொண்டு வந்து வாழ வைப்பது என்பதில் ஆர்வம் காட்டினர். அச்சகத்தாரும் நிச்சயம் ஒரு நாள் தன் மகள் இடக்கு எது பேசினாலும் அந்த மாடி வீடு போய்ச் சேர்வாள் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆனால் உதயபானுவின் முடிவை யாரும் மாற்ற முடியாமல் போய்விட்டது.

அஞ்சலை என்ற பெயர் மறந்து 'உதயபானு' என்ற பெயர் தான் பரவியது. நேரில் அவர்கள் என்னை அணுகுவதை விட்டு விட்டனர். எனக்கும் இதில் ஈடுபட நேரமில்லாமல் போய் விட்டது.

''பேப்பர் படிக்கவே நேரம் இருப்பதில்லை'' என்று சொல்லிக் கொள்ளும் பெருமைகள் என்னைச் சூழ்ந்து விட்டன. அப்படியும் ஒரு சிலர் பெருமைப் படுத்திக் கொண்டு ஞானசூனியர்களாக வாழ்வதை நான் பார்த்திருக்கிறேன்.

நீதிமன்றம் அவசரப்பட்டு அநீதியான தீர்ப்பு வழங்கவில்லை. வக்கீல்கள் அவர்கள் வாதங்களைப் பெருக்கிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு அந்தப் பெண்ணை வாழ வைக்க வேண்டும் என்று அக்கரை எழவில்லை. விவாகரத்து வாங்கிக் கொடுத்தால்தான் அவர்களுக்கு காசு; இல்லாவிட்டால் அவர்கள் தொழிலுக்கு மாசு. அதை எடுத்து நடத்தியவர் பெயர் சின்னராசு.

முடிவைப்பற்றி அவளும் கவலைப்படவில்லை. விடைத்தாள் எழுதும் தேர்வு முடிவுகளில் மட்டும் அக்கரை காட்டி வந்தாள். பல்கலைக்கழகம் எழுதும் பாடங்கள் அவளுக்கு உரிய காலங்களில் தவறாமல் வந்து கொண்டிருந்தன.

ராமனுசம் தெருவில் இருந்து கடிதங்கள் வரும் என்று அவள் பெற்றோர்கள் எதிர்பார்த்தார்கள்; ராமானுசம் நிறுவனத்திடமிருந்து பாடங்கள் வந்து கொண்டிருந்ததால் கணக்கில் இவள் மேதை என்று காட்டிக் கொள்ள இந்தக் கடிதங்கள் பயன்பட்டன.

ஆறுமுகத்தின் அச்சகம் திடீர் என்று சுருசுருப்பை எட்டியது. ''ஓவர் டைம்'' செய்து தொழிலாளர்கள் காசு மிச்சப்படுத்தி வந்தார்கள். இந்த அச்சகத்துக்கு வேலை செய்வதற்கு அடுத்த அச்சகத் தொழிலாளர்களும் ஆர்வம் காட்டினர்.

'மகளிர் குரல்' என்று ஒரு பத்திரிகை இங்கு அக்சிடப் பட்டது. அதில் அவ்வப்பொழுது நீதிமன்ற வழக்குகளும், வக்கீல்களின் வாதமும், அஞ்சலையின் பிடிவாதமும் மாதா மாதம் வெளி வந்து கொண்டிருந்தன. மகளிர் இயக்கம் ஒன்று உருவாக்குவதற்கு இப்பத்திரிகை மிகுதியும் துணை செய்தது.

இந்தக் குழந்தையைச் சுற்றியே வாதம் நீண்டு கொண்டிருந்தது.

''குழந்தையை யார் வைத்துக் கொள்வது''.

''தொட்டியில் போட்டு விடலாம்'' என்று பட்டென்று பேசினாள் உதயபானு.

''உனக்கு ஏன் இந்தக் கெட்ட எண்ணம்'' என்று கேட்டனர்.

அவள் ஏன் இப்படி மிருகமாக மாறினாள் என்பது இப்போதுதான் விளங்கியது.

''இந்த நாட்டில் ஒரு பெண் பிறக்க வேண்டுமானால் அது லட்சங்களோடுதான் பிறக்க வேண்டும். லட்சணத் தோடு பிறக்கத் தேவை இல்லை'' என்ற கொள்கை உரு

வாகி வருவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பது தெரிந்தது அவள் சீற்றத்துக்குக் காரணம் விளங்கியது.

''அவள் மாற்றத்துக் காரணம் யாது''

குழந்தை பிறந்த செய்தி சொல்லப்பட்டது.

''லட்சங்களைப் படைத்திருக்கிறாளா?என்ற மாமனார் வீட்டில் இருந்து எழுந்தது ஓர் எதிரொலி;அந்த எதிரொலி தான் இந்த விரிசலை ஏற்படுத்தியது என்பது தெரிந்தது.

வாழ்த்துதலை எதிர்பார்த்தாள்; அதற்கு மாறாகத் தாழ்த்துதல் தான் கிடைத்தது. தன்னையோ தன் பெற்றோர்களையோ அவர்கள் இழிவு படுத்தியதை அவளால் தாங்கிக் கொள்ள முடிந்தது. புதிய முளை அதைக் களையாகக் கருதியதை அவளால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தினாள். பிறக்கும் போதே பெண்ணினத்துக்கு ஒரு எதிர்ப்பா? அதுதான் அவள் சீற்றத்துக்குக் காரணமாக விளங்கியது என அறிய முடிந்தது.

''அவள் எதிர்காலம்?''

''அவள் நடத்தும் 'மகளிர் குரல்'; அதுதான் பதில் சொல்ல வேண்டும் அதைப் பற்றி நான் கவலைப்படுவதை விட்டு விட்டேன்.

# அதிர்ச்சி

-1-

''எப்படிடா இருக்காரு உன் மைத்துனர்?'' என்று கேட்டேன்.

''அவர் காந்தி சீடர்; எதற்கும் பிரயோசனம் இல்லை'' என்று பதில் சொன்னான் ரகுராமன்.

ரகுராமனும் நானும் ஒன்றாகப் படித்தவர்கள். அவன் என்னைவிடப் படிப்பில் கெட்டிக்காரன். நிறைய மார்க்கு வாங்குவான். மெடிக்கல் சீட்டுக் கிடைத்தது. டொனேஷன் கொடுக்கத் தேவை இல்லாத காலம். சாதி பேதம் தலை காட்டாத சூழ்நிலை. சிபாரிசு மட்டும் கொஞ்சம் தேவைப்பட்டது. தேர்வாளர்கள் யாராவது

தெரிந்தால் சொல்லி வைத்தால் அஞ்சோ, பத்தோ மார்க்குகள் சேர்த்து மேலே இழுத்து வந்தார்கள் அதுகூட இவனுக்குத் தேவையில்லை. 'மெரிட்' இருந்தது. அதனால் இவனுக்கு இடம் கிடைத்தது.

'டேய், இப்ப எல்லாம் எப்படி அட்மிஷன்?' என்று கேட்டான்.

அவனுக்கு இப்பொழுது இங்கு இருக்கிற நிலவரம் அதிகம் தெரியாது. தெரிந்தாலும் தெளிவாகத் தெரியாது. ''ஒன்று வசதி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பிறப்பு முத்திரை இருக்க வேண்டும் இவர்களுக்குத்தான் இடம்''. என்றேன்.

''Donation is our nation என்று கேள்விப்பட்டேன்'' என்றான்.

''அதுதான் இன்றைக்கு நடைமுறை. எல். கே. ஜி. சேர்க்கும்பொழுதே ஆரம்பமாகிறது. அதற்கு என்று சம்பாதிக்கணும்; பட்ஜெட்டில் ஒதுக்கி வைக்கணும்.''

''புரியலையே''

''பையனைப் படிக்க வைக்கிறோம். அவன் பெரியவனாகிறான். தொழில் கல்வியில் சேர்க்கணும். அதுக்குச் சில லட்சங்கள் எடுத்து வைக்கணும்'' என்றேன்.

''வரதட்சணை கொடுமையை விடக் கடுமையாய் இருக்குதே.''

''இதுக்கும் அதுக்கும் அதிக வித்தியாசமில்லை.''

பெண்ணை மாப்பிள்ளை வீட்டிலே சேர்க்கக் கொடுக்கிறது வரதட்சணை. இங்கே கல்வி நிலையத்தில் சேர்க்கிறதுக்குத் தருவது டொனேஷன். பெயரில்தான் வித்தியாசம் என்றேன்.

அவன் தன்னைப் பற்றிச் சொல்ல ஆசைப்பட்டான்

''என்னடா ஏதாவது கொண்டு வந்தியா?''

''கொண்டு வந்தேன். என் அக்கா மகளுக்குக் கலியாணம். அவளுக்குக் கொஞ்சம் செலவு செய்தேன். மனை ஒன்று வாங்கினேன். கட்டிக்கிட்டு இருக்கேன்; முடியலை''

''இவ்வளவுதானா முடிந்தது?''

''அதற்கு மேலே எவனும் வாரிக் கொடுக்கறது இல்லை. அமெரிக்காவா? நிறையக் கொண்டு வருவதற்கு? அங்கே கூட இனிமேல் தலைஎடுக்க முடியாது. ஏகப்பட்ட வரி ஏத்திட்டாங்க.''

''நீ ஏண்டா அமெரிக்கா போகலே?''

''விசா எப்படிக் கிடைக்கும்? அந்தஊர்ப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா போயிருக்க முடியும்''.

''அதுக்குன்னு சில பெண்கள் இருக்கிறார்களாமே?''

''அதுவா? விசா வாங்க அவள் உதவுவாள், அவளைக் கல்யாணம் பண்ணிஇட்டுப் போய் விடலாம். அதற்கப்புறம் அவள் விவாகரத்து செய்து கொள்வாள். அதற்கு அவளுக்கு "பீசு" தரணும்''.

''ஆச்சரியமாக இருக்கே? இப்படியும்ஒரு தொழிலா?''

நல்லதுதானே. அவளைக் கட்டிக்கிட்டு நாம் என்ன செய்யமுடியும்?'' என்று அவன் அபிப்பிராயம் தெரிவித்தான்.

''அது போகட்டும். உங்க மைத்துனரைப் பற்றி என்னமோ சொல்ல வந்தியே? என்ன அது?''

''இந்தக் காலத்திலே எவனாவது மேல் வரும்படி இல்லாம வாழ முடியுமா? வந்த இடத்திலே கைகட்டி கிட்டு இருக்கமுடியுமா?''

''அப்படி இருந்தால் அது அபூர்வ ராகம்தான்.''

''அதைத்தான் காந்தியின் சீடர் என்று சொன்னேன்''.

''எப்படி உனக்கு வரும்படி?''

''ஆண்டவன் அளந்தபடி.

ஏதோ நடக்குது; கிழம் கட்டைகளைக் கவனிக்கிறேன். அதிலே நான் ஸ்பெசலிஸ்ட்.

''அவனவன் குழந்தை வைத்தியத்திலே ஸ்பெசலிஸ்டா வரான்? நீ முதியவர் வைத்தியத்தை எடுத்துட்டியே?''

இதுதான் தொடர்ந்து வரும்படி தருவது; அவர்களுக்குத்தான் தொடர்ந்து வைத்தியம் செய்துகிட்டிருக்கலாம். ஏதாவது மாறிமாறி வந்துகிட்டிருக்கும் அவர்களுக்குச் செலவு அதிகம் இல்லை. வைத்தியத்துக்குச் சேர்த்து வச்சுகிட்டு இருக்காங்க; செலவு செய்யுதுங்க;'

"உனக்கு யார் இந்த ஐடியா கொடுத்தது?

"மேல் நாட்டிலே முதியவருக்கே மருத்துவமனைகள் நிறைய இருக்குது. இங்கே இல்லை. இங்கே தேவை இல்லாமல் இருந்தது. இன்னிக்கு மருத்துவம் முன்னேறி விட்டது. வாழ்நாள் அதிகமாகிவருகிறது".

"இவங்க எல்லாம் இருந்து என்ன செய்யப் போறாங்க?"

"யார் தான் இருந்து என்னத்தைச் சாதிச்சிக்கிட்டு இருக்காங்க? மக்கள் தொகை பெருகிவிட்ட தேசத்திலே மனுஷனுக்கு மதிப்பே கிடையாது. சின்னவங்களும் ஒன்னும் செய்றது இல்லை; உக்காந்துக்கிட்டு சாப்பிடுதுங்க வயசுகளும் வெற்றுக்கு வாழ்ந்துகிட்டிருக்கு" என்று அவன் பார்வையில் பட்டதைச் சொல்லுகிறான்.

"வேலை இல்லை".

"வேலை இருக்குது.

ஓய்வை அதிகம் விரும்புகிறான். அதிலே சுகம் கண்டு விட்ட தேசம் இது.

"எப்படி சொல்றே?"

"நாங்க எல்லாம் வெளி தேசத்துல சமையலுக்கு ஒத்தாசையாய் இருக்கிறோம். நாங்களே சில சமயம் செய்து விடுகிறோம். இங்கே எத்தனை ஆண்களுக்குச் சமையல் தெரியும்?

''கிட்டே கூடப் போக மாட்டார்கள்''.

''காப்பி வைக்கக் கூட அடுப்புப் பற்ற வைக்கத் தெரியாது. கேஸ் அடுப்புதான் இருந்தாலும் அதுவாவது பற்ற வைக்கத் தெரியுமா?''

''தெரியாது''.

''வீட்டுலே தான் இருப்பான் அவன் கத்துக்க மாட்டான்'' என்றான்.

''இனிமேல் அவன் வீட்டிலே தான் கிடப்பான்; பெண் தான் வேலைக்குப் போவாள், காலம் மாறும்'' என்று பதில் சொன்னேன்.

''ஆமாம்; நம்ம கூடப் படிச்சுக்கிட்டு இருந்தானே 'ரங்கன்', என்ன ஆனான்? எப்படி இருக்கான்?'' என்று கேட்டான்.

''நிறையச் சம்பாதிக்கிறான்; பேட்டை ரவுடியாய் மாறிட்டான். வட்டம், அது, இது, புதுப் பதவி, சாராயம், அதுலே ஆதாயம். அவன் தான் இலஞ்சம் வாங்கி மேலே கொடுக்கிறான்; சதா வீட்டிலே கும்பல் தான்; உங்களுக்குக் கூட இவ்வளவு 'கிளைண்டுகள்' வரதில்லே. அப்பாயிண்ட்மெண்டு முடிவு செய்துகிட்டுத் தான் போகணும்'.

''இப்படியும் ஒரு பிழைப்பா?

இதெல்லாம் இந்திய சுதந்திரத்தின் வளர்ச்சி பெற்ற நிறுவனங்கள்'' என்றான் அவன்.

இப்படி அவன் என்னிடம் பேசிவிட்டுப் போனான். நீண்ட கால இடை வெளிக்குப்பின் சந்திக்கிறோம். மழை விட்டு விட்டுப் பெய்வது போல் அங்கொன்று, இங்கொன்று தொட்டுத் தொட்டுப் பேசுவான்; கேட்பதற்குக் குளிர்ச்சியாக இருந்தது புதுமழை போல.

''ஏன்? இந்த நாட்டை விட்டு வெளி தேசத்துக்குப் போயிட்டே?''.

''தொழில் தேர்வுக்குப் பணம் கொடுத்தால் தான் ஆகும் என்று சொன்னார்கள். இவனுக்குக் கொடுப்பதை விட ஏஜெண்டுக்கே கொடுத்தால் போகுது என்று கொடுத்தேன். அவன் இன்டர்வியூக்கு அனுப்பினான். அவர்கள் பணம் வாங்காமலேயே எடுத்துக் கொண்டார்கள்''.

''நம்ம அமைச்சர்கள் யாரும் வாங்க மாட்டார்களே'' என்றேன்.

சிரித்தான்.

'அவன் எதற்குச் சிரித்தான்' என்று புரியவில்லை.

''எதற்காகச் சிரிக்கிற''?

''உண்மை பேசறியே அதுக்குத்தான்''.

''நிச்சயம் வாங்க மாட்டார்கள். இதைவிடப் பெரிய காண்டிராக்ட், லைசன்சு, பர்மிட்டு அதிலே கிடைக்கும் போது இதிலே ஏன் வாங்கப் போகிறார்கள்?'' என்றேன்.

''விசயம் அப்படியா?''

''ஒரு அமைச்சரின் கை சுளுக்கிக் கொண்டதாம்''.

' எதனால்''?

''பணம் வாங்கி, வாங்கிச் சுளுக்கிக் கொண்டதாம். டாக்டர் அட்வைசு செய்தார் குறைத்துக் கொள்ளும்படி; அதிலே இருந்து குறைத்துக் கொண்டாராம்.

மற்றும் நம்ம அமைச்சர்களைப் பற்றி அவதூறு பேசக் கூடாது; சட்டப்படி குற்றம். அவதூறு வழக்குப் போடக் கட்சியிலே நிறையப் பணம் ஒதுக்கிவச்சு இருக்காங்க''.

மானநஷ்ட வழக்குகள் ஊழலைக் காப்பாற்றும் தூண்கள் ஆகிவிட்டன; இன்றைய இலஞ்ச ஊழலுக்குச் சட்டப் பாதுகாப்புத் துணை செய்கிறது. யாரும் ஒன்றும் அசைக்க முடியாது'' என்று விளக்கினேன்.

''நல்ல ஆட்சி வேண்டுமானால் துணிந்து சொல்ல வேண்டியது தானே''!

''நல்ல ஆட்சி யாரும் எதிர்பார்க்கலே; அப்படி எதிர் பார்க்கிறவங்க ஒன்றாகச் சேர்வது இல்லை. அவர்கள் சில பேருதான், அதுவும் லிமிடெட் கம்பெனி தான்; இதைப் பற்றி எல்லாம் பேசறோம் அவ்வளவு தான்'' என்றேன்.

''என் மைத்துனர் நல்ல பதவியிலே இருக்காரு யாருக்கும் உதவி செய்யறது இல்லே. அதனாலே அவர் மேலே கடுப்பு; ஒருத்தர் திராவகம் வீசக்கூட முயற்சி செய்தாராம். தப்பித்துக் கொண்டார்''.

''ஏன் அவ்வளவு தூரம் கடுமையாக நடந்துகணும்? ராஜினாமா செய்து விட்டு வெளியேற வேண்டியது தான். காந்தி குல்லா, இவருக்குச் சோறு போடுமா?''

''ஐ.பி.எஸ். அதிகாரி இந்தப் படத்தைப் பார்த்தீங்களா? ஒரு பெண் அதிகாரி துணிந்து மேல் இருப்பவரைக் கவலைப்படாமல் அக்கிரமங்களை எதிர்க்கிறாள். அந்த மாதிரி படங்கள் வருவதால் நான் மாஜி ஐ.ஏ.எஸ்.கள் உற்பத்தியாகிறார்கள். நல்லாட்சி மன்றங்கள் அமைக்கிறார்கள் அவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். உங்கள் மைத்துனர் மாதிரி காந்தி சீடர்கள் கையைக் கறைப்படுத்திக கொள்ளாமல் நிமிர்ந்து நிற்கிறார்கள்'' என்றேன். தான் ஒரு நேர்மையான அதிகாரியாக உன் மைத்துனர் இருப்பதற்கு நீ பெருமைப்பட வேண்டும்''. என்று தொடர்ந்தேன்.

''அதற்கு என் உதவியை எதிர்பார்க்கக் கூடாது நான் உதவி செய்யவில்லை என்றால் அவர் மூத்த மகள் சாவித்திரி ஒரு சத்தியவானைக் கைப்பிடித்திருக்க முடியாது''.

''நாலுபேர் கைதூக்கி விட்டால்தான் நல்லது'' என்றேன்.

''ஏன் அவர்கள் தன் காலிலே நிற்கக் கூடாதா?''

''சுமை அதிகமாகும் போது மற்றவர்களை ஒரு கை பிடிக்கச் சொல்வதில் தவறில்லை''

''பெண்ணைப் பெற்று விட்ட பிறகு எந்தத் தவறும் செய்ய மாட்டேன் என்பது வீண் பிடிவாதம். அதற்கு அவளை வசதியான இடத்திலே தர ஆசைபடக்கூடாது. கேட்டவனுக்குக் கைப் பிடித்துத் தந்து இருக்க வேண்டும்'' அவன் பேசுவதை நிறுத்த வழி தோன்றவில்லை.

''நீங்கள் சொல்வதும் வாஸ்தவம் தான்'' என்று ஆமோதித்த பிறகுதான் அவன் அடக்கம் காட்ட முடிந்தது. அவ்வளவு நல்ல அதிகாரி இருக்கிறார் என்றால் தவறு செய்யாதது அதிசயமாகத் தான் இருந்தது. பாரத நாடு பழம் பெரும் நாடு என்ற தருக்கு ஏற்பட்டது. அவரைப் பார்க்க வேண்டுமென்று ஆசை தோன்றியது.

-2-

''உங்களுக்கு அவரைத் தெரியுமா?'' என்று பேசிக் கொண்டே எனக்கு வேண்டியவர் என்னைத் தேடி வந்தார்.

''தெரியாது'' என்றேன்.

''டாக்டர் உம்முடைய நண்பர் என்று பலபேர் சொன்னார்கள். அவருக்கு மைத்துனர் இவர். அவர் சொன்னால் இவர் கேட்பார்'' என்று உபாயம் கூறத் தொடங்கினார்.

அதிலுள்ள அபாயத்தை விளக்கினேன். அதனாலேயே அவர்களுக்குப் பேச்சு வார்த்தை இல்லை என்று கேள்வி'' என்று சொல்லி வைத்தேன்.

''என்னா சார் மனுஷன் பிழைக்கத் தெரியாதவன்'' என்று கசந்து கொண்டார்.

''நாம் நேர்மையாக இருந்தால் அவர்கள் பிழைப்பும் ஒழுங்காக இருக்கும்''

''அது இல்லே சார், இவர் மட்டும் ஒழுங்காக இருந்தால் போதுமா?''

''இருந்து போகட்டுமே''

''இவர் கீழே இருக்கிறவன் அவனவன் அறுவடை செய்யறான். இவர் மட்டும் நேர்மை என்று கைகட்டி இருந்தால் அவருக்கும் நல்லதல்ல; மற்றவர்களுக்கும் நல்ல நல்ல''.

''அவர்கள் வாங்கும்போது அவர்களைக் கொண்டே சாதிக்கலாமே?''

''இவர் சில பைல்களில் கையெழுத்துப் போட வேண்டியிருக்கிறது. அங்கே வந்து உதைக்குது; வாங்கறவன் திருப்பிக் கொடுக்க மனசு இல்லே. வேதனைபடறான் ஒரே எரிச்சல்''.

இந்தப் புகைச்சலைக் கேட்டு எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

''நான் என்ன செய்ய வேண்டும்? என்கிறாய்''.

''நீங்கள் நேராகப் பேசிப் பாருங்கள்; மசிவார்'' என்று அறிவுரை தருகிறார்.

''நான் எப்படிப் போக முடியும்?''

''டாக்டரின் நண்பர் என்று போங்கள். எல்லாம் சரியாகி விடும்'' என்கிறார்.

என் வீட்டுக்குக் கார்ப்பரேஷன் அதிகாரி ஒருவர் காத்துக் கொண்டிருந்தார். என் நண்பரைச் சற்றுப் பொறுத்து வரச் சொன்னேன். அவர் நாகரிகமாக நடந்து கொண்டார்.

''சார், நான் கார்ப்பரேஷனிலிருந்து வந்திருக் கிறேன்''.

''நேரே அங்கிருந்துதான் வருகிறீர்களா? வருக, தங்கள் வரவு நல்வரவாகுக'' என்று கூறி வரவேற்றேன்.

''எங்கள் கடமை'' என்றார்.

''என்ன தேவை?'' என்றேன்.

''உங்கள் வீட்டில் எத்தனை குடித்தனம்'' என்று கேட்டார்.

''நாலு போர்சன்; எட்டுக் குடித்தனம்'' என்றேன்.

''என்ன தருகிறார்கள்?''

''ஒரு மாசம் தருவார்கள்; மற்றொரு மாசம் இல்லை என்பார்கள். சில சமயம் அவர்கள் கஷ்டம் தெரிந்து வாங்காமலும் விட்டு விடுவேன். அது என் விருப்பு வெறுப்பை ஒட்டியது'' என்றேன்.

''சார். கிண்டலாப் பேசறிங்க''

''உனக்கு ஏன் அந்த விசயம்? வீடு எத்தனை அடி நீளம் எத்தனை அடி அகலம் பார்த்துக் கொள். அதற்கு ஏற்றபடி வரிபோட்டுவிட்டுப்போயேன். யார்? எது என்று விளக்கம் கேட்பது தேவையற்றதாகப் படவில்லையா?

''முடியாது? சார். அதற்கு எதிர்ப்பு? வழக்கு நடந்து கிட்டிருக்கு''

வீட்டையும், சவடையும் ஒன்று சேர்க்க முடியாது பங்களா பெரிசா இருக்கும். அதிலே இரண்டு பேருதான் இருப்பாங்க. ஏதோ பணம் இருக்குது. கட்டிப்போடு வார்கள்; தோட்டம் அது வேறு இடம். பரப்பு எல்லைக் கணக்குப் போட்டால் பத்தாயிரம், இருபதாயிரம் தர வேண்டி இருக்கும். அவர்களுக்கு வரும்படி இருக்காது. அவர்கள் எப்படி சார் கட்டுவார்கள். சொந்தக்காரர் இருக்கிறார். அவர் பெரிய வீட்டிலே இருக்கிறார். அது அவர் உரிமை அதற்காகத் தண்டிக்க முடியுமா?

''நீங்க ஏன் வரி வாங்கறீங்க''

''தண்ணீர், கால்வாய், தெரு சுகாதாரம், குப்பை, விளக்கு, இந்த நகரத்துப் பராமரிப்பு இதற்கெல்லாம் பணம் தேவைப்படுகிறது. வாங்காமல் என்ன செய்வது?

''இன்னிக்கு வீட்டு வசதி இல்லாமல் பல பேரு நெருக் கிக்கிட்டு வாழறாங்க. ஏன் தெரியுமா?''

''வீடு கிடைக்காதது தான்''

''இல்லை, குடிக்கூலி அதிகம் கேட்கிறார்கள்''

வீட்டுக்காரனைக் கேட்டால் அவன் விலைவாசி உயர்ந்து போச்சு என்பான். வரி ஏறிப்போச்சு என்பான். வரி ஏறிப்போச்சு; வரி கட்றதா? வட்டி கட்றதா என்று தான் கேட்பான். அவனவன் லோன்லே கடன்வாங்கி வீட்டக்கட்டிப் போட்டுட்டு வட்டி கட்ட முடியாம திணறான். நீங்க வேறு அவன் மேல வந்து உக்காறீங்க. நீங்க போட்ற வரியை வைச்சு வருமானவரி வேறு அவருக்கு என்ன சார் கிட்டும்? கால் வட்டி கூடக் கிட்டாதே? அப்புறம் எவன் வீடு கட்டுவான்.

''கட்டாமலா இருக்காங்க

இரண்டு அடுக்குன்னு பிளான் வாங்குகிறார். நான்கு அடுக்கு கட்டுவாங்க''.

கட்டவிடுங்க, அவர்களை வாழ விடுங்க. எல்லாரும் பென்சனை நம்பி வாழ முடியறதில்லை. விதவைகள், முதியோர்கள் எல்லாம் போய் ஒரு வீடு இருக்கும். அதுதான் வரும்படி. நீங்க வந்து தொல்லை கொடுக்கறீங்க. திடீர் என்று ஏத்தி விடுறீங்க? அவங்க என்ன செய்வாங்க? ரிப்பன் கட்டிடத்தைத் திருப்பதி மலைபோலச் சுற்றி வர வேண்டியதுதான்''.

''எங்களைச் சரிகட்டி விட்டால் சரியாப் போகிறது? அதுக்குத்தானே நாங்க இருக்கிறோம். நாங்கள் மக்களுக்குச் சேவை செய்யக்காத்திருக்கிறோம். உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவைப்படுகிறது.

சட்டம் ஒழுங்கா, நியாயமா இருந்தால் நாங்கள் எப்படிப் பிழைக்க முடியும். நீங்க சொல்றதைச் சொல்லுங்க; நாங்க முடிஞ்சதைச் செய்யறோம்''.

அவர் இறங்கி வருவதைக் காண முடிந்தது; நானும் இறங்கி வந்தால்தான் சந்திக்க முடியும் என்பதை உணர்ந் தேன்.

-3-

அதற்குள் டெலிபோன் அதிகாரி என்று சொல்லிக் கொண்டு ஒருவர் வந்தார். ''நீங்கள் டெலிபோன் கேட்டி ருந்தீர்களா?- கனெக்ஷன் வந்துட்டுது; விரைவில் வந்து விடும்'' என்றார்.

''நன்றி'' என்றேன். ''ஆனால் கொஞ்சம் கால தாமதம் ஆகலாம். எப்படியும் இந்த மாதத்திற்குள் கொடுத்து விடுவோம். கொஞ்சம் அவசரமாக வேண்டு மானால் எங்களை வந்து பாருங்கள்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

''நன்றி'' என்று சொல்லி அனுப்பினேன். ''ஆபீசர் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். வீடு தேடி வந்து நல்ல சமாச்சாரம் சொல்லி எனக்கு அழைப்பிதழும் தந்து ஆதரவும் காட்டுகிறாரே? இவரல்லவா ஆபீசர்'' என்று அவரைப் பாராட்டிப் பேசினேன். கார்பரேஷன் அதிகாரி சிரித்தார்.

''ஏன் சார்? சிரிக்கிறீங்க?''

''சோழியன் குடுமி சும்மா ஆடாது? சார். வந்தவர் மாமனா? மச்சானா? அவங்ககூட இரண்டு வேளை இருந்து சாப்பிடத்தான் வருவாங்க. நோக்கமில்லாமல் யாரும் உதவி செய்ய மாட்டார்கள்'' என்றார்.

''அப்படியா சொல்றீங்க?''

கையில ஒரு இருநூறு, முந்நூறு எடுத்துட்டுப் போங்க? அதுதான் புத்திசாலித்தனம்''. என்று அறிவுரை தந்து வழி காட்டினார். சரி பார்த்துக் கொள்ளலாம் என்று கூறி அவர் விஷயத்தைத் தொடர்ந்தேன்.

''உமக்கு என்ன வேணும்? தெளிவாகச் சொல்லுங்கள்''.

''மூவாயிரம் குடுங்க போதும். சரி செய்துவிடுகிறோம். ரெவின்யூ அதிகாரிக்குத் தரணும், அதுக்கு மேல் இருக்கிற வர்களுக்குக் கொஞ்சம்; இதெல்லாம் உங்களுக்கு எதுக்கு? மூவாயிரம் போதும். எதையும் தொடலை. இருந்ததை இருந்தபடி விட்டு விடுகிறோம். நீங்க ஒண்ணும் புதுசா கட்டலையே?''

''இல்லை''

''அப்ப நாங்க ஒண்ணும் செய்ய முடியாது'' என்று விளக்கந் தந்தார்.

''தருவதை வாங்கிக் கொள்வேன்'' என்றார்.

அவர் நல்லவராக நடந்து கொண்டார். ஒரு தொல்லை விட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் நான் நடத்தும் வணிக நிறுவனத்துக்காக வணிக அதிகாரிவந்து சேர்ந்தார். அவரும் மிகவும் அக்கரையோடு என் கணக்கு களைப் புரட்டிப் பார்க்க விரும்பினார்.

''நீங்கள் பதிவு செய்வதில் கால தாமதம் செய்து விட் டீர்கள்? என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

''அதுவாவது செய்தேனே? அதை நீங்கள் மதிக்க வேண்டும்''.

''சட்டப்படி நீங்கள் செய்தது தப்புதானே?''

''உங்கள் இஷ்டப்படி நீங்கள் செய்து கொள்ளலாம்''.

''பிறகு நீங்கள் நஷ்டப்படும்படி ஆகிவிடும்'' என்று மிரட்டினார்.

''பதிவு செய்வதற்கு உரிய தொகை கட்டி விட்டேன்'' என்றேன்.

''அது அரசாங்கத்திற்குச் சேர்ந்து விட்டது'' என்றார்.

'மரியாதையாக வெளியே போ' என்றேன்.

அவர் கருகிக் கொண்டே இடத்தைக் காலி செய்தார். தொடர்ந்து மக்களுக்குச் சேவை செய்ய அமர்த்தப்பட்ட தொண்டர்கள் தொல்லை தந்து கொண்டிருந்தார்கள். எரிச்சல் தாங்க முடியவில்லை.

-4-

அவன் மறுபடியும் பழைய நண்பன். விட்ட இடத்திலிருந்து தன் கதையைத் தொடர்ந்தான்.

''யார் சார் அவன்? அன்று உங்கள் வீட்டைப்பற்றி நலம் விசாரிக்க வந்தானே?'' என்று மரியாதை கலக்காமல் கேட்டார்.

''கார்பரேஷன் வரி விவகாரம்'' என்றேன்.

''எப்படிசார் முடிந்தது?''

நாங்கள் பேசிக்கொண்டே இருந்தோம். அதற்குள் அங்கு வட்டச் செயலாளர் ஒருவர் வந்து கட்சித் தொண்டர் என்று கூறிக்கொண்டு வீட்டில் கால் வைத்தார். அச்சிட்ட இரசீதுகள் கச்சிதமாகக் கையில் வைத்திருந்தார். 'நன்கொடை' என்று கைநீட்டினார். அவரை எதிர்த்துக்கொண்டு நான் நிம்மதியாகத் தொழில் நடத்த முடியாது. சொல்லடி படத் தயார். ஆனால் அவர்கள் கல்லடிக்கு அஞ்ச வேண்டியதாயிற்று; கேட்டதை மறுக்காமல் கொடுத்தனுப்ப வேண்டியதாயிற்று. இவர்கள் ஜனநாயகம் தோற்றுவித்த தனி நாயகம். மறுபடியும் நண்பர் தொடர்ந்தார். "எப்படி சார் முடிந்தது"? என்று விசாரித்தார், "சுமுகமாக" என்றேன்.

'அதைத் தான் சார் நான் சொல்றேன். இரண்டு பேரும் ஒத்துப் போகணும்' என்று சொல்லி ஆறுதல் காட்டினார்.

"சட்டத்தை மீறாமல் உதவி செய்தால் யாருக்கும் நஷ்டமில்லை.

கஷ்டம் வராது", என்று விளக்கினார்.

ஏதோ ஒரு புது உண்மை சொல்வது போல இருந்தது.

'சட்டத்தை மீறி யாரும் உதவி செய்யறதே இல்லை, சட்டத்தைச் சாதகமாக ஆக்கி உதவி செய்வதுதான் இலஞ்சம்' என்று விளக்கம் தந்தார்.

இந்தச் சொல்லே எங்களுக்கு ஒரு வியப்பைத் தந்தது; எப்படி இந்தச் சொல் வந்திருக்கும்? என்று யோசித்துப் பார்த்தோம். 'வெள்ளைக்காரன் காலத்தில் புகுந்த சாபக் கேடு, இது அந்நியர் ஆட்சியில் அவர்கள் காட்டிச் சென்ற

குறுக்குவழி என்று முடிவு செய்தோம். இதை நம்ப மாட்டீர்கள். 'lump sum' இந்தச் சொல் தான் 'இலஞ்சம்' என மருவி விட்டது என எங்கள் பேச்சில் தெளிவு செய்து கொண்டோம். மறுபடியும் அவர் தம் சொந்தப் பிரச்சனைக்கு வந்து சேர்ந்தார்.

''பில் வரப் பத்து நாளாகும்; எங்களுக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது.

''எங்களுக்குப் பெரிய இக்கட்டு இந்தப் பில் காலந் தாழ்த்துவதால்'' என்றார்.

நாங்கள் என்ன சொந்தப் பணம் போட்டா தொழில் செய்கிறோம்?

வட்டிக்குப் பணம் வாங்கி முதலீடு செய்கிறோம். தவணையில் கட்டாவிட்டால் தந்தவர்கள் செய்யும் கெடுபிடி தாங்க முடியாது. அதனால் கூடுதல் வட்டிக்கு வாங்குகிறோம். இவை எல்லாம் சேர்ந்து தான் விலைவாசி கூடுதலாகிறது. உண்மையில் நிறுவனங்கள் பில்களைத் தாமதம் செய்யாமல் இருந்து பட்டுவாடா செய்தால் தொழில்கள் எல்லாம் நசிந்து போகாமல் தலை எடுத்து வாழும். இந்தப் பிரச்சினையை இதுவரை யாரும் கவனிக்காதது கொடுமையானதுதான். நாங்கள் என்ன விரும்பியா கொடுக்கிறோம். அல்லது மிகுதியாகியா கொடுக்கிறோம். நாங்கள் விடும் கண்ணீர் அவர்களுக்குக் கொடுக்கும் இலவசத் தொகையை நனைத்துத்தான் கொடுக்கிறது; ஊழல், ஊழல் என்று கோஷம் போடுகிறார்கள். ஆனால் கால தாமதத்தைத் தவிர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் நாங்கள் கொடுத்

துக்கொண்டே இருப்போம். அரசு அதிகாரியைக்கெடுத்து கொண்டே இருப்போம். அது 'மாமூல்' என்ற முத்திரையைத் தந்துவிடும். அதனால் தான் டாக்டர் மைத்துனரிடம் சொல்லி உங்கள் உதவி செய்ய வேண்டுகிறோம். பணம் வாங்காவிட்டால் போகிறது. வாங்குகிறவர்களைக் கண்டு கொள்ளாமல் இருந்தால் போதும். அதற்குத்தான் வந்தேன்'' என்று வருகையின் காரணத்தைக் கூறினார்.

அவர் சொல் நியாயமாகப் பட்டது. இவர் உதவி செய்தாலும், செய்யாவிட்டாலும் காரியங்கள் ஒழுங்காக நடக்கின்றன. இவரால்தான் நடந்தது என்று காட்டிக் கொண்டால் போதும். இல்லாவிட்டாலும் இவரால் கெடுதி இல்லையென்று காட்டிக் கொண்டால் அதுவே பொருள் வந்து குவிவதற்கு வாய்ப்புத் தரும். அரசாங்கத்திற்கு நஷ்டம் உண்டாக்கக் கூடாது. விதிகளை மீறக் கூடாது. அப்பொழுது பணம் வாங்கினால் என்ன தவறு' இருக்கிறவன் கொடுக்கிறான். வாங்கறதிலே தவறு இல்லை'' என்று என்னைச் சமாதானம் செய்து கொண்டேன்.

''எங்கடா போயிட்டு வந்தே?'' என்று கேட்டேன் என் மகனை.

''படம் பார்த்து விட்டு வருகிறேன்''.

''டிக்கெட் எப்படிக் கிடைத்தது?''

''கியூவை ஒழுங்காகப் பாதுகாத்துக் கொள்ளப் போலீஸ் காரர் இருந்தார். அவருக்கு 'டிப்ஸ்' தந்தேன் அவ்வளவு தான் 'Q' 'Y' ஆகிவிட்டது. அவர் நைசாக என்னைத் தள்ளிவிட்டார்'',

''அதுக்கு ஏன் போலீசு?''

''காசு கொடுத்து அவரை வாங்க முடியாதவர்களைக் கட்டுப்படுத்த'' என்று சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே போனான்.

''அப்படி யார்ரா உன்னைப் படம் பார்க்கச் சொன்னது''.

''அடிக்கடியா போறோம்? எப்போதோ ஒரு முறை. கியூவிலே நின்று டிக்கெட் வாங்கக் காலையிலே சோறு கட்டி எடுத்துக் கொண்டு போக வேண்டியது தான்'' என்றான்.

''என்னடா அப்படி அந்தப் படம்''?

''தனி மனிதனும் சமுதாயமும்''

''இது என்னடா புதிய கதை''?

''தனி மனிதன் ஒழுங்காக இருந்தால்தான் சமுதாயம் ஒழுங்காக இருக்கும் என்று கதை சொல்கிறது''.

''அதைப் பார்த்து என்ன தெரிஞ்சுக்கிட்டே?''

''கொஞ்சம் வளைந்து கொடுத்தால் வாழ முடியும் இல்லையேல் அழிய வேண்டியதுதான். காரணம்? நேர்மை யாக வாழ்ந்தால் அழிந்து போகிறான். அதனால் கொஞ் சம் வளைந்து கொடுத்து வாழக்கற்றுக் கொண்டேன்.

அரிச்சந்திரன் படத்தைப் பார்த்தால் அரிச்சந்திரனாக வாழ்ந்தால் என்னென்ன தீமைகள் உண்டாக முடிகிறது

என்று அறிய முடிகிறது. அதைப் போலத் தான் இந்தக் கதையும் இருந்தது.

'காந்தி' அவரால் தானே மகாத்மா ஆக முடிந்தது? அவர் இறுதியில் என்ன ஆனார்? சுட்டுக் கொல்லப் பட்டார். இவை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டிய பாடங்கள்'' என்றான்.

' நீ பார்த்த கதை என்னதான் முடிவு''?

''கதாநாயகன் நேர்மையாக வாழ இறுதிவரை போராடுகிறான். குழந்தை மருத்துவமனையில் கிடக்கிறது. கத்தியை வைத்து கொண்டு டாக்டர் மிரட்டுகிறார். இன்னும் நாலே நாளில் ஆபரேஷன் செய்யாவிட்டால் குழந்தையைப் பார்க்க முடியாது. அதற்குப் பத்தாயிரம் தேவை என்கிறார்.

மனைவி அவனைத் தொளைத்து எடுத்து விடுகிறாள். அவர் ஒரு சிறு தவறு செய்தால் நிறுவனத்துக்கு இலட்சத்துக்கு நஷ்டம். தனக்குப் பத்தாயிரம், கோடிக் கணக்கில் சொத்துடைய நிறுவனத்தில் இந்த இலட்சங்கள் ஒன்றும் பிரமாதமில்லை. இவர் தான் தவறு செய்தார் என்று கண்டுபிடிக்க முடியாது என்பதை அறிவுறுத்துகிறாள்''.

'என்னதான் ஆயிற்று?'

''அவனால் தவறு செய்யவே முடியவில்லை.

'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்' என்பது பொய்யல்ல. அவரை எந்த அதிர்ச்சியும் மாற்றவில்லை அவர் தலையில் இடி விழுந்தாலும் அதை அவர் பொருட்படுத்துவதாக இல்லை. மறுபடியும் ஒரு அரிச்சந்திரன்

அவர் செயலில் வாழ்கிறான். ஒரு காந்தி அவர் பின்னால் நின்று உறுதி தருகிறார். சான்றோர்கள் வாழ்வு அவனைச்சரிவு ஆகாமல் தடுக்கிறது. வள்ளுவம் அவன் செயலில் வாழ்கிறது.

'அந்தக் குழந்தை என்ன ஆயிற்று?'

''அதுதான் வியக்கத்தக்க முடிவு ஆபரேஷன் இல்லாமலே பிழைத்துக் கொள்கிறது. இது மருத்துவரின் வீண் மிரட்டல். தொழில் உத்தி; 'அறம் வெல்லும்' என்ற நம் பிக்கைக்கு அவர் வாழ்க்கை உதாரணமாக அமைந்தது'' என்று கூறி முடித்தான்.

''நேர்மை வெற்றி தானே பெற்றது''? என்ற வினாவினை நான் தொடுத்தேன்.

''கதை தீமை வென்றது என்று முடித்தால் அது ஓடாது. உண்மைகளைச் சொல்லக் கதை தேவையில்லை. எப்படி நடக்க வேண்டும் என்பதைக் காட்டுவது தான் கதை. அதை மக்களும் புரிந்து கொள்கிறார்கள். எதிர்மறையான பதில்கள் தான் ஏற்படும்.

அந்தக் குழந்தையின் இறப்பை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது. அவருக்கு இருந்த உறுதி மற்றவர்களுக்கு இருக்க வாய்ப்பில்லை. அதனால் நேர்மை தான் வெல்லும் என்று முடிந்தாலும் அது வெல்லாது என்பது தான் எடுத்துக் கொள்ளும் செய்தி'' என்று விளக்கம் தந்தான்.

''நீ செய்தது தவறு என்று தெரியவில்லையா?''

"தவறு ஒன்றுமில்லை; என்னால் ஒரு ஆள் பிந்திப் போகிறான். அவ்வளவு தான்; அந்தப் போலீசுகாரர் சம்பளத்தை மட்டும் நம்பி எப்படி வாழ முடியும்? சட்டங்கள் கடுமையாக ஆக ஆக அதிகாரிகளுக்கு வாய்ப்புகள் மிகுதி".

'மதுவிலக்குத் துறை' என் கண்முன் நின்றது.

மது விலக்க முடியாது; அதனால் அதிகாரிகள் பெறும் குறுக்கெழுத்துப் போட்டி நிற்கவும் பெறாது என்பது என் நினைவில் நின்றது'.

'போய்ப் படி' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தேன்.

என் வீட்டுக்கு வந்த நண்பர் எனக்கு வேண்டியவர். அவர் அப்பா இல்லாமலிருந்தால் நான் இந்த அளவுக்கு உயர்ந்திருக்க முடியாது. அவர் சொல்லித்தான் அற நிலையத்தாரிடம் வேலை கிடைத்தது. 'நம்ம பையன்' என்று என்னைச் சிபாரிசு செய்து உத்யோகம் வாங்கித் தந்தார்.

அறநிலையத்தார் என்று கூறும் போது ஒரு கோவில் நிருவாகத்தினர் ஒரு இளைஞனைத் தூக்கில் மாட்டி விட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகப் பரப்பிய செய்தி நினைவிற்கு வருகிறது. தங்கமான பையன். திருக்குறளை நம்பிக்கெட்டு விட்டான். கோயிலில் முக்கியமான நகை ஒன்று இல்லை. அதை விற்றுவிட்டு அந்த இடத்தில் போலி நகை வைத்து இருந்தார்களோ இல்லையோ தெரியாது. அவன் அக்குறையைச் சுட்டிக் காட்டினான். அவனை விட்டு வைத்தால் அவன் அம்பலப்

படுத்தி விடுவான் என்று அவனைத் தீர்த்துக்கட்டி விட்டார்கள். பாவம்! அப்பாவி. உலகம் தெரியாவன். அவன் எனக்குத் தெரியும். என் வீட்டுப்பக்கத்தில் அறை எடுத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குக் கோவில் நிருவாகத்தில் இடம் கிடைத்ததே என்று சந்தோஷப் பட்டேன். அவன் திருவாசகம் படிக்காமல் இருக்க மாட்டான். அவன் திருவாசகம் படித்தது தவறு என்று பட்டது. உலகத்தைப் படித்து இருக்க வேண்டும். நாம் வாழும் உலகம் போலிகள் மிக்கது. கொள்ளையர்கள் மிகுதி. முகமூடிக் கொள்ளையர்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருகிறோம் என்பதை அவனால் உணர முடியாமல் போயிற்று.

என்னை வேலைக்கு எடுத்துக் கொண்ட அறநிலையத்தார் வாக்கெடுப்பில் வந்தவர் சிலர். அரசாங்கம் அனுப்பி வைத்தவர் சிலர். பாரம்பரிய வாரிசுகள் சிலர் அவர்களுள் ஒருவர் வழக்கறிஞர். இப்பொழுது வழக்கு உரைஞர் என்று தெளிவாகப் போட்டுக் கொள்கிறார்கள். அறிஞர் என்பது மிகைப்பட்ட சொல்லாகும். இவர்கள் சாதி அடிப்படையில் நீதி நிலை நாட்டினர். அவரவர் சாதிக்காரர்களுக்கு நன்மை செய்வது என்று ஊறி இருந்த காலம் அது. எனக்கு யாரும் சிபாரிசு செய்யத் தக்கவர் கிடைக்கவில்லை. இவர் அப்பா தான் எனக்காக அறங்காவலர் சிலரிடம் சொல்லி 'இவன் நல்ல பையன்; நமக்கு வேண்டியவன். உதவி செய்யணும்' என்று கேட்டுக் கொண்டார்.

அந்தக் காலத்திலே உத்யோகம் தருவதற்கு யாரும் இலஞ்சம் வாங்கியது இல்லை. இது பொற்கலாம் இப்பொழுது எந்தத் துறையில் இது புகவில்லை என்று துருவித் தேட வேண்டியதாகி விட்டது.

ஏழை படும் பாடு என்னும் கதை விக்டர்யூகோ எழுதியது. சுத்தானந்த பாரதியார் தமிழாக்கம் செய்துதந்தார். படம் பல நாள் ஓடியது. ஒரு ரொட்டித் துண்டுக்காக அவன் சிறை புகுந்தான். இன்று கோடிக் கணக்கில் ஊழல்கள் அவை ரொட்டித் துண்டுக்காக அல்ல. இந்த நாட்டை வெட்டிச் சூறையாடுவதற்கு. ஏழைகள் ரொட்டித் துண்டுக்கு அவதியுற வளர்ச்சிக்கு வேண்டிய பணம் தனி ஒருவனின் உடைமையாகிறது. அவன் அமைச்சர்களைக் கையாளாக்குகிறான். நீதி மன்றங்களை நிலைகுலையச் செய்கிறான். அவர்கள் எல்லாம் சகலமரியாதையுடன் நடத்தப்படுகின்றனர்.

இன்று வளரும் பையனை நாளைக்கு நீ என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டால் அவன் என்ன சொல்வான்?

நான் டாக்டராவேன்; இன்சினியர் ஆவேன் என்று சொல்லியவர்கள் எல்லால் 'மேத்தா' ஆவேன் என்று கனவு காண்கின்றனர். அவன் யாரைச் சுட்டுகிறான் என்பது விளங்கவில்லை இவர்கள் இளைஞர்களைத் தூண்டுகிறார்கள்; வழி காட்டுகிறார்கள். 'தேசத்தின் சிந்தனைச் சிற்பிகளை' முன்பெல்லாம் அறிஞர்கள் என்று கூறி வந்தார்கள். புரட்சிக்கு வழி கூறியவர்கள் சிந்தனைச் சிற்பிகள்' எனப் பட்டனர். இன்று இந்தக் கொள்ளைக் கூட்டத்தின் தலைவனை 'அறிவின் சிகரம்' என்று பாராட்டுகிறார்கள்.

'தேசத்தின் தந்தை' காந்தி அந்நிய நாட்டினரிடமிருந்து இந்தத் தேசத்தை விடுவித்தார். அதை இவர்கள் ஆக்ரமித்தார்கள். அவ்வப்பொழுது வான வேடிக்கைகள் போல இவர்கள் ஊழல்கள் பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கின்றன.

சட்டத்திற்குட்பட்டு என் நண்பருக்கு உதவி செய்தால் தவறு இல்லை என்று என் மனத்தில் பட்டது. கியூவை உடைத்துச் சற்று முன்பின் தள்ளுவதால் பெரிய இழப்பு கள் நேர்ந்து விடுவதில்லை. அதனால் இவனுக்கு உதவி செய்வது நியாயம் என்றே பட்டது.

'நன்றி' என்ற சொல் என்னைச் செயல்பட வைத்தது. அன்று அவர் அப்பா எனக்குச் செய்த உதவி சிறிதுதான். 'நம்ம பையன்'; 'நமக்கு வேண்டியவன்' என்று சொன்னது இன்று நினைத்துப் பார்க்கிறேன். அவரது வாஞ்சை எனக்கு உதவும் வேட்கை அதை என்னால் மறக்க முடிய வில்லை.

-5-

அதற்கு மேல் அவர் தொடர்ந்தார். அவர் மைத்துனர், உனக்கு நண்பர் உன்னோடு ஒன்றாகப் படித்தவர். நீ சொன்னால் அவர் மறுக்க மாட்டார். அது மட்டுமல்ல, தன் மைத்துனர் முன்னுக்கு வர வாய்ப்பு. அதை உன் நண்பர் தவற விட மாட்டார். நீ அவரோடு அதிகாரி வீட்டுக்குப் போ, பழகிக்கொள், எறும்பு ஊரக் கல்லும் தேயும்; சொல்லச் சொல்ல மனம் மாறும். ஒரு முறை பழகி விட்டால் அதிலிருந்து விடுபட முடியாது. கை தானாக மேலே எழும்; அது மட்டுமல்ல அது இல்லாமல் எதுவும் செய்யாத சூழ்நிலை வரும்'' என்று எனக்குப் போதிக்க ஆரம்பித்தார்.

அவர் சொல்வது ஓரளவு உண்மைதான். எனக்குத் தெரிந்த பேராசிரியர் ஒருவர் அழகாக வீடு கட்டி இருக் கிறார். அவர் வாங்கும் சம்பளத்திற்கு அந்தக் கட்டிடத்

திற்குத் தாங்கும் சக்தி கிடையாது இன்று பல்கலைக் கழகம் மாறிவிட்டது. தேர்வுத் தாள்கள் மைய இடத்துக்குக் கொண்டுவரப் படுகின்றன. அப்பொழுது எல்லாம் நேரே தேர்வாளர் முகவரிக்குச் செல்லும். அது செல்வதற்கு முன் முகவரி அறிந்து முகங்காட்டும் தரகர்கள் பலபேர் பிழைத்து வந்தார்கள். கேட்டால் 'தலயாத்திரை' போவதாகச் சொல்வார்கள். அவர் காசு பெறாமல் எந்த உதவியும் செய்ய மாட்டார். முப்பத்தைந்துக்கு மேல் ஒரு பத்து போட்டால் போதும். எதுவும் சரியாக எழுதா விட்டாலும் பரவாயில்லை. வீட்டில் உட்கார வைத்து மதிப் பெண் போடுவார். திறமை சாலி; அதற்காகவே அந்த மாணவர்கள் வெறுந்தாள் உடன் இணைத்து வைப்பர். மற்றொன்று அவன் இயல்பாகத் தேறினாலும் அது தன் கை வண்ணம் என்று சொல்லிக் காசு வாங்குவார். அவரை எல்லாரும் விரும்பினார்கள். "மனுசர் நல்லவர், காசு கைநீட்டி வாங்கிவிட்டால் நாணயம் தவற மாட்டார்' என்ற நற்சான்று அவருக்கு வழங்கப்பட்டது.

-6-

டாக்டர் ரகு என்னோடு வந்தார். நான் டியூரிங் டாக்சி ஒன்று ஓடவிட்டேன். அது சில சமயம் சொந்த உபயோகத்துக்கு,ப் பயன் பட்டது. சொந்த காரில் சென்றால் அதற்கு வரவேற்பு இருந்தது. இந்த வீட்டு முன்னால் டாக்டர் கார் மட்டும் தான் போகும் அந்த அதிகாரியை நாடி ஒரு ஈ காக்காய் கூட வராது. வீட்டுக்கு வருவதை அவர் விரும்புவது இல்லையாம். அதற்காகவே விளம்பரப் பலகையை எடுத்து விட்டாராம். வக்கீல்கள், வைத்தியர்கள் விளம்பரம் போட்டுக் கொள்வதில் பொருள் இருக்கிறது. அதிகாரிக்குத் தேவை இல்லை என்று முரட்டுத்

தனம் பிடிக்கிறார். அது இருந்தால் விரும்பித் தீமையை விலைக்கு வாங்குவது என்பது வாதம்.

சில சமயம் போலீசு அதிகாரி வீட்டிலேயே கொள்ளையர்கள் நுழைகிறார்கள். அது அவர்கள் எடுத்துக்கொள்ளும் சவால். அவர்கள் தம்மை ஒன்றும் செய்ய முடியாது என்று கூறும் அறைகூவலாக அமைந்து விடுகிறது. காவல் அதிகாரிகள் போர்டுகள் போட்டுக்கொள்வதில் இத்தகைய கெடுதல்கள் சில சமயம் நிகழ்ந்து விடுகிறது. இவர் வீடு பிரபல்யமான வீடல்ல. என் நண்பர் உடன் வராவிட்டால் அடையாளங் காட்டக்கூட ஆள் இருக்காது. நாங்கள் போய் இறங்குகிறோம். அந்த வீட்டு மூத்த பெண் சீர் குலைவோடு மேலே ஒரு பெண் குழந்தையைத் தோளில் போட்டுக் கொண்டு சரணாலயத்தில் வந்து இறங்கினாள்.

கம்பராமாயணத்தில் ஒரு இடம் வருகிறது. இராமன் சீதையைப் பிரிந்து இருக்கிறான். அவள் திருமுகத்தைக் காணத்தேடுகிறான். அங்கு இருக்கும் தாமரைக்குளத்தை நாடுகிறான். ''தாமரையே! என் இதயத்தாமரையில் இருக்கும் எழில் மிக்கவளை நீ கண்டாயா? பெண் புகுமிடம் பிறந்த வீடுதானே. அவள் திருமகள், தாமரையில் பிறந்தவள், அதனால் உன்னிடம்தான் வந்து அடைக்கலம் அடைந்திருப்பாள். அவளை எனக்குக் காட்டாயோ?'' என்று கேட்கிறான். அந்தப் பாடல் அடிகள்தான் என் நினைவுக்கு வந்தன.

கணவன் அவளை அடித்துத் துரத்தி இருக்கிறான். அல்லது மாமியார் சீர் கொண்டு வந்து சேர் என்று சொல்லி அனுப்பி வைத்திருப்பாள். அங்கே அவள் அந்தக் குழந்தை தன்னைத் தாய் என்று உயர்த்திவிட்டதால்

அவள் பொறுமை கடைப்பிடித்திருப்பாள். அப்பா வீட்டிற்குச் சென்றால் சோற்றுக்குக் குறைவில்லை. துணிந்து வாழமுடியும் என்ற நம்பிக்கை அவள் நடையில் தெரிந்தது. அவளுக்கு ஒரு காலத்தில் கணவனோடு வந்தபொழுது ஆரத்தி எடுத்து வரவேற்ற வீடு அது. இன்று வெறுங்கையோடு வந்து நின்றனர்.

'அம்மா' ஆரத்தி கொண்டு வா! என்றாள். அன்று என் கணவனோடு வந்தேன். ஆரத்தி எடுத்து வரவேற்றாய். இன்று என் மகளோடு வருகிறேன். அதே வரவேற்புக் கொடு' என்று சொல்லிக் கொண்டே நுழைந்தாள்.

அவலத்தையும் சுவைத்துக் கூறும் மனஉணர்வு அந்தச் சொல்லில் காணப்பட்டது. இளையவள் ஓடோடி வந்தாள்.

''என்ன அக்கா? மாமா வரவில்லையா?'' என்று வினாவை எழுப்பினாள் அதற்கு மேல் அவள் ஆர்வம் குழந்தையின் மீது சென்றுவிட்டது. ''ஒரு கடிதம் போடக்கூடாதா? என்ற கேள்வி அந்த வீட்டு மூத்த குடிமகளிடம் இருந்து வந்தது. அதாவது 'பாட்டி' என்று அவளைக் குறிப்பிட்டனர்.

எனக்கு இந்தச் சூழ்நிலை உதவுவதாகப்பட்டது. மூத்தவள் வாழாவெட்டி. இளையவள் படுசுட்டி. இரண்டு பிரச்சினைகள் அந்த வீட்டில் செயலுக்குத் தூண்டும் கதைக் கருக்களாக உள்ளன. இனி சாதிப்பதற்கு வழி உண்டு. மூத்தவளை வாழ வைக்க அவர் எப்படியும் பணம் தேட வேண்டும். இளையவளுக்கு நல்ல இடம் தேட நாலு இலட்சமாவது தேவைப்படும்.

இவ்வளவு தேவைகளை வைத்துக் கொண்டு காந்தியின் சீடராக எப்படி இவர் வாழ முடியும்? இவை நல்ல சகுன மாகப்பட்டன.

டாக்டர் முகத்தில் வினாக்குறி வளைந்து காணப்பட் டது. கவலையும் கோடு விட்டது. எப்படியும் அவர்கள் தம் மேல் சாய்வார்கள் என்ற நிலையை அவரால் உணர முடிந்தது. ஏன் வந்தோம்? என்று ஆகிவிட்டது. பிள்ளை யார் பிடிக்கப் பூதம் புறப்பட்டது.

'இதுதான் சார் என் தங்கை வீடு' என்று அதன் சரித் திரத்தை விரித்துவைத்தார். என் அப்பா இவர்களுக்குக் கொடுத்துக் கொடுத்து மொட்டையாகி விட்டார்கள். நல்ல காலம்? நான் மட்டும் படிக்கவில்லை என்றால் இவர்களுக்குக் கொட்டி அழிவதிலேயே சரியாக இருக்கும் என்று தனிமொழி பேசினான். வீட்டுக்கு வந்த தம்பியை கேட்டுக்கு வெளியே நிற்க வைக்காமல் வரவேற்பதா? உல்லாசப் பயணம் முடித்துக் கொண்டு வீடு திரும்பிய மூத்தவளை வரவேற்பதா என்று தெரியாமல் திக்கு முக் காடினாள்.

என் கார் அது என்னிடம் விடை பெற்றுக்கொண்டு சென்று விட்டது. அதற்கு ஏற்கனவே அழைப்புப் பதிவாகி இருந்ததால் அது வந்து என்னை அழைத்துச் செல்ல மணி இரண்டு ஆகும். அதுவரை அங்கு உட்கார்ந்து வரட்டு பத்திரிகைகளையும், வானொலி திரட்டும் செய்திகளையும் கேட்டுக் கொண்டு இருப்பதைவிட வேறு வழியில்லை. டாக்டர் மட்டும் தான் தனியாக அந்த வீட்டுச் சல சலப்பில்

கலந்து கொள்ள முடிந்தது. துக்கம் விசாரிப்பதில் அவர் ஊக்கங் காட்டினார்.

அவர் வீட்டைத் தேடிப் பிரமுகர்கள் யாரும் வருவது இல்லை. மாலை போட்டு மரியாதை செய்பவரும் இல்லை. அதிக நாற்காலிகள் இருந்தால் இடம் அடைத்துக் கொள்ளும். தேவைக்கு மேல் அவர் எதுவும் வளர்க்க வில்லை, தம் மீசையைத் தவிர. அது பாரதியின் கலாச்சாரமாகும். அதை மேற்கொண்டிருந்தார். அதில் அவருக்கு ஒரு கம்பீரம் தென்பட்டது. வீரம் அவர் விழி களில் ஓரம் காட்டியது. எதிலும் அவர் கடுமையானவர் என்பதை அந்த வீட்டில் மாட்டியிருந்த அவர் நிழற்படம் காட்டியது.

சோபா எதுவுமில்லை என்று தெரிந்தது. இருந்தது அதை மகளுக்குச் சீதனமாகக் கொடுத்து விட்டார் என்பது தெரிந்தது. அதைப்பற்றி டாக்டர் தந்த விவரம் பின் வருமாறு:

"என் அப்பா கொடுத்த வெள்ளிச் சாமான்கள், தட்டு முட்டு அனைத்தும் தூர தேசத்துக்குப் பயணம் போய் விட்டது. திரும்பி வராது. எல்லாம் அவர்கள் கேட்டார் கள். கொடுத்து விட்டோம். கொடுத்தவை அனைத்தும் வஞ்சகம் இல்லாமல் ஒன்று ஒன்றாகத் தொலைத்து விட்டார்கள்" என்று விளக்கினார்.

பதி இழந்தான். பாலகனை இழந்தான். நிதி இழந் தான். சதியைப் பிரிந்தான். விதி அவனை வாட்டியது. எனினும் தன் மானத்தை இழவாதவன் அரிச்சந்திரன். அவன் கதை நினைவுக்கு வந்தது. அவனை ஒரு பொய்

சொல்ல வைக்க, சொன்ன சொல்லை மாற்ற விசுவாமித்திரர் அரும்பாடுபட்டார். முடியவில்லை. அத்தகைய பரம்பரையில் வந்தவர் போல மீசைக்காரர் காணப்பட்டார். எந்த நிலையிலும் கைநீட்டி வாங்குவதில்லை என்ற உறுதியோடு இருந்திருக்கிறார்.

கற்புடைய ஒரு பெண்ணைக் களங்கப் படுத்துவது கதையில் கேட்டதில்லை. அவள் உறுதி குலையாதவள் அவளை மாற்ற முடியாது என்று பெண்ணுக்குக் கூறப்பட்ட வள்ளுவம் பதவியில் இருப்பவர் இவ்வளவு திண்மையோடு இருப்பது நன்மையா, தீமையா? என்பதை முடிவு செய்யவில்லை. இவர் மனம் வைத்தால் இந்த நிலைக்கு வரத் தேவையில்லை என்பது அந்த அம்மையார் உதிர்த்த முதற் சொற்களாக இருந்தன.

'அவர் எங்கே ஆபீசுக்குப் போனால் வீட்டு நினைப்பே இருப்பது இல்லை. என் மகள் போடும் கடிதங்களை ஆபீசு பைல் பார்ப்பது போலப் படித்து அடுக்கி வைத்து விடுவார். கிழித்துப்போட மாட்டார். எல்லாவற்றையும் பைல் செய்து வைப்பது பழக்கம். இந்தக் கடிதங்களுக்கு எல்லாம் எந்தப் பதிலும் அனுப்ப முடியாததால் முகவரி இல்லாத கடிதங்கள் அஞ்சல் நிலையத்தில் அடக்கம் பெறுவது போல இங்கே முடங்கிக் கிடக்கின்றன. எந்த எதிரொலியும் எழுந்ததில்லை.

கோப்பெருந்தேவி பாண்டியன் இறந்தபொழுது அவன் உயிரைத்தேடித்தன்னுயிர் விட்டது போலத் தான் எழுதிய கடிதங்களுக்கு விடை தேடி அவற்றை அடைவது போல மூத்தவள் சாவித்திரி வந்து சேர்ந்தாள்.

அவள் பயணம் உல்லாசமாக முடிந்தது. மந்தகாசமான வாழ்க்கையை முடித்துக் கொண்டு கோடை விடுமுறைக்கு வீடு திரும்பும் மாணவனைப் போல அவள் தன் தாயகம் வந்து சேர்ந்தாள்.

கூட்டத்தில் ஆண்டறிக்கை செயலாளர் என்று சொல்லக் கூடியவர் எழுதிப் படிப்பது வழக்கம். வந்தவள் தன் புகுந்த வீட்டு ஆண்டறிக்கையை எழுதி வைக்காமலே வரிசைப்படுத்தி அடித்தல் திருத்தல் இல்லாமல் அழுகை கலவாமல் சொல்லி முடித்தாள்.

மூன்றாவது ஆள் வந்திருப்பதையும் அவர்கள் பார்க்கவில்லை. மற்றவர்களுக்குக் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டது. இவள் 'ரிட்டர்ன் டிக்கெட்' வாங்காத குறை தான். இவர்கள் அடிக்கடி வருவது அழகிய சரித்திரமாய் அமைந்து விட்டது. மற்றவர்களுக்குக் கேட்டுக் கேட்டு அலுத்து விட்டது. கேட்பதற்கு நான் தான் கிடைத்தேன். அவர்கள் கொட்டிக் கொள்ள நான் கேட்டுக் கொண்டிருந்தேன் கோயில் சிலையைப் போல. ''அந்த வீட்டை விட்டு வந்திருக்கக் கூடாது'' என்று என் அபிப்பிராயத்தைச் சொன்னேன்.

இப்படி வராததால்தான் மண்ணெண்ணெய் விலை ஏறுகிறது என்று பதில் கிடைத்தது. அவள் தன் கணவனிடத்தில் சிறிது கூட வெறுப்புக் காட்டாமலிருப்பது வியப்பைத் தந்தது. இன்பத்தையும், துன்பத்தையும் சமமாக எடுத்துக் கொள்வார்கள் என்று நூல் படைத்தவர்கள் கிறுக்கி இருப்பதைப் படித்ததுண்டு; பார்த்ததில்லை. இது இவர்களுக்குப் பழகிப்பழகி அமைந்து விட்ட பண்பாகி விட்டது என்பது தெரிந்தது.

அவர் மேல் தவறு இல்லை. தெரியாமல் ஒரு மனை வாங்கி வீடு கட்டத் தொடங்கி விட்டார். அது இழுத்துக் கொண்டே போகிறது என்று அவர் பக்கம் நின்று பேசினாள்.

மத்திய தரக் குடும்பங்களில் ஏற்பட்டுள்ள புது வியாதி இது என்பதை உணர முடிந்தது. ஆழம் தெரியாமல் ஏன் காலை விட வேண்டும்?

கட்டும்போது தெரிவது இல்லை. கொஞ்சம் விளம்பரப் பிரியர். கதை எழுதுபவர் மற்றவர்களிடம் எடுத்துக் காட்டி அனுதாபம் பெற ஆசைப்படுவதுபோல இவரும் தாம் கட்டும் வேலையில் தன் நண்பர்களை அழைத்து வந்து காட்டுவார். 'இப்பொழுது. இது செய்யாவிட்டால் அப்புறம் ஒன்றும் செய்யமுடியாது' என்று அறிவிப்பார்கள்.

''ஒட்டுக் குளியல் அறை' என்பதை ஒவ்வொரு படுக்கை அறைக்குப் பக்கத்தில் வைக்க அதற்கே ஏகப்பட்ட செலவு, ஏன் ஒன்று போதுமே ஒரு நாளைக்கு அரைமணி நேரங் கூடப் பயன்படுத்துவதில்லை. இதற்கு ஏன் தனி அறைகள்?'' என்று சொல்வேன்.

'உனக்குத் தெரியாது. இதுதான் நடைமுறை' என்பார். கொல்லைப்புறம் என்ற சொல்லை மாற்றி அதற்கெல்லாம் 'படுக்கைப் புறம்' என்று பெயர்வைக்கும் காலம் இது. அவரைச் சொல்லிக் குற்றமில்லை.

''தரையில் வெறும் சிமெண்ட் போட்டால்போதும். யாரும் வழுக்கி விழுந்து கால் ஒடியத்தேவை இல்லை'' என்பேன்.

மொசைக் இல்லாத வீடு ஒரு வீடா? என்றுகேட்பார்.

'ஜன்னல்கள் பழையபடி கம்பி போடுங்கள் உறுதியாக இருக்கும்' என்பேன்.

''முடியாது, அச்சுப்படம் வார்ப்புகள் வைத்தால்தான் அழகாக இருக்கும்'' என்பார். கொசு வராமலிருக்க வலை கட்டிக் கொள்ளலாம்'' என்பேன்.

'இல்லை, ஒவ்வொரு ஜன்னலுக்கும் வலை போட்டால் கொசு வராது, என்பார். ''தேவைக்கு மேல் அறைகள் எதற்கு?'' என்பேன். 'எதிர்காலத்' தேவையை எப்படி முன் கூட்டிச் சொல்ல முடியும்'' என்பார்.

''இப்பொழுது பெண் பெற்று வைத்து இருக்கிறாய். நாளைக்கு மருமகன் வந்தால் தனியறைவேண்டாமா?'' என்பார்.

''மாடத்திலே சாமி படம் மாட்டிப் பூசை செய்யலாம்'' என்பேன்.

''அதற்குத் தனி அறை தேவை. ஒவ்வொரு வீட்டிலும் தனி பூசை அறை இருந்தால்தான் நிம்மதியாக அரைமணி நேரமாவது தியானம் செய்ய முடியும்?'' என்று சொல்வார். ''படுக்கை அறை?'' என்பேன்.

''அது கிடக்குது. தேவை இல்லை'' என்பார். ''இதற்கெல்லாம் பணம் எங்கே போவது?'' என்பேன்.

''உருண்டு புரண்டு எழ வேண்டும்'' என்பார். இப்படி ஏட்டிக்குப் போட்டி, என்ன செய்வது?

''ஆமாம், அதற்கு வீட்டை விட்டு வெளியே ஏன் வர வேண்டும்?''

பொருளாதாரமே இதில் தான் இருக்கிறது. நாடு வெளி தேசங்களில் பாங்குகளில் கடன் வாங்குகிறது. தாய் வீட்டுக்கனுப்பினால் அழுது தொலைத்து உள்ளதைச் சுருட்டி வர வேண்டியது.

''அதற்குச் சண்டை போட்டு ஏன் வர வேண்டும்?''

சிண்டு முடித்துத் தூண்டிவிடும் அத்தை இருக்கும் பொழுது கவலையே இல்லை. புகை கிளம்பாமல் பகை உண்டாக்க முடியாது. அமைதியாகச் சொல்லி வாழ்த்துக் கூறியா வழி அனுப்புவார்கள். சண்டை போட்டு வந்தால் தான் அதிலே சுவரஸ்யம் இருக்கிறது. வீடு இரண்டுபடும்; அக்கம் பக்கத்தவர் வந்து பஞ்சாயத்துப் பேசி அவர் சொல்வது சரி. நான் சொல்வதும் சரி. என்று சமாதானம் கூறுவர்.

''அவங்க அம்மா எரிந்த கட்சி. நான் எரியாத கட்சி''

''நான் வேண்டாம் என்று சொன்னேனே கேட்டியா?' என்று பின்னணி சங்கீதம் எழுப்புவார்.

''எவ்வளவோ பேர் வீடு தேடித் தேடி வந்தார்கள். கொட்டிக் கொடுக்க வந்தார்கள். இவன் தான் ''மாமனார் பெரிய அதிகாரி. அமைச்சருக்கு அடுத்த நிலை; அமைச்சர்கள் கூட இவ்வளவு சம்பாதிப்பது இல்லை. தானா வந்து கொட்டும்'' என்று இவன் சொன்னான். இன்னிக்கு என்ன ஆச்சு? அதிகாரம் இருக்குது; ஆனால் ஆட்சி இல்லை. 'அவரா?' சல்லிக் காசுக்குக் கூட ஆசைப்பட மாட்டார். மன்னன் அரிச்சந்திரன் கெட்டான் என்று

பாராட்டு மொழி தான் மிச்சம். ஆனால் அவருக்குப் பெருமையாக இருக்கலாம். நமக்குப் பெருமையாக இருக்கலாம். நமக்கு என்ன இலாபம்? நாம் சும்மா இருக்கிறதாலே அவர் யோக்யன் என்று பெயரெடுக்க முடிகிறது. இவளை அனுப்பி வை. அப்புறம் தெரிகிறது'' என்பது அத்தையின் உபதேசம் என்று சொல்கிறாள்.

காயை இரண்டு பேரும் அகற்றுகிறார்கள். இங்கே இருந்து இவர்கள் ரீரோடு அனுப்புகிறார்கள். அவர்கள் போரோடு திருப்புகிறார்கள்.

7

மூத்த பெண் பெயர் சாவித்திரி என்பது அவள் அம்மா கூப்பிடுவதைக் கொண்டு தெரிந்தது. பெயருக்கேற்ப அமைதியும், விட்டுக் கொடுக்காத தன்மையும் நம்பிக்கை கொண்டு அவள் தருக்கி வாழ்வதில் அறிய முடிந்தன

அந்தப் பிஞ்சு மலர் அவளோடு கொஞ்சும் பொழுதும், தன் தோளில் துஞ்சும் போதும் தான் பட்ட கஷ்டங்கள் எல்லாம் மறந்தவளாய்க் காணப்பட்டாள்.

அன்று என் பிரச்சனையை எடுக்கவில்லை எடுப்பதும் நியாயமாகப் படவில்லை. அவர் குடும்பம் அறிமுகம் ஆகியது. காயத்திரி அடுத்த பெண் படுசுட்டி. வெடுக்கென்று பேசுபவளாக இருந்தாள். மௌன ராகத்தில் ஆரம்ப நிலையில் அறிமுகம் ஆகும் 'மண் வாசனை' தான் நினைவிற்கு வந்தது.

காயத்திரி நினைக்கும்போது மௌனராக பாத்திரம் தான் நினைவுபடுத்தினாள். அவள் கதாநாயகனுடன்

துணிந்து நான் ஒத்துவரக் கூடியவள் அல்லள் என்பதை அழகாக்குகிறாள். அந்த இடம் மறக்க முடியாது. அந்தக் காட்சி தான் அந்தப் பெண் எனக்கு நினைவுறுத்தினாள். அந்த வீட்டின் இரண்டாவது அத்தியாயம் காயத்திரி; முகம் மௌனராகமாக விளங்கியது. எந்த எதிர்ப்பையும் அவள் காட்டவில்லை. வாழ முடியாமல் வீடு திரும்பும் வினோதங்கள் அவளுக்குப் புதுமையல்ல. கல்லூரியில் படிக்கும் தோழியர்கள் தம் வீட்டு நிகழ்ச்சிகளைச் சொல்லும் பொழுது மூத்தவள் வாழ முடியாமல் வாபஸ் ஆகி விட்டதைப் பலர் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஒரு கால கட்டத்தில் ஏற்படும் சிறு அசதி என்பது அவளால் கணிக்க முடிந்தது. அதனால் அங்கு என்ன நடந்தது என்று கேட்க அவளால் செயற்பட முடியவில்லை.

டாக்டர் ரகு அவருக்குக் கொஞ்சம் பி.பி ஏற்பட்டது போலிருந்தது.

''அவனை ஏன் விட்டுவிட்டு வந்தே? படிச்சவ, பேசாம ஒரு கம்ப்ளைண்டு கொடுத்திருந்தால் அவன் கம்பி எண்ணியிருப்பான்''. டாக்டர் வக்கீலாக மாறிவிட்டார்.

''நீங்க வக்கீலா, டாக்டரா?'' என்றேன்.

'இல்லை; யாரும் எவரும் எப்பொழுதும் ஒரே நிலையில் இருக்க முடியாது. அதைவிட ஏன் ஒரு குற்றவாளியாக மாறத் தயார். இன்று ஏன் குற்றவாளிகள் அதிகமாகின்றனர். கொடுமைகள் தலை விரித்தாடும் பொழுது அடிமைகளாகவா இருக்க முடியும்? குனியக் குனியக் குட்டிக் கொண்டு தான் இருப்பார்கள். பணியப் பணிய அவர்கள்

ஆணையிட்டுக் கொண்டு தான் இருப்பார்கள். அவன் வீடு கட்டுவது அவன் சொந்த விசயம். இவளை ஏன் பீடிக்க வேண்டும். இதற்கு முன் வீடு கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கலாம். சொல்லி இருந்தால் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கித் தந்திருப்பேன்.

பிளான்படி வீடு கட்டவில்லை. அதற்குக் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். எல்லாம் கோணல், என்று டாக்டர் அவர் மீது எரிந்து விழுந்தார். ''டாக்டர் என்பவர் நோயைத் தணிப்பவர். இந்தச் சிக்கல் தீர்ப்பதற்கு வழி தேடுவது தான் உத்தமம். அதை விட்டுச் சட்டம் பேசுவது சரியல்ல'' என்று கூறினேன்.

''தப்பு செய்து கொண்டே இருந்தால் நாம் எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?'' 'அவரை மீட்க? நாம்தான் செலவு செய்ய வேண்டும் என்று' சாவித்திரி இடை நுழைந்து சிக்கலை எடுத்துக் காட்டினாள் ''தவறுகள் செய்து அவதிப் பட்டால் தான் அறிவு வரும்'' என்று கூறி ஆறியிருந்த காப்பியைச் சூடு பண்ணாமல் குடித்தான். ''இப்போ பணத்துக்கு அவர் என்ன செய்வார்?''

''என் வரவை எதிர்பார்ப்பார்''.

''கஷ்டப்பட மாட்டாரா?''

''அவர் இந்நேரம் பெரிய பிரமுகர் ஆகியிருப்பார். வருபவர்க்குக் கெடு வைத்துக் கொண்டு இருப்பார். நடந்து நடந்து அவர்களை அலுக்க வைத்துவிடுவார்'',

''மறுபடியும் எப்பொழுது வருவது?'' என்று விடை பெற்றுக் கொண்டு நடை கட்டுவார்கள் அவர்களும் சலிக்க மாட்டார்கள். இவரும் சலிக்க மாட்டார் என்று சிரித்துக் கொண்டே பேசினாள்.

-8-

அடுத்த அத்தியாயம் தொடங்குகிறது.

காயத்ரி கதாநாயகி ஆகிறாள். அவளைப் பற்றிய பேச்சு தொடங்குகிறது; அதே பேச்சு என் வீட்டிலும் இடங்கொள்ளத் தொடங்குகிறது. காரணம் எனக்கு வயசு வந்த மகன் அவன் சினிமாப்படம் பகல் காட்சிக்குப் போகிறன் என்பது அவ்வப் பொழுது தெரிந்தது. அதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

சில சமயம் படங்கள் பார்க்காமலேயே படம் பார்க்கச் செல்கிறேன் என்று கூறுவான். முதலாவது ''நீ எங்கே போகிறாய்?'' என்று கேட்பதே அநாகரிகம். அதற்கு அவன் பதில் சொல்ல வேண்டும் என்ற கட்டாயமில்லை. என்றாலும் நாகரிகம் இந்தப் படத்தைப் பயன்படுத்துகிறது. அவனுக்கும் மணப் பேச்சு எடுக்கும் கட்டம் வந்த பொழுது அவன் காயத்ரி ஜெபம் செய்வதை என்னால் தெரிந்து கொள்ள முடிகிறது.

''அவள் எப்படி உனக்குத் தெரியும்? கல்லூரிப் போர் அணியில் அவள் பயிற்சி பெறும் வீராங்கனை'' என்றான்.

''அவர்கள் ஒன்றும் செய்ய மாட்டார்கள்'' என்று தகப்பனாருக்குரிய பாஷையில் எதிர்ப்பைத் தெரிவித்தேன் அவன் அதைக் காதில் போட்டுக் கொள்வதாக இல்லை.

வாலிப வேகம் இலட்சியத்தைப் பற்றிப் பேசியது. அதற்கு மேல் அவனிடம் வாதம் வைத்துக் கொள்ள முடியவில்லை.

"உன்னை இன்ஜினீயருக்குப் படிக்க வைத்தேன். அதற்கு டொனேஷன் கொடுத்தேன். அந்த அளவாவது செய்தால் ஒப்புக் கொள்ளலாம்" என்றேன்.

"அவர் தந்தை நேர்மையானவர். எதையும் சேர்த்து வைக்க முடியாது. பழைய சொத்து எல்லாம் முதல் பெண்ணுக்கே கரைந்து விட்டது. அந்தப் பெண் அங்கே வந்து வாழா வெட்டியாக உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கே அவர் சொன்ன வார்த்தை காப்பாற்றவில்லை என்ற அழுகை" என்று விளக்கினேன்.

"ஏன்? பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தாரா?"

"சொல் ஒன்று தானே. எப்படியும் இலட்ச ரூபாய் ரொக்கமாகத் தருவதாகச் சொன்னதால்தானே அந்தப் பையன் திருமணம் செய்து கொண்டான்".

"வாங்கிக் கொண்டு மண மேடை ஏறி இருக்க வேண்டும். இப்பொழுது வந்து முறையிட்டால் என்ன பயன்?"

"அதைத் தான் நானும் சொல்கிறேன். எது கொடுத்தாலும் கல்யாணத்திற்கு முன்னாலே தரச் சொல்ல வேண்டும். அப்புறம் ஆறிய கஞ்சி பழங் கஞ்சி. மூத்த மாப்பிள்ளையாவது வளைந்து கொடுக்காமல் பிடிவாதமாக இருக்கிறான். நீ அப்படி நடந்து கொள்வாய் என்பது என்ன நிச்சயம். நீ காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கறே. பின்னால் கண்டிப்பா இருக்க முடியாது. அவன் அப்பா

பார்த்து முடிவு செய்தது. அதனால் அதிகம் கேட்டால் கசந்து கொள்ள வேண்டியது'' என்று விளக்கினேன்.

என் மனமே என்னை உறுத்தியது. என் மகனை மரு மகளோடு வாழாமல் பிரித்து வைக்கும் வித்துக்கள் என் வாய்ச் சொற்களில் கிளம்புவதை அறிகிறேன். வெட்கப் படுகிறேன். அவனுக்கு வெளியே போனால் சொத்தோடு பெண் வரும். குறைந்தது பத்தாவது வர வாய்ப்பிருக் கிறது.

இவள் அழகாக இருக்கிறாள் என்று பிடிவாதம் பிடிக் கிறான். பெரிய பெண் பரத நாட்டியம். சங்கீதம் எல் லாம் கற்றுக் கொண்டு பார்க்க இலட்சணமாக இருக் கிறாள். இதனால் அவள் பண்படுத்தப் பெற்று அடக்கம் காட்டுகிறாள். இவள் தூக்கி எறிந்து பேசி விடுவாள் போலத் தெரிகிறது.

எப்பொழுது இவள் துப்பாக்கி ஏந்திச் சுடக் கற்றுக் கொண்டாளோ அப்போதே அவளிடம் அடக்கம் என் பதை எதிர்பார்க்க முடியாது. அதைத் தவிர்ப்பது தான் உத்தமம் என்று பட்டது. என்ன செய்வது? டாக்டர் ரகு வந்து தலையிடுகிறார்.

அவருக்கு என் பையன் மேல் எப்பொழுதும் ஒரு கண் இருந்து கொண்டே இருக்கிறது. அவர் ஏன் என் வீட்டுக்கு அடிக்கடி வருகிறார் என்பது இப்பொழுது தான் விளங்கு கிறது.

'டே, உன் பையன் இன்ஜினீயர் படித்து முடித்து விட்டானாமே?'

''வேலை வெட்டி இல்லாமல் ஊர் சுற்றுகிறான்'' என்றேன்.

''வேலை என்ன பிரமாதம்; எதுவும் இல்லை என்றால் சுய வேலை வாய்ப்புத் திட்டம் இருக்கவே இருக்கிறது. ஒரு பிராஜெக்ட் தயார் செய்யட்டும். ஒரு நட்டு செய்தால் கூட போதும், பெரிய பெரிய நிறுவனங்களுக்கு சப்ளை செய்யலாம். பணம் 'மின்ட்' பண்ணலாம். நல்ல எதிர்காலம் அவனுக்குக் காத்திருக்கிறது. எவ்வளவு 'லோன்' வேண்டுமானாலும் வாங்கலாம். எனக்கு சிபாரிசு இருக்கிறது. தள்ள வேண்டியதைத் தள்ளினால் அது அது தானாக நடக்கிறது. நீ கவலைப் படாதே'' என்று சொல்லி ஊக்கினான்.

நான் கிணற்றுத் தவளையாக வாழ்ந்து விட்டேன். அவன் நாலு ஊரு பார்த்தவன். வெளி தேசங்களைக் கண்டவன்; பர்மிட், எக்ஸ்போர்ட் அது இது எல்லாம் எனக்கு எங்கே விளங்கப் போகிறது. அவனுக்கு விசா, பாஸ்போர்ட், எக்சேஞ்சு, டாலர், பவுண்டு பங்கு பத்திரம் இதெல்லாம் தண்ணிப் பாடம். டாக்டர் அதனால் பலர் அறிமுகம். எதையும் அவனால் சாதிக்க முடியும். அவனை உதறித்தள்ள முடியாது. ''என் அக்கா பெண்ணுக்கு நான் இடம் பார்த்தால் என் கடமை முடியும். அது ஒன்று தான் எனக்குக் கால் கட்டு' என்பான். அவள் போகும் பொழுதெல்லாம் 'ஓ' வென்று அழுவாள். எல்லாம் பெண்ணாக பிறந்து விட்டது. நான் அதிர்ஷ்ட கட்டை என்கிறாள்.

''உனக்கு என்ன இரண்டும் தங்க விக்ரகங்கள்'' என்பான். ''அவர்களை வைத்து உருக்கவா முடியும்?'' என்று கண்ணீர் பெருக்குவாள். 'இந்த விக்ரகங்களைத்திருடனிடம் கொடுத்தால் கூட என்ன கொடுக்கறே' என்று கேட்கும்

காலமா இருக்குது? என்ன செய்வது'' என்று ஒப்பாரி வைக்கிறாள்.

இதுவரையில் எதாவது வரன் வந்திருக்கிறதா? என்று சம்பிரதாயப்படி விசாரிக்க வேண்டியதாயிற்று.

''பெரியவளுக்கு என்ன செய்தார்கள்? அந்த அளவு செய்வார்களா? என்று கேட்கிறார்கள்''.

''நியாயந்தானே?''

''அப்பொழுது இருந்தது கொடுத்தோம். நான் வெளி நாட்டிலிருந்து கொஞ்சம் கொண்டு வந்திருந்தேன். வீடு கட்டியது கொஞ்சம் மிச்சமிருந்தது''.

''அக்கா கஷ்டப்படும் போது பார்த்துக் கொண்டு எப்படி இருக்க முடியும்? செய்தேன்.''

''இப்பொழுது மட்டும் நீ ஏன் கையை விரிக்கறே?''

''எங்க வீட்டுல ஒண்ணு உட்கார்ந்திருக்கே? அவ டாக்டர் பெண்; இதை விட பெரிய இடம். ஒண்ணும் கொடுக்காம இருக்க முடியாது. நான் எப்படி அவளுக்குச் செலவு செய்து கொண்டே காலத்துக்கும் இருக்க முடியும்' என்று சொல்லிக் கொண்டு வருவாள்.

''ஏன்? உன் மகளை என் பையனுக்குத் தரக் கூடாதா? இதை விட'' என்று துணிந்து கேட்டு விட்டேன்.

அவனுக்கு அது அதிர்ச்சி தரவில்லை. ''ரொம்பவும் சந்தோஷப்படுவேன்; அதற்குள் உம் பையன் அவசரப் பட்டு விட்டான்''.

''அப்படி ஒன்றும் தவறாக நடந்திருக்க மாட்டானே?''

''அவளுக்கு வாக்குத் தந்திருக்கிறான். அவளை மணப் பதாக.''

''அவன் என்னிடம் சொல்லவே இல்லையே.''

''அது எப்படிச் சொல்வான்? அது அதுக்குக் காலம் வர வேண்டாமா?''

பாவிப்பயல் தவறு செய்து விட்டான். அவசரப்பட்டு விட்டான். டாக்டர் பெண்ணைக் கேட்டால் அவர் மறுப்புச் சொல்லியிருக்க மாட்டார். வெளி நாட்டிலே இருந்து நிறைய வைரம், தங்கம் எல்லாம் கொண்டு வந்தி ருப்பான். ஒரே மகள்; செல்வாக்கு உடையவன்; என்று வருத்தப் பட்டேன்.

இப்பொழுது மட்டும் என்ன முழுகி விட்டது. சொல் லிப் பார்த்தால் ஒப்புக் கொள்ளா திருக்க மாட்டான். அம்மா சொன்னால் கேட்பான் என்ற நம்பிக்கை பிறந்தது எனக்கு அந்த நண்பருக்கு உதவி செய்யும் கடப்பாடு வேறு காத்திருந்தது. அப்படிச் செய்தால் எனக்கும் ஒரு பெரிய தொகை கொடுப்பதாகச் சொல்லியிருந்தான். வேண்டாம் என்று தள்ளவில்லை. வேண்டும் என்று சொல்ல வில்லை.

முதலில் காரியம் ஆகட்டும். அந்த ஆள் கொஞ்சத் தில் மசியப் போவது இல்லை. என்று முடிவுக்கு வந்தேன்.

என் தொடர்பு பெண்ணின் அப்பாவிடம் ஏற்பட்டது. ஞாயிறு அதனால் அவர் வீட்டில் இருப்பார் என்று தெரி

யும். டாக்டர் ரகு என்னை அழைத்துச் சென்றான். தான் அவரிடம் அறிமுகப்படுத்துவதாகச் சொல்லி அழைத்துச் சென்றான்.

புதிய ஆள் ஒருவர் உடன் வந்திருப்பதை அவர் விரும்பவில்லை. என்றாலும் ரகுவோடு சென்றதால் என்னை வரவேற்கும் நிர்ப்பந்தத்துக்கு ஆளானார். அவர் மீசையைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அதற்கு நிறம் இயற்கையா, செயற்கையா என்ற சந்தேகம் ஏற்பட்டது. சின்ன சந்தேகம்தான்.

பாண்டியன் ஒருவன் தன் மனைவியின் கூந்தல் மணம் இயற்கையா, செயற்கையா என்ற ஒரு வினாவைத் தொடுத்துப் புலவர்களுக்குத் தேர்வு வைத்தான். அவன் கருத்தை உணர்ந்து ஒரு புலவன் கூந்தலுக்கு மணம் இயற்கை என்று பாடிவிட்டானாம். அப்படிச் சொன்னால்தான் அவன் பரிசில் கொடுப்பான். சில அதிகாரிகள் அமைச்சர்கள் கேட்கும் வினாவிற்குத் துதி போடுவது போல அவன் பாடி வைத்தான்.

உடனே நக்கீரர் எழுந்தார். பெண்ணுக்குக் கூந்தலின் மணம் செயற்கைதான் என்று வாதாடினார். ''நீ வழிபடும் பார்வதியின் கூந்தலுக்கு?''

''அவளுக்கும் அப்படித்தான்'' என்றார் நக்கீரர்.

'நீ விரும்பித் தழுவும் உன் காதலிக்கு?' என்று இறைவன் திருப்பிக் கேட்டார்.

''அவளுக்கு மணம் இயற்கை'' என்றாராம் அந்தப் புலவர்.

''அது எப்படி?'' என்று கேட்டார் இறைவன். ''எனக்கு அது இயற்கையாகத் தான் தோன்றும்'' என்று பதில் சொன்னாராம்''. அதுதான் உண்மை; காதலும் விருப்பும் இருந்தால் இயற்கையாகத் தான் தோன்றும் என்றார் இறைவன். இந்தக் கதை எங்கே வருகிறது என்று கேட்பீர்கள். பாதிக்கதை திருவிளையாடற் புராணத்தில் தருமிக்குப் பொற்கிழி தந்த கதை. பாதி நான் சேர்த்துக் கொண்ட கதை.

அந்த ஆராய்ச்சி கவிதைக்கு அழகு தருகிறது. இந்த ஆராய்ச்சி கலைக்கு உதவாது. அவர் மீசை கறுப்பா, வெளுப்பா என்பது பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும். மைபூசி இருந்தாலும் அது மதிக்கத்தக்கதுதான். அழகாக இருக்கிறது.

என் மனைவி தொந்தரவு கொடுக்கிறாள். ''பையனுக்குப் பெண் பார்க்கப் போக வேண்டும். 'டை' வாங்கி வாருங்கள்'' என்கிறாள். இது அவளிடம் ஏற்பட்டிருக்கும் புதிய மாறுதல். வழுக்கை எனக்கு இந்தப் பழக்கத்தில் இருந்து விடுதலை தந்தது.

''அவள் வெளி நாட்டிலே பழகியவள். அவளை வைத்து நம்மால் சமாளிக்க முடியாது'' என்று என் மகன் சொன்னான்.

''அவளுக்கு Boy friends அதிகம். நிறைய பேருடன் பழகுவாள். ஆண், பெண் பேதமே அவளுக்குத் தெரிவதில்லை அது தேவையற்றது என்று கூறுகிறாள்.

எல்லாரும், எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டார்கள்'' என்று விளக்கம் தந்தான்.

''அவளுடைய கொள்கைப்படி கணவன், மனைவி என்ற உறவு ஏற்பட்ட பிறகுதான் இந்தப் பால் பேதங்கள் தேவைப்படுகின்றன. மற்றவர்களிடம் பழகும் போது இந்தப் பேதம் பார்க்கத் தேவையில்லை. பழகுவதற்கு இது தடை ஆகாது என்கிறாள். அவளை வைத்து எப்படிச் சமாளிக்க முடியும்'' என்று கேட்கிறான்.

''என் காதலி காயத்திரி இந்த நாட்டுப் பெண்தான். அவளும் டாக்டர் பெண் போலப் பலரிடம் விரும்பிப்பழகுகிறாள். என்றாலும் இந்த நாட்டுப் பண்பாட்டின்படி தன்னைத் தொடுவதற்கு அவள் இடம் கொடுக்கவில்லை. நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, யார்க்கும் அஞ்சாத செயல். இவை அவளிடம் காணப்படுகின்ற பண்புகள். அவளை எனக்குப் பிடித்திருக்கிறது'' என்கிறான்.

இரண்டு பேருக்கும் என்னைப் பொறுத்தவரை அதிக பேதம் தெரியவில்லை. டாக்டர் பெண் கிடைத்தால் உண்மையிலே எங்களுக்குப் பெருமை. இவன் அறிய மாட்டான் அவள் அருமை. அவள் கிடைத்தால் மேல் என்று நான் என் கருத்தை என் மனைவியிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அவளே வந்து காரில் இறங்கினாள். அது எனக்கு அதிசயம் உண்டாக்கியது. கும்பிடப் போன தெய்வம் வீட்டைத் தேடி வந்தது போல இருந்தது. உண்மையிலே இவன் அதிர்ஷ்டக்காரன் என்று அனுமானித்தோம்.

இவனை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. அம்மா சொன்னால் கேட்டு நடப்பான் என்ற அசைவு என்னுள் ஏற்பட்டது.

இவள் ஏன் இங்கு வருகிறாள்? என்ற வினா எங்களுக்கு ஏற்பட்டது.

''கார்த்திக் இருக்கிறாரா''? என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள். என் பையன் பெயர் கார்த்திக் என்பதை அறிமுகப்படுத்த மறந்து விட்டேன். அவன் ரேவதி பின்னால் சுற்றுகிறான் என்று என்னால் எப்படிக் கூற முடியும். 'வாழ்த்துக்கள்' என்று சொல்லிக் கொண்டே வந்தாள்.

''எதுக்கு?''

''எங்க காயத்திரி உங்க பையனைக் காதலிக்கிறாள் என்று கேள்விப்பட்டேன். அவர்கள் ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்தித்துக் கொள்கிறார்கள்''.

''அதை நீ ஏன் சொல்ல வருகிறாய்?''

''சொன்னால் தான் அது உறுதியாகும். அவர்கள் வெட்கப்படுகிறார்கள். நாலு பேர் பேசினால் அது உறுதியாகிவிடும்''.

அவள் மிகவும் குறும்புக்காரி என்பதைக் காட்டிக் கொண்டாள்.

என் மனைவிக்கு டாக்டர் மகளைப் பார்த்ததும் அவள் மனம் அடித்துக் கொண்டது.

''இந்தப் பையன் இப்படிச் செய்வான் என்று எதிர்பார்க்கவில்லை'' என்று பேச ஆரம்பித்தாள்.

"என்ன செய்து விட்டான்?"

"இந்தப் பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள்; எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்றாள்.

"நீ அவனிடம் சொல்லிப் பாரேன்".

"உனக்கு அவள் மருமகளாக இருக்க மாட்டாள். அவளுக்கு நீ எடுபிடியாக வேண்டும் என்று அச்சுறுத்து கிறான்".

"நீ என்ன சொன்னே?"

"அதுக்குக் கொடுத்து வைக்க வேண்டுமே" என்றேன்.

"அவள் வந்து இறங்கும் பொழுதே காரின் கதவுகள் வெளிச்சம் போடுகின்றன. அவள் காரில் வந்து இறங்கு வதே ஒரு பெருமைதானே!

உங்களைக் கட்டிக்கொண்டு நான் என்ன அனுபவித் தேன். ஓட்டைக் கார் ஒன்று வாங்கினீர்கள். அதுவும் நாட்டைச் சுற்றி வர 'டூரிஸ்டுக்கு' விட்டு விட்டீர்கள். வேண்டாம் என்று சொன்னால் கேட்டீர்களா? அது இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும். தைரிய மாக அவர்களிடம் போக முடியும். சம்பந்தம் பேசப் போனால் நமக்கு என்ன இருக்கிறது என்று கேட்பார்கள். காரில் போவது வருவது அந்தஸ்தின் அறிகுறி என்கிறாள்.

-10-

டாக்டர் மகள் வந்து போவது எங்கள் வீட்டை விளம்பரப் பொருளாக்கியது. என் மகனைத் தேடித்தான்

அவள் வந்தாள் என்று பரவ ஆரம்பித்தது; அடித்தது யோகம் என்று ஆவேசப்பட்டார்கள். நான் எங்கேயோ போய் விட்டேன். பெரிய இடத்துப் பெண்ணாமே என்று எனக்கு வேண்டியவர்கள் வந்து விசாரித்தார்கள். அந்தச் சந்தோஷத்தைக் கலைக்க விரும்பவில்லை. இந்தப் பையன் கெடுத்து விட்டான். அந்தக் கோபம் ஒருபக்கம்; அதே சமயத்தில் சடங்கு, சம்பிரதாயங்களில் பழகிப் போன எங்கள் வீட்டில் அவளை வைத்துச் சமாளிக்க முடியுமா? என்று யோசிக்க வேண்டியிருந்தது.

இந்த நாட்டில் சாபக்கேடு ஜாதகம் என்ற பூதம் ஆட்டியது. என் மனைவி ஜாதகம் சரியில்லை என்றால் எந்த இடமாக இருந்தாலும் அவளால் ஏற்றுக் கொள்ள முடியாது. இவள் மேல் நாட்டில் பிறந்ததால் தேதி குறிப்புக் கூட எழுதி வைக்கவில்லையாம். அது இல்லாமல் மேல் எப்படித் தொடர முடியும்? இவள் ஏன் இங்கு வர வேண்டும். புரியவே இல்லை.

கார் இந்தப் பக்கம் வந்திருக்கும். சும்மா மரியாதைக்காகவும் வந்திருக்கும். அதே சமயத்தில் மனத்தில் பட்டதை மறைக்காமலும் கூறியிருக்கலாம். வாழ்த்துத் தெரிவிப்பது விசித்திரமாக இருந்தது. இன்னும் அது பற்றிப் பேச்சுத் தொடரவே இல்லை. அதற்குள் வாழ்த்துக்கள்; என் மரமண்டைக்கு எங்கே விளங்கப் போகிறது? இப்பொழுது விளங்குகிறது. அவள் தந்தை சொல்லி அனுப்பியிருக்கலாம். நாங்கள் அவளைப் பற்றி ஏதாவது ஆசைகள் வளர்த்துக் கொண்டிருப்போம் என்று அவள் வாயாலேயே அவளுக்கு அவனிடம் எந்த ஆசையும் இல்லை என்று தெரிவிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்தினார்கள் என்று தெரிகிறது. பையன் வந்ததும் அவனிடம் என் மனைவி

சொன்னாள். 'டாக்டர் மகள் உன்னைத் தேடிக் கொண்டு வந்தாள்' என்று.

''அவளுக்குப் பொழுது போகவில்லை என்றால் கார் எடுத்துக் கொண்டு கண்ட இடத்தில் சுற்றுவாள். இன்று விடுமுறை. யாரும் கிடைக்கவில்லை போலும். இங்கு வந்து போயிருக்கிறாள்'' என்று விளக்கம் தந்தான். அவன் அவளோடு அதிகம் பழகவில்லை என்று தெரிந்தது.

மற்றவர்கள் அவள் சிரிப்புக்கு ஏங்கிச் சுற்றி வட்ட மிடுவது தெரிந்தது. இவன் விதிவிலக்காக இருந்தான். அவள் பெயர் 'சாருகாசினி' என்று கேள்விப்பட்டேன். அதற்கு என்ன பொருள் என்று தெரியாமல் இருந்தேன். 'அவள் சிரிப்பு' அவள் பெயருக்கு விளக்கம் தந்தது. சமஸ்கிருத பண்டிதர் ஒருவரை விளக்கம் கேட்டேன். அவர்கள் அச்சொல்லுக்கு 'சிரிப்பழகி' என்று பொருள் தந்தார். அந்த அளவில் அந்தப் பெயர் மிகவும் பொருத்த மாகவே இருந்தது.

-11-

ஒரு நாள் மறுபடியும் திடீர் என்று எங்கள் வீட்டுக்கு வந்தாள். இப்பொழுது என்ன குண்டு போடுகிறாளோ என்று அஞ்சினோம்.

''அங்கிள்! உங்களுக்கு எத்தனை லட்சம் வேண்டும். எவ்வளவு எதிர்பார்க்கிறீர்?'' என்று கேட்டாள்.

''யாருக்கு? எதற்கு'' என்றேன்.

''உங்க மகனுக்கு''

''ஏன்? ஏதாவது புதிய இடம்''

''இல்லை; பழைய இடம்தான்''.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்பொழுது காயத்திரி அப்பா நிறைய சம்பாதிக்கிறார். மேல் வரும்படி நிறைய வருகிறது. எனக்குத் தலை சுற்றுவது போல இருந்தது.

'காந்தி சீடர்' மதுபானம் அருந்தத் தொடங்கி விட்டார் என்று தெரிந்தது. என் நண்பனுக்கு இப்பொழுதெல்லாம் வேண்டிய பெர்மிட்டுகள், டெண்டர்கள், சலுகைகள் சிரமமில்லாமல் கிடைப்பதாகச் சொன்னான். காரணம் புரிந்தது.

காயத்திரிக்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யக் காத்திருக்கிறார்கள் என்ற செய்தியை என் மனைவிக்கு எடுத்துச் சொன்னேன்.

''யார் சொன்னது?''

''சாருகாசினி''

' அவள் வேடிக்கைக்குச் சொல்லியிருப்பாள்''

''இல்லை; நானும் கேள்விப்பட்டேன். அவர் வேலை செய்யும் துறையில் எல்லோரும் சந்தோஷப்படுகிறார்கள். இவர் வழி விட்டதால் மற்றவர்கள் தாராளமாக அறுவடை செய்ய முடிகிறதாம். நந்தி போல் குறுக்கே இருந்து கொண்டு யாரையும் முன்னுக்குப் போகாமல் தடுத்து வந்தவர் அவரே வாங்க ஆரம்பித்து விட்டாராம்''.

''சரி நல்லதாப் போச்சு எந்த இடமானால் என்ன? அவனுக்கு அவளைப் பிடித்திருக்கிறது. பேசி முடித்து விடுங்கள்'' என்று எனக்கு உத்தரவு கொடுத்தாள். இப்பொழுது தைரியமாகச் சொல்லிக் கொள்ள முடிகிறது. பெரிய அதிகாரி வீட்டில் எங்களுக்குச் சம்பந்தம் கிடைக்கிறது.

''கார் என்ன? எது வேண்டுமானாலும் பையனுக்கு வாங்கித்தருவார்கள். அவர் மனசு வைத்தால் பையனுக்குப் பெரிய இடத்திலே உத்யோகம் வாங்கித் தர முடியும். இப்பொழுதாவது புத்தி வந்ததே. மனுசன் திருந்தி விட்டார். அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்று மகிழ்ச்சி அடைந்தேன்.

டாக்டர் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். 'டேய் ரகு, உன் மகளைக் கொடு' முடியாவிட்டால் உன் அக்கா மகள் காயத்திரியைக் கொடு என்று கேட்டு விடக் காத்திருந்தேன். அவள் கைவிட்டுப் போகக் கூடாது என்பதே என் விருப்பம். என் மகன் விரும்பும் அவள் கிடைப்பதோடு விரும்பும் பணமும் நிரம்பக் கிடைக்கும்.

முன் சென்று நான் பார்த்த வீடல்ல. சாவித்திரி பணப்பிச்சை கேட்க எமனுடன் போராடும் காட்சியை இன்று நான் அங்குக் காணவில்லை. அவள் எப்பொழுதோ கேட்டதற்கு மேல் வேண்டியதைப் பெற்றுக் கொண்டு தன் தொழிற்சாலையைப் போய் அடைந்து விட்டாள். வாய் தவறிச் சொல்லி விட்டேன். தன் கணவன் வீட்டைச் சேர்ந்து விட்டாள் என்று தெரிந்தது. இந்த இடைவெளிக்குள் அவர் வீடு மாற்றம் பெற ஆரம்

பித்தது. அதே வீட்டு எண் தான். எண் மாறவில்லை. அந்த வீட்டின் வடிவு மாறிவிட்டது.

சோபா செட்டுகள் இடம் பெற்ற பிறகு பழைய ஓட்டை உடைச்சல் நாற்காலிகள் காலி செய்து கொண்டு வெளியேறி விட்டன. பழைய சாமான் கடைக்காரன் வந்து எடுத்துக் கொண்டு போனான் என்று தெரிந்தது.

வருகிறவர், போகிறவர் மிகுதியாகி விட்டனர். காண்டிராக்டர்கள் தொடர்ந்து அவர்கள் பெண்களுக்கு மணம் நடந்தால் அழைப்பிதழ்களை எடுத்துக் கொண்டு நுழைந்தவாறு இருந்தனர். இவர் வருகைக்காக அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

தரகர்கள் அதிகம் வர ஆரம்பித்தனர். அவர்களுக்குக் காசு நிறையக் கிடைத்தது; அதைவிட இங்கே வந்து சாப்பிட்டால்தான் பரம திருப்தி என்று பாராட்டுரை வழங்கி வந்தனர்.

காயத்திரிக்கு எரிச்சலாக இருந்தது; அப்பா நேர்மை இழந்து வருவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சீர்மை கெட்டுவிடுவது போன்ற உணர்வு அவளுக்குத் தோன்றியது.

'ஏன்பா! இந்தத் தரகர்கள் ஏன் வருகிறார்கள்?'

முன்பெல்லாம் வீட்டில் யாரிடமும் அதிகம் பேச மாட்டார். அவரிடம் கம்பீரம் தெரிந்தது. இப்போழுது மைத்துனரை வைத்துக்கொண்டு வெளிநாட்டுச் சரக்குகளைப் பைசல் செய்து கொண்டு வந்தார். ஸ்கார்ச்சு

விஸ்கிக்குக் குறைந்து எதையும் தொடுவதில்லை என்று சொல்லிக் கொண்டார்கள்.

மூத்த பெண் வாழ்வில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. அவளுக்கு அங்குச் செல்லும் போதெல்லாம் வரவேற்புரைகள் வாசித்தளிக்கப் பெற்றன. மருமகன் வீடு அடுத்த மாடிக்கு அடிகோலியது. அவனது இலட்சியங்கள் நிறைவேறிக் கொண்டு வந்தன.

மருமகன் வீட்டுக்கு வந்தால் வரவேற்பு; அடுக்களையில் அறுப்பு, நறுக்கு, வறுப்பு ஓசைகள் அதிகம் கேட்டன. நல்ல நாட்களில் சமைப்பவர்க்குப் போனஸ்கள் கூடுதலாக அமைந்தன. கூட இரண்டு நாள் இருந்து விட்டுப் போவார் இங்கே சமைத்துப் போட ஆட்கள் இருப்பதால்.

''காயத்திரிக்குக் கலியாணம் ஆகும் வரை இருந்து விட்டு வா'' என்று மூத்தவளுக்கு அனுமதி தரப்பட்டது. அவள் கையில் உறித்து வைத்த நகைகள் எல்லாம் மறுபடியும் ஏறிக்கொண்டன.

அப்பாவிடம் மூத்தவள் மிகவும் பிரியம் காட்டினாள். சாப்பிடும் போது எல்லோரும் இருந்து சாப்பிட்டார்கள். காயத்திரியின் தாயார் தன்னால் சமைக்க முடியாது என்பதால் கூடுதல் வேலைக்காரிகள் அமர்த்தப்பட்டனர். அவர்கள் சாப்பிட்டது தான் மிச்சம். வடைகள் தின்றதால் அவர்கள் எடை கூடியது என்று டாக்டர்கள் கூறினார்கள்.

கார் ஒரு புது ஷெட்டைக்கட்டிக் கொண்டது. அதிகாரிக்கு வேண்டிய இலட்சணங்கள் அனைத்தும் வந்து சேர்ந்தன. அமைச்சர்களின் கார்களும் ஒன்றிரண்டு வரத்

தொடங்கின. இவர் எந்த எதிர்ப்பும் காட்டாமல் சொன்ன இடத்தில் கையொப்பமிட்டு உதவியதால்தான் இந்தப் புதிய மாற்றம். அவர் சொல்வதை அமைச்சர்களும் அங்கீகரித்து உதவினார்கள். அவர்களுக்கு வேண்டியவர்கள் நான்கு பேர்களுக்குச் சலுகை காட்டினால் தனக்கு வேண்டியவர்கள் நாலுபேரை உள்ளே நுழைக்க முடிந்தது.

அவருடைய தோற்றத்திலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. இப்பொழுது அவர் எடுத்துக் கொண்ட போட்டோவில் மீசை அவரிடமிருந்து விடுதலை பெற்று விட்டது. அது கறுப்பா, வெளுப்பா என்ற ஆராய்ச்சி என்னை விட்டு அகன்று விட்டது. தனக்கு என்று இருந்த கடைப்பிடிப்புகள், கொள்கைகள், உறுதிகள் அவரை விட்டு நீங்கி அவரை எளிமைப்படுத்தி விட்டதை உணர முடிந்தது.

காட்சிக்கு எளியராய்க், கடுஞ்சொல் நீங்கியவராய் உலகம் விரும்பக் கூடிய விலைப் பொருளாக மாறி விட்டார்.

இவர் வளர்த்து வந்த நாய் இதற்கு முன்னால் மரியாதை காட்டி வந்தது. அதுகூடத் தைரியமாக அவர் மேல் விழுந்து புரண்டு பிராண்டியது.

காந்தி சீடரைப் பார்க்க முடியாமல் போய் விட்டது. காந்தி படத்தை அவர் அகற்றி அந்த இடத்தில் ஆளும் கட்சித் தலைவர் படத்தை மாட்டி வைத்தார். அது அவர் தேசப் பற்றைக் காட்டியது. நாட்டின் ஆளும் தலைவரை மதிக்கும் மாண்பு அவரிடம் இருந்தது. பக்தி இருந்த இடத்தில் யுக்தி வெற்றி கொண்டது. பழங்காலத்தில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் படங்கள் பள்ளிக் கூடங்களில்

மாட்டி இருந்தார்களாம். அதே பழக்கம்தான் இவரை இவ் வழிபாட்டுக்கு உரியவர் ஆக்கியது.

வாழ்க, வாழ்க! ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் வாழ்க! என்று பள்ளி தொடங்குவதற்கு முன் அந்தக் காலத்தில் பாடிக் கொண்டிருந்தார்களாம். நான் படித்தது ஆரம் பத்தில் ஒரு கிறித்தவர் நடத்திய பள்ளி, அதில் ஒரு ஜெபத்தைச் சொல்லச் செய்வார்கள்.

''ஆண்டவனே! எனக்கு இன்றைய ரொட்டித் துண்டு கிடைக்குமாறு செய்க'' என்ற கருத்து அமைந்த பாட்டாக இருந்தது. அந்தப் பிஞ்சு உள்ளத்தில் கடவுளை வழிபட் டால்தான் அன்றாடம் ரொட்டித் துண்டு கிடைக்கும் என்பது ஆழமாகப் பதிந்து விட்டது. இன்று அதே நல்ல பழக்கம் அவரிடம் அமைந்தது கண்டு மகிழ்ந்தேன்.

'தான் தாங்கி இருக்கும் பதவிக்குத் தலைவர்' என்ற நன்றி உணர்வு அவரிடம் வெளிப்பட்டது.

தன் கணவர் மீது காயத்திரியின் தாய்க்கு அபார மதிப்பு ஏற்படத் தொடங்கியது. துப்பு இல்லாத ஒரு வரை மணந்தது தப்பு என்று பல தடவை சொல்லி அங் கலாய்த்து இருக்கிறார். இப்பொழுது தான் கேட்பதற்கு முன் கொண்டு வந்து சேர்க்கும் தாராளத்தைக் காண முடி கிறது. நிறைய அழைப்பிதழ்களுக்கு இவர்கள் பதில் சொல்ல வேண்டியாயிற்று. அரங்குகளில் நடக்கும் அரங் கேற்றங்களுக்கு இவரைத் தலைமை தாங்கச் சொல்லி இருக்கிறார்கள்.

கலை நுட்பம் அதிகம் தெரியா விட்டாலும் இவருக்குள்ள விலையால் இவர் பேச்சு கைத்தட்டல்களைத் தட்டி கொண்டது. பாரதப் பண்பாட்டைப் பற்றி மிக அழகாகப் பேசினார். மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பது பற்றித் திருத்தமாகக் கூறினார். விட்டுக் கொடுத்து வாழ்வதுதான் பட்டுகோட்டைக்கு வழி என்று சொல்வது போல் அவர் பேச்சுக்கள் அமைந்திருந்தன. டி. வி. யில் இவர்படம் அடிக்கடி நிறுத்திக்காட்டப் பட்டது. செல்வாக்கு மிக்க செல்வர்கள் வரிசையில் ஒருவராகி விட்டார். பணமிருந்தால் மட்டும் போதுமா? பதவியும் வேண்டும். பதவியில் எதையும் சாதிக்கும் வல்லமையும் வேண்டும். திருமகள் அவருக்குத் திருவருள் செய்தாள்.

கார்கள் சில சமயம் மாறிக் கொண்டு இருந்தன. பெண்களுக்குப் புடவைகளில் ஏற்படும் கவர்ச்சி இவருக்குக் கார்களில் ஏற்பட்டது. மேலிடத்தில் சொல்லிப் புதுப் புது கார்களைத் தமக்கு அனுப்பி வைத்து அனுபவித்து வந்தார். பழமை என்பது அவரிடம் எதுவும் கிழமை கொள்ளவில்லை. அவர் மனைவியைத் தவிர, எல்லாம் புத்தம் புதியனவாக நித்தம் வந்து கொண்டிருந்தன.

கடைசிப் பெண். அதாவது அவள் முற்றுப்புள்ளி வைத்து விட்டதால் கடைசிப் பெண் ஆகிவிட்டவள். காயத்திரி பிறந்ததால்தான் தனக்குப் பதவி உயர்வு கிடைத்தது என்று சொல்லிக்கொள்கிறார். பழையபடி கட்டை வண்டி ஓட்டிக் கொண்டிருந்தால் மகளை எவனாவது ஆபீஸ் குமாஸ்தாவிற்குத்தான் தள்ள வேண்டியிருக்கும். அவன் ஆபீசில் கணக்கு எழுதிக் கொண்டிருப்பான் இவள் வீட்டில் கணக்கு எழுதுவதில் தவித்துக் கொண்டிருப்பாள்.

மைத்துனர் உதவியால் முதல் பெண்ணைத் தக்க இடத்தில் தர முடிந்தது. இந்தப் பெண்ணுக்கு இவர் தான் எல்லாம் செய்ய வேண்டும்.

காயத்திரி தேசியப் படையில் சேர்ந்து முதல் பரிசு வாங்கி இருந்தாள். நாட்டில் 'சிறந்த சேவகி' என்ற நற் சான்று பெற்று இருந்தாள். எதிலும் ஒரு சுதந்திரமான போக்கு அவளிடத்தில் காணப்பட்டது. அவள் தந்தை யின் ஆடம்பரம் அவளுக்குத் தாங்க வில்லை.

இந்த நாட்டில் குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கிடை யாது; ஆனால் சாராயம் அதன் இடத்தைப் பிடித்துக் கொண்டது. தம் கவலைகளை மறக்க ஆண்டவனிடம் முறையிட்டு அலுத்து விட்டு மதுக் கடைகளில் தம் மதி யினை அடகு வைக்கிறவர்களைப் பார்த்திருக்கிறாள். பெண் பிறந்து விட்டது என்ற பேர் அதிர்ச்சியால் குப்பைத் தொட்டியில் போட்டு விடுதலை பெறும் வீராங்கனை களைக் கண்டிருக்கிறாள். அரைகுறை படித்து விட்டுச் செய்வது தெரியாமல் அஞ்சல் வழிக் கல்வி நிறுவனத்தில் சேர்ந்து படிப்பதைக் காலம் கடத்தும் கருவியாகக் கொள் ளும் சம வயதினரைப் பார்த்திருக்கிறாள்.

இந்த நாட்டில் பெண்கள் ஒரு சாபக் கேடு என்ற அள விற்குச் சுமையாக வாழ்வதைக் கண்டிருக்கிறாள். தன் தந்தைக்குத் தந்தை மூன்று பெண்களைப் பெற்று விட்டுத் தான் கடைசிவரை அவர்களுக்கு மாப்பிள்ளை தேடும் மாமாங்கத்தைக் கண்டிருக்கிறாள். பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் ஏன் இவ்வளவு கவலைகள் தர வேண்டும்? வாழ்க்கை சுமை ஆகக்கூடிய நிலையில் பொறுப்புகளைத் தாங்கும் பொதிச் சுமைகளாகப் பலர் நைந்து நொந்து உயிரற்ற இயக்கமாகி விட்டதைப் பார்த்திருக்கிறாள்.

தமக்கையின் வாழ்க்கை அவளைப் பெரிதும் பாதித்தது. உள்ளதெல்லாம் தந்து நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுக்கத் தன் தந்தை பட்ட பாட்டை எல்லாம் எண்ணிப் பார்த்தாள். அவ்வளவு கொடுத்தும் அவளை அவர் நிம்மதியாக வைத்துக் கொள்ளவில்லை. இதைக் கொண்டுவா, அதைக் கொண்டு வா' என்று அனுப்பிக் கொண்டே இருந்தார்.

போகட்டும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. சாமினி போன்று அழகிய செல்வம் பிறந்தும் அமைதியில்லை. அவளோடு கொஞ்சிப் பேசி மகிழ்ந்துகொண்டு இருக்கலாம். அவள் தத்தித்தத்திப் பேசும் தளிர் உரைகள் கண்டு தளர்ச்சி நீங்கி இருக்கலாம். என் தமக்கை கொண்டு கொடுத்த பணத்தை விட, எடுத்துக் கொடுத்த புன்னகைகளை விட, அவருக்கு அழகிய செல்வத்தை, உயிரோவியத்தைப் பரிசாகத் தந்திருக்கிறாள்.

''உன்னை யார் பெண்ணைப் பெற்றுக் கொள்ளச் சொன்னது? உங்களப்பன் இலட்சங்களையா கொட்டிக் கொடுத்தான். ஒரு ஸ்கூட்டர் வாங்கவே பெரும்பாடு பட்டாகி விட்டது. இது பெரிசாகி வளர்ந்து கட்டிக் கொடுக்க எங்கே போவது? பேங்கில் புகுந்து கொள்ளைதான் அடிக்க வேண்டும்'' என்று பல்லவி பாடுவதைப் பலமுறை கேட்டிருக்கிறாள்.

வரதட்சணை ஒழிக! ஒழிக என்று வானளாவக் கூறுகின்றார்கள். அது அதிகரித்துக் கொண்டே போகிறது. முன்பெல்லாம் எவ்வளவு தர முடியும் என்று ரொக்கத்தில் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது எத்தனை கிலோ என்று கேட்கிறார்கள்.

இருந்த கிலோ எல்லாம் அவர் கட்டிய வீடு விழுங்கி விட்டது. ''இது இனி யாரை விழுங்கப் போகிறது'' என்று அந்தப் பச்சிளம் முகத்தைப் பார்த்து நச்சரித்தது இன்னும் மறக்க முடியவில்லை.

வீட்டுக்கு அழகு செல்வக் குழந்தைகள் என்பார்கள். குழந்தை பெறா விட்டாலும் மலடி என்று சொல்லி, 'எப்படி உன்னோடு வாழ்வது?'' என்று கேள்விகள் கேட்கின்றனர். மருத்துவச் சோதனைகளுக்கு அவள் பரிசோதனைப் பொருளாகிறாள். இல்லை என்றால் அந்த இடத்துக்கு மற்றொருத்தியை நியமனம் செய்கிறார்கள்.

துணிந்து பிள்ளை பெற்றாலும் தொல்லை; பெறா விட்டாலும் சள்ளை; இது இன்றைய பெண்ணின் எல்லை என்பதை அவள் எண்ணிப் பார்த்தாள்.

தன் தந்தை ஏன் இப்படி மாறினார்? காலம் காலமாகப் பெண்ணைக் கட்டிக் கொடுப்பது தந்தையின் கடமை என்ற சம்பிரதாய எதிர்பார்ப்பில் வளர்ந்திருப்பதால்தான் இந்தச் சுமைகள் பெருகி விட்டன. அவர் எனக்குக் கல்வி தந்தார். அதற்கு வேண்டிய அளவு அள்ளித் தந்தார்; உழைத்தார். அதோடு அவர் கடமை முடிந்து விட்டது. போகட்டும். ஆடம்பரத்துக்கும், அட்டகாசத்துக்கும் அடிமையாகி விட்ட இந்தச் சமுதாயத்தில் மணம் செய்து வைக்கிறார். அது கூடப் பெண் வீட்டார் தான் செய்ய வேண்டும் என்ற பழக்கம் ஏன் வற்புறுத்தப் பெறுகிறது?

பதிவு செய்து கொண்டு கணவன், மனைவி என்ற ஒப்பந்தம் ஏற்பட்டு ஒரு சில நண்பர், உறவினரை

அழைத்து விருந்து தந்து அனுப்பலாம். யாரோ கச்சேரி செய்வதற்கு மண இல்லம், அரங்கு அமைத்துத் தர வேண்டியிருக்கிறது. இப்பொழுது கவலை இல்லை என்று என் தந்தை கருதுகிறார்.

புத்திசாலி ஆகி விட்டதாக ஒரு கணிப்பு; என் கண்ணியத்தைக் காப்பாற்ற அவர் தம் நாணயத்தை இழந்தார். என் சீர்மைக்காக அவர் நேர்மை இழந்தார். அவர் நன்றாக வாங்குகிறார் என்றால் அவர் பாராட்டப் படுகிறார். அதற்கு முன் 'காந்தியின் சீடர்' என்று இகழப் பட்டார். இன்று 'ஊழல் மன்னன்' என்று பாராட்டப் படுகிறார். என் தந்தை இந்த மாற்றத்தைச் செய்து கொண்டு வரா விட்டால் இந்தப் பெருமைகள் இந்த வீட்டுக்கு வந்துசேர்ந் திருக்காது. என் தமக்கை மற்றொரு குழந்தைக்குத் தாயாக ஆகித் தலை நிமிர்ந்து இருக்க முடியாது. வீட்டுக்கு வரப் போக வேண்டியவர்கள் பாட்டுக்குத் தாளம் போடுபவர்களாக மாறி மாறி வந்து குவிகிறார்கள். வீடு களை தட்டி இருக்கிறது. தோட்டத்தில் புல் பசுமையைக் காட்டுகிறது.

எல்லோருக்கும் இந்த வாய்ப்பு எங்கே கிடைக்கப் போகிறது? ஒரு சாவித்திரிக்கு காயத்திரிக்குத் தான் கிடைக்கும். நாங்கள் பெண்களாகப் பிறந்து விட்டோம். அதுவும் அதிர்ஷ்டந்தான். பையன் பிறந்திருந்தால் என் அப்பா இவ்வளவு தாராளமாக இருந்திருக்க முடியாது.

கார்த்திக் முன்பெல்லாம் அரை குறை காதல் செய்து வந்தான். 'ஹலோ!' என்பான். சிரிப்பான். இப்பொழுது 'அது இது' என்று கேட்குமளவிற்கு வந்து விட்டான்.

'பொறுமை வேண்டும்' என்று அடக்கி வைக்க வேண்டியுள்ளது.

'மூன்று முடிச்சு' போட்டு விட்டால் என் சேலை முடிச்சைத் தொடலாம் என்று சொல்லியிருக்கிறேன். பாவம் துடிக்கிறான். என்ன செய்வது? சடங்குகள், சம் பிரதாயங்கள் இவற்றை எப்படி மீற முடியும்? எனக்கு என்ற ஒரு கட்டுப்பாடு வீட்டிலும் ஏற்பட்டது. கல்லூரிப் படிப்பிலும் ஏற்பட்டது. தேசியப்படைப் பயிற்சியிலும் ஏற்பட்டது. அந்த மன ஒழுங்கு என்னைத் தடுத்து நிறுத்துகிறது'' என்று பட்டியலிட்டு எண்ணிப் பார்த்தாள்.

எந்த வசதிகள் வாய்ப்புகள் தனக்குச் சாதிகமாக இருந்தனவோ அவை பாதகமாகும் சூழ்நிலையை அவன் சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

செல்வமும் அந்தஸ்தும் வாய்ந்த அவள் தந்தை ஒரு பி.ஈ. பட்டதாரிக்குக் கொடுப்பது தன் நிலைக்கு ஏற்ற தல்ல என்ற புதிய நினைவோட்டம் அவருக்குக் குறுக்கே நின்றது.

''இந்த இன்ஜினியர் பையன் தேவை இல்லை; மதுரை யில் மில் முதலாளி மகன் ஒருவன் இருக்கிறான். அவர் களுக்கு நம் தயவுகள் தேவைப்படுகின்றன. அவனை உனக்குப் பேசி முடிவு செய்கிறேன்'' என்று புதிய பேச்சைத் தொடக்கி வைத்தார்.

காதலை அவள் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை; இளைய சமுதாயம் காதலில் அசையாத நம்பிக்கை கொண்டு இருப்பது அவளுக்குப் பக்கத் துணையாக இருந் தது. அவர்கள் கற்கும் கவிதையும் பார்க்கும் படங்களும் இந்தச் கலர்சாரத்தைத் தானே போதித்துச் கொண்டிருக் கின்றன. எதை விட்டுக் கொடுத்தாலும் காதலை

விட்டுச் கொடுக்க முடியாது. சரியோ தவறோ ஒருவனுக்கு என்று தன்னை அர்ப்பணித்து விட்ட பிறகு வாபஸ் வாங்குவது பெண்மைக்கு இழுக்கு என்பதை அறித்தவளாகச் செயல் பட்டாள்.

''ஒப்புக் கொள்கிறேன்; உயர் அந்தஸ்தில் உள்ள ஒரு பெண் மத்திய நிலையில் இருக்கும் சாதாரண ஒருவனுக்கு வாழ்க்கைப் படுவதை நீங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள். அது நியாயந்தான்; ஆனால் எங்களுக்கு ஏற்பட்ட தொடர்பு வளர்ந்த காதல் நான் சமநிலையில் இருந்த போது ஏற்பட்டது என்பதை மறுக்க முடியாது.

ஓர் ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகு பின் வாங்குவது சட்டப்படி குற்றம்தான். ஒப்பந்தச் சட்டப்படி அது செல்லாது தம் தகுதிக்கும் அது தகாது; அதனால் என் முடிவை மாற்றிக் கொள்ள முடியாது, என்றாள் காயத்திரி.

''என் சல்லி காசு கூட அவனுக்குத் தர முடியாது. அவனைக் கேட்டுப்பார்; என்னைச் சார்ந்து நீங்கள் வாழக் கூடாது; உங்கள் உழைப்பில் நீங்கள் வாழ முடியுமா அவனைக் கேட்டுப்பார்'' என்று தன் முடிவைக் கூறினார்.

எண்ணிப் பார்த்தாள்; அவன் இதற்கு ஒப்புச் கொள்வானா! அவனைக் கேட்காமல் ஒரு முடிவும் கொள்ள முடியாது. என்றாலும் தன் கருத்தைத் துணிந்து கூறினாள்.

''என்னைப் பொருத்த வரை உங்கள் சார்பு எனக்குத் தேவை இல்லை நீங்கள் செய்யும் ஆடம்பரச் செலவுகள்

எல்லாம் உங்கள் விளம்பரத்துக்காகவே ஆகும். அமைச்சர்களுக்கு உங்களால் அழைப்பிதழ் அனுப்பாமல் இருக்க முடியுமா? அந்தக் காண்ட்ராக்டர் அமைச்சர் பெருமக்கள் என்னுடைய திருமணத்துக்கு ஏன் வர வேண்டும்? இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு அவர்களோடு வணிக சல்லாபம் ஆட இது ஒரு வாய்ப்பாக அமைத்துக் கொள்கிறீர்கள் அவ்வளவு தானே!

இன்று பெரிய பெரிய கலியாணக் கூடங்களிலே கூட்டம் வழிகிறதே ஏன்? பையனையும் பெண்ணையும் வாழ்த்தவா வருகிறார்கள். அங்கே வருகிறார்களைப் பார்த்துப் போலிக் கும்பிடுகள் போட வேண்டி இருக்கிறது. அவர்கள் கொலுப் பொம்மையாக முன் நின்று படத்துக்குப் போஸ் கொடுக்க வேண்டி இருக்கிறது. இதிலிருந்து உங்களால் விடுபட முடியுமா? சிந்தித்துப் பாருங்கள்.

எனக்கு உங்கள் சார்பு தேவை இல்லை; நான் எப்பொழுதோ விடுபட்டு விட்டேன். எப்பொழுது மற்றவனின் மனைவி என்று ஆகி விடுகிறேனோ பிறகு உங்கள் சார்பு எனக்குத் தேவை இல்லை. அக்காவின் அவல சரிதம் என்னைத் தொடராது. மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு உங்கள் வீட்டைத் தேடி வருவேன் என்று எதிர்பார்க்க வேண்டாம். ஆனால் ஒன்று. அவர் எப்படி நடந்து கொள்வார் என்று என்னால் கூறமுடியாது. கேட்டுச் சொல்கிறேன். அவகாசம் தேவை" என்று கேட்டுக் கொண்டாள்.

செல்வ மகளிடம் செல்வக் கோமான் பேசிய புதிய உரை அவளைக் குலுக்கி விட்டது. அப்படியே ஆட்டம்

கொடுப்பாத உணர முடிந்தது. இது ஒரு சோதனை; தான் வெற்றி பெறுவது புதிய சாதனைதான்; இந்த வேதனையைத்தன் காதலனிடம் சொல்லிப் பங்கிட்டுச் கொள்ள நினைத்தாள். நிச்சயம் தன் தந்தையின் சொத்தை அவன் துச்சமாகக் கருதுவான் என்பதில் அவளுக்கு நம்பிக்கை இருந்தது.

அவள் வாழ்க்கையில் ஒரு திருப்புநிலை ஏற்பட்டது. தான் இந்தப் பாரத நாட்டு அரும்புதல்வி என்பதை உணர்ந்தாள், பாரத அன்னை தன்னைப் பூமியில் அவதரிக்கச் செய்து இருக்கிறாள்; பூரண நிலவின் ஒளியில் அமுத கிரணங்களைத் தான் அவள் கண்டிருக்கிறாள். அது மறைந்து வான் இருள் சூழும் என்பதை எண்ணிப்பார்க்கவில்லை. தானும் அவனும் இந்த உலகில் வாழ்வதைப் போன்ற பிரமை அவளை ஆட்டிக் கொண்டிருந்தது. காதல் உறுதியானது; நெக்கு விடாது என்பது அவள் நம்பிக்கை.

புதிய பணம் பழைய பாதையில் இருந்து அவர்களை விலக்க முற்பட்டது. காதல் இருவர் உள்ளம் கலந்து விட்டால் இந்த வையகம் என்ன, வானமே தமக்கு மண்டியிட்டு வாழ்த்துக் கூறும் என்று எதிர்பார்த்தாள். இத்தனை மனிதர்கள் எப்படி வாழ்கிறார்கள்? பணம் இல்லாமல் மரப்பாவைகளாக வாழும் வாழ்க்கை அவளை வெறிச்கச் செய்தது. மணம் இருவர் கலப்பை அறிமுகம் செய்யும்? ஒரு சடக்கு; இதை அவனிடம் தெரியப்படுத்துவது மிகை எனப்பட்டது.

நாட்கள் நெருங்கின. மணநாள் மிகச் சமீபம் வந்து விட்டது. எதற்கும் அவனை ஒரு வார்த்தை கேட்டு

விடுவது நல்லது தான்; இந்தத் துணிவோடு அவர்கள் சந்திப்பில் இப்பேச்சு இடம் பெற்றது.

அவள் கண்ணாமூச்சி விளையாட விருப்பவில்லை; கண்களைக் கட்டி விட்டு என்னைத்தொடு என்று அலைக் கழிக்க நினைக்கவில்லை. திறந்திருந்த நிலையில் தன்னைத் தொடும்படி அருகில் நின்றாள்.

''என் கரங்களை இறுகப் பற்றிக் கொள்'' என்றாள்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''இல்லாவிட்டால் விழுந்து விடுவேன்'' என்றாள்.

இது வரை டியூட்டுக்கு இசையாதவள் இப்பொழுது ஒரு புதிய பாட்டுக்கு டியூன் போடுவதை அவனால் உணர முடிந்தது.

அவனே சற்று விலகி நின்றான்; அணைப்பு அவனை அழைக்கிறது; அதற்கு அவன் அஞ்சுகிறான்.

''என்னை எதுவும் எதிர்பார்ப்பும் இல்லாமல் ஏற்றுக் கொள்வீரா?'' என்று கேட்டாள்.

''கனவுகள் காத்துக் கிடக்கின்றன; அவையே என் எதிர்பார்ப்புகள்'' என்றான்.

''என் தந்தை ஒரு சல்லிக் காசு கூட நமக்குத் தர மாட்டார். நீங்கள் என்னை ஏற்றுக் கொள்வீர்களா? சுத்தமான காதலாக இருந்தால் சுகாதாரமான வாழ்வு வாழ முடியும்'' என்றாள்.

"என் அப்பாவைக் கேட்டுத்தான் சொல்ல முடியும்". என்று வேட்டு வெடித்தான்.

"இந்தப் பாட்டையும் உங்கள் அப்பாவிடம் பாடி விடுங்கள் அவர் தரும் ஒப்புதல் அதைக் கேட்டு அது நமக்குச் சாதிகமாக இல்லை என்றால் அதைத் தூக்கி எறியுங்கள்" என்று துணிந்து கூறினாள்.

இரண்டு செங்குத்தான பாறைகளுக்கு இடையே ஒரு இடைவெளி இருப்பது உணர முடிந்து. இருவரும் தனித் தனியே நிற்பது போல் தோன்றியது.

"கவலைப்படாதே கரம் நீட்டு; பிடித்துக்? கொள்" என்றாள்.

உத்தரம் வந்தது த்வாரகை மன்னனுக்கு. "கலியாணச் செலவுக் காசுக்கு ஒரு லட்சம் கேள்" என்று தூது சென்ற கண்ணனிடம் பாண்டவர்கள் செய்தி உரைத்தனர்.

"ஐந்து ஊர் கேள்; அது மறுத்தால் ஐந்து வீடு கேள்" என்று பாண்டவர் கண்ணனிடம் சொல்லி அனுப்பினார்களாம்.

"அதே நிலையில் தான் என்னைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டார் என் தந்தை" என்றான்.

"அவர் சொத்துத் தராவிட்டால் போகிறது; வரதட்சணை என்ற பேச்சும் நமக்குத் தேவை இல்லை; அவர்களுக்குப் போட்டியாக நாம் செலவு செய்ய முடியாது. லட்சம் என்பது பெரிசு அல்ல; கோடிகள் ஊழல்களில் உழலும்

போது இந்த லட்சங்கள் அவர்களுக்கு யானை சிந்தும் சோளப் பொறி; இதை மட்டும் கேள்'' என்று சொல்லி அனுப்பினார்.

என் சொல்லை ஆமோதித்தான். ''எதுவும் தர இயலாது என்பது வீண்தடிவாதம் நம்மைக் கடனில் ஆழ்த்திவிட்டு அடிமைப்படுத்திச் செய்யும்சூழ்ச்சி; உன்னை ஆட்டிப் படைக்க அவர் கையாளும் தந்திரம்'' என்று சொல்லி அனுப்பினேன்.

''தள்ளிப் போடுங்கள்' என்று சொல்லி அனுப்பினேன்.

அவனால் எதையும் முடிவு செய்ய இயலவில்லை. அவனே ஒரு முடிவுக்கு வந்தான்.

''லட்சம் கேள்; அது போதும்; இல்லாவிட்டால் நாம் கவுரவமாகப் பிரிந்து விடலாம்'' என்று சொல்லி விட்டான். பாதைகளுக்கு இடையே அவன் ஒரு மரப்பலகை கேட்டான்; பாலமாக அமைய அந்த லட்சம் அவனுக்குத் தேவைப்பட்டது.

மதுரை மில் இவர்களைக் கைவிட்டு விட்டது அந்தப் பையனுக்கு இவள் அழகில் ஒரு திருத்தம் தேவைப்பட்டது ஸ்ரீ தேவியின் பழைய மூக்கைப் போல் குட மிளகாய் ஆக அவள் மூக்கு இருந்தது. அமெரிக்கா அனுப்பிப் பிளாஸ்டிக் அறுவை செய்து கொண்டால் தான் மணப்பதாக அந்தப் பையன் போட்டோவை வைத்து முடிவு செய்தான்.

காயத்திரிக்கும் அவன் சொல்வது நியாயமாகப்பட்டது. மாடு பிடித்து வாங்குகிறவர்கள் மடியைத் தொட்

டுப் பார்த்துத்தான் வாங்குவார்கள். அந்த அளவுக்குப் போகாமல் மூக்கை மட்டும் தொட்டுப் பார்ப்பதில் தவறு இல்லை என்று கூறினாள். அந்த ரசிகனைப்பார்க்க வேண்டும் என்று துடித்தாள்.

அப்பாவிடம் பிடிவாதம் பிடித்தாள்; ''அப்பா எனக்கு அந்தப் பையன் தான் வேண்டும்'' என்று அடம் பிடித்தாள்; ரசிகனுக்கு அவள் அடிமையாக ஆவது முடியவில்லை. மூக்கு அவளைக் கைவிட்டு விட்டது. அவள் அப்பாவுக்கு வேறு வழி இல்லை லட்சம் கொடுத்தாகிலும் லட்சண மாக இந்தப் பையனுக்கே தந்து விடலாம் என்று முடிவு செய்தார்.

தன் மாமன் மகள் இவளைக் 'குடமிளகாய்' என்று கிண்டல் செய்தாள்.

இவள் சிரித்துக் கொண்டாள்.

''என்னடி உன் காதலன் லட்சத்தில் நிற்கிறானாமே'' என்று கிண்டல் செய்தாள்.

''நாம் கலியாணச் சந்தையில் பகடைக் காய்கள்'' என்றாள் காயத்திரி.

''நீ என்னதான் முடிவு எடுக்கிறாய்?''

''எனக்குத் தெரியவில்லை. கலியாணம் பண்ணிக் கொள்ளாமல் இருக்க முடியாது. இனி அப்பாவுக்குப் பாரமாக இருக்க விரும்பவில்லை'' என்றாள்.

யார் இவர்கள் பேச்சைக் கேட்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நாளும் கோளும் கூடி வந்து விட்டது. யார் வந்து நிறுத்தினாலும் தடுத்து நிறுத்த முடியாது.

மூத்த மருமகன் விழித்துக் கொண்டான். 'திரித்த வரை கயிறு'' என்பது அவன் உச்சரிக்கும் பழமொழி. பிறகு தனக்கும் ஒரு லட்சம் தேவை. மேல் மாடம் கட்டியதில் ஏற்பட்ட கடனுக்கு என்று விண்ணப்பம் போட்டு வைத்தான்.

வீட்டில் நிச்சயம் செய்யும் நாள் அது. சுற்றத்தவர் வந்து கூடினர். பணம் லட்சங்கள் பரிமாறிக் கொள்ளும் பொருட்டுப் பந்தியில் கொண்டு வந்து வைக்கப்பட்டன.

பெண் அலங்கரிக்கப்பட்டாள். மின்னல் நடக்கை போல் அவள் பின்னல் அழகோடு காட்சி அளித்தாள் கையில் வீணை தரப்பட்டது; அவளுக்கு நாணவும் தெரியும். அந்த நாணத்தைக் காட்ட ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

எனக்கும் ஒரு மனநிறைவு ஏற்பட்டது. அவருக்கு இருப்பது இரண்டு பெண்கள். இவர்கள் தானே வாரிசுகள். சொத்து எங்கே போகிறது. கிடக்கட்டும் என்று கலந்து கொண்டேன்.

காயத்திரி பாடினாள்; அந்தப் பாட்டில் கம்பீரம் தொனித்தது; போர்ப் பரணியாக அந்தக் சங்கீதம் கேட்டது. மங்கல நாளில் இந்தப் போர் ஒலி ஏன் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது.

டாக்டரின் மகள் சில விருந்தினரோடு உள் நுழைந்தாள். அவர்கள் காக்கிச் சட்டை அணிந்திருந்தார்கள். காயத்திரி என் மகனைப் பார்த்தாள் ''எடுத்துக் கொள்'' என்றாள்.

அக்காவின் கணவரைப் பார்த்தாள்; 'எடுத்துக் கொள்ளுங்கள்' என்றாள்; இருவரும் கரம் நீட்டினர். காந்தியின் சிடரின் கரங்களில் வந்த விருந்தினர் பாராட்டிக் கேடயம் மாட்டினர்;

ஊழல் குற்றத்துக்கும் வாரிக் கொடுக்கும் வள்ளல் தன்மைகளும் பத்திரம் வாகித்து அளித்தனர்.

டாக்டர் என்னைப் பார்க்கிறார்; அவரை நான் பார்க்கிறேன்.

''அக்கிரமம்'' என்கிறார் அவர்.

''நற்கருமம்'' என்கிறாள் நங்கை காயத்திரி.

கைகுலுக்குலதற்காக அதிகாரிகள் என்னைக் கரம் நீட்டச் செய்தனர்.

தரம் பாராமல் எனக்கும் மரியாதை செய்தனர்.

மணமகன் மாலை எதிர்பார்த்தான்; வளைகாப்பிட்டு அவனையும் அழைத்துக் கொண்டனர்.

மூத்த மருமகனையும் 'நட' என்று சொல்லி அவன் தயக்கத்தைப் போக்கினர்.

அதிர்ச்சி அனைவரையும் தாக்கியது; தீ வினைகளின் முதிர்ச்சி என்று முடிவு செய்தனர்.

சியாமிளி இவர்களைப் பார்த்துக் காரணம் இல்லா மல் சிரித்தாள்.